திசாபுத்தி பலனடங்கிய

பாராசாரியம்

மூலமும் உரையும்

P. L. அருணாசல முதலியார் & பிரதர்ஸ்

ஸ்ரீ வித்தியா பிரஸ்

சென்னை

1949

[விலை ரூ. 2

T12043

R003K01

T:12043

உ

நவக்கிரக சகாயம்

ஸ்ரீ பராசரமுனிவரால் வடமொழியி லியற்றியதை

தமிழ் மொழியில்

திசாபுத்தி பலனடங்கிய

பாராசாரியம்

மூலமும் உரையும்

Cl. 50669
1997

பி. எல். அருணாசல முதலியார் & பிரதர்ஸ்,
15, படவட்டம்மன் கோயில் தெரு,
பிரம்பூர் பேரக்ஸ் போஸ்டு, சென்னை.

இதன் விலை] 1939 2—0—

ரிஜிஸ்தர் காபிரைட்

முகவுரை

பராசரமுனிவரால் சொல்லிய திசாபுத்தி பலனடங்கிய செய்யுள்களுக்குச் சரியான உரையை தமிழ் மக்கள் எளிதில் அறியும் பொருட்டு தெளிவாகவும், பிசகன்னியிலும், சாஸ்திர சம்பந்தமாகவும் விவரித்து, சங்கரநயினர்கோவில் தாலூகா, ஐவாயப்புலி கிராமத்தில் இருக்கும் போர்டு ஸ்கூல் ரிட்டயரும், சோதிடருமான A. குமாரசாமி பிள்ளையவர்களால் எழுதப்பட்டது.

சோதிட சாஸ்திரங்கள் கற்ற பெரியோரும், ஏனையோரும், இதனைக் கண்ணுற்று, இதிலுள்ள பலாபலன்களை நன்கறிவதோடு இதிலுள்ள குணங்களை ஆதரித்து, குற்றங்களை எடுத்துக்கூறின், அதனை அடுத்த பிரதியில் சேர்த்துப் பிரசுரிக்க மனமுவந்து இம் முகவுரை எழுதலாயினேன்.

ஆக்கியோன்.

திசாபுத்திகளின் அட்டவணை

சூரியதிசைப் படலம்		2
சூரியதிசையில்	சூரியபுத்தி	3
,,	சந்திரபுத்தி	6
,,	செவ்வாய்புத்தி	12
,,	இராகுபுத்தி	15
,,	குருபுத்தி	18
,,	சனிபுத்தி	22
,,	புதன்புத்தி	25
,,	கேதுபுத்தி	29
,,	சுக்கிரபுத்தி	31
சந்திரதிசைப் படலம்		35
சந்திரதிசையில்	சந்திரபுத்தி	36
,,	செவ்வாய்புத்தி	38
,,	இராகுபுத்தி	41
,,	குருபுத்தி	43
,,	சனிபுத்தி	46
,,	புதன்புத்தி	48
,,	கேதுபுத்தி	50
,,	சுக்கிரபுத்தி	52
,,	சூரியபுத்தி	56
செவ்வாய்திசைப் படலம்		58
செவ்வாய்திசையில்	செவ்வாய்புத்தி	60
,,	இராகுபுத்தி	61
,,	குருபுத்தி	64
,,	சனிபுத்தி	67
,,	புதன்புத்தி	70
,,	கேதுபுத்தி	72
,,	சுக்கிரபுத்தி	74
,,	சூரியபுத்தி	77
,,	சந்திரபுத்தி	79
இராகுதிசைப் படலம்		82
இராகுதிசையில்	இராகுபுத்தி	84
,,	குருபுத்தி	86
,,	சனிபுத்தி	90
,,	புதன்புத்தி	95
,,	கேதுபுத்தி	97
,,	சுக்கிரபுத்தி	100
,,	சூரியபுத்தி	102
,,	சந்திரபுத்தி	105
,,	செவ்வாய்புத்தி	107
குருதிசைப் படலம்		110
குருதிசையில்	குருபுத்தி	111
,,	சனிபுத்தி	112
,,	புதன்புத்தி	115
,,	கேதுபுத்தி	118
குருதிசையில்	சுக்கிரபுத்தி	119
,,	சூரியபுத்தி	122
,,	சந்திரபுத்தி	125
,,	செவ்வாய்புத்தி	127
,,	இராகுபுத்தி	129
சனிதிசைப் படலம்		131
சனிதிசையில்	சனிபுத்தி	133
,,	புதன்புத்தி	136
,,	கேதுபுத்தி	139
,,	சுக்கிரபுத்தி	140
,,	சூரியபுத்தி	142
,,	சந்திரபுத்தி	145
,,	செவ்வாய்புத்தி	148
,,	இராகுபுத்தி	151
,,	குருபுத்தி	153
புதன்திசைப் படலம்		156
புதன்திசையில்	புதன்புத்தி	158
,,	கேதுபுத்தி	160
,,	சுக்கிரபுத்தி	161
,,	சூரியபுத்தி	163
,,	சந்திரபுத்தி	165
,,	செவ்வாய்புத்தி	168
,,	இராகுபுத்தி	171
,,	குருபுத்தி	173
,,	சனிபுத்தி	175
கேதுதிசைப் படலம்		177
கேதுதிசையில்	கேதுபுத்தி	179
,,	சுக்கிரபுத்தி	181
,,	சூரியபுத்தி	183
,,	சந்திரபுத்தி	184
,,	செவ்வாய்புத்தி	187
,,	இராகுபுத்தி	189
,,	குருபுத்தி	191
,,	சனிபுத்தி	194
,,	புதன்புத்தி	196
சுக்கிரதிசைப் படலம்		199
சுக்கிரதிசையில்	சூரியபுத்தி	201
,,	சந்திரபுத்தி	203
,,	செவ்வாய்புத்தி	205
,,	இராகுபுத்தி	207
,,	குருபுத்தி	209
,,	சனிபுத்தி	211
,,	புதன்புத்தி	213
,,	கேதுபுத்தி	214

செய்யுள் முதற் குறிப்பு அகராதி

பாட்டு	பக்கம்
அ	
அணங்கே	140
அதிகமிகு	61
அதிகீர்த்தி	106
அமுதராசே	3
அரசராற்	200
அரசனார்	115
அரசனி	89
அரிவை	159
அவமான	73
அவனி	149
அறிவுடைய	15
அறிவுமிகும்	117
அன்னமும்	204
ஆ	
ஆகாதகாச்	143
ஆகாதகுச	13
ஆகாதவா	121
ஆகுமிந்த	175
ஆகுமேதன	95
ஆகுமேபூரா	27
ஆதவனார்	12
ஆதித்தன்	2
ஆதிமறை	20
ஆமேகேந்	186
ஆமேச	136
ஆனதொருச	107
ஆனதொருவு	54
இ	
இகலா	60
இப்படி	78
இயம்பக்	40
இயம்பிய	113
இயம்புகின்ற	201
இயம்புவன்	209
இரவி	22
இனிதாகி	136
இனிதான	93
இனிய	149
உ	
உடனான	194
உண்டாகுங்கேந்	192
உண்டாகுஞ்சட்	206
உண்டாகுஞ்சனி	139
உண்டாகுமம	8
உண்டாகுமிர	170
உண்டாகும்ஸ்திரீ	103
உண்டாகும்லா	30
உண்டாகும்வயி	94
உண்டாகும்வி	36
உண்டானநாற்	41
உண்டானபுத	160
உரைகேந்	137
உரைசெவ்	42
உரைத்தபணி	62
உரைத்தமூன்	30
உரைத்தவிட	93
உரைத்தவிந்	50
உரைத்திடுசட்	55
உரைத்திடும்	163
உரையாத	119
உரையாருந்	83
உலகில்	84
உற்றகுரு	112
உற்றதொரு	169
உற்றரா	68
உற்றலக்	148
உற்றிடும்	177
உற்றுவரும்	181
எ	
எடுத்து	190
ஏ	
ஏறிவரும்	161
ஓ	
ஓதியதோரங்தி	51
ஓதியதோர்	47
ஓதுமா	39
ஓமெனும்	147

பாட்டு	பக்கம்
ஓரைமிகு	68
ஓரையுறு	203
க	
கடிதான	197
கட்ட	85
கணிதமாஞ்	157
கணிதமொடு	121
கண்ணுகு	31
கருதரியசட்	98
கருதரியபுத்	21
கருதியதோர்சட்	183
கருதியதோர்பா	174
கருதியபத்	53
கருமேகம்	205
கலக	32
கறை	204
கற்றுணர்ந்	158
கற்றோர்கள்	15
கனத்த	182
கனராச	134
கன்னி	37
கா	
காட்டிடு	38
காணவே	14
காராளன்	165
காரிய	152
கி	
கிட்டிடு	121
கு	
குணமாதி	6
குவலயத்	161
குறித்திடு	10
குறையாது	141
குறைவாகுந்	166
கூ	
கூட	78
கூடிடுமி	39
கூடிடுமே	194
கூடிநின்றி	179
கூடியதோரஞ்	19
கூடியதோர்கர்	206
கூடியதோர்சி	111
கூடியதோர்பூ	105
கூடியதோர்லக்	149

பாட்டு	பக்கம்
கூடிவரு	51
கூடுமே	99
கூறிய	85
கூறியிடு	143
கே	
கேடிலாச்சனி	69
கேடிலாச்சிவி	65
கேடிலாவி	111
கேடுறு	45
கேளா	137
கொ	
கொடிதானசட்	212
கொடிதானரா	5
கொடிய	133
கொடியே	67
கொடுக்கு	172
ச	
சகல	131
சத்திரு	24
சந்திரன்	35
சம்பத்து	18
சயபீடை	188
சா	
சாதக	193
சாந்த	209
சார	139
சார்ந்த	57
சாற்று	189
சி	
சிவிகை	165
சு	
சுகமாகு	185
சுகமானராகுதி	82
சுகமானராகும	100
சுகமிலா	148
சுகமில்	29
சுகமீறு	207
சுகமுடை	120
சுகமுறு	153
செ	
செங்கதி	15
செந்திரு	198
செப்பரிய	213
செப்பிட	150

பாட்டு	பக்கம்
செப்பிடு	116
செப்பியதோரிர	156
செப்பியதோரொரு	14
செப்பியதோர்கே	187
செப்பியதோர்தன	180
செப்பியபா	35
செப்புகின்	167
செப்புநா	57
செயமாகு	160
செயமானவா	23
செயமானவி	110
செயமிகு	140
செயமில்	126
செய்ததொருசட்	210
செய்ததொருரா	102
செய்யசுப	20
செய்யதொருகள	93
செய்யதொருகுரு	119
செய்யதோர்கவி	199
செய்யதோர்தே	38
செய்யமதி	43
சே	
சேயவ	61
சேராத	124
சேராது	10
சேரு	185
சேர்ந்திடுநற்	162
சேர்ந்திடும்	154
சேறின	211
சொ	
சொலும்	105
சொல்லக்	127
சொல்லரியபாக்	180
சொல்லரியபாவி	324
சொல்லருஞ்	178
சொல்லாய	176
சொல்லியதி	36
சொல்லியதோர்கு	125
சொல்லியதோர்சீ	92
சொல்லியவி	50
சொல்லும	208
சொல்லுவா	101
சொன்னதொருகோ	202
சொன்னதொருவா	97
சோ	
சோதிட	3
சோதிடரா	174
சோதியுறு	203
த	
தங்கிய	179
தப்பாத	169
தப்பாது	71
தப்பித	215
தருகாதா	29
தருங்கேது	183
தருமேன	125
தலத்தி	90
தனதானகேந்	195
தனதானபுத	173
தனதானலக்	49
தனதான்ய	159
தனித்த	171
தா	
தாமுறுஞ்	58
தாமே	7
தாயாதி	111
தாரணியிலே	81
தாரணியில்	142
தாரமிகு	73
தாலமதி	132
தானமுறுங்	189
தானமுறுமி	86
தானமொரு	49
தானவர்	212
தானறி	35
தானுனகட	84
தானுனகுரு	129
தானுனபந்து	187
தானுனராகு	95
தானுனவஸ்	47
தானுனவட்	8
தானுனவொன்	19
தானிய	62
தானெனு	39
தி	
திடமானகேது	181
திடமானகேந்	130
திடமானகேந்திர	104

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
திடமானசந்	48	நாசமுறுஞ்சட்	21
திடமானலக்	74	நாசமுறுந்தே	63
திடமுட	58	நாசமுறுமன்	144
திடமுடை	188	நாசமுறும்ரெண்	34
திரமான	133	நாசமுறும்வித	130
திருந்தாதி	141	நாசமுறும்விப	174
திருமதி	171	நாமமுறு	72
திருவாழும்	90	நி	
திருவிளங்கி	151	நிகரி	56
திருவேகேளா	107	நிலத்தி	70
திருவேகேள்சி	145	நீ	
திருவேகேள்சு	89	நீசருட	123
திருவேநா	6	நூ	
தினகா	97	நூலோர்	76
து		நே	
துக்கமிகு	44	நேசமுறு	64
துணையிலா	193	நேயமிகு	117
தூ		நேரானசேய்	77
தூயதொரு	109	நேரானவுச்	44
தே		ப	
தேசுறு	191	பகாாத	134
தேடாத	66	பகர்ந்த	195
தேவபூச	214	பகர்வன்	33
தேனனைய	81	பங்கமிகு	101
தொ		பங்கய	31
தொடரு	168	படிமீதிற்	92
தொடியே	122	படிமீது	54
தோ		பண்ணிய	79
தோகை	17	பதிவில்	144
தோஷமில்	25	பயமாகு	66
ந		பயமான	42
நங்கை	162	பயமிலாக்	117
நல்லகிரி	199	பயமில்லாக்	13
நல்லதொருபா	18	பயமுறுஞ்	198
நல்லதொருபுத	163	பயமுறுமி	175
நல்லதொருலா	25	பாாசா	131
நற்கேது	196	பலமிகு	155
நா		பலமிகுந்த	16
நாகரிக	192	பலமுற	72
நாசமில்லாச்சட்	182	பலனுகச்	166
நாசமில்லாத்	106	பலனனகேந்	46
நாசமில்லாப்பாக்	200	பலனனதன	128
நாசமுறுங்க	171	பலனிலா	158
நாசமுறுங்கி	88	பலனுதவு	186

பாட்டு	பக்கம்
பலனுறுதெய்	37
பலனுறுமிரண்	145
பலன்பொரு	207
பவிதமில்	178
பன்னாக	87
பா	
பாரமுலைப்	17
பாவியுட	146
பீ	
பீடையாகி	99
பீடையில்லா	101
பு	
புகலு	153
புண்ணிய	87
புதன்	168
புவி	77
பூ	
பூங்கிளி	52
பூங்குழ	43
பூங்குழலே	146
பூமிமகன்	129
பூமியிலே	96
பூவினில்	120
பூவைய	27
பெ	
பெண்ணமுதே	124
பெண்ணமுதேகவி	53
பெண்ணேகே	157
பெண்ணேகேளி	184
பெருகு	153
பெற்றவுச்	65
பெற்றிருக்கு	98
பே	
பேசிய	115
பேணாத	164
பொ	
பொருந்தி	33
பொருந்துமே	178
பொற்பில்	82
பொற்புறு	59
பொன்ன	118
போ	
போகாது	9

பாட்டு	பக்கம்
ம	
மங்கை	80
மங்கையேச	151
மங்கையேயிவ	155
மடக்கொடி	191
மணியாரம்	168
மணியே	197
மதித்திடு	40
மதித்திடுஞ்	114
மதியாத	52
மத்திய	109
மயிலே	24
மயிலேகேள்	76
மயிலேகேள்புக	201
மறையுங்	177
மறைவான	75
மறைவிலா	71
மறைவில்லா	163
மா	
மாது	154
மாதுடைய	156
மாதேகே	5
மாதேகேளதி	83
மாதேகேள்சேய்	74
மாதேகேள்ராச	26
மாதேசட்	196
மாதேநீ	49
மாமதி	35
மாமதியத	36
மாமறை	22
மானேகே	2
மானேறும்	2
மி	
மின்னிடை	86
மின்னிடையாம்	145
மின்னே	5
மின்னேகேளதி	135
மின்னேகேள்	11
மின்னேநீ	65
மு	
முன்னான	91
முன்னாலின்	28
மெ	
மெய்யார்	194

பாட்டு	பக்கம்
மே	
மேதினி	1
மேதினியி	69
மேதினியிற்	41
மேதினியிற்கேந்	108
மேதினியிற்கேந்திர	132
மேதினியிற்கேந்திரதிரி	205
மேதினியிற்சட்	96
மேதையவன்	213
மேதையுறு	70
மேலாகு	80
மேலான	9
மேலானசுப	16
மேலானசொ	100
மேலானோர்	208
மேவிய	75
மேவியதோ	91
மேவியிடு	126
மேவுபூ	37
மேவுமூன்	178
மேன்மை	59
மேன்மைசே	127
யோ	
யோகமிகு	7
வ	
வகுத்த	103
வகுத்தா	179
வகுத்திடுசட்	116
வகுத்திடும்	48
வகுத்து	78
வகுத்தே	138
வகையாஞ்	46
வகையுட	12
வடநூலின்	110
வடமொழி	215
வந்தவன்	128
வந்திடு	45
வந்திடுமே	88
வருங்கடை	138
வருமேசுக்	214
வருமேதா	63
வருமேநல்	56
வருமை	60
வல்லதொரு	173
வல்லதோ	147
வழுத்திய	211
வழுவில்லா	102
வனமிகு	37
வா	
வாகான	26
வாடாத	142
வாதாடுஞ்	108
வான்மதி	38
வி	
விடமுண்டா	190
விலங்கு	23
விலங்குட	123
விளம்ப	113
வீ	
வீணை	117
வெ	
வெய்யதொரு	167
வெய்யவன்	114
வே	
வேகமிகு	28
வேலுந்தி	135

செய்யுள் முதற் குறிப்பு அகராதி

முற்றிற்று.

கடவுள் துணை

பாராசாரியம்

மூலமும் உரையும்

சூரியசந்திர குஜஜீவசந்திரபூ வந்தபார்சவ தமோகர ஹாங்வ
தைவவித்க்ஷிதி ஸுராக்ரணீ நபாம்பாவயாமி புவனகலோசனம்.

காப்பு

விருத்தம்

சீர்பூத்தபராசரமாமுனிபகர்ந்தவட நூலிற்
றிடம்பெருகுஞ்சோதிடத்தின் றிசையபகாரங்க
ளேர்பூத்தசித்திரமேமுதலாகக்கோட்க
ளிருந்தராசிப்பலனுமெதிர்நோக்குப்பலனும்
பேர்பூத்தநவக்கிரகாதிகள்கூடும்பலனும்
பின்புபகைப்பலனுமொன்ருய்பெருந்தமிழாலுரைக்க
கார்பூத்ததிருமேனிக்கணபதிசண்முகவேள்
கவுரிகலைவாணிபதங்கருத்தினுள்வைக்குதுமே.

(இதன் பொருள்.) சிறப்புப்பொருந்திய பாராசர முனிவரால் சமஸ்கிருத பாஷையில் உறுதிபெற்ற சோதிட சாஸ்திரத்தின் திசை-அப்தாரம்-சித்திரம் முதலான பலனும், நவக்கிரகங்களிருந்த ராசிப் பலனும், பார்வைப் பலனும், பேர்பெற்ற நவக்கிரகங்கள் கூடிநின்ற பலனும், பின்பு பகைபெற்ற பலனும், ஒன்று சேர்த்து தமிழ்ப் பாஷையில் சொல்லுவதற்கும், (அது இனிது நடைபெறுதற்கும், மேகம்போன்ற அழகிய தேகத்தையுடைய, கணபதி, சண்முகக் கடவுள், கௌரிதேவி, சரஸ்வதி இவர்களின் பாதாரவிந்தங்களை மனதில் பதித்துக்கொள்வோம்.)

ராசிப்பலன் என்பது - 1, 4, 7, 10 கேந்திரமும், 1, 5, 9 திரி கோணமும், 6, 8, 12 மறைவும், மற்ற 2, 3, 11 என்ற இடங்களு மாம். பகைபெற்ற பலன் என்பது - நீசம்-பகை-சமம்-நட்பு-ஆட்சி-உச்சம் - மூலத்திரிகோணம் - அதிநீசம் - அத்துச்சம் - அஸ்தமனம்-வக்கிரம்-அதிசாரம் என்பவைகளாம். கூடிநின்ற பலன் என்பது-

கிரகங்கள் சேர்ந்து ராசிகளில் தங்குதலாம். பார்வைப் பலன் என்பது - எல்லாக் கிரகங்களும் 7 - ஆமிடமும், சனிக்கு 3, 10-ஆமிடமும், குருவுக்கு 5, 9-ஆமிடமும், செவ்வாய்க்கு 4, 8-ஆமிடமும் ஆம். ராகு கேதுக்களுக்கு 3, 10, 11-ஆமிடமும் பொருந்தும் என்க.

நூல்

சூரியதிசைப் படலம்

ஆதித்தன் றிசையாறுவருடமதுதனிலே
யடுத்தபந்துஜனக்கட்டுமுத்யோகநாசம்
பேதித்தரோகமொடுகள்ளர்பயமுண்டாம்
பின்னவர்கள்சம்பத்துப்பிரிந்துவெகுசேதங்
கோதற்றமூன்ருறுபத்துப்பன்னென்றில்
குலவரவிபூலாபம்பிதிர்பந்துநாசந்
தீதற்றசிவபூசைராசாபிமானந்
தேவபலிதங்கமனசவுக்கியமாமானே.

(இ - ள்.) மான்போன்ற சாயலையுடைய பெண்ணே, சூரியன் திசை ஆறு வருஷத்தில் நடத்தும் பலன்களாவன. சொந்த பந்து ஜனங்களின் கஷ்டமும், உத்தியோகக் கெடுதலும், மாறுபட்ட ரோகங்கள் உண்டாவதுடன் திருடர் பயமும் உண்டாம். பின்னும் அவர்களின் திரவிய முதலான சம்பத்துக்கள் விலகி அநேக தேச சஞ்சாரஞ் செய்வதும் உண்டாம்.

குற்றமில்லாத 3-ஆமிடம், 6-ஆமிடம், 10-ஆமிடம், 11-ஆம் இடங்களில் ரவி நின்ருல், பூமி லாபமும், பிதா பந்துக்கள் நாசமும், குற்றமணுகாத சிவபூஜையும், அரசர்களால் அபிமானமும், தேவர்களின் கிருபைகளும், மனது சந்தோஷமும் உண்டாம் எ - று. 1

மானேறும்விழிமயிலேயுச்சசொக்ஷேத்திரத்தில்
மருவிடினுஞ்சுபவர்க்கமருவிலிரவிக்கோள்
தேனென்றசவுக்கியமும்ராசாபிமானந்
தேகசுகமனந்தனிலேதிரவியமும்லாபந்
தானேநல்விபசாயம்பசுக்காலிபலிதந்
தந்திதுரகதநரவாகனயோகமாகும்

பூநாறுங்குழலாயொன்பதுக்குடையோனுடனே [ரே.
பொருந்திடின்முன்சொன்னபலன் புகலுவர்சோதிட

(இ - ள்.) மான் பார்வையையொத்த கண்களையுடையவும், மயில் போன்ற சாயலையுமுடைய பெண்ணே! உச்சத்திலும் ஆட்சியிலும் இருந்தாலும், சுபக்கிரகங்களோடு சேர்ந்து சூரியன் நின்றாலும், இனிமையான சௌக்கியங்களும், ராஜாக்கள் அபிமானங்களும், அன்னிய தேச பொருள்கள் லாபமும், விபசாயங்களும், பசு முதலிய வாகனங்களும்; யானை, குதிரை, நரவாகனப் பிராப்தியும் உண்டாம். பூவாசனைபெற்ற கூந்தலுடைய பெண்ணே! 9-க்குடையவனுடனே சூரியன் கூடிநின்றால், மேலே சொல்லிய பலன்கள் என்றும் சோதிட வல்லவர்கள் சொல்லுவார்கள் எ - று. 2

சோதிடராராய்ந்திரவி நீசனானாலுஞ்
சொல்லியதோராறெட்டுப்பன்னிரண்டிலேனும்
மாதிடமாயிருந்தாலுஞ்சுபக்கிரகத்துடனே
வந்திடினுமநேகதுக்கம்பயித்தியமுமுண்டாம்
போதிடமாய்வளருமயிலினையுமிகப்பழித்துப்
பொருப்பிளநீர்வேள்மகுடம்பொற்கலசச்செப்புஞ்
சூதினையும்பொருதிவிம்மிப்பணைத்திறுமாந்தெழுந்த
துணைமுலைப்பெண்ணரசியர்க்குத்தூயவமுதரசே.

(இ - ள்.) மயிலைப்பழித்த சாயலையும், மலையையும், இளநீரையும், மன்மத மகுடத்தையும், பொற்குடத்தையும், செப்பையும், சொக்கட்டாங்காயையும் பழித்து, இடமகன்று விம்மி பருத்து ஏமாப் புடைத்து எழுந்த இரண்டு ஸ்தனங்களையுமுடைய பெண்களுக்கெல்லாம் பரிசுத்தமான தேவாமிர்தம்போன்ற பெண்ணே! சோதிடர் ஆராய்ந்து சொல்லுமிடத்து, சூரியன் நீசனாயிருந்தாலும், 6, 8, 12-ல் சுபக்கிரகத்தோடு சேர்ந்திருந்தாலும், அதிகமான துக்கங்களும், பயித்தியமும் உண்டாம் எ - று. 3

சூரியதிசையில் சூரியபுத்தி

அமுதரசேயாதித்தன் றிசையிலவனூண்தா
னைமதிமூன் றுடனேநாள்பதினெட்டினிலே

குமுதமலர்ப்பகையுடையோனுச்சசொக்ஷேத்திரத்திற்
கூறியகேந்திர திரிகோண ந்தன்னிலேயிருந்தாற்
சமபலனுந்தன தான்யலாபமுறுந்தேக
சவுக்கியம்ராசப்பிரீ திவாகன ந்தா னுண்டாம்
விமியிறுமா ந்தெழுந்துகன தனமலையைத்தாங்கு
மின்னலிடைமடமயிலேவிளம்பினர்கற்ருேரே.

(இ - ள்.) விம்மி இறுமாப்புடையதாய் எழுந்து கனமான தன மலையைத் தாங்குகின்ற மின்னல்போன்ற இடையையும், இள மயில்போன்ற சாயலையும், அமிர்தம்போன்ற மொழியையுமுடைய பெண்ணே! சூரியதிசையில் சூரியனுடைய புத்தி 3 - மாதமும் 18-நாளுமான தினங்களில், சூரியன் உச்சம்-ஆட்சி-கேந்திரம்-திரி கோணம் இவைகளில் நின்ருல், சமமான பலனுகவும், தனம் தான் யம் இலாபமும், தேக சௌக்கியமும், ராஜாக்கள் பிரீதியும், வாக னங்களும் உண்டாமென்று கற்றவர்களால் சோதிடநூலில் விளம்பி னர்கள் எ - று. 4

கற்ருேர்கள்சொலுமூன்றிலாறுபதினென்றில்
கமலநண்பனிருப்பானேற்கன தனலாபத்தோ
டுற்றசவுக்கியமன்னரால்வஸ்திரலாப
முகந்தவாகனலாபமாபரணலாபம்
மற்ருேனுறெட்டுவியமதுதனிலேயிருக்கில்
வரும்பீடையிட்டசனத்துக்கமுறுஞ்சோரர்
பற்றலராலக்கினியாற்பிராணபயமரசர்
பயமுண்டாமெனப்புகல்வர்பங்கயப்பூங்கொடியே.

(இ - ள்.) பூங்கொடிபோன்ற சாயலுடைய பெண்ணே! 3, 6, 11-ல் சூரியனிருந்தால் அதிகமான பொருள் லாபம். சௌக்கியம். அரசர்களால் வஸ்திராபரணம், வாகன லாபங்களுண்டாம். ஷை சூரியன் 6, 8, 12-ல் நின்ருல், பீடையும் சிநேகிதர்கள் பந்துக்கள் துக்கமும், திருடர்கள் சத்துருக்கள் அக்கினியால் பிராண பயமும், அரசரால் பயமுண்டாமென்று கற்றவர்கள் நூலில் சொல்லுவார்கள். 6-ஆமிடத்தைக்கொண்டு உத்தம பலத்தையும், அதமபலத்தையும், கற்பித்தலால் பொதுவெனக்கொள்க. மேலும், 6-ஆமிடம் சத் துருத்வம்பெற்ற வீடாயின் சுபபலனும் பெறும் எ - று. 5

கொடிதானராசியிலேயிரவியில்லாதிருந்தாற்
 கூறுதலைவலிகாச்சல்சஞ்சாரமாகும்
வடிவானராசகலகங்களுமுண்டாகு
 மற்றவனோடேசுபர்கள்கூடியிருப்பாரேற்
படிமீதிலற்பசுகமுண்டாகுநீசம்
 பதிந்திடில்மூன்றாறுபதினொன்றினிற்றுற்பலமாங்
கடிதாமட்டமத்துடையோனுடனேயுங்கூடிக்
 கலந்திருக்கிற்பீடைமனத்தாபமுண்டாமின்னே.

(இ - ள்.) மின்னல்போன்ற இடையையுடைய பெண்ணே! 6, 8, 12-ஆம் இராசிகளில் சூரியனிருந்தால் தலைவலி, காய்ச்சல், அலைச்சல், இராஜ கலகங்கள் உண்டாகும். இச்சூரியனோடு சுபர் கூடிநின்றால், கொஞ்சம் சுகமுண்டாம். நீசக்கிரகங்களோடு 3, 6, 11-ல் நின்றால், அற்ப பலன்களும், அஷ்டமாதிபதியோடு சூரியன் கூடி சுபர்கள் கலந்திருந்தாலும், பீடைகளும், மனஸ்தாபங்களும் உண்டாம் எ - று. 6

மின்னேகேள்காரியநாசந்தனநாசங்கள்
 மிகுராசகலகமுடனிட்டசனக்கலகம்
பின்னேயுமனவியாதிபுத்திரமித்திரர்க்கும்
 பெருத்தகளத்திரந்தனக்கும்வெகுபீடைசேரு
மன்னியதேசந்தனிலேசஞ்சாரமுண்டா
 மானைமருப்பைப்பொருப்பைமல்கியபொற்குடத்தைத்
தன்னெதிரிலாதெழுந்துபுடைத்துவிம்மிப்பணைத்த
 தனந்தாங்குஞ்சிற்றிடைதள்ளாடுமிளமாதே.

(இ - ள்.) யானைமருப்பு, மலை, பொற்குடம் இவைகள் நிகரில்லையென் றெழுந்து உயர்ந்து, விம்மிப் பருத்த ஸ்தனங்களைச் சுமந்து அதனால் தள்ளாடுகின்ற இடையையுடைய இளம்பெண்ணே! காரியம் தனம் நாசங்களும், இராஜன் இஷ்டர் கலகமும், பின்னால் மன வியாதியுமுண்டாம். புத்திர-மித்திர-களத்திரம் வெகுவாக பீடை உண்டாகும். அந்நிய தேச சஞ்சாரமுண்டாம் எ - று. 7

மாதேகேளிலக்கினத்துக்குடையவனைக்கூடி
 வந்திரவியிருந்தாலுமாதியிற்கிலேசம்

பூதேசசஞ்சாரமனவியாதியுண்டாம்
பொருந்துநடுச்சுகமெனவேபுகல்வர்கடையதனி
லேதேனுந்தனலாபமுண்டாகும்நினைத்த
தெல்லாங்கைகூடும்விவாகஞ்சேருமுயர்ந்த
சீதேவிசேரரசதெரிசனமுமுண்டாஞ்
செகதலத்துக்கொருதிலகமெனவளருந்திருவே.

(இ - ள்.) பூமிக்கெல்லாம் ஒரு திலகம்போல விளங்கும் இலக்ஷுமிக் கொப்பான பெண்ணே! இந்தச் சூரியன் லக்கினுதிபதி தன்னைக்கூடி இருந்தாலும், முற்பாதியிற் கிலேசமும், பூமிசஞ்சாரமும், மனவியாதியும் உண்டாம். நடுப்பாகத்தில் சுகமான பலன் உண்டாமென்றும், கடைப்பாகத்தில் இனிமையான பொருள் லாபமும், நினைத்த காரியங்கைகூடுதலும், விவாகஞ் சேருதலும், லக்ஷுமிகரம் பொருந்திய அரச தெரிசனமும் உண்டாம் எ - று. 8

திருவேநாலுக்குடையோனுடனேதானிந்தச்
செய்யரவிகலப்பானேற்சிறப்புடனேதானும்
வருமேவாகனலாபநிச்சயமாய்ப்பலிக்கும்
வளர்கிரகக்ஷேத்திரமும்பசுக்காலிலாபம்
தருமேபின்விபசாயலாபமுமுண்டாகுந்
தனித்தரெண்டிலேழில்நின்றாலவமிருத்துபயமாங்
குருவாய்மைதப்பாமல்மிருத்திஞ்சசெபந்தான்
குறையறச்செய்தாலதுவுங்குணமாகுமயிலே.

(இ - ள்.) மயில் சாயலையுடைய பெண்ணே! இச் சூரியன் 4-க்குடையவனுடன் கூடிநின்றால், செல்வத்துடனே வாகனம் லாபம் நிச்சயமாய் உண்டாம். மனை நிலங்கள் விருத்தி உண்டாம். பசுக் கன்று காலி, விபசாய லாபம் உண்டாம். 2, 7-க் குடையவனுடனாவது, 2, 7-லாவது சூரியன் நின்றால் அவமிருத்து பயமுண்டாம். இதற்குப் பரிகாரம், குருமொழிப்படி மிருத்திஞ்சய செபம் குறையில்லாமல் செய்ய அவ்வவமிருத்து நீங்கி சுகமாகும் எ-று. 9

சூரியதிசையில் சந்திரபுத்தி

குணமாதித்தன்சந்திரனபகாரந்தான்
கூறியதோரிருமூன்றுமாதமதன்பலன்கே

ளிணையாதப்பானுவுடன்சசிதானுங்கூடி
யிசைந்தகேந்திரதிரிகோணங்களினிலிருந்தால்
மணியோடுதனதான்யகிரகக்ஷேத்திரமும்
வளர்பசுக்கள்வாகனங்களதுமிகவும்லாபப்
பிணைபோன்றவிழியுடையமடமயிலினுளே
பேசுவர்களிப்படியே சோதிடர்கள்தாமே.

(இ - ள்.) பெண்மான் போன்ற விழியையும், இளமைபொருந்திய மயில்போன்ற சாயலையும் உடைய பெண்ணே! குணம் பொருந்திய சூரியதிசையில் சந்திரனுடைய புத்தி 6-மாசப் பலன்களைக் கேள். இந்தச் சந்திரன் அஸ்தமனமில்லாமல் சூரியனுடன் சேர்ந்து பொருந்திய 1, 4, 7, 10 கேந்திரமும், 1, 5, 9 திரிகோணமும் பெற்று இருந்தால், ரத்தினமும்-தனமும்-தான்யமும்-கிரகமும்-பூமியும்-விருத்தியாகின்ற பசுக்களும்-வாகனங்களும்-அதிகமான இலாபம் உண்டாம் என்று சோதிடர்கள் சொல்லுவார்கள் எ - று. 1

தாமேயுமுச்சசொக்ஷேத்திரமதனிலேனுந்
தான்திரிகோணத்தேனுந்தனித்தரெண்டிலேனு
மேயேழுக்குடையவனோடானாலும்பின்னே
மேலுறுபாக்கியத்தானத்துடையவனோடேனும்
பூமேவுலக்கினாதிபனுடனானாலும்
புகுந்துநாலாமிடத்துக்குடையவனோடேனுந்
தாமேவுஞ்சசிகூடியிருப்பானேயாகில்
தகுந்தகனயோகமென்றேசாற்றுமடமயிலே.

(இ - ள்.) இளமயில் சாயலையுடைய பெண்ணே! இன்னும் இச்சந்திரன் உச்சம்-ஆட்சி, 1, 5, 9 ஆகிய திரிகோணம், ஒப்பற்ற 2-ல் நின்றாலும், 7-க்குடையவனோடு சேர்ந்தாலும், 9-க்குடையவனுடன் சேர்ந்தாலும், லக்கினாதிபதியுடன் சேர்ந்தாலும், 4-க்குடையவனோடும் சந்திரன் கூடி இருந்தாலும், தகுந்த பெரிய யோகம் உண்டென்று சொல்லக் கடவாய் பெண்ணே எ - று. 2

யோகமிகுதானசவுக்கியங்கள்மிகவுண்டா
முயர்புத்திரலாபமகாசவுக்கியமும்பெருகும்

போகமிகும்ராசசன்மானங்களதுகாட்டும்
பூராசர்பிரீதியிஞலனேகலாபமுமா
மாகனகநிதிசேரும்நினைத்ததெல்லாமுடனே
வந்துகைகூடும்மதிகசுகம்பின்னுமுண்டாம்
தோகையரேக்ஷேமசுபஞ்சப்ரமஞ்சலாபந்
துலங்கியிடுந்திருச்சேருஞ்சுகமிகவுண்டாமே.

(இ - ள்.) யோகத்தோடு கூடிய சௌக்கியங்கள், உயர்வுள்ள புத்திரோற்பத்தி லாபம், மென்மேலும் சௌக்கியம், இராஜரால் சன்மானங்கள், இராஜாக்களால் பூமி விருத்தி லாபம், பொன், பொருள்கள் சேர்க்கை, நினைத்த காரியங்கள் கைகூடுதல், அதிக மான சுகங்களும், சப்ரமஞ்ச லாபமும், லக்ஷ்மிகரமும் சேர்ந்த சுகங்களும் அதிகமாய் உண்டாகும் எ - று. 3

உண்டாகுமமரபக்கச்சந்திரனதாக
வுற்றபலவீனமொடுபாவியுடன்கூடிற்
றண்டாததுர்த்தானத்திருந்தாக்காலந்தச்
சாதகர்க்குத்தலைவலிநோய்காச்சலதுவாகுங்
கொண்டாடும்புத்திரமித்திரர்களொடுமற்றுங்
கொண்டகளத்திரநாசமுறவோர்கள்நேசம்
அண்டாதுவெறுப்புபந்துகலகமுடன்விரையம்
அண்டினபேர்காலிநிதிநாசமுறுந்தானே.

(இ - ள்.) அமரபக்க சந்திரனுகி பலவீனம்பெற்று பாவியுடன் கூடி, 6, 8, 12-ல் இருந்தால், அந்தச் சாதகருக்குத் தலைவலி நோய், காச்சல், புத்திரக் களத்திரம், மித்திரர்கள் நாசங்காட்டும். உறவி னர்கள் சிநேகம் காட்டாது வெறுப்புற்றும், கலகங்களும், விரயங் களும், அண்டினவர்களுடைய கன்று காலி பொருளும் கேட்டையும் விளைவிக்கும் என்பதாம் எ - று. 4

வேறு

தானனவட்டமத்திற்சசிநின்ருலத்
தானத்தோன்றனைப்பார்த்தாற்சலத்தாற்கண்டம்
மானேகேள்மனவியாதிவிலங்குரோக
மற்றவன்ருனிருந்தவிடம்பேர்ந்துசெல்வன்

சீநாறுமூத்திரகிரிச்சிரரோகங்கள்
சேர்ந்திடுந்தாயாதியினுற்சிலபேர்சண்டை
பூநாறுங்குழல்மடவாயிந்தமார்க்கம்
பொருந்திவெகுகலகமுண்டாய்ப்போகுந்தானே.

(இ - ள்.) பூவாசனை கூடிய கூந்தலையுடைய பெண்ணே கேட்பாயாக! கேட்டுக்கு முதன்மைபெற்ற அட்டமத்தில் சந்திரனின்று அவ்வட்டத்தோன் பார்வைபெற்றால் சலத்தால் கண்டமும், மனவியாகூலமும், விலங்கும், ரோகமும், இடமாறுதலும், ரணத்தோடு கூடிய மூத்திரநோயும், கிரிச்சிரநோயும் சேர்ந்திடும். தாயாதியினுற் சிலபேர் சண்டையும், இன்னும் அதிகமான கலகங்களும் உண்டாம் எ - று. 5

போகாதுபத்தினிலொன்யாளிலேனும்
புகழ்ந்திடுகேந்திரதிரிகோணத்திலேனும்
வாகானசசிபலவானுடனேகூடி
வதிந்திருந்தாற்றனதான்யலாபமுண்டாம்
நோகாதசெல்வமுடன் புத்திரலாபம்
நோக்குகளத்திரமித்திரலாபமாகு
மேகாதபுவிலாபமிச்சந்தோஷ
மெழிற்கிரகலாபவிவாகமுமுண்டாமேல்.

(இ - ள்.) கெடாமல், 10 அல்லது 9-லும், கேந்திர கோணங்களிலும், பூர்ணசந்திரன் பலவானுடன் கூடித் தங்கி இருந்தால், பொருள், தான்யம், மிகுந்த செல்வம், புத்திரர், களத்திரம், சிநேகர்கள், நிலையான பூமி, மிகுந்த சந்தோஷம், அழகான வீடுகள், கல்யாண முதலிய இலாபங்களுண்டாம் எ - று. 6

மேலானசுபகருமந்தானதன்ம
மிகுந்தபலபுண்ணியதீர்த்தங்கள்சேரும்
மாலாதியாலயத்திற்சென்றுநாளும்
வழங்கிடவுஞ்செய்யுமந்தமதியந்தானும்
பாலாருமொழிமடவாய்ப்பத்தினின்றுற்
பலகருமந்தேவப்பிரதிட்டையோடு

சேலாருந்தடாகப்பிரதிட்டையுண்டாந்
திகழ்கீர்த்திசம்பத்துசேருந்தானே.

(இ - ள்.) உயர்வுபொருந்திய தருமங்கள், தானங்கள், மிகுதியான அநேக புண்ணியங்கள், தீர்த்தஸ்தானங்கள் சேருதலும், விஷ்ணுவாதி ஆலங்களில் சென்று தியாகம் வழங்கவும் செய்யும். மேலும், இச்சந்திரன் 10-ம் இடத்தில் நின்றால், பல புண்ணியச் செய்கையும், தேவப்பிரதிஷ்டையும், தடாகப்பிரதிஷ்டையும், கீர்த்தியும், சம்பத்துக்களும் உண்டாகும் எ - று. 7

வேறு

சோராதுதீயபலன்வாக்குடனேசெல்வஞ்
செகராசர்பிரீதியுடன்போசனவிசேடம்
வாராதவாபரணம்வந்துமிகச்சேரும்
வாகனமும்வரும்புத்திரமித்திரர்சுகமுண்டாம்
பேராகப்பூமியொடுபுதுக்கிரகமுண்டாம்
பெட்புமிகுசவுக்கியமும்பெருநிதியுஞ்சேருங்
கூராரும்வேலினையும்வாளினையும்பழித்துக்
குலவுவிழிமடமயிலேகுறித்தனர்கற்றோரே.

(இ - ள்.) கூர்மை பொருந்திய வாளாயுதத்தையும், வேலையும் பழித்துக் குலவுகின்ற கண்களையுடைய பெண்ணே! தீய பலன் வாராது. செல்வாக்கு, செல்வம், ராஜப்பிரீதி, போஜனவிசேடம், உயர்தர ஆபரணம், வாகனம், வந்து சேர்தலும், புத்திரர் மித்திரர் சுகமுண்டாதலும், கீர்த்தியுள்ள பூமி, புதிதான கிராமம் உண்டாக்கல், பெருமையான சௌக்கியங்கள், பெருஞ்செல்வங்களும் உண்டாம் என்று சோதிடநூல்வல்லார் குறித்தனர் எ - று. 8

குறித்திடுசட்டாட்டவியத்தானமதிற்பாவி
கூடவேமதிநின்றால்நேத்திரத்திற்பீடை
பொறித்திடுநற்பந்துசனபீடைகளுமுண்டாம்
பொல்லாததரித்திரியந்தனச்செலவுண்டாகுஞ்
செறித்தமதிநீசனாய்நீசாங்கமேறிச்
சென்றாலுஞ்சட்டாட்டவியமடையிலேனுங்

கறுத்தமனச்சோரராலக்கினியாலரசாற்
கலக்கமிடம்பேர்ந்துவெகுகலகமுண்டாமின்னே.

(இ - ள்.) மின்போன்ற இடையையுடைய பெண்ணே! குறிக்கப்பட்ட 6, 8, 12-ஆமிடத்தில் பாவியுடன் கூடிய சந்திரன் நின்றால், நேத்திரபீடை, பந்துஜன பீடைகள், பொல்லாத தரித்திரங்கள், பொருட்செலவு உண்டாகும். இச்சந்திரன் நீசமாகி அல்லது நீசனோடு சேர்ந்து இருந்தாலும், 6, 8, 12-ல் இருந்தாலும், கெட்ட மனமுடைய திருடர்களாலும், தீயாலும், அரசராலும் கலக்கம் உண்டாம். இடம் பேறுதலும் கலகங்களும் உண்டாகும் எ - று. 9

மின்னேகேள்வாக்கதனிலேழதனிற்சசிதான்
மிகுந்திருந்தாலவமிருத்துபயமுண்டாயகலும்
பின்னேசேயுடன்சகலசுகவாழ்வுண்டதிகப்
பிரபலவாகனமுடனேகாதவழிமட்டுந்
தன்னிகரில்லாததனதானியமுமுண்டாந்
தழைத்திடுவனதிகசவுக்கியத்துடனல்யோகம்
பொன்னேபூங்குழல்மயிலேயமுதேநற்றேனே
புவியதனிற்சோதிடர்கள்புகன்றனரிவ்வாறே.

(இ - ள்.) பொன்போன்ற காந்தியும், அழகிய கூந்தலும், மயிற்சாயலும், தேன்போன்ற சொல்லையும் உடைய பெண்ணே! கேட்பாயாக. 2, 7-ஆமிடத்தில் சந்திரன் பலவானாய் நின்றால், அவமிருத்து பயம் உண்டாகி அந்தப் பயமும் விலகும். புத்திரர், சம்பத்து, சகல சுகவாழ்வு உண்டாம். அதிகமான பிரபல வாகனமும், நிகரில்லாத தனதானியமும், அதிக சௌக்கியமும், நல்ல யோகங்களும் உண்டாம் எ - று. 10

ஆக அபகாரம் 2-க்கு விருத்தம் 19.

சூரியதிசை செவ்வாய்புத்தி

ஆதவனூர் திசையதனிற்செவ்வாயின்புத்தி
யான திங்கள் நாலுடனே நாளாறுகணக்கும்
போதமிகுசனியிரவிக்கந்தர்கதனுகப்
பொருந்திடினும்லக்கினகேந்திரகோணத்தேனும்
நீதமுடனிருந்தாலுமுச்சனவனுக
நிற்கிலுஞ்சொக்ஷேத்திரமூன்றினுடனுறில்
மாதரசுதனக்கரசேகுசனூர்வந்தாலும்
வருபலன்களுரைத்திடுவேன்வகையாகக்கேளே.

(இ - ள்.) கேளாய் பெண்கள் நாயகமே! சூரியதிசையில் செவ்வாயின் புத்தி மீ 4, நாள் 6-க்கும் பலன் கேட்பாயாக. பொறுமையுள்ள செவ்வாயும், சூரியனும் விலகாமல் சேர்ந்திருந்தாலும், லக்கினம் கேந்திர திரிகோணங்களில் ஆட்சியாயினும், உச்சமாகவேனும் நிற்கிலும், 3-ஆமிடம் 6-ஆமிடம் செவ்வாய் நிற்கினும் உண்டாகும் பலன்களைக் கூறுகின்றேன் எ - று. 1

வேறு

வகையுடனேபூமிவிபசாயலாப
மாதன தானியலாபம்வந்துகூடுந்
தொகைபெருநாலாமிடத்துக்குடையோனேடு
சொல்லியசேய்கூடிடினும்பூமிலாபஞ்
சுகமானசால்வைமுதலானவஸ்திரம்
துரகதலாபமுந்தளகர்த்தனுமேயாவன்
செகராசர்சமரமதிற்செயமுஞ்செய்வான்
றிருநிறைந்தவாகனபூஷணமுண்டாமே.

(இ - ள்.) வரிசையான பூமியும், விபசாயமும், தனமும், தான்யமும் லாபமாக வந்துசேரும். விரிவுபெற்ற 4-ஆமிடத்துக்குடையவனேடு செவ்வாய் கூடியிருந்தால், பூமி லாபம், சால்வை, வஸ்திரங்கள், குதிரை லாபம், தளகர்த்தனை உத்தியோகஞ்சேரும். ராஜ யுத்தங்களில் ஜெயம்பெறுதல், செல்வ நிறைந்த வாகனங்களும், ஆபரணங்களும் உண்டாம் எ - று. 2

வேறு

ஆகாதகுசனீசனுகிவிடும்போது
அரும்பாவியுடனெட்டுப்பன்னிரண்டிலாறில்
வாகாகக்கூடி நிற்கிற்சலத்தாற்றேஷமுமாம்
மகாபாவமபகீர்த்திகிரகமுடன்போகும்
நோகாதராசவிரோதங்களதுசேரும்
நுவன்றசத்துருபீடைவருஞ்சந்நியாசங்காட்டும்
போகாதபுத்திரகளத்திரசேதஞ்சமரிற்
பொருவிரணமனத்தாபமக்கினியாற்பயமே.

(இ - ள்.) பொல்லாத செவ்வாய் நீசமானாலும், கொடிய பாவியுடன் சேர்ந்து 6, 8, 12-ல் இருந்தாலும், சலத்தால் கண்டமும், மிகுந்த பாவமும், அபகீர்த்தியும், வீடு விலகிவிடுதலும், அரசரால் விரோதங்களும், சத்துருக்களால் பீடையும், சந்நியாசம் பூணுதலும், நிலையான புத்திர களத்திரங்கள் சேதமும், யுத்தத்தில் காயம்படுதலும், சண்டைகள் உண்டாதலும், அக்கினியால் பயமும் உண்டாகும் எ - று. 3

பயமில்லாலக்னுதிபதியுடனேசேய்தான்
பதிந்திருக்கிற்சவுக்கியமும்ராசப்பிரீயமுமாம்
நயமானபதினொன்றுக்குடையவன்றன்னுடன்சேய்
நண்ணியிடிற்றனலாபநவிலிரண்டுமூன்றின்
இயமானனுடனேசேயுற்றிடிற்சோதரத்துக்
கிசைபீடைசத்துருபீடையுஞ்சொற்பசவுக்கிய
மயலார்களுறவுதனக்குதவாமலன்ன
மதுசெலவுசோராக்கினிராஜபயங்காணே.

(இ - ள்.) நிலைபெற்ற இலக்கினாதிபதியுடன் செவ்வாய் நிலைத்து நிற்கில் சவுக்கியமும், ராஜப்பிரியமும் உண்டாம். நன்மைசெய்யும், 11-க் குடையவனுடன் செவ்வாய் சேர்ந்திருந்தால் பொருள் லாபமும், 2, 3-க் கதிபனுடன் செவ்வாய் சேர்ந்திருந்தால் சகோதர பீடை, சத்துருபீடையும், சொற்பமான சௌக்கியமும், அந்நியர்கள் விரோதமும், சிநேகிதர்கள் சமையத்திற் கைவிடுதலும், அதிகமான ஆகாரச்செலவும், திருடர் அக்கினி அரசர்பயமுண்டாம் எ - று. 4

காணவேவாகனங்கள் நாசமதேயாகும்
களத்திரபுத்திரமித்திரர்வெகுநாசமாகும்
பூணவேபெருவிலங்குபூட்டியேவைக்கும்
பொருந்தாறெட்டாமிடத்திற்சேயிருப்பானுகிற்
ரூணவேரணபீடைமகாபாவியாவன்
சொல்வாக்குப்பலியாது துயரமிகச்சேருஞ்
சேணிலாவேதயங்கும்வதனப்பெண்கொடியே
செகதலத்திற்சோதிடர்கள்செப்பினதிவ்வாறே.

(இ - ள்.) ஆகாயத்தில் இயங்கும் சந்திரனும் தயங்கி ஒப்பாகாத முகத்தையுடைய பெண்ணே! வாகனங்கள் களத்திர புத்திர மித்திரர் நாசமுண்டாம். காலில் விலங்கு பூட்டிவைக்கும். 6, 8-ஆமிடங்களில் செவ்வாயிருந்தால் தோன்றும்படியான ரணத்தால் பீடையும், மகா பாவத்தை அடைவன். சொன்ன சொல்லும் பலிக்காது. துயரங்களும் சம்பவிக்குமாம் என்று பூமியின் சோதிடங் கற்றவர்கள் சொன்னூர்கள் எ - று. 5

செப்பியதோரொருமூன்றிற்கேந்திரகோணத்திற்
றிகழ்லாபஸ்தானத்திற்சேயிருந்தானுகிற்
சொற்சவுக்கியமுடனேசிலலாபஞ்சேருந்
தூயநல்லகன்மமுடன்ரூேன்றுமொருநன்மை
தப்பிதமில்லாதிருந்தவிடந்தனேயும்பிரிக்குந்
தனப்பிரிவுசதிபீடையபகீர்த்தியுடனே
யொப்பரியபாவம்வருமனதுக்கத்துடனே
உறவுபகைமனபீடையுண்டாமென்றறியே.

(இ - ள்.) சொல்லும்படியான 3-ஆமிடம், 1, 4, 7, 10-ஆமிடம் கேந்திரம் 1, 5, 9 திரிகோணம், லாபத்தானம் இவைகளில் செவ்வாய் நின்ருல் சொல்லுகின்ற சௌக்கியத்துடனே சில லாபங்களும் சேரும். நல்ல செய்கைகளும் நன்மையான காரியங்கள் தோன்றுதலும், குற்றமில்லாத குடியிருப்புத் தலத்தையும் பிரிக்கும். பொருட் செலவும், களத்திரபீடை, அபகீர்த்தி, ஒப்பாத பாவங்கள், சம்பவிக்கும். மனத்தில் கிலேசம் உண்டாம். உறவாளிகள் பகையும் உண்டாம். மனத்தில் பீடையுண்டாகும் என்று அறிந்து கொள்வாயாக எ - று. 6

அறிவுடையவாக்கேழுக்குடையவன்சேயாகில்
அதிரோகமனப்பீடையதுமிகவுண்டாகும்
பொறிமயில்வாகனர்செபஞ்செய்தேழைகட்குத்தானம்
பொருளாடையுடனன்னம்போதரவேசெய்ய
குறியானபரிகாரமாகுமிதில்நலமே
கொழுங்கரும்புரசத்துடனேமுப்பழத்தின்ரசமு
முறியாமலுறக்காச்சிவடித்தெடுத்தபாகின்
மொழிமடவார்க்கரசானமோகனப்பெண்ணரசே.

(இ - ள்.) செழுமையான கரும்புரசமும் முப்பழரசமும் சேர்த்து முறியாமற் காய்ச்சி வடித்து எடுத்த பாகைப்பார்க்கிலும், சுவைபொருந்திய வசனத்தையுடைய பெண்களுக்கு அதிகாரியான வசீகரம்பொருந்திய பெண்ணே! விசேடித்துச் சொல்லுகின்ற 2, 7-க்குடையவன் செவ்வாயாகில் பலமான ரோகங்களும் மனோதுக்கம் உண்டாம். இதற்குப் பரிகாரம், புள்ளி மயில்வாகனராகிய சுப்ரமணியரின் சடாட்சர மந்திர ஜெபத்தைக் காலாகாலங்களில் செய்ய குறியான பரிகாரமாகும். சங்கடங்கள் விலகி நன்மை பயக்குமாம் எ - று. 7

ஆக அபகாரம் 3-க்கு விருத்தம் 26.

சூரியதிசை இராகுபுத்தி

செங்கதிரோன்றிசையதனில்ராகுபுத்திபத்துத்
திங்களுடனிருபத்துநாலுநாளதனிற்
றுங்கமிகும்பாம்பரிக்கந்தர்க்கதனுகிடினுஞ்
சொற்கேந்திரந்திரிகோணந்தன்னிலிருந்தாலும்
பொங்கமுறுமுற்பாதிதனநாசம்பயமாம்
புகழ்சோரரக்கினியாற்பயமரணபீடை
மங்கைநல்லாயரசராற்றனநாசம்புத்திரர்
வருங்களத்திரபிரிவுபின்பாதியிற்சுகமுண்டாமே.

(இ - ள்.) மங்கைப்பருவப் பெண்ணே! சிவந்த கிரணத்தையுடைய சூரியதிசையில் ராகுபுத்தி 10 மாதமும் 24 நாட்களுமாம். இந்த நாட்களில் உயர்வுபெற்ற பாம்பாகிய ராகு சூரியனுடன் சேர்ந்

திருந்தாலும், கேந்திர கோணத்திலிருந்தாலும், உயர்வுற்ற முற்பாதியில் தனச்செலவும் பயமும் உண்டாம். சோரராகிய திருடர்கள் அக்கினி பயங்கரம் இவைகளாற் பீடையும், அரசரால் தனநாசமும், புத்திரர் களத்திரப் பிரிவுகளும் உண்டாம். பிற்பாதியில் நல்ல சுகமுண்டாம் எ - று. 1

மேலானசுபக்கிரகத்துடனே நின்றாலும்
மிகுசுபரால்நோக்குறினும்வியனசுபாங்கிசத்திற்
பாலாகவிருந்திடினுஞ்சுபராசியதனிற்
பண்புடனின்றாலுமுச்சத்திருந்தாலும்பதிவாய்ச்
சேலாரும்விழிமடவாய்த்திரிகோணத்தேனுஞ்
சிறந்தபத்துமூன்றாறுபதினொன்றிலேனும்
வாலாரும்பாம்பிருந்தத்தானமதுதன்னில்
மருவியிடவதன்பலனைவகுத்திடக்கேளணங்கே.

(இ - ள்.) மீனம்போன்ற கண்களையுடைய தெய்வப்பெண்ணே! மேலான சுபக்கிரகத்துடன் ராகு நின்றாலும், சுபக்கிரகங்களால் பார்த்தாலும், அதிகமான சுபாங்கிசத்திலிருந்தாலும், சுபர்கள் வீட்டில் சுபஸ்தானத்தில் நின்றாலும், உச்சமாக இருந்தாலும், திரிகோணத்திலிருந்தாலும், 10, 3, 6, 11-ஆமிடங்களில் ராகுவிருந்தால், அதின் பலன்களை வகுத்துச் சொல்வேன் கேட்பாயாக எ - று. 2

பலமிகுந்தராசவபிமானமதுசேரும்
பண்புடனேயாரோக்கியமதிகசவுக்கியமாங்
குலவுமகாசுபதனதானியலாபமுண்டாங்
கூடுமேவஸ்திரமும்பூஷணலாபங்கள்
நலவிபசாயமும்பலிக்குமகாலபோசனங்கள்
நடப்பிக்குஞ்சட்டாட்டவியத்தினிற்பாம்பிருக்கிற்
சொலவரியபாவிவந்துகூடினும்பார்த்தாலுந்
துலங்குபலன்சொல்லுவன்கேள்தோகைமடமயிலே.

(இ - ள்.) தோகையுள்ள இள மயில்போன்ற சாயலையுடைய பெண்ணே! பலத்த ராஜாபிமானமும், குணமான ஆரோக்கியங்களும், அதிக சௌக்கியங்களும், சுபகாரியங்கள் உண்டாக்கலும், தனதான்ய லாபமும், வஸ்திராபரணங்கள், விபசாயங்கள் லாபமுண்

டாம். அகால போஜனமும் உண்டாக்கும். 6, 8, 12-ல் ராகு விருந்தாலும், அத்தோடு சொல்லுதற்கரிதான பாவிகள்வந்து கூடி னுலும், பார்த்தாலும் பிரகாசிக்கின்ற பலன்களைச் சொல்லுவேன் கேட்பாயாக எ - று. 3

தோகையரேபந்துசனபீடைகளுமுண்டாஞ்
சுயகிரகபயித்தியமாஞ்சொலும்விலங்குபூணுந்
தாகமுறச்சோராக்னிபிராணபயமுண்டாஞ்
சந்ததியுங்களத்திரமுந்தானபயமுண்டாஞ்
சேகரமாய்ப்பசுக்காலிநட்டமிகவாகுஞ்
செய்கிரகக்ஷேத்திராதிவெகுநாசமாகும்
பாகுமொழிமாதேகேள்ராசபயமுண்டாம்
பகர்காச்சல்குன்மசயரோகம்வரும்பாரே.

(இ - ள்.) பாகுபோன்ற இனிமையான வசனத்தையுடைய தோகாய்! பந்து ஜன பீடைகளும், சுயவீட்டில் பயித்தியங்களுண் டாம். விலங்குடனே சங்கடத்தோடுகூடிய கள்ளர் அக்கினி பிரா ணன் இவைகளால் பயம் உண்டாம். புத்திரர் களத்திரம் மனை இவைகளால் பயமும், பசுக் கன்று காலி இவைகளால் நஷ்டமும், நன்செய் புன்செய் வீடு இவைகள் நாசமடைதலும், ராஜதண்டனை யும், சொல்லக்கூடிய காய்ச்சல், குன்மம், க்ஷயரோகம் இவைகளு முண்டாம் எ - று. 4

பாருமுலைப்பெண்கொடியேயதிசாரபீடை
பகர்க்குதலைவலிமரணம்விஷபேதியுண்டாம்
வீரமிகுலக்கினம்பத்தாறுமூன்றுடனே
மிகுபதினென்றினிலரவுமிருந்தாலுஞ்சுபர்கள்
வாரமுடன்கூடிடிலன்னோர்கள்பார்த்தாலும்
வருமதிகபாக்யமுமதிககீர்த்தியுமாஞ்
சாரமிகுகளத்திரபுத்திராதிமணஞ்சேருந்
தனதான்யமிகச்சேருஞ்சம்பத்துண்டாமே.

(இ - ள்.) பருத்த ஸ்தனமுள்ள பெண்கொடி! அதிசாரத்தால் பீடையும், சொல்லுதற்கரிதான தலைவலி, மரணம், விஷபேதியுண் டாகும். பலம் பொருந்திய லக்கினம் 10, 6, 3, 11-ல் இராகுவிருந்

தாலும், அல்லது சுபர்கள் கூடினாலும், பார்த்தாலும், அதிக பாக்கியம், அதிகீர்த்தி, களத்திரங்கள், புத்திரர்களின் கல்யாணங்கள், தனம், தானியங்கள் சம்பத்து இவைகள் உண்டாம் எ - று. 5

சம்பத்துத்தருமிரண்டிலேழினிலேராகு
தனித்திருக்கிலதர்க்குடையோனேக்கமுறிற்கூடில்
வெம்புற்றமிருத்துபயம்விஷபேதிபயமாம்
மேலதற்குப்பரிகாரந்துர்க்கைசெபஞ்செய்தே
வம்பற்றயேழைகட்குஅன்னமுடனுடை
வழங்கிடவேசாந்தமிகக்கொடுக்குமென்றுபகர்ந்தார்
வம்பற்றபயோதரங்கள்நெருங்கிவிம்மிப்பணைத்து
மதத்தெழுந்தசிறுத்தவிடைமடமயில்நல்லாளே.

(இ - ள்.) வாறுகட்டிய கொங்கைகள் நெருங்கியும் விம்மியும் பருத்தும் மதத்து எழுதலால் பாரந்தாங்காமல் சிறுத்த இடையையுடைய இளமயில் சாயலையுடைய பெண்ணே! செல்வத்தைக் கொடுக்கும் 2, 7-ம் இடங்களில் இந்த ராகு தனித்திருந்தாலும், அந்த இருந்த வீட்டதிபன் பார்த்தாலும் கூடினாலும் வெப்பம் தரும். அவமிருத்து பயமும், விஷபேதியால் பயமும் உண்டாம். இதற்குப் பரிகாரம், துர்க்காதேவி செபஞ்செய்வதோடு, கதியற்ற ஏழைகட்கு அன்னமும், ஆடையுங்கொடுக்க, கொடியதன்மை சாந்தமாகுமென்றும், நல்ல பலன்களைக் கொடுக்குமென்றும் வல்லவர்கள் சாஸ்திரங்களில் சொன்னார்கள் எ - று. 6

ஆக அபகாரம் 4-க்கு விருத்தம்-32.

சூரியதிசை குருபுத்தி

நல்லதொருபானுவுடதிசையிலேதான்
நான்மறையோனபகாரமதியொன்பானும்
வல்லதொருபதினெட்டுநாளைக்குள்ளே
வரும்பலனையியம்புகிறேன்வகையாகத்தான்
எல்லவர்க்கந்தர்க்கதனுயிருந்திட்டாலு
மெழிலுடையலக்னகேந்திரகோணத்திற்

சொல்லரியவுச்சசொக்ஷேத்திரத்திலேனுஞ்
சூரியன்றன்னுடன்கூடியிருக்கிற்கேளே.

(இ - ள்.) நயமான சூரியதிசையில் வியாழனுடைய புத்தி 9 மாசமும் 18 நாட்களுள் உண்டாகும் பலன்களைச் சொல்லுகின்றேன் வகைவிவரம் கேட்பாயாக. சூரியனுக்கு வியாழன் கூடியிருந்தாலும் அழகான லக்கினத்தின், 1, 4, 7, 10-கேந்திரம் அல்லது 1, 5, 9-திரிகோணமாக இருந்தாலும், அல்லது ஆட்சி உச்சமாயிருந்தாலும் குரு சூரியனுடன் கூடியிருந்தாலும் பலன் கேட்பாயாக எ - று. 1

கூடியதோரஞ்சுபதினென்றிலேதான்
குறித்தபெலவானுடனேகூடினாலும்
நாடியதோர்விவாகமுடன்ராசபேட்டி
ரத்தினதாணியலாபம்புத்திரலாபந்
தேடியதோரதிகசுகந்தேகபுஷ்டி
செகராசர்நேசவஸ்திரலாபமுண்டாம்
நீடியதோரகிர்த்திக்கருமசிந்தை
நிகழ்த்திலுலகப்ரீதிகூடுந்தானே.

(இ - ள்.) 1, 5, 11-ல் பலவானுடன் கூடினாலும் விவாகம் உண்டாதல், ராஜபேட்டி ரத்தினம் தான்யம் லாபம் புத்திராள் லாபம் அதிகமான சுகங்களும் தேகபலமும் பூமி யரசர்களால் விசுவாசமும் வஸ்திரலாபமும் உண்டாம். நீட்சிபொருந்திய அதிகமான கீர்த்தியும் தருமசிந்தையும் சொல்லுமிடத்து உலகத்தார்களால் அதிகப்பிரீதியும் உண்டாக்கும் என்பதாம் எ-று. 2

தானனவொன்பதுபத்துடையோனேடே
சதுர்மறையோன்கூடியிருப்பானேயாகில்
மானேகேள்ராச்சியலாபங்களுண்டாம்
மகாசந்தோஷமுமடைவன்சிவிகைலாபஞ்
சேனுதிபதியாய்வஸ்திரலாபந்தான்
சேருமதிசுகம்புதுப்பூக்கிரகமுண்டாம்
பூநாறுங்குழல்மடவாய்கருமஞ்சேரும்
பொருட்சேதமாகுமனேவியாதியாமே.

(இ - ள்.) பூவாசனைபெற்ற கூந்தலுடைய பெண்ணே! 9, 10-க்குடையவனோடே வியாழன் கூடியிருக்கில் ராஜ்ஜிய பாரங்களுண்டாம். மிகுந்த சந்தோஷமடைவன். வாகனங்கள் லாபமும் சேனைகளுக்கு அதிபதியாவன். வஸ்திரலாபம் அதிக சுகமும் புதுப்பூமிகள் சேர்க்கையுண்டாம் எ - று. 3

வேறு

ஆதிமறையவனீசமாகியுறும்போது
அஸ்தமனத்தடைந்திடினுந்தனநாசமாகுந்
தீதுவருமதிகபயம்ராஜகோபங்கள்
சேருமிட்டசனநாசஞ்சேர்ந்துபயமுண்டாம்
வேதமுனிகேந்திரத்திலிருந்தானேயாகில்
வெகுபுத்திரலாபமுடனதிகசுகமுண்டாந்
தீதறுநற்கருமங்களதிசெல்வமுடனே
தேகசவுக்கியஞ்சிவபூசையுமிகச்செய்வானே.

(இ - ள்.) சுகத்தைத்தரும் வியாழன் நீசமாகில் பொருட்சேதமனேவியாதியுண்டாம். அஸ்தமனமாயிருந்தால், தனநாசமும், சங்கடங்கள் உண்டாதலும், பயமும், அரசரால் கோபமும் உண்டாம். வேதமுனியாகிய குரு 1, 4, 7, 10 கேந்திரங்களில் இருந்தால் அநேக புத்திரலாபமும், அதிக சுகமும், குற்றமில்லாத நற்கருமங்கள் செய்தலும், அதிகச்செல்வமும், தேகசௌக்கியமும் சிவபூஜைகளும் செய்வன் எ - று. 4

வேறு

செய்யசுபக்கிரகமதுமறையோன்றன்னைத்
தீர்க்கமுடன்பார்ப்பானேர்ஞானக்கேள்வி
அய்யமில்லாத்தடாகங்கோபுரம்பிரதிட்டை
யனேகபுண்யதர்மமெல்லாமவனேசெய்வன்
வையகத்திலரசரபிமானஞ்சேரும்
வளர்தனவானவனஞ்சிலொன்பானிற்கிற்
கையிலணிவளையுடையகருங்கண்மாதே
கணிதர்களாராய்ந்தபடிகருதிப்பாரே.

(இ - ள்.) செவ்விதாகிய வளையலையணிந்த கையையுடைய மாதே! கணிதவல்லவர்கள் ஆய்ந்தறிந்தபடி சுபக்கிரகங்கள் வியாழ

னைப்பார்த்தாலும், ஞானக்கேள்விகளும், சந்தேகமில்லாமல் தடாகங்கள், கோபுரப் பிரதிஷ்டையும், இன்னும் அனேகமான புண்ய தான தர்மங்களும் செய்வன். அரசர்களால் அபிமானமும் விருத்திசெய்யக் கூடிய தனவானுகுவன். மேலும் குருவானவர் 5-ஆமிடம், 9-ஆமிடம், தங்கி இருக்கில் எ - று. 5

கருதரியபுத்திரலாபங்கல்யாணங்
 கதித்துவருமைசுரியந்தேவபூசை
தருமபலன்றுன்பலன்மந்திரசித்தி
 தருங்குருநற்பத்தியுடன்புத்திரலாபம்
பொருவரியபூஷணவாகனலாபங்கள்
 பொன்னவனுர்பதினென்றிற்பொருந்திநின்றுல்
வருமதிகசுகமுடனேகிரகம்பூமி
 வளர்தனலாபங்கள்சத்துருநாசந்தானே.

(இ - ள்.) புத்திரலாபமும், கல்யாணங்கள் நெருங்கிவருதலும், ஐசுவரியமும், தேவபூஜையும், தருமபலன், தானபலன், மந்திர சித்தி, குருபக்தியுண்டாம். ஒப்புச்சொல்லமுடியாத பூஷணம்வாகனம் லாபங்களுண்டாம். மேலும் இவ்வியாழன் 11-ம் இடத்திலிருக்கில் அதிக சுகமும் பூமிலாபமும், தனலாபமும் உண்டாம். சத்துருக்கள் நாசமடைவர் எ - று. 6

நாசமுறுஞ்சட்டாட்டவியத்திலேதான்
 நான்மறையோனிருந்திடினுநலமில்லாத
தோசமுறும்பாவியுடன்கூடினுலுஞ்
 சோராக்னிராசபயம்வியாதியுண்டாம்
வாசமுடன்சுபரோடேகூடினனேல்
 வருஞ்சவுக்கியபாக்கியமும்போசனங்கள்
பேசரியவஸ்திரபூஷணங்களுண்டாம்
 பிணையினையுமயிலினையும்பழித்தமாதே.

(இ - ள்.) மானையும், மயிலையும் பழித்த சாயலையுடைய பெண்ணே! நாசஞ்செய்கின்ற, 6, 8, 12-ல் வியாழன் இருக்கில் நன்மையில்லாத தோஷங்களுண்டாம். பாவியுடன் கூடியிருந்தால், கள்ளர், அக்கினி ராஜாக்களால் பயமும், வியாதிகளுமுண்டாம். நிலையாக சுபக்கிரகத்தோடு வியாழன் கூடியிருந்தால் சௌக்கியமும் கிரகங்க

ளும் பூமிகளும் உண்டாம் சொல்லுதற்கரிதான வஸ்திராதி பூஷணங்களுண்டாம் எ - று. 7

வேறு

மாமறையோனபகாரமாதியிற்சோபனமா
　மத்தியிலேபரதேசசஞ்சாரமுண்டாஞ்
சேமமுறுமந்தியத்திற்சிலலாபமுடனே
　சிலதுகட்டமுண்டாகுந்தீதுறும்ரெண்டேழுக்
காமிவனேயதிபதியாயுற்றிருக்கிலிவனுக்
　கதிகநோயதுகண்டுஅகன்றிடும்பின்யோகஞ்
சேமநிதிதானமுடனுற்காலியோகஞ்
　செழித்திடுமாரோக்யபலந்திடமுண்டாயிடுமே.

(இ - ள்.) குருவினபகாரம் ஆதியில் சோபன காரியங்களும், மத்தியபாகத்தில் பரதேச சஞ்சாரமுண்டாம். சேமங்கொடுக்கின்ற அந்தியபாகத்தில் சிலலாபங்களும் நஷ்டங்களும் கலந்துகொடுப்பன். இவ்வியாழன் 2, 7-க் குடையவனுகில் அதிக நோயால் வருந்துபவனும், பின் ஆரோக்கியத்துடனிருப்பவனுமாவன். பின்னுல் யோகத்தோடுகூடிய புதையல் எடுப்பவனும், கன்று காலி யோகமும் செழிப்பான அரோகதிடகாத்திரமும் உண்டாகும் எ-று. 8

ஆக அபகாரம் 5-க்கு விருத்தம் 40.

சூரியதிசை சனிபுத்தி

இரவியினிற்சனிபுத்திமாதம்பன்னென்ரே
　டிசையுநாட்பன்னிரண்டின்பலனதனைச்செப்பிற்
பரவுசனிபானுவுக்கந்தர்க்கதனுகிடினும்
　பலித்திடுலக்கினகேந்திரதிரிகோணத்தவனும்
விரவியிடுமுச்சசொக்ஷேத்திரத்தானத்தவனு
　மிகுசுபரோடேகரியோன்கூடியிருப்பானேற்
றிருவுறையுந்தனதான்யவிவாகமதுசேருந்
　தீர்க்கசுகஞ்சத்துருவைசெயம்புரிவான்மின்னே.

(இ - ள்.) மின்போன்ற இடையையுடைய பெண்ணே! சூரிய திசையில் சனிபுத்தி மாதம், 11-உடன் நாள்கள் 12-லும் கொடுக்

கும் பலன்களைக் கூறுமிடத்து விரிவுபெற்ற சனி சூரியனைக்கூடியிருக்கில் பலிதமுள்ள லக்கினம், 1, 4, 7, 10 கேந்திரத்தும், 1, 5, 9, திரிகோணத்தும் உச்சத்தும் ஆட்சிஸ்தானத்தும் அச்சனியானவன் மிகுந்த சுபக்கிரகங்களோடு கூடியிருந்தால் லக்ஷிமிகரமும் தான்யம் தனம் விவாகச் சேர்க்கையும் தீர்க்காயுசும் பெற்று சத்துருவையும் ஜெயம்புரிவன் எ - று. 1

செயமானவாகனத்தானத்தோனைக்காரி
சேர்ந்திருக்கத்திரவியமும்வஸ்திரபூஷணமும்
நயமானவாகனமும்புதுக்கிரகத்துடனே
நல்லசுபசோபனமும்ராசப்ரீதியுமாஞ்
சுயபூமிலாபமொடுதனதான்யலாபந்
தொகுத்துவரும்பாவரிவன்றனைநோக்குவாரேல்
பயம்ராசகோபமொடுதாயாதிக்கலகம்
பந்துவினாலுயிர்ச்சேதம்பருவிலங்குவருமே.

(இ - ள்.) செயம்பெற்ற 4-ம் இடத்தவனைச் சனி சேர்ந்திருந்தால் திரவியம், வஸ்திரம், ஆபரணம், நல்லவாகனம், புதுக்கிரகங்கள், நன்மையான சுபசோபனம், ராஜப்பிரீதியும் உண்டாகும். சுயமான பூமி பலிதமும், தனம், தான்ய லாபமும் வரிசையாய் உண்டாகும். பாவக்கிரகங்கள் சனியைப்பார்த்தால் பயம், ராஜகோபம், தாயாதிப் பகை, கலகம், பந்துக்களால் உயிர்ச்சேதமும், ராஜதண்டனையான விலங்கும் சேரும் எ - று. 2

விலங்குவருந்தனநாசங்காரியநாசங்கள்
விளங்குமிட்டகிலேசமொடுமிகபயமுமுண்டாங்
கலங்கிமிகச்சண்டைவருஞ்சட்டாட்டவியத்திற்
காரிநிற்கிற்புத்திரகளத்திரநாசந்தேக
பெலன்குறையுமதிகபயந்தொடுத்தகாரியமும்
பிரண்டுவரும்வயற்றுவலிவாயுவினால்ரோகஞ்
சொலுங்காய்ச்சலதிசாரஞ்சன்னியுமுண்டாகுந்
தூயமொழிப்பவளவிதழ்ரேகையிளமயிலே.

(இ - ள்.) பரிசுத்த வசனமும், பவளம்போன்ற இதழ்களையுமுடைய தோகையுடைய இளமயிற் சாயலையுமுடைய பெண்ணே!

விலங்குவருவதோடு தனநாசம், காரியக்கெடுதி, பிரகாசிக்கின்ற இஷ்டர்கள் கிலேசம், அதிக பயமுமுண்டாம். கலக்கமுண்டாம். சண்டைகள் உண்டாம். 6, 8, 12-ல் சனிநிற்கில் புத்திரர், களத்திரம், நாசம் உண்டாம். தேகபலன் குறையும், அதிகபயமும் எடுத்தகாரியமும் பிரண்டு வருதலும், வயிற்றுவலியும், வாயுவினால்ரோகமும், சொல்லக்கூடிய காய்ச்சலும், அதிசாரமும், சந்நிநோயுமுண்டாம் எ - று. 3

மயிலேகேள்காரிபுத்தியாதிமித்திரர்நாசம்
  வரும்நடுவிலற்பசுகங்கடையில்மகாகிலேசம்
பயிலரசர்மூலத்தாற்றனதான்யநாசம்
  பகர்கேந்திகோணத்திற்பாவருடன்கூடி
இயங்கிநிற்கமார்பதனில்வெகுகுத்துக்காணும்
  இசைபுத்திரர்நாசமன்னியதேசசஞ்சாரங்கள்
*தயலேயாறெட்டினிற்றீக்கோளுடனேகூடிற்
  றனதிகபயமுண்டாஞ்சத்ருபயமாமே.

(இ - ள்.) மயில் சாயலுள்ள பெண்ணே! இன்னமுங்கேள். சனிபுத்தி ஆதியில் மித்திரர்கள் நாசமும், நடுப்பாகத்தில் அற்பமாகிய சுகங்களும், கடைப்பாகத்தில் மிகுந்த கிலேசமும், மிகுந்த பயங்களுமுண்டாம். இராசமூலத்தால் பொருள்தானியங்கள் நாசமுண்டாம். சொல்லுகின்ற 1, 4, 7, 10-கேந்திரத்திலும் 1, 5, 9 திரிகோணத்திலும் சனி பாவருடன்கூடி இயங்கி இருந்தால் மார்பு குத்து, புத்திரர் நாசம், அந்நியதேசசஞ்சாரம் உண்டாம் பெண்ணே! 6-ஆமிடம் 8-ஆமிடங்களில் பாவக்கிரகங்களோடு சனி கூடிநிற்கில், அதிகபயமும், சத்துருக்களால் பயமும் உண்டாகும் எ - று. 4

சத்துருவாம்புத்திரனுந்தாரத்தாற்பிரிவாஞ்
  சயித்தியமும்பயித்தியமுஞ்சரீரமானமுமா
மெத்தவுளராசபயஞ்சத்ருபயங்கூடு
  மிகுந்தெய்வநிந்தைதர்மநிந்தையதுசேரு
நத்திவருஞ்சகோதரர்க்குப்பீடைபந்துநாச
  நலமில்லாவிபசாயநாற்காலிசேதஞ்
சித்தமுடன்பருவிலங்குபூணவுமேசெய்யுஞ்
  செழுங்காரிபாவியுடன்சேர்ந்திடினல்லாளே.

---

* தயலே—தையலே.

(இ - ள்.) பெண்ணே! சனியுடனே பாவிகூடியிருந்தால், புத்திரனால் சத்துருவும், தாரத்தால் பிரிவுறுதலும், சயித்தியம் பயித்தியத்தாற் கூடியரோகமும், சரீர அவமானமும், ராஜபயமும், சத்துருவால் பயமு முண்டாகும். தெய்வநிந்தை தர்மநிந்தை வந்துசேரும் சகோதரபீடை, பந்துக்கள் நாசம், விபசாயத்தால் சேதமும், கன்று காலி சேதமும் உண்டாவதுடன் விலங்குபூணுதலும் உண்டாம் எ - று. 5

நல்லதொருலாபத்தானத்தினிலேகாரி
நண்ணியிடிலதிகருமங்களத்திரபுத்திரலாபஞ்
சொல்லரியபூஷணவஸ்திரதான்யலாபஞ்
சொலுங்கரியோனிரண்டேழுக்கதிபதியாயிருந்தால்
மெல்லவருமவமிருத்துகண்டமுண்டாயகலும்
விளம்புபரிகரிமுதலாய்நாற்காலியாதி
வல்லதொருசெல்வவானெனப்புகழினுடனே
வாழ்ந்திடுவனவமிருத்துதோஷமுமாறிடுமே.

(இ - ள்.) நலம் கொடுக்கின்ற 11-ம் இடத்தில் சனி இருந்தால் அதிக முயற்சியும், களத்திர புத்திரலாபங்களும், பூஷணங்கள், வஸ்திரலாபமும், தான்யலாபமும் உண்டாம். 2, 7-க்கு அதிபதியாகச் சனியிருந்தால், அவமிருத்துகண்டம் தோன்றி விட்டுவிடும். பின்னல் யானை, குதிரை முதலிய நாற்காலி இலாபத்தோடு வலிமைபெற்ற செல்வவானென்றும் புகழுடனே வாழ்ந்திருப்பன். அவமிருத்து தோஷமு மாறிவிடும் எ - று. 6

ஆக அபகாரம் 6–க்கு விருத்தம் 46.

சூரியதிசை புதன்புத்தி

தோஷமில்லாரவிதிசையிற்புதன்புத்தியாகத்
தொகுத்தவொருகாலத்துள்சொலும்பலனைக்கேளாய்
நாசமில்லாப்புதன்கேந்திரசொக்ஷேத்ரவுச்சம்
நல்லபலவானுடனேகூடியிருந்தாலும்
பேசரியசுப்ருடனேகலந்திருந்தானேனும்
பெருத்தசுகம்பூலாபஞ்சந்தோஷமுண்டாம்

நேசமிகுபுத்ரமித்ரகளத்திரராதிக்கு
நேரானசவுக்கியமுண்டாமெனச்சொல்மாதரசே.

(இ - ள்.) பெண்ணரசே குற்றமில்லாத சூரியதிசையில் புதன் புத்தி மாதம் 10. நாள் 6-க்கும் சொல்லுகின்ற பலன்களைக் கேட்பாயாக. கெடுதல் செய்யாத புதன் 1, 4, 7, 10 ஆகிய கேந்திரத்தில், ஆட்சி உச்சம் பெற்றும் பலவானுடன் கூடியிருந்தாலும், சொல்லுதற்கரிதான சுபருடன் கலந்திருந்தாலும், அல்லது பார்வை பெற்றாலும், பெருமிதமான சுகமும், பூமி லாபமும், சந்தோஷமும் உண்டாவதுடன் உரவுமிகுந்த புத்திரர், சிநேகிதர், களத்திர முதலியவர்களுக்கு நேர்மையான சௌக்கியங்கள் உண்டாகுமென்று சொல்வாயாக எ - று. 1

மாதேகேள்ராசசன்மானங்களுடனேதான்
வருமதிகக்கீர்த்திவித்தைலாபமுமேயாகுந்
தீதெதுமில்லாததுதன்கைகூடுங்கோவால்
சிறக்கும்வஸ்திரபூஷணமும்லாபமுமேயுண்டாங்
கோதெதுமில்லாததர்மதீர்க்கதானங்கள்
கொடுத்திடநாற்காலிவெகுலாபமிகவுண்டாம்
போதேவீடாகவளர்சீதேவிசேரும்
பூங்கொடியேகணிதநூற்புகன்றனரிவ்வாறே.

(இ - ள்.) பூங்கொடிபோல்பவளே! ராச சன்மானம், அதிக கீர்த்தி, வித்தை, லாபம் உண்டாம். குற்றமில்லாமல் காரியங் கைகூடுதலும், அரசரால் சிறப்புடைய வஸ்திரம், பூஷணம், லாபமும், புண்ணியமிகுந்த தான, தர்மங்கள், செய்வன். கன்றுகாலி லாபமுண்டாம். செல்வ வீடாகி வளர்கின்ற சீதேவிவந்து சேரும் என்று சோதிட கணித வல்லவர் சொன்னார்கள் எ - று. 2

வாகானபிதிர்த்தானலாபத்தானத்தான்
வகைக்கதிபனுடன்கூடிபுத்திநின்றால்பலன்கேள்
நோகாமற்றிரவியவஸ்திரத்தினோடுவுலகில்
நோக்கரியபூஷணமும்வாகனமுமுண்டாம்
போகாதசிவிகையுண்டாந்திரிகோணந்தனில்மால்
பொருந்தியிடில்ராசசன்மானங்களுடன்தக்க

யோகாதிநல்லபுத்திதானதருமங்க
ளுடன்றேகசவுக்கியமுமுடையவனுவானே.

(இ - ள்.) அழகான 9-ஆமிடத்ததிபன் 11-ஆமிடத்ததிப னுடன்கூடி புதன் நிற்கில், திரவியம், வஸ்திரம், மேலான ஆபரணம், வாகனம், பல்லக்கு உண்டாம். 1, 5, 9-ஆமிடங்களில் புதன் நின் ருல், ராஜசன்மானங்களும், நல்ல யோகமும், விசேஷ புத்தி தீக்ஷண்யமும், தானதருமங்கள் செய்தலும், தேகசௌக்கியங்களும் உண்டாம் எ - று. 3

வேறு

ஆகுமேபூராசர்பிரியத்தோடு
ஆனதொருவிபசாயம்பூமிலாபம்
வாகுபெருதரளமணிமாலையோடு
வரும்நரவாகனம்வஸ்த்ராபரணந்தானும்
யோகமிகுவித்வசனருடனேகூடி
யொழுங்குபெறக்கல்வியறிந்திடுவனப்பா
போகமிகும்போசனந்தான்சவுக்கியமாகும்
பொருமிவிம்மிப்பணைத்தவிருமுலைப்பூம்பாவாய்.

(இ - ள்.) இடமகன்று விம்மி பிரகாசித்த இரண்டு ஸ்தனங்க ளுடைய அழகிய பெண்ணே! புவிக்கரசரால் பிரியமும், விபசாயம், பூமிலாபம், அழகுபொருந்திய முத்தாபரணம், நரவாகனம், வஸ்திரா பரணம், பெருவதோடு யோகமிகுந்த வித்வான்களுடன்கூடி ஒழுங்கு முறையான கல்வி அறிபவனுமாவன். போகமிகுந்த போசனம் செய்பவனும் ஆவன் எ - று. 4

பூவையரேசட்டாட்டவியத்திலேனும்
பொருந்திடாநீசத்தானத்திலேனும்
பாவனையாய்ப்புந்தியுறிலன்றேன்புத்தி
பாராதிசவுக்கியம்பூஷணமாரோக்யங்
கோவைமிகும்புத்திரபூஷணலாபங்கள்
கொடுக்கும்வஸ்த்ரலாபமுடன்சவுக்கியமுண்டாம்
தேவையுள்ள்போஜனங்கள்மிகவுண்டாகும்
செப்பதனைப்பழித்தமுலைத்திருவேகேளாய்.

(இ - ள்.) செப்பைப்பழித்தஸ்தனத்தையுடைய திருவே! 6, 8, 12-லும், நீசத்தானத்தும், புதன்நிற்கில், பூமி பலிதமும், ஆபரணம், ஆரோக்கியம், வரிசையான புத்திரலாபம், ஆபரணலாபம் கொடுக்கும். சௌக்கியமுண்டாம். தேவையான போஜனங்கள் கிட்டும் என்பதாம் எ - று. 5

வேறு

வேகமிகுமத்தியத்திற்சதாரோகபீடை
மிகுத்துவிடுங்கடையதனிற்றலையிடியுங்காச்சல்
சோகமுறப்பரதேசசஞ்சாரமன்னர்
சொலுங்கோபஞ்சூரனுடனிவன்கூடியிருக்கில்
வாகுபெருநாற்காலிகளத்திரமுநாசம்
வரும்வாக்குச்சல்லியமுமரசர்பயமுண்டாம்
பாகினையுமமுதினையுந்தேனினையும்பழித்துப்
பழகுமொழிமடமாதேபகர்ந்தனர்முன்னூலே.

(இ - ள்.) பாகு, அமிர்தம், தேன் இவைகளின் சுவையைப் பழித்து இனிமைச்சொல் விசைக்கின்ற இளமைப்பருவமாதே! புதன் புத்தி மத்தியகாலத்தில், சகோதர பீடையும், கடைசிப்பாகத்தில், தலையிடி, காய்ச்சல், துக்கத்தால் அந்நியதேசவாசம், அரசரால் கோபமும், பாவரோடு புதன் கூடிநிற்கில், கன்று காலி, களத்திர நாசமும், வாக்குச் சல்லியம் உண்டாம் எ - று. 6

முன்னூலின்படியிரண்டேழுக்குடையோனுகி
முதிர்புலவன்றனிருக்கில்மோசம்வெகுசேத
மன்னோர்க்குத்தலைவலியுஞ்சுரபீடையுண்டா
மதுதனக்குப்பரிகாரமதுசகஸ்ரநாமந்
தன்னுலேசெபஞ்செபிக்கச்சகலதோஷங்கள்
தானகலும்யோகமுடன்சவுக்கியமாமென்றே
சொன்னர்கள்சோதிடநூலாய்ந்துகரைகடந்தோர்
தோகையெனவளர்சாயற்சொல்லினிலஞ்சுகமே.

(இ - ள்.) மயிற்சாயலும், கிளிமொழியையுமுடையவளே! முன் சொன்ன சாஸ்திரப்படி 2, 7-ஆமிடத்ததிபனாய் புதன் நிற்கில், மோசநாசங்களும், தலைவலி, சுரத்தால்பீடையும் உண்டாம். இதற்குப்

பரிகாரமாக சகஸ்திர நாமார்ச்சனே, விஷ்ணுவுக்கு செய்யில் சகல தோஷங்களும் நீங்கி சௌக்கியம் உண்டாகுமென்று சோதிடநூலி லாராய்ந்து கரைகடந்த பெரியோர் சொல்லுகின்றனர் எ - று. 7

ஆக அபகாரம் 7-க்கு விருத்தம் 53.

சூரியதிசை கேதுபுத்தி

சுகமில்லாச்சூரியனிற்கேதுபுத்திமாசஞ்
சொலுநாலுநாளாறிற்ருேன்றுபலன்கேளாய்
மிகுரவிக்கந்தர்க்கதனுய்க்கேதிருந்தால்செலவு
மிகுதேகபீடைமனேபீடையுடன்றுக்கம்
வெகுராசகலகமுடன்பந்துசனநாச
மிகுந்தலக்கினுதிபதியுடன்கூடியிருக்கிற்
றகுமாதிதனிற்சவுக்கியந்தனலாபம்நடுவிற்
றருபீடைகடையினிலேசேதமிகத்தருமே.

(இ - ள்.) சுகமில்லாத சூரியதிசையில் கேதுபுத்தி மாதம் 4, நாள் 6-ல் உண்டாகும் பலன்களைக்கேள். சூரியனேடு கேது கூடி யிருக்கில், அதிகச்செலவும், தேகத்தில் பீடை, மனதில் பீடை, துக்கம், ராஜகலகம், பந்துஜனங்கள் நாசமும் உண்டாம். லக்கினுதி பதியுடன் கூடி கேது இருக்கில், புத்தி ஆதியில் சௌக்கியமும், தனலாபமும் உண்டாம். புத்தியின் நடுப்பாகத்தில், பீடையுண்டாம். புத்தியின் கடைசியில் நஷ்டமுண்டாக்கும் எ - று. 1

தருகாதாறெட்டினிற்கேதிருந்திடினும்பாவர்
தன்னுடன்சேர்ந்திருந்தாலுங்கனரோகந்தாக்கும்
வருகிரகமாற்றிவிடும்மாதுர்சதிபீடை
வளர்பிதிருநாசமதாம்பானுவுடன்கூடிற்
பொருள்நாசமுடன்ரோகமதிகபயத்தோடு
புயங்கபயமித்ரபுத்ரநாசமதுகாட்டும்
உருகாதவிரும்புருகவினியமொழிபுகலும்
ஒண்டொடியேகணிதநூலுரைத்தனரிவ்வாறே.

(இ - ள்.) உருகாத இரும்பும் உருகும்படியான இனிய வசன முடைய ஒளிவுபெற்ற வளையலையணிந்த பாவாய்! கேது 6, 8-ஆ

மிடத்தில் இருந்தாலும், பாவர்களோடு கேது நின்றாலும், மிகுந்த ரோகமுண்டாம். வீட்டைவிட்டு மாற்றிவிடும். தாய் களத்திரத்திற்கும் பீடையுண்டாம். தகப்பனுக்கும் தோஷம் உண்டாம். சூரியனுடன் கேது கூடிநிற்கில், பொருள் நாசமும் ரோகங்களும், சர்ப்ப பீடிகையும், புத்திரநாசமும் உண்டாம் எ-று. 2

உரைத்தமூன்றுறுபத்துப்பதினொன்றிற்கேது
உதித்திடினுஞ்சுபனுடனேகூடியிருந்தாலுந்
தரைக்குள்வெகுதனலாபங்கலியாணஞ்சேருஞ்
சந்தோஷகாரியங்கள்நன்றாகக்கூடும்
பொருத்தமிகுபிதுர்பாக்கியத்தானத்தோன்றன்னைப்
புயங்கமதுவொருந்திடினும்புத்திரலாபந்தான்
கருத்துறவேராசாபிமானமதுசேருங்
கசதுரகவாகனலாபமுமிகவுண்டாமே.

(இ - ள்.) முன்சொல்லிய கேது 3, 6, 10, 11-ஆமிடங்களில் இருந்தாலும் சுபருடன் கூடியிருந்தாலும், பூமியில் வெகு பொருள் லாபமும், கல்யாண சேர்க்கையும், சந்தோஷகாரியங்கள் நன்மையாகக் கூடுதலும் உண்டாம். பலமான 9-ஆம் இடத்ததிபனுடன் கேது பொருத்தமாய் நிற்கில், புத்திரலாபம், மனது பொருத்தமுள்ள ராஜர்களால் அபிமானம், யானை, குதிரை, வாகனலாபமும் உண்டாகும் எ - று. 3

உண்டாகும்லாபத்தானத்தோனைத்தானே
யுரைகேதுகூடியிடிற்சவுக்யமிகவுண்டாந்
தண்டாதமூன்றுடையோனுடன்கூடிநின்றால்
சகோதரத்தில்நாசமுறுந்தனித்திடுமாறுதி
அண்டிநிற்கசுரபீடைபத்தினிலேநின்று
லவனினைத்தகாரியங்கள்கைகூடாதேபோம்
வண்டாரும்பூங்கூந்தல்கறுமேகமென்ன
மயிலாடுமதிவதனமானினைக்கண்மாதே.

(இ - ள்.) வண்டுமொய்க்கின்ற பூமாலையணிந்த கூந்தல் கறுமேகமென்று நினைத்து, மயில்களாடவும், சந்திரன்போன்ற முகமும், மானின் இரண்டு கண்களையொத்த பார்வையுமுடையவளே! 11-ஆ

மிடத்ததிபனுடன் கேது கூடியிருந்தாலும், சவுக்கியம் தருவான். 3-ஆமிடத்ததிபனுடன் கேது கூடிநின்றால், சகோதரருக்குச் சங்கடமுண்டாம். 6-ஆமிடத்ததிபனுடன் கேது கூடிநின்றால், சுரத்தாற் பீடையுண்டாம். 10-ஆமிடத்ததிபனோடு கேது நின்றால் அவன் நினைத்தகாரியங்கள் கைகூடாது என்பதாம் எ - று. 4

கண்ணுகுமிரண்டேழிற்கேவந்துநின்றாற்
கடியதொருபீடைவந்துகழிந்துவிடும்பின்னே
எண்ணியவாகனமும்பூமிதனதான்யம்
இராசர்களின்விசுவாசமினும்பலநற்பலன்கள்
தண்ணருஞ்சோலையுடன் புதுமணங்களாதி
சமைத்ததிகசுகவாழ்வுதன்னையடைவானே
பண்ணருஞ்சுரும்பினிசைபாடிடுமைக்கூந்தற்
பங்கயமாமுகத்திருவேபகர்ந்தனர்நல்லோரே.

(இ - ள்.) இசைநிறைந்த பாடல்களை வண்டுகள் பாடுகின்ற மலர்மாலையணிந்த மேகம்போன்ற கூந்தலையும், பங்கயம்போன்ற முகத்தினையுமுடையவளே! நேத்திரமான 2, 7-ஆமிடங்களில் கேது நின்றால், கொடுமையான பிணிவந்து விலகும். பின்னால் நினைத்த வாகனங்கள் வந்துசேரும். பூமி, தனம், தான்யம், இராஜவிசுவாசமும் இன்னும் பல நல்லபலன்களையும் அனுபவிப்பான். மேலும், குளிர்ச்சிபொருந்திய சோலையுண்டாக்குதலும் கல்யாணங் கூடுதல் முதலான சமஸ்தபோகங்களையும் அடைவான் என்று நூல்கற்ற நல்லோர் நுகர்ந்தனர் எ - று. 5

ஆக அபகாரம் 8-க்கு விருத்தம் 58.

சூரியதிசை சுக்கிரபுத்தி

பங்கயநண்பன்றிசையிற்புகரபகாரந்தான்
பன்னிரண்டுமாதமதிற்பலாபலஞ்சொல்லிடக்கேள்
செங்கதிரோன்புகர்க்கந்தர்கதனுகியிடினுந்
திரிகோணரேந்திரவுச்சந்தனிற்புகர்சேர்ந்தாலும்
பொங்கமுறுநாற்காலிதனலாபமுடனே
பொருந்துகளத்திரசவிக்கியம்பிறதேசவாசந்

துங்கமிகுமரசர்மறையோர்களுடன்நேசந்
 தூயமிகுலாபமுஞ்சந்தோஷமிகச்சொல்லே.

(இ - ள்.) தாமரை நண்பனான சூரியதிசையில் சுக்கிரன் அபகாரம் மாதம் 12-க்கு பலனுரைப்பதைக் கேட்பாயாக. சூரியன் சுக்கிரனுடன் கூடியிருந்தாலும், 1, 5, 9-திரிகோணத்தேனும் 1, 4, 7, 10-கேந்திரத்தேனும், உச்சத்தேனும், சுக்கிரனின்றால் பெருமிதமான கன்று காலியும், தனலாபமும், களத்திரசௌக்கியமும் அந்நிய இடங்களில் சஞ்சாரஞ் செய்தலும் உயர்வுபெற்ற அரசர்கள் மறைவல்லாளர்களுடன் சிநேகமும் பரிசுத்தமானவரால் மிகுந்த லாபமும் சந்தோஷமும் உண்டாம் எ - று. 1

சொல்லரியபாவியுடன் புகரதுசேர்ந்திடினுஞ்
 சொலுநீசனுடனுறுஞ்சட்டாட்டவியத்தினிலே
வல்லமையாயஸ்தமனக்கிரகமுடன்கூடி
 வந்திடினுமக்கள்களத்திரபீடையுடனே
நல்லகிரகம்பிரிவுதனம்பூமிநாச
 நவின்றபந்துவால்நாசநாற்காலிநாசங்
கல்லல்மிகுவுத்தியோகநாசமதுகாட்டுங்
 கனதேகபீடைசத்துருகலகமுமுண்டாமே.

(இ - ள்.) சொல்லுதற்கரிதான பாவியுடன் சுக்கிரன் கூடியிருந்தாலும், நீசமானாலும் நீசனோடு சேர்ந்தாலும், 6, 8, 12-ல் இருந்தாலும், அஸ்தமனமானாலும், அஸ்தமனமானவனோடு இருந்தாலும், புத்திரர், களத்திரம், பீடையுண்டாம். கிரகப்பிரிவும் உண்டாகும். செல்வமும், பூமியும், நாசமடையும், பந்துக்களால் நாசங்காட்டும், கன்றுகாலிகள் சேதமடையும், உத்தியோக நஷ்டமுண்டாம், அதிகமான தேகபீடையும், சண்டைகளுமுண்டாம் எ - று. 2

கலகமிகுநோய்சேருங்கிரகவுபத்திரத்தாற்
 கனராசர்விரோதமற்பசவுக்கியமுமுண்டா
முலகில்மனத்தாபமுடனரசரபிமான
 முடன்சுபாதிபமாகுமுடையதிசைநாதன்
குலவுகேந்திரகோணந்தன்னிலிருந்திடிலோ
 குறித்ததனலாபம்வரும்பன்னென்றுமிடத்தில்

பலமுறவேயிருந்தாலுமுச்சசொக்ஷேத்திரத்திற்
பதிந்தாலுமதன்பலனைப்பகருவன்கேள்மின்னே.

(இ - ள்.) மின்னல்போன்ற இடையையுடையவளே! கலகத்தால் நோய் சேரும், வீட்டில் சண்டைசச்சரவுகளால் ராசாக்கள் விரோதமுண்டாம், இடையில் அற்பமான சௌக்கியங்களும் உண்டாம், சொற்பராஜாபிமானமும் பாதி சுபத்தன்மையைக் கொடுப்பன். பிரகாசிக்கின்ற 1, 4, 7, 10-ஆகிய கேந்திரத்தும், 1, 5, 9 - ஆகிய திரிகோணத்தும் சுக்கிரனிருந்தால் குறிப்பான செல்வமும், லாபமும், உண்டாம். 11-ம், இடத்தில் பலம்பெற்று இருந்தாலும், உச்சம், ஆட்சியிடங்களில் சுக்கிரன் நின்றாலும், அதன் பலன்களைச் சொல்லுவோம் எ - று. 3

பகர்வன்கேள்மேதினிலாபத்துடனேயுயர்ந்த
பார்த்திபர்சன்மானமுறும்பரிசிவிகைசேரும்
நிகரில்லாவஸ்திரபூஷணலாபங்கீர்த்தி
நேரிழையார்சவுக்கியம்புத்திரலாபமுண்டாஞ்
செகமனராலுத்யோகசீவனமுமுண்டாந்
தெய்வதாபத்திகளத்திரபுத்திரசவுக்கியம்
புகழ்பெருகுகஜதுரகமிவ்ன்பாலிற்சேரும்
பொன்னுசப்ரமஞ்சமுடன்பொருந்தியவாழ்வுண்டே.

(இ - ள்.) சொல்லக் கேட்பாயாக, பூமி லாபம் உயர்வு பெற்ற அரசர்களால் சன்மானமும், குதிரை, பல்லக்கு சேரும். ஒப்புவமை சொல்லமுடியாத வஸ்திராபரணலாபமும், கீர்த்தியும், பெண்களால் ஏற்படும் நிறைந்த சௌக்கியமும் புத்திரலாபமும் பூமிக்கரசர்களால் உத்தியோகமும் உண்டாகும். தேவதாபக்தியும், புத்திர களத்திர சௌக்கியமும், கீர்த்திபெறத்தக்க ரத, கஜ, துரக, சேர்க்கையும், பொன்னாற் செய்த சப்ரமஞ்சமுடன் பொருந்தக்கூடிய சுகவாழ்வுண்டாம் எ - று. 4

பொருந்திநிற்குஞ்சட்டாட்டவியத்தானந்தனிலே
புகருறினும்பாவருடன்பொருத்தமுடன்கூடி
இருந்தாலுந்தனம்புத்ரகளத்திரநாசங்கள்
இராஜகோபங்களுண்டாமிவன்புத்திமுதலில்

வருங்காலஞ்சிவிகையுறு மத்தியத்திற்கஷ்டம்
வந்துவிடுமந்தியத்திற்றன தான்யநாசந்
தருங்கிரகம்பொருந்திவிடுந்தேகமதிற்பீடை
தானுண்டாம்பந்துசன நாசமதுண்டாமே.

(இ - ள்.) இந்தச் சுக்கிரன் 6, 8, 12-ல் பொருந்தியிருந்தாலும், பாவக்கிரகங்களுடன் கூடியிருந்தாலும், பொருள், புத்திரர், களத்திரங்கள் நாசமடைதலும், இராஜகோபங்களும் உண்டாம். இச் சுக்கிர புத்தி முதலில் பல்லக்குண்டாம். மத்தியில் கஷ்டம்வரும், அந்தியத்தில் தனம் தானிய நாசங்காட்டும், வீடு அடைத்தலுண்டாம், தேகபீடையுண்டாம், பந்துஜனங்கள் நாசமடையும் எ - று. 5

நாசமுறும்ரெண்டேழுபிருகுறியோனுனல்
நற்றேகபீடை துக்கமட்டமத்தோனுடனே
வாசமுறில்மிருத்துபயம்வந்தகலுங்கண்டாய்
வகையானவேறுபலபிணிபீடையாதி
நேசமிகவாபவதிவந்தகன்றுபோகும்
நீதியுடன்பின்பலனேநிறையானவாழ்வாம்
பூசியசாந்திழைத்தெழுந்துபுடைத்துவிம்மிப்பணைத்துப்
பொருப்பெனவேயுயர்ந்தமுலைப்பொற்கொடிமின்னரசே.

(இ - ள்.) மேற்பூசிய கலவை பொரிபடும்படி உயர்ந்து விம்மி பருத்து மலைபோன்று உயர்வுபெற்ற தனங்களையும் பொற்கம்பி போன்ற மின்னலுக்குச் சமமான இடையையுமுடைய பெண்கள் நாயகமே! கேட்பாயாக. கெடுதல் செய்கின்ற 2, 7-ஆமிடத்திற்கு இச்சுக்கிரன் அதிபதியாகில் நல்லதேகம், பீடையால் மெலியவும் துக்கமுண்டாம். 8-ஆமிடத்ததிபதியுடன் சுக்கிரன் சேர்ந்தால் அவமிருத்துபயம் வந்துவிலகும். வகைவகையான பற்பலவியாதிகளுண்டாம். நேசமான பல கஷ்டங்கள் வந்து மறுபடியும் விலகிப் போகும். பின்னால் சமமான வாழ்வு உண்டாகும். 6

ஆக அபகாரம் 9-க்கு விருத்தம் 64.

சந்திரதிசைப் படலம்

வேறு

சந்திரன் றிசையிலாண்டுதான துபத்துக்குள்ளே
வந்திடுஞ்சிவிகைலாபம்வளர்ந்தபோசனம்படுக்கை
செந்திருமிகவுஞ்சேர்வாள்சிறப்பிலாச்சத்ருநாசம்
இந்தவா றுண்டாமென்றேயியம்பினர்கமலமாதே.

(இ - ள்.) தாமரையில் வசிக்கும் லக்ஷிமிக்கொப்பானவளே! சந்திரதிசைவருஷம் 10-க்குள் பல்லக்கு, போஜனம், படுக்கை லாபமும், லக்ஷிமிகரமும், சத்துருக்கள் நாசமும் உண்டாம் எ - று. 1

மாமதிவாக்கிலே னும்வளர்பதினொன் றிலே னும்
நேமமாய்க்கேந்ரகோண நின் றுமேசுபர்களோடு
தாமுற நிதியிலாபந்தான்யநாற்காலிலாபம்
பூமியிற்களத்திரத்தோடுபுத்திரலாபந்தானே.

(இ - ள்.) பூர்ணசந்திரன் 2, 11 - ஆமிடத்தில் நின்றாலும், அல்லது 1, 4, 7, 10-ஆகிய கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணத்து நின்றாலும், சுபக்கிரகங்களோடு சம்பந்தப்பட்டாலும், பொருள், தான்யம், கன்று காலி இலாபமும், பூமியிற் களத்திரத் தோடு புத்திரர்களும் இலாபமுண்டாம் எ - று. 2

தான றிவித்தையார்க்குஞ்சாற் றுவானரசராலே
மேன்மையாஞ்சந்தோஷங்கள்விளையுமாறெட்டானாலும்
ஊனமாம்பனிரெண்டேனுமுதித்திடிற்களத்ரபுத்ர
ரீனமாந்தாணியாதியிசைந்திடுமென் றுசெப்பே.

(இ - ள்.) தான்கற்ற வித்தையை பிரசங்கம் செய்பவனுமாகி அரசரால் மேன்மையடைவன், சந்தோஷங்களை யடைபவனுமாவன், 6, 8, 12-ஆமிடங்களில் சந்திரன் நின்றால், களத்திரம், புத்திரர், கெடுதலும், தன தான்யங்கள் குறைபடுமென்று சொல்லக் கடவாய் எ - று. 3

செப்பியபரதேசத்திற்சென் றுசஞ்சாரஞ்செய்வன்
ஒப்பிலாச்சலத்தாற்கண்டமுற்றிடுமுலகந்தன்னிற்

றப்பிலாபலாத்தாந்தானத்துடையவன்ருனேபார்த்தா
லிப்புவியதனிற்பின்னே சுகமுண்டாமெனச்சொல்மானே

(இ - ள்.) சொல்லக்கூடிய பரதேசஞ்சென்று சஞ்சாரஞ் செய்வன், உவமைசொல்லாத சலகண்டஞ்சேரும், குற்றமில்லாத தானத்ததிபன் பார்வைபெற்ற சந்திரனுகில் பூமியில் பின்னுல் சுகம்பெறுவன் என்று சொல்வாய் எ - று. 4

சொல்லிய திசையிலாதிசுகமன்னர்சமானமாகும்
நல்லமத்தியத்திற்புத்ரகளத்திர நாசங்காட்டும்
வல்லதோர்கடையிற்ருன்யதனமுடன்கிரகவாழ்வு
செல்வமுமுண்டாமென்றுசெப்பினர்கயற்கண்மாதே.

(இ - ள்.) மீனம்போன்ற கண்களையுடையமாதே! சந்திர திசையின் ஆதியில் சுகமும், ராஜசமானமுடையவனுமாவன். மத்தியில் புத்திரர், களத்திர நாசமடையும், கடைசியில் தான்யம், தனம், கிரகம், வாழ்வு, செல்வங்கள் உண்டாகும் என்று கற்ற சோதிடர்கள் கழறுகின்றனர் எ - று. 5

ஆக விருத்தம் 69.

சந்திரதிசை சந்திரபுத்தி

மாமதியதனிலந்தமதிபுத்திமாதம்பத்தில்
நேமமாமுச்சகேந்திரம் நிற்கினுந்திரிகோணத்திற்
ருமுறவாட்சிவீட்டிற்றரும்பதினென்றிலேனுஞ்
சேமமாய்ச்சுபர்கள்கூடிற்பார்த்திடிற்சிறப்புண்டாமே.

(இ - ள்.) சந்திரதிசையில் சந்திரபுத்தி மாதம் 10-க்குள் அந்தச் சந்திரன் உச்சம், ஆக்ஷி, 1, 4, 7, 10-ஆமிட கேந்திரம் 1, 5, 9-ஆமிட திரிகோணம், 11-ஆமிட லாபத்தானத்து இருந்தாலும், சுபக்கிரகங்கள் கூடினுலும், அல்லது பார்த்தாலும் செல்வமும் சிறப்பும் உண்டாகும் எ - று. 1

உண்டாகும்விவாகந்தானுமுறுபுத்ரலாபந்தானும்
கொண்டாடுமரசராலேகுறைவிலாக்கிராமம்பூமி
தண்டாதசிவிகையோடுதான்வருந்தீர்க்கமாயுள்
வண்டாடுங்குழலாய்பின்னுமாசவுக்கியமுமாமே.

(இ - ள்.) வண்டுமொய்த்த கூந்தலையுடையவளே! விவாகமும், புத்திரலாபமும் அரசர்களால் நிறைந்த பூமியும் பல்லக்கும் உண்டாம், தீர்க்காயுளும் மிகுந்த சௌக்கியமுமுண்டாம் எ - று. 2

மேவுபூரணமாய்ச்சந்திரன்வீற்றிருப்பானேயாகில்
பாவகமாகப்பூர்ணபலன்சுகமதிகமாகும்
பூவைவயேபாக்கியங்கர்மபூபதியுடனேசேர்ந்தால்
மாவுடன்மதகயங்கள்வரும்பலமின்னங்கேளே.

(இ - ள்.) பெண்ணே! பூரணச்சந்திரனுகி மேற்கூறிய ஸ்தானங்களில் இருந்தால், வரிசையாகப் பூர்ணபலன்களை அதிகமாகக் கொடுப்பன். 9, 10-க்குடையவனோடு சந்திரன் கூடியிருந்தால், யானை, குதிரைகளுண்டாம் இன்னும் எ - று. 3

பலனுறுதெய்வபக்திகுருபத்திபலநூற்கேள்வி
நலனுறுவஸ்திரலாபம்நண்ணிடும்பாவரோடே
பலமுறச்சேரிலாறெட்டீராறிற்பலத்துநிற்கிற்
குலவியகனநாசந்தான்கூறுவேற்கண்ணியாளே.

(இ - ள்.) வேல்போன்ற கண்ணையுடையவளே! பலன் கொடுக்கக்கூடிய தெய்வபக்தி, குருபக்தி, பலநூல்கள் கேள்வி, ஆராய்தல், நன்மைசெய்யும் வஸ்திரலாபங்களும் உண்டாம். பாவக்கிரகங்களுடன் சேர்ந்தாலும், 6, 8, 12-ல் பலத்து நின்றாலும் தனநாச முண்டாம் எ - று. 4

கன்னியேகிரகம்போகும்கனமனஸ்தாபமாகு
மன்னராலமைச்சராலேவருங்குரோதமுமுண்டாகும்
பின்னுறுதேகநாசப்பெருவடதிசையிலேதான்
அன்னியதேசப்போக்குமவன்கொடுத்திடுவனம்மா.

(இ - ள்.) வீடு நீங்கும், அதிகமான சண்டைகளுண்டாம், மன்னர் மந்திரி இவர்களால் விரோதமுண்டாம், பின்னல் தேக கஷ்டமும் உண்டாம், வடதிசையில் பிரயாணப் போக்கும் சந்திர புத்தியில் கொடுப்பான் எ - று. 5

வனமிகுமாறுளோனும்வலியசெவ்வாயுங்கூடிற்
றனமிகுஞ்சத்ருவோடேசமர்பெருதவமாகுந்தான்

புனேகுவன்சேனேபோகும்புகழ்மித்ரபந்துநாசங்
கனமெனுங்குழலாய்ராசத்துரோகமுங்காட்டுந்தானே.

(இ - ள்.) 6-ஆமிடத்ததிபனும் வலிவுபெற்ற செவ்வாயும் சந்திரனேடு கூடியிருந்தால் பலமிகுந்த சத்துருவோடு சண்டைசெய்து அவமானமடைவன், சேனேவலுக் குறைவுபெறும், மித்திரர், பந்துக்கள் நாசமடைவர், ராசத்துரோகமும் உண்டுபண்ணுவான் எ-று. 6

காட்டிடுமிரண்டுயேழுக்காமதியுடையோனுகில்
கோட்டமிவ்வெட்டுள்ளோனேக்கூடினுற்றேகபீடை
வாட்டிடாதகலும்பின்னேமனேயோடுபுதுமையாதி
கூட்டியேவைக்கும்யோகம்குறைவில்லேநிரையாய்த்தானே.

(இ - ள்.) சந்திரன், 2, 7-ஆமிடத்ததிபனுகி 8-க்கதிபனேச் சேர்ந்தால் தேகபீடையுண்டாகும், பின்னுல் சுகமாகும், மனேயாளோடு புதுக்கிரகங்கள் உண்டாக்கும், யோகங்கள் குறைவில்லாமல் நடக்கும் எ - று. 7

ஆக விருத்தம் 76.

சந்திரதிசை செவ்வாய்புத்தி

வான்மதிதிசையிற்செவ்வாய்வரும்புத்தியேழுமாத
மானசந்திரற்குச்சேயந்தர்க்கதனுகினும்
ஞானகேந்திரகோணத்தினலம்பெறுமாட்சியுச்சத்
தானங்கள்தனிலேசெவ்வாய்த்தங்கிடிற்பலனேக்கேளே.

(இ - ள்.) மேலான சந்திரதிசையில் செவ்வாய்புத்தி மாதம் 7-க்கும் பலன் சொல்லுமிடத்து சந்திரனும், செவ்வாயும், ஒன்றுசேர்ந்திருந்தாலும் 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும் 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும் செவ்வாய் ஆட்சி அல்லது உச்சம் பெற்றுலும் பலன்களேச் சொல்லக்கேட்பாயாக எ - று. 1

செய்யதோர்தேகாரோக்யஞ்செயஞ்சவுபாக்யஞ்சேரும்
வையகமன்னராலேவஸ்த்ரபூஷணமும்பொன்னு
மெய்திடுசிவிகைபூமிகிராமமுமியல்பாய்ச்சிக்குந்
தையலேநினேத்ததெல்லாந்தான்பலித்திடுமென்றுரே.

இ - ள். பெண்ணே! அரிதான தேகத்தில் ஆரோக்கியமும், வெற்றியும், சௌபாக்கியமும் உண்டாம். பூமிக்கரசரால் பொன்னும், வஸ்திரபூஷணமும் பொருந்தும், பல்லக்கு, கிராமம் இயல்பாய்ப் பலிக்கும், நினைத்தபொருள் கைகூடுமென்றும் சொல்லக்கடவாய் எ - று. 2

ஓதுமாறெட்டீராறிலுற்றிடப்பாவிகூடத்
தீதுறுநீசத்தானஞ்செறிபகைத்தானஞ்சேரிற்
கோதறுகருமநாசங்கோப்பகைதேகபீடை
வாதுறுகிரகம்போகும்வருஞ்சுரம்பயித்தியந்தான்.

(இ - ள்.) செவ்வாய், 6, 8, 12-ஆமிடத்தில் நின்றாலும், பாபக் கிரகங்கள் கூடினாலும், நீசம், பகைபெற்றாலும், குற்றமில்லாத முயற்சியும் குறைவுபடும். அரசர் பகையும், தேகபீடையும், கிரகம் பெயர்தலும், சுரரோகமும், பயித்தியரோகமும் சம்பவிக்குமாம் எ - று. 3

தானெனுமாறெட்டீராற்றனிற்சுபர்கூடினாலு
மானவர்பார்த்திட்டாலுமற்றுங்கேந்திரகோணாதி
மோனமாய்ச்சேர்ந்திட்டாலுமூரித்தாரணிபொன்புத்ரர்
கூனலஞ்சிவிகையாவுங்கூடும்பால்பாக்கியந்தானே.

(இ - ள்.) ஷெ ஸ்தானங்களில் செவ்வாய் நின்று, சுபக்கிரகங்கள் கூடினாலும், அல்லது பார்த்தாலும், 1, 4, 7, 10-ஆமிடத்ததிபதியும், 1, 5, 9-ஆமிடத்ததிபதியாகிய இவர்களுள் யாராவது சேர்ந்தாலும், பார்த்தாலும், பலம்பெற்ற பூமி சேர்க்கையும், பொன்னும் புத்திரரும், வளைபொருந்திய பல்லக்கும், பால் பாக்கியமும் கூடும் எ - று. 4

கூடிடுமிரண்டிற்செவ்வாய்க்குறுகிடிலர்த்தநாசம்
வாடிடுந்தேகபீடைவரும்பருவிலங்குசோரர்
நாடுமக்கினியாற்கோவால்நடுக்கியபயமுண்டாகுந்
தோடவிழ்மலர்ப்பூங்கூந்தற்றாய்மதிமுகத்தினாளே.

(இ - ள்.) முருக்கவிழ்ந்த மலர்களால் தொடுத்த மாலையுடைய கூந்தலும், சந்திரவதனமுமுடையவளே! 2-ஆமிடத்தில் செவ்வாய் நின்றால், பொருள்நாசமும், தேகபீடையும், சோரர், அக்கினி, ராஜாக்கள் பகையுண்டாம் எ - று. 5

வேறு

மதித்திடுகேந்திரகோணமுச்சசொக்ஷேத்திரத்தில்
வதிந்திடினுமூன்றுமிருமூன்றுபத்துப்பன்னொன்
றிதத்துடனேயிருந்தாலுமொன்பதுலக்கினத்துக்
கிறையவர்கள்சம்பந்தமெய்திடினுமியல்பாங்
கதித்திடுகயம்புரவிபதாதிதனதான்யங்
கருதுநரவாகனமுங்காசினியுமுண்டாம்
விதத்துடனேசப்ரமஞ்சஞ்சாலுவைவஸ்திரங்கள்
மிகுமன்னர்சமானமித்ரபுத்திரசவுக்கியமே.

(இ - ள்.) மதிக்கப்பெற்ற செவ்வாய் 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9 - ஆமிட திரிகோணத்து நின்றாலும், உச்ச ஆட்சியில் நின்றாலும், 3, 10, 11-ஆமிடத்தில் இருந்தாலும், 9-ஆமிடத் ததிபதி லக்கினாதிபதி சம்பந்தப்பட்டாலும் இயல்பாக பலம்பெற்ற யானை, குதிரை, சேனை, தனம், தானியம், பல்லக்கு, பூமி இவைகளுண்டாம். அலங்காரமான சப்ரமஞ்சம், சாலுவை, முதலான வஸ்திரங்கள் பெற்று, அரசர் சமானமான வாழ்வோடு மித்ர, புத்ர, களத்திரங்களால் சௌக்கியமுமுண்டாம் எ-று. 6

இயம்பக்கேள்சட்டாட்டவியமதிலேசெவ்வா
யிருந்திடிலோமனஸ்தாபந்தனநாசம்பீடை
செயம்பெறுநினைத்ததெல்லாம்அபசயமதாகுந்
தீர்க்கமுடனிரண்டேழிற்சேயிருந்தானெனினுங்
கயம்புரமெட்டாமிடத்துக்குடையவன்றன்னுடனே
கருதுமெட்டாறீராறிற்கலந்திருந்தானேனும்
பயமிகுந்தவவமிருத்துபிராணபயமகலப்
பரிகாரஞ்சிவபூசைபண்ணிடிற்றீர்ந்திடுமே.

(இ - ள்.) இன்னும் கேட்பாயாக! செவ்வாய், 6, 8, 12-ஆமிடங்களில் இருந்தால் மனஸ்தாபமும், பொருள்நாசம் பீடையுண்டாம். நினைத்தகாரியங்கள் பலிதமில்லாமல் அபஜெயமடையும். 2, 7-ஆமிடங்களில் செவ்வாய் நின்றாலும் 8-ஆமிடத்ததிபனுடன் கலந்து 6, 8, 12-ஆமிடங்களில் நின்றாலும், பயமான அவமிருத்துகளுண்டாம். இந்தப்பயங்கள் நீங்க சிவபூஜைபுரிந்தால் தீர்க்கசுகமுண்டாம் எ - று.

ஆக விருத்தம் 83.

சந்திரதிசை இராகுபுத்தி

மேதினியிற்சசிதிசையிலிராகுபுத்திதனிலே
மிகுமாதம்பதினெட்டுவிளங்கிடுஞ்சந்திரற்கே
ஆதரவாயந்தர்க்கதனுயிருந்துசுபனே
டடுத்திருக்கினினைத்ததெல்லாம்பலித்திடுமூன்ருறில்
நீதமுடன்பத்துடன்பன்னென்றுகேந்திரத்தி
னின்ருலுமுச்சமதினின்றிடிலுந்தானே
ஆதியிலேசவுக்கியஞ்சத்துருநாசமத்தியம்
அதிற்சோராக்கினிராசபயமிகவுண்டாமே.

(இ - ள்.) பூமியிற் சந்திரதிசையில் இராகுபுத்தி வரு 1, மாசம் 6-க்கும், பலன்சொல்லுமிடத்து, இராகு சந்திரனுடன் சேர்ந்திருந்தாலும், சுபனேடு சேர்ந்தாலும் நினைத்ததெல்லாம் பலித்திடும். 3, 6, 10, 11-லும், 1, 4, 7, 10 - கேந்திரங்களில் நின்ருலும் உச்சத்தில் நின்ருலும், ஆதியில் சவுக்கியமும் சத்துரு நாசமுமுண்டாம். மத்திய பாகத்தில் திருடர் அக்கினி ராஜாக்களால் பயமுண்டாம் எ - று. 1

உண்டானநாற்காலிபீடைமிகச்சேரு
முருமாசமூன்றுவரைபந்துசனநாசம்
விண்டாருமதற்குமேல்தனதான்யலாப
மிகுராசரபிமானம்நிருதிதிக்கிலிலாபம்
திண்டோளர்சண்டையினிற்செயம்படைக்கும்மேலாந்
திரவியங்கள்வஸ்திரங்களளவிலாதேற்றம்
வண்டாருங்குழலாய்சேயத்தானமுற்ருல்
வலியயுத்தசத்துருபயமிருத்துபயமாமே.

(இ - ள்.) வண்டுமொய்த்த கூந்தலுடையவளே! கன்று காலி பீடையும் உண்டாம். 3-மாதம்வரை பந்துஜனங்களுக்குப் பீடையும், அதற்கு மேலாக தனம், தான்யம் லாபமும், ராஜாபிமானமும், நிருதி திசையிலிலாபமும் வலிமை பெற்ற சத்துருக்களிடம் ஜெயமுண்டாம். திரவியங்கள் வஸ்திரங்கள் அளவில்லாது ஏற்றமாகக் கிடைக்கும். செவ்வாயுடன் கலந்துநின்ற ராகுவானல் சத்துருக்களால் பயமும் அவமிருத்துபயமும் உண்டாம் எ - று. 2

6

பயமானவவமிருத்துத்தோஷமதுநீங்கும்
பகுத்தறிவோடேபின்னுல்பலத்தவாழ்வுண்டாம்
சுயமானவட்டமத்தான்சம்பந்தம்பெற்றுற்
சொல்லரியவிலங்குண்டாஞ்சுபக்கோள்சம்பந்தம்
நயமாகப்பெற்றிருக்கிற்சுகமுண்டாம்நாற்கால்
நற்பதிவஸ்திரங்கீர்த்திதேகமாரோக்கியஞ்
செயமானகேந்திரத்திலிருந்தாலுமுன்னே
செப்பியதோர்பலன்வந்துஞ்சேருமெனவுரையே.

(இ - ள்.) பயமுள்ள அவமிருத்து தோஷமும் நீங்கிவிடும். விவேகம் உண்டாவதோடு பின்னுல் பலத்த வாழ்வுண்டாம். இவ்விராகு அட்டமாதிபன் சம்பந்தம்பெற்றுல் சொல்லுதற்கு அறிதாகிய விலங்குபூணும். சுபக்கிரகம் சம்பந்தம்பெற்ற இராகுவாயிருந்தால் சுகமுண்டாகும். கன்றுகாலி, நல்லவீடு, வஸ்திரம், கீர்த்தி, தேகாரோக்கியம் உண்டாகும். செயமுள்ள 1, 4, 7, 10-ஆமிடம் கேந்திரத்திலிருந்தாலும் முற்சொன்ன நற்பலன்கள் சேர்ந்து கிடைக்குமென்று சொல்லுவாயாக எ - று. 3

உரைசெவ்வாயிந்துவினுக்கெட்டீராறதனி
லுறப்பாவியுடன்கூடித்துற்பலமாயுறினுந்
தரையிலிலக்கினம்வாக்கிற்புத்திரத்தானத்திற்
சார்ந்திடினும்யோகபங்கந்தனச்செலவுண்டாகும்
விரைவாகும்புத்திரநாசங்கலகஞ்சல்யம்
மிகுகுட்டநோய்விலங்குவீடுமுடன்போகும்
நிரையாயுட்கவமிருத்துச்சத்ருசர்ப்பபயமும்
நீங்காதசண்டையுண்டாம்நெரிசுரிபூங்குழலே.

(இ - ள்.) சுருண்டு நெரிந்த கூந்தலாய்! செவ்வாய் சந்திரனுக்கு 8, 12-ஆமிடத்திலிருக்கவும், பாவிகள் சேர்ந்து துர்ப்பலமானுலும், 1, 2, 5-ஆமிடங்களில் நின்றாலும் யோகபங்கமுண்டாம். பொருட்செலவு, புத்திரநாசம், கலகமுண்டாம். சங்கடமிகுந்த குஷ்டநோயும், விலங்குபூணுதலும், வீட்டைவிட்டேகலும் நிரைந்த ஜீவனுக்கு அவமிருத்துபயமும், சத்துரு, சர்ப்பங்களால் பயமும், நீங்காத கலகங்களும் உண்டாம் எ-று. 4

பூங்குழலேபாம்பேழாமிடந்தனிலேயிருந்தாற்
பொருந்துதனதானியங்களதிகவிர்த்தியுண்டாம்
பாங்குறவேமுன்சொன்னதன்றிமற்றதானம்
பதிந்திருந்தால்பீடையன்யதேசசஞ்சாரங்கள்
பாங்கரியவேழில்மாரகத்தானனுடனே
பற்றிடினுமெட்டுடையோன்சம்பந்தம்பெறினுந்
தீங்கானவவமிருத்துப்பயந்தேகபீடை
தீர்ப்பதற்குப்பரிகாரஞ்சிவபூசைசெய்யே.

(இ - ள்.) அழகிய கூந்தலையுடைய பெண்ணே! இவ்விராகு 7-ஆமிடத்திலிருந்தால் தனம் தானியங்கள் விருத்தியுண்டாம். 2-ஆமிடத்திலிருந்தால் பீடையும், அந்நியதேச சஞ்சாரமுண்டாம். 7-ஆமிடத்தில் மாரகாதிபனுடனிருந்தாலும், 8-க்குடையவன் சம்பந்தம்பெற்று இருந்தாலும், பொல்லாத அவமிருத்து பயமுண்டாம். தேகபீடைதீர்வதற்கு சிவபூஜைசெய்ய பரிகாரமாம் எ - று. 5

ஆக விருத்தம் 88.

சந்திரதிசை குருபுத்தி

செய்யமதிதிசையதனிற்குருபுத்திமாதஞ்
செப்புபதினறதனிற்சிறந்தபலன்கேளாய்
அய்யமில்லாச்சந்திரற்கந்தர்க்கதனு
யமர்ந்திடில்புத்திரலாபமதிகசுகஞ்சிவிகை
தெய்வகாரியபூசைஅரசரபிமானஞ்
சிறந்தவஸ்திரபூஷணங்கள்நாற்காலிலாபம்
வையகத்திற்சோபனங்கங்காஸ்நானபலனும்
வருமிஷ்டதேவதையும்பிரார்த்தனைசெய்வானே.

(இ - ள்.) செவ்விதாகிய சந்திரதிசையில் வியாழபுத்தி வருஷம் 1, மாசம் 4-க்கு, சிறப்பாகிய பலன்களைக் கேட்பாயாக. சந்தேகமில்லாத பூரண சந்திரனுக்கு, குரு, சிநேகமாய் சேர்ந்திருந்தால், புத்திராள் லாபமும், அதிகசுகமும், பல்லக்கும், தெய்வபூஜையும், அரசர்களால் அபிமானமும், சிறப்புள்ள வஸ்திரபூஷண லாபமும், கன்றுகாலி சேர்க்கையும், சுபசோபனங்கள் நடைபெறுதலும், கங்கா ஸ்நானப் பிராப்தியும், இஷ்டதேவதை பிரார்த்தனையும் உண்டாம் எ - று. 1

நேரானவுச்சகேந்திரகோணத்தேனு [ம்
நிற்கசொக்ஷேத்திரத்தேனுமிரண்டுபன்னென்றினிலு
பேராமலேயிருக்கில்ராசாபிமானம்
பெருத்ததளகர்த்தர்சுகம்பேசுகயலாபம்
வாராதசட்டாட்டவியந்தனிலேயத்த
மனமாகில்நீசனுய்வந்தாலும்பாவி
யாரோடுங்கூடிடினுங்களத்திரபுத்திரநாசம்
அருங்கிரகம்வெந்துமுற்றுமதிகதுக்கம்வருமே.

(இ - ள்.) மேலும், இவ்வியாழன், உச்சத்தேனும், ஆட்சியாபினும் பெற்றாலும் 1, 4, 7, 10-ஆமிடமாகிய கேந்திரத்து நின்றாலும், அல்லது 1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணத்தில் அமர்ந்தாலும், 2, 11 நிலைபெற்றாலும், பெருமிதமான தளகர்த்தரால் சுகமும், ராஜாபிமானமும், யானை வரவும், லாபமும் உண்டாம். பலன்கொடாத 6, 8, 12-ஆமிடங்களில் குருநின்றாலும், நீச அஸ்தமனமானாலும், பாவிகளுடன் கூடிநின்றாலும், களத்திர புத்திரர் நாசமுண்டாம். வீடு, அக்கினிவேதலும், அதிக துக்கமும் வருவதுண்டாம் எ - று. 2

துக்கமிகுஞ்சண்டையுறுங்கிரகக்ஷேத்திரமுஞ்
சொர்னநிதிநாசங்கேந்திரதிரிகோணத்திற்
சிக்கெனவேயிருந்தாலுந்திரிகோணமூலத்
திரிகோணம்பெற்றிடினுநல்லபோசனமா
மிக்கதொருவிவாகமுடன்நல்லோர்களுறவு
மிகுந்திடுநற்கீர்த்தியோடுசிவிகையாபரணம்
வக்ரமொடுதனலாபமுடன்புத்திரகளத்திர
வர்த்தனையோடனதானம்வாகனம்வந்திடுமே.

(இ - ள்.) துக்கத்தால் சண்டையுண்டாகும், கிரகங்கள், க்ஷேத்திரங்கள், திரவியம் நாசமுண்டாம். மேற்சொன்ன திரிகோண கேந்திரங்களில் நின்றாலும், மூலத்திரிகோணம் பெற்றாலும், நல்ல போஜனமுண்டாம், விவாகமுண்டாம், பெரியோர்கள் வரவுண்டாம், உறவுமுண்டாம் நல்லகீர்த்திமானுவன். பல்லக்கு, ஆடை, ஆபரணம், அதிகமான தனம், புத்திரர், களத்திரம் விருத்தியும், அன்னதானம் செய்தலும், வாகனவிருத்தியும் உண்டாம் எ - று. 3

வந்திடுமேராச்சியமுந்தனமதிகமுண்டாம்
வருஞ்சமரிற்செயம்படைக்குமன்னவர்களாலே
தந்திடுமேபூமிதனில்நிதிவியஞ்சட்டாட்டந்
தனிற்பிலனுயிருப்பானேற்சாதகன்றன்பலன்கேள்
நித்தைதருமன்னியதேசந்தனிலேயோட்டும்
நீங்கரியபோசனகட்டங்களுமேயுண்டாஞ்
சொந்தமெனச்சுபர்கூடிலாதியிலேசுகமாஞ்
சொல்லுமத்திவியாதிகடைகளத்ரபுத்ரர்கேடே.

(இ - ள்.) பூமிவரத்தும், தனப்பிராப்தி அதிகமும், யுத்தத்தில் மிகுந்த ஜெயமும், மன்னவரால் பூமிவரத்தும், புதையல் கிடைத்தலும் உண்டாம். மேலும், இந்த வியாழன் 6, 8, 12-ல் நின்றால் பலன் கேட்பாயாக. அவமானமுண்டாம், அந்நியதேசமோட்டும், போஜனகஷ்டங்களும் உண்டாகும். சுபக்கிரகங்கள் வியாழனுடன் கூடியிருக்கில், ஆதியில் மிகுந்த சௌக்கியமும், மத்தியபாகத்தில் வியாதியும், கடைப்பாகத்தில் புத்திரர் களத்திரர்கள் பீடையுண்டாகி கேடுண்டாமென்று கூறுவர் எ - று. 4

வேறு

கேடுறுமிரண்டேழ்நாதன்குருவுடன்கிட்டினாலே
நீடவமிருத்துவந்துநேரிடும்பரிகாரந்தா
னுடிடிற்சிவசகஸ்ரநாமமேசெபமுஞ்செய்து
வாட்டுநுண்ணிடையாயன்னதானமும்வகையாய்செய்யே.

(இ - ள்.) துவளுகின்ற இடையையுடைய பெண்ணே! கேடு செய்கின்ற 2, 7-ஆமிடத்ததிபனோடு குரு கூடிநின்றால், கஷ்டமான அவமிருத்து வந்துசேரும். தோஷம் விலகவென்றால் சிவ சகஸ்திர நாமார்ச்சனையும், செபமும் செய்து, அன்னதானங்களையும் வகையாகச் செய்யவேண்டுமாம் எ - று. 5

ஆக விருத்தம் 93.

சந்திரதிசை சனிபுத்தி

வேறு

வகையாஞ்சந்திரன் றிசையிற்காரிபுத்தியதுதான்
வருடமொன்றேழ்திங்கள்வருமதிக்குக்காரியுமே
தொகையாமந்தர்க்கதனுய்க்கேந்திரதிரிகோணத்
துற்றிருந்தாலற்பசுகம்லாபமற்பமாகு
மிகவேதான்பந்துஜனவிரோதமுடன்பீடை
விபரீதங்காரியங்களபசயமாய்ப்போகும்
பகைசேரும்பயமுடனே நாற்காலிசேதம்
பரதேசசஞ்சாரம்பலித்துவிடுந்தானே.

(இ - ள்.) சந்திரதிசையில் சனிபுத்தி வரு 1, மாதம் 7-க்கும், பலன்சொல்லக் கேட்பாயாக, சந்திரனும், சனியும் ஒன்றுயிருக்கிலும், 1, 4, 7, 10-ஆமிடமாகிய கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணத்தும் பலத்திருக்கின் சொற்பசுகமும், சொற்பலாபமும், உண்டாம், பந்துஜன விரோதங்களும், பீடையும் உண்டாம், விபரீதமான காரியங்கள் அபஜெயமடைதலும் பயமுண்டாம், கன்று காலி சேதம், பரதேச சஞ்சாரமும் உண்டாம் எ - று. 1

வேறு

பலனுனகேந்திரகோணத்திலேனும்
பகர்கின்றலாபத்தானத்திலேனும்
பிலவான்கள்தன்னுடனேசேர்ந்திட்டாலும்
பின்புசொக்ஷேத்திரவுச்சம்பெற்றிட்டாலும்
நலமானவாறெட்டீராறுதன்னில்
நல்லசனிபலவானுயிருந்திட்டாலும்
தனலாபம்புதுக்கிரகம்புத்திரலாபந்
தருஞ்சிவிகைகலியாணந்தானுண்டாமே.

(இ - ள்.) பலன்பெற்ற கேந்திரத்தானத்தில் அல்லது 11-ஆமிடத்திலேனும், பலவான்களுடன் சனி சேர்ந்திருந்தாலும், ஆக்ஷி, உச்சம் பெற்றிருந்தாலும், சனிக்கு நன்மையான 6, 8, 12-ல் பலவானுயிருந்தாலும், தனலாபம், புதுமையான வீடுகள், புத்திரர் சிவிகை, கல்யாண யோகங்களுண்டாம் எ - று. 2

தானனவஸ்திரபூஷணமுண்டாகுஞ்
சகராசரால்நினைத்ததெல்லாங்கூடுஞ்
சேனுதிபதியாவன்கிராமம்பூமி
திரவியலாபங்கள்மிகச்சேரலாகு
மானுலுமாறெட்டீராறுதன்னி
லவனீசனுஞ்சுபரோடடைந்தானகில்
மானேகேளசுபபலமதிகக்கஷ்டம்
வருநீசஸ்திரீபோகம்வருமென்ருரே.

(இ - ள்.) கேர்மைபெற்ற வஸ்திரபூஷண லாபங்களும், பூவாசராால் நினைத்தபொருள் கைகூடுதலும், சேனுதிபதியாதலுங், கிராமம், பூமி, திரவியங்கள் லாபமும் மிகவும் உண்டாம். ஆனுலும் 6, 8, 12-ல், சனி நீசமுள்ள சுபர்களுடன் சேர்ந்திருந்தால், அசுபபலன்கள் அதிகமுண்டாம், கஷ்டம்வரும் நீசஸ்திரீபோகமும் வந்துசேருமென்று சொல்லக்கடவாய் எ - று. 3

ஓதியதோர்புத்ரகளத்திரங்கள்தானும்
உடன்பிரிவாமாதுர்பிதுர்நாசமாகும்
போதுகுன்மரோகபயித்தியமுமுண்டாம்
புகழிரண்டன்றியுமேழுக்குடையோனகிற்
றீதுவருஞ்சுரநோவுதானுமுண்டு
தீருதற்குப்பரிகாரங்குலதெய்வத்தைக்
கோதகலப்பூசைசெய்துஏழைக்கன்னங்
கொடுத்திடவேநலமெனச்சோதிடர்சொன்னரே.

(இ - ள்.) சொல்லுகின்ற புத்திரர், களத்திரம், தன்னைப் பிரியுமென்றும், தாய், தகப்பன் நாசமடைவர். குன்மரோகம் பயித்தியமுமுண்டாம் 2, 7-க்குடையவன் சனியாயிருந்தால் சங்கடங்கள் உண்டாகும், சுரநோயுண்டு, இது தீருவதற்கு பரிகாரங்கள் கேட்பாயாக. குலதெய்வத்தைக் குற்றமகலும்படி பூஜை செய்து ஏழைகளுக்கு அன்னம்கொடுத்தால் நன்மையுண்டாகுமென்று சோதிட வல்லவர்கள் சொன்னர்கள் எ - று. 4

ஆக விருத்தம் 91.

சந்திரதிசை புதன்புத்தி

திடமானசந்திரனிற்புலவன்புத்தி
சேர்ந்துவருமோராண்டோடைந்துமாதம்
இடமானதிங்களுக்குபுதனுமங்கே
யிசைந்திடுமந்தர்க்கதனையெய்தினாலுந்
தடமாகுங்கேந்திரகோணங்கள்தன்னிற்
சார்ந்தாலுமாட்சிசுபரங்கிசமுற்றாலும்
வடமேருதனக்குநிகரெனப்பருத்த
மாதனத்தாளேபலனைவகுக்கக்கேளே.

(இ - ள்.) மகாமேருமலை நிகரான தனமுடைய பாவாய்! திடம் பொருந்திய சந்திரதிசையில் புதன் புத்தி வரு 1, மாதம் 5-க்கும் பலன் கேட்பாயாக:—சந்திரனும், புதனும் ஒருவீட்டி லிருந்தாலும், 1, 4, 7, 10-ஆமிடகேந்திரத்தும் 1, 5, 9-ஆமிட திரிகோணத்திருந் தாலும், ஆட்சி பெற்றாலும், சுபரங்கிசம் பெற்றாலும், பலன்களை வகுத்து விவரமாகச் சொல்லுகிறேன் கேட்பாயாக எ - று. 1

வகுத்திடும்பாலன்னமுடன்பாக்கியம்பூமி
மன்னரால்நினைத்ததெல்லாம்வந்துசேரும்
மிகுத்துவரும்வித்தையுண்டாஞ்செட்டுலாப
மித்திரர்கள்சந்தோஷம்ஞானவிர்த்தி
பகுத்துரைக்கிலெக்காலும்வித்தைநோக்கம்
பதியுனரவாகனமும்பவுசுமுண்டே
நகத்தினைச்செப்பினையிணையாய்ப்பணைத்துநிற்கும்
நற்றனமாதரசியற்கும்நல்லமாதே.

(இ - ள்.) மலையையும் செப்பையும் பழித்து விம்மி நிற்கின்ற தனத்தையுடைய பெண்ணரசிக்கும் மேம்பாடுடையவளே! பாலன்ன போஜனமும், பாக்கியமும், பூமிவரத்தும், அரசர்களால் நினைத்த காரியங் கைகூடுதலும், அதிகமான வித்தை, கல்வி பிரபலமும், செட் டான பயிர் பச்சை இலாபமும், மித்திரர்கள் சந்தோஷமும், ஞானபி விர்த்தியும், நீங்காத வித்தையால் செல்வமும், அதில் மிகுந்த நோக்க மும், பல்லக்கும், பவுசும் உண்டாம் எ - று. 2

மாதேநீசத்திலுற்றோர்தனைச்சேர்ந்தாலும்
வருமஸ்தமனமாறெட்டீராறேனுந்
தீதாகவிருந்தாலும்பாவியோடே
சேர்ந்தாலும்வருமதிகதேகபீடை
சூதாகுங்களத்திரபுத்திரபீடைகாச்சல்
தூரதேசங்கமனஞ்சிரநோயுண்டாம்
வாதாடுமரசராற்சோரராலும்
வருமதிகக்கலகமெனவகுத்தார்தானே.

(இ - ள்.) பெண்ணே! இந்த புதன் நீசமானாலும், நீசனைச் சேர்ந்தாலும், அஸ்தமனமானாலும், 6, 8, 12-ஆமிடங்களில் இருந்தாலும், பாவிகளோடு சேர்ந்தாலும், அதிகமான தேகபீடையுண்டாகும். களத்திர புத்திரர்களுக்குப் பீடையுண்டாம். காய்ச்சல், தூரதேச அலைச்சலு முண்டாம், சிரநோயுண்டாம், அரசராலும், திருடராலும், அதிகக் கலகங்களுண்டாம் எ - று. 3

தனதானலக்கினத்தோனுடனேபுந்தி
தான்கூடிலாதியிலேசவுக்கியத்தோடு
கனலாபமரசரபிமானமுண்டாங்
கருதரியசட்டாட்டவியத்திலேனும்
இனமானகோணத்திலேனுங்கேந்த்ர
மிருந்தாலும்விவாகம்வருமிக்கலாபஞ்
சினநூலினிளைத்தவிடைமாதேகேளாய்
சேர்ந்திடுமேகர்மவினைச்சாபந்தானே.

(இ - ள்.) அற்பமான நூலைப்பார்க்கிலும், இளைத்த இடையையுடைய மாதே! கேட்பாயாக:—சொந்தமான லக்கினாதிபதியுடன் புதன் கூடியிருந்தால், புத்தியாதியிற் சவுக்கியத்தோடுகூடிய லாபமும் அரசரால் அபிமானமும் உண்டாம். சொல்லுதற்கும் நினைத்தற்கும் அரிதாகிய 6, 8, 12-ஆமிடங்களிலும் திரிகோணத்திலேனும், கேந்திரத்திலேனும் புதனிருக்கில் விவாகமுண்டாம். மிகுதியான இலாபச்சேர்க்கையு முண்டாகும். கடைசியில் காமவினையில் சாபமுண்டாகும் எ - று. 4

தானமொருராசரபிமானமுண்டாந்
தருங்கனகசிவிகைவஸ்திரதனலாபங்கள்

ஆனதொருசட்டாட்டவியத்திற்பாவி
அவனுடனேபுதன்கூடிலாணியான
மானம்வரும்பாவமதில்மனதுசெல்லும்
வருங்கிரகமாற்றமனேவியாதியுண்டாந்
தேனமருமொழிமாதேயெடுத்ததெல்லாஞ்
செயமில்லையபகீர்த்திசேருஞ்சொல்லே.

(இ - ள்.) தேனினுமினிய சொல்லையுடையவளே! ஒப்பற்ற அரசாலபிமானமுண்டாக்கும், தங்கச்சிவிகை, வஸ்திரம், தனலாபங்களுண்டாம். 6, 8, 12-ல், புதன், பாவிகளோடு சேர்ந்து, பெரிய அவமானமுண்டாம். பாவச்செயல்புரிய மனமுண்டாகும். வீடு மாறுதலுண்டாம். மனேதுக்கமும், எடுத்தகாரியங்கள் அபஜெயப்பட்டொழிதலும், அபகீர்த்தியுண்டாகுமென்றுஞ் சொல்லுக எ - று. 5

வேறு

சொல்லியவிரண்டேழுக்குச்சொற்புதனுதனுகில்
வல்லதோரவமிருத்துவேரும்பரிகாரங்கேளாய்
நல்லதோரரிசகஸ்த்ரநாமமுஞ்செபமேசெய்தா
லொல்லையிற்றீருமென்று உரைத்தனர்கணிதநூலோர்.

(இ - ள்.) 2, 7-ஆமிடத்திற்கு புதன் அதிகாரியாகில், வலிமையான அவமிருத்துண்டாம். அதற்குப் பரிகாரம் கேட்பாயாக:- நன்மைதரத்தக்க விஷ்ணுவின் சகஸ்திரநாமார்ச்சனைசெய்ய சீக்கிரமாக சங்கடங்கள் தீர்ந்துவிடுமென்று சோதிட கணிதவல்லவர்கள் கூறுகின்றனர் எ - று. 6

ஆக விருத்தம் 103.

சந்திரதிசை கேதுபுத்தி

உரைத்தவிந்துதிசையதனிற்கேதுபுத்தி
உயர்மாதமேழதனின்பலனைக்கேளாய்
நிறைத்தசிகிக்கந்தர்க்கதனுகினுலும்
நிறைந்தசுபக்கிரகமுடன்கூடினுலும்
வரைத்தமூன்ருறுபத்துப்பன்னென்றின்மேல்
வருமுச்சமாகிடினுஞ்சுபர்ப்பார்த்தாலும்

தரைத்தலத்திலதிநரர்வாகனமுஞ்சேருந்
தன்கிரகந்தனிற்சுபங்கள்கூடும்பாரே.

(இ - ள்.) சொல்லுகின்ற சந்திர திசையில், கேதுபுத்தி மீ 7-ன் பலனைக் கேட்பாயாக:-பூரணசந்திரனுக்கு கேது நெருங்கி இருந்தாலும், நிறைவான சுபக்கிரகங்களோடு கேது கூடியிருந்தாலும், வளருகின்ற 3, 6, 10, 11-ஆமிடங்களில் உச்சமாய்க் கேது இருந்தாலும், சுபக்கிரகங்களால் பார்க்கப்பெற்றாலும் பூமியின்கண்ணே நரவாகனப் பிராப்தியுண்டாம். தன்னுடைய கிரகங்களில் சுபகாரியங்கள் நடக்கும் எ - று. 1

வேறு

கூடிவரும்ராசாபிமானம்விபசாயங்
குறைவில்லாத்தனதான்யமிகுமதிகசுகமாம்
நாடியனுகூலமுறுஞ்சோரர்களினாலே
ஞாயமிலாக்காரியமும்நற்கலமீறுறுந்
தேடரியவாறுமிருநான்குபனிரெண்டிற்
றீயவர்களோடரவுசேர்ந்துலவுமாகில்
மாடுமுதலாடுவருமேசுகமும்வாழ்வு
மத்திபமதானபலனுற்றுமுளவோதே.

(இ - ள்.) ராஜாபிமானமும் கூடும், விபசாயமுங் குறைவில்லாத தனம், தான்ய மிகுதியுண்டாதலும், அதிகசுகமும், மிகுந்தனுகூலங்களும் உண்டாகும். திருடர்களால் ஞாயமில்லாத காரியஞ் செய்தலும் கலகங்களும் உண்டாகும் எ - று. 2

ஓதியதோரந்தியத்திற்கெட்டபலனுடனே
உறுமூத்திரகிரிச்சிரரோகங்காணுங்கலகந்
தீதுபெரும்வாக்கேழிற்சிகிகுளிகன்சேரிற்
றீர்க்கமாய்கண்டமவன்புத்தியிலேகாட்டும்
மாதுயரந்தீரவென்றாற்பரிகாரஞ்சொலக்கேள்
வாய்த்ததொருஅன்னமதுவகுத்ததனைத்தானே
மோதுமெளியோர்தனக்குக்கொடுத்திடுவானாகி
லுறுதியுடன்றீருமெனவுரைத்திடுபூங்கிளியே.

(இ - ள்.) 6, 8, 12-ஆமிடங்களில் கேது பாவிகளோடு சேர்ந்திருந்தால், ஆடு, மாடு, சேர்தலும் சுகமும் மத்திபமான வாழ்வும், பலன்பெற்றும் பெருமதுமிருந்து புத்தியந்தியத்தில் கெட்ட பலன்களுண்டாம். மூத்திரக்கிரிச சிரரோகங்களும் உண்டாம். கலகமும் அவமானமடைதலும், 2, 7-ஆமிடங்களில் கேதுவோடு மாந்தி சேர்ந்திருந்தால் இக்கேது புத்தியில் கண்டமுண்டாம். இவ்வாபத்து நீங்க வேண்டுமென்றால் பரிகாரங் கேட்பாயாக:—ஏழைகட்கு அன்னதானஞ்செய்து பூர்த்திசெய்வானாகில் உறுதியாய் அசுபந்தீர்ந்து சுபகாரியமுண்டாகும் எ - று. 3

ஆக விருத்தம் 106.

சந்திரதிசை சுக்கிரபுத்தி

பூங்கிளியேசந்திரனிற்புகரின்புத்தி
பொருந்திநிற்கும்வருடமொன்றுமாதமெட்டிற்
பாங்குபெறத்திசைநாதன்றனக்கேயிந்தப்
பார்க்கவன்றானந்தர்க்கனாகினாலு
நீங்கரியகேந்திரகோணத்துற்றாலும்
நித்தியமாம்லாபத்திற்பெலவானோடே
யாங்குகவிகூடிடினும்பூமிலாப
மதுசேரும்மதியாகுமுகத்தினாளே.

(இ - ள்.) சந்திரவதனீ அழகிய கிளிபோல்பவளே! சந்திரதிசையில் சுக்கிரபுத்தி ௵ 1, மாதம் 8-க்கும் பலன்கேட்பாயாக:—திசைநாதனுக்கு சுக்கிரன் கூடியிருந்தாலும், 1, 4, 7, 10-ஆகிய கேந்திரத்தும், 1, 5, 9 ஆகிய திரிகோணத்திருந்தாலும், 11-ஆமிடத்தில் பலவானுடன் சுக்கிரன் கூடியிருந்தாலும் பூமிலாபம் மிகவுண்டாம் எ - று. 1

மதியாதவாக்கதனில்நயத்திலேனும்
வந்திருந்தார்புதையலுண்டாமரசராலே
துதிசேரும்வஸ்திரபூஷணத்தினோடே
சொலவருநாற்காலிபுத்திரகளத்திரவிர்த்தி
புதிதானகிரகமுண்டாம்பணிபண்டாதி
போசனாசனமிகவும்பொருந்திவாழ்வான்

கதிசேரிராசாங்கயோகமுண்டு
கனத்ததனமடமயிலேகருதிப்பாரே.

(இ - ள்.) பருத்ததனங்களையுடைய இளமயிலனையாய்! மதிக்க முடியாத 2-லும், நயமாகச் சுக்கிரனிருந்தால், புதையல் எடுக்க வல்லவனுவன், அரசர்களால் புகட்சியுண்டாகும், வஸ்திரம், ஆபரணம், கன்றுகாலி, புத்திரகளத்திரவிருத்தி, புதுகிரகப்பிரவேசம், அடிமையாட்கள், உண்கலபதார்த்தங்கள், நல்லபோஜனங்கள், மெத்தை, கட்டில் இவைகளைப்பொருந்திய வாழ்வடைவன். இராஜாங்கயோகமும் அனுபவிப்பன், இதனைக் கருதிப்பார்ப்பாய் எ - று. 2

கருதியபத்தாமிடத்துக்குடையவன்றன்னுடனே
கலந்திருந்தாலதிகசுகம்ராச்யமுதலாபங்
கிரகமதிலேபௌத்திரபுத்திரர்களுடனே
கேடிலாபிதுர்மாதுர்சுகமிகவுண்டாகும்
வருமதிகவித்தையொடுகீர்த்தியுண்டாயோங்கும்
வரையைமதன்மகுடமதைவாய்த்தவிளநீரைப்
பொருகரடக்கயமருப்பைமரைமுகையைப்பழித்துப்
புடைத்தெழுந்தண்ணுந்தமுலைப்பூங்கொடிப்பெண்ணமுதே.

(இ - ள்.) போர்செய்கின்ற மதம்பொருந்திய யானையின் மருப்பையும் தாமரைப்பொகுட்டையும் அவமதித்து, விம்மியெழுந்து பூரித்த தனங்களையுடைய அழகிய பூங்கொடிபோன்ற பெண்ணார் அமிர்தமே! எண்ணுதற்கரிய 10-ஆமிடத்ததிபனுடன் சுக்கிரன் கலந்திருக்கில், அதிகமான சுகங்களும், ராஜ்ஜியலாபங்களும், வீட்டில் புத்திர பௌத்திரர்களுடன் வாழ்வன். குற்றமில்லா பிதுர், மாதுர்கள் சுகமுண்டாம். அதிக வித்தை கற்றலோடு கீர்த்தியுள்ளவனுவன் எ - று. 3

பெண்ணமுதேகவி நீசனுகியஸ்தமனமாய்ப்
பெரும்பாவியுடன்கூடிச்சட்டாட்டவியத்தில்
நண்ணவுமேசேய்பார்வையுற்றிடினும்பூமி
நாசமுறுஞ்சிரநோயால்நற்கிரகம்போக்கும்
வண்ணமிகுநாற்காலியாலதிகநாசம்
வருமரசர்கோபம்புத்திரகளத்ரநாசம்

பண்ணமருங்குயில்மொழியாய்க்கணிதநூன்முழுதும்
பழுதரவாய்ந்தோருரைத்தபலனிதுவுமாமே.

(இ - ள்.) இசையமைந்த குயில்போன்ற இனிமையான சொல்லை யுடைய பெண்ணமுதே! சுக்கிரன் நீசனாகி, யஸ்தமனமாய் பெரும் பாவியுடன் சேர்ந்து 6, 8, 12-ஆமிடத்தில் மறைந்து பாவியாகிய செவ்வாயால் பார்க்கப்பெற்றால், பூமி நாசமடைதலும், சிரத்தில் நோய்பொருந்தும், வீட்டைவிட்டோட்டும், அழகுபொருந்திய கன்று காலிகள் நாசமடையும். அரசர்களால் ஆக்ஞையுண்டாம். புத்திரர் களத்திரம் நாசமுண்டாம் என்று சோதிடநூல்களைப் பழுதரக்கற்ற பெரியோர்களால் சொன்ன பலன்களிப்படியாமென்க எ - று. 4

ஆனதொருவுச்சசொக்ஷேத்திரங்களதுதனிலே
யதிகசவுக்யாதிபதியுடன்கூடி நிற்கிற்
றானதன்மஞ்சிவபூசைகுருபக்தியுடனே
தருமமுறைவிசுவாசந்தனமுமிகச்சேருஞ்
சேனைமன்னரபிமானஞ்சிவிகைபுத்ரகளத்ரந்
திரமானநளகர்த்தஞ்சேர்ந்தினிதாயிருப்பர்
மீனினையம்பினைப்பழித்தங்கணங்களுயிர்கவரும்
விளங்கியவேல்விழிமாதேவிளம்பியதிப்படியே.

(இ - ள்.) மீனையும் அம்பையும் பழித்து ஜீவகணங்களின் உயி ரைக் கவரும் வேல்போன்ற கண்களையுடையமாதே! சுக்கிரன் உச்சம் ஆட்சிபெற்று, அதிசவுக்கியமான 4-ஆமிடத்தோனுடன்கூடி நிற்கில், தான தர்மங்கள் செய்தலும், குருபக்தியுடன் சிவபூஜை செய்தலும், தருமமுறை பிரழாது காரியஞ்செய்தலும், தனச்சேர்க்கையும் அரசரபி மானமும் புத்திரகளத்திராதி சௌக்கியங்களும் சிவிகையூர்தல், தள கர்த்தர் சேர்க்கையோடு இனிதாகவாழ்ந்திருப்பரென்று பெரியோர் கள் சோதிடவிதிப்படி கூறியுள்ளார்கள் எ - று. 5

படிமீதுதிரிகோணகேந்திரத்திலேனும்
பகல்வாக்கிற்பாக்கியத்திற்கவியிருந்தானேனு
முடிவேந்தரபிமானம்பூமியொடுவித்தை
மொழியுநரவாகனபூஷணவஸ்திரமுடனே

வடிவாருங்களத்திரபுத்திரவாவிவிபசாயம்
வாய்க்குமினுப்பாலனமுங்குளந்தேனும்புசிப்பன்
கடியாருப் பூங்குழலாள் மாதுர்பிதுர்சவுக்கியங்
கருணைதருஞ்சிவபத்திக்காரனெனவுரையே.

(இ - ள்.) வாசனைபொருந்திய மாலையணிந்த கூந்தலுடையாய்! பூமியில் சுக்கிரன், 1, 4, 7, 10-ஆமிடத்திலும், 1, 5, 9-ஆமிடத்திலும், 2-ஆமிடத்திலும், 9-ஆமிடத்தில் இருந்தால், கிரீடம்பெற்ற வேந்தராலபிமானமும், பூமி, வித்தை, நரவாகனப்பிராப்தி, பூஷணங்கள், வஸ்திரம், அழகுபொருந்திய களத்திரம், புத்திரர்கள் விருத்தியும், கூபம், விபசாயம், பால்பாக்கியம், சேர்க்கையும், சர்க்கரை, தேன், புசிப்பு முதலிய போகங்கள் துய்ப்பவன் என்று சொல்லக்கடவாய் எ - று. 6

உரைத்திடுசட்டாட்டவியத்தானத்திற்பாவி
யுடன்கூடிலதிகட்டமுற்றவர்சத்துருவாந்
தரித்திரிங்களத்திரசல்லியம்பந்துநாசந்
தான்புத்ரபிதுர்நாசந்தரணிமன்னர்கோபம்
பருத்தகுட்டநோய்விதனபந்தனத்தோடிருமல்
பரதாரகமனமுமேபலபலவுண்டாகும்
நிறைத்தவிரண்டேழினுக்குமிவனுதனுகில்
நிகழுமவமிருத்தேகுஞ்சிவபூசைநிகழ்த்தே.

(இ - ள்.) சொல்லுகின்ற 6, 8, 12-ஆமிடத்தில், பாவர்களுடன் கூடி சுக்கிரனிருந்தால் அதிககஷ்டமும், உறவினர்களால் சத்துருத்துவமும், தரித்திரமும், களத்திரத்தால் சல்லியங்களும், பந்துக்கள் நாசமுறுதலும், பிதா, புத்திரர் நாசமும், பூமியில் ராஜாக்களால் கோபமும், பலமான குஷ்டநோய் பிடித்தலும், விலங்கால் கட்டுப்படுதல், இருமல்நோயும், பரதாரகமனமும், இன்னும் பல சஞ்சலங்களுண்டாம். 2, 7-ஆமிடத்துக்கு, இச்சுக்கிரன் அதிபதியாகில் அவமிருத்துண்டாம். இத்தோஷம்நீங்க சிவபூஜைசெய்ய வேண்டுமென்று கூறினர். 7

ஆக விருத்தம் 113.

சந்திரதிசை சூரியன்புத்தி

நிகரிலிந்துதிசையதனிலிரவிபுத்திமாசம்
நிகழாறுதனிற்பலனை நிகழ்த்திடுவோங்கேளாய்
பகருமிந்துதனக்கிரவியந்தர்கதனுகிற்
பண்புடன்சொக்ஷேத்ரவுச்சத்திரிகோணகேந்திர
மிகவாக்குமூன்றுறுவொன்பதுபத்துடனே
விழித்திடுபன்னொன்றினிலேமேவிடிற்செந்திருவுஞ்
சுகராசர்சமானமுடன்தனலாபசுபங்கள்
சொல்லிடிற்சோபனம்பூமிபோனதெல்லாம்வருமே.

(இ - ள்.) ஒப்பற்ற சந்திரதிசையில் சூரியபுத்தி மாதம் 6-க்கு, பலன்களைச் சொல்லுகிறேன் கேட்பாயாக:—சந்திரனுக்கு சூரியன் மறையாமல் ஓரிடத்திலிருந்தாலும், மேலும், சூரியன் உச்சம், ஆட்சியில் இருந்தாலும், 1, 4, 7, 10-ஆமிடமாகிய கேந்திரத்திருந்தாலும், 1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணத்திருந்தாலும், 2, 3, 9, 10-ல் நின்றாலும், லக்ஷுமிகாமும், பூமிக்கரசர் சமானமானவாழ்வுடையவனும், தனம், லாபம், சுபசோபனங்கள், பூமியெல்லாம் ஒருங்கே வந்து சேரும் என்க எ - று. 1

வருமேநல்லிரவிபுத்திகடையினிலேரோகம்
வலுத்ததலையிடிகாச்சல்சோம்பல்மிகவுண்டாந்
தருமேசட்டாட்டவியந்தனிற்பாவியுடனே
சார்ந்திடினும்பவர்நோக்குத்தான்வரினுங்குன்மம்
பெருநோவுதலைவலியுமுகநோவுமூத்ரப்
பெருக்கிரிச்சரோகமுடன்சத்ருவிருத்தியுமாய்
நறுமலர்ப்பூங்குழற்றிருவேயபகீர்த்தியுடனே
நாடுமித்ரநாசமுடனலிவுஞ்சார்ந்திடுமே.

(இ - ள்.) நல்ல மலர்மாலையணிந்த கூந்தலையுடைய லக்ஷிமிக் கொப்பான பெண்ணே! கேட்பாயாக:—சூரியன்புத்தி கடைசியில் ரோகம், வலிதான தலையிடி, காய்ச்சல், சோம்பல் முதலிய ரோகங்களுண்டாம். 6, 8, 12-ஆமிடங்களில், ஒப்பற்ற பாவியுடன் சேர்ந்திருந்தாலும், பாவிகளால் பார்க்கப்பட்டாலும், குன்மநோயும், தொழுநோயும், தலைவலி, முகவாதமும், மூத்திரநோயும், கிரிச்சினரோகமும்,

சத்திரவாதிகள் மிகுத்து, அவர்களால் மெலிவும், சிநேகிதர் நாசமு முண்டாகும் எ - று. 2

சார்ந்தலக்கினுதிபன்ருன்பிதிர்க்கதிபனுடனே
 தான்சேருவானுகிற்றனலாபமின்பஞ்
சேர்ந்துவருங்கடையதனிற்செறியுமனக்கிலேசந்
 திறமானபிதா துர்பிதுர் நாசமதுவாகும்
ஆர்ந்தசகோதரஸ்தானங்கேந்திர திரிகோணம்
 அதிலாபத்தானத்திலடைந்திருக்கிற்பலன்கேள்
தேர்ந்திடுநாற்றிசைவாக்குப்பெலத்தினுலே
 திறமானராசாபிமானமெனச்செப்பே.

(இ - ள்.) பொருந்திய லக்கினுதிபன் 9-ஆமிடத்ததிபதியுடன் சேர்ந்திருப்பானுகில், பொருள் லாபமும், இன்பங்கள் நெருங்கிவருதலும், கடைசியில் மனக்கிலேசமுமுண்டாகும். திறமைபெற்ற மாதா பிதா, நாஸ்தி யடைவர். நிறைந்த 3, 1, 4, 5, 7, 9, 10, 11-ஆமிடங்களில் சூரியனிருந்தால் அதின் பலன்களை கேட்பாயாக. நாலாபக்கங்களிலும் வாக்குவல்லமையால் திரமான ராஜாபிமானமுண்டாமென்று சொல்லக்கடவாய் எ - று. 3

செப்புநரவாகனமும்வஸ்திரபூஷணமுஞ்
 சிறந்தபுத்திரலாபமுடன்புதுக்கிரகமுண்டாம்
ஒப்பில்வெகுசந்தோஷந்தேகசவுக்கியமும்
 உடன்பெருவன்சட்டாட்டவியம்பாவிகூடிற்
றப்பாதுராசாக்கினிசோரர்பயமுண்டாந்
 தலைவலியுங்குன்மமுடன் காச்சலதிசார
மிப்பாரிலன்னியதேசத்துறுவன்பித்த
 மேர்ப்படுமென்றறியுமெனவியம்பினர்சோதிடரே.

(இ - ள்.) சொல்லுகின்ற நரவாகனப்பிராப்தியும், வஸ்திரபூஷண லாபமும், சிறப்புடைய புத்திரலாபமும், புதுவீடுகட்டுதலும், ஒப்புவமையில்லாத வெகுவாகிய சந்தோஷங்களும், சௌக்கியமும் வந்து சேரும். 6, 8, 12-ஆமிடங்களில் பாவியுடன்கூடி சூரியனிருந்தால், தப்பாமல் அரசர், அக்கினி, சோரர்களால் பயமுண்டாவது தப்பாது. அக்கினியாலும், தலைவலி, காய்ச்சல், குன்மம், அதிசார ரோகங்களுண்

டாம். பூமியில் அந்நியதேச சஞ்சாரஞ்செய்வன். பித்தரோகங்களும் உண்டாமென்று சோதிடங்கற்றவல்லவர்கள் சொல்லுவார்கள் எ-று. 4

திடமுடனேயிரண்டேழுக்கதிபதியாதவனேல்
செப்புதலைவலிகாச்சல்ரோகமதுசேரும்
அடவுடனேபரிகாரந்தனையறையக்கேளா
யலரிதனக்கின்பமுடனமஸ்காரஞ்செய்யில்
மடமையுள்ளநோயகன்றுசுகமேயுண்டாகும்
வாளயில்வேல்கூற்றெனுங்கண்வாளெயிற்றுநாகப்
படமெனவேவளருமல்குல்மாதேநூலாய்ந்து
பகர்ந்தனர்கள்கணிதமுரைப்பயனறிந்தோர்தாமே.

(இ - ள்.) கூர்மையுள்ள, வாளும், வேலும், எமனும் என்னும் படியான கண்களும், ஒளிவுபெற்ற பல்லையுடைய நாகபடமென வளரும், அல்குலையுமுடைய மாதே! திடமான 2, 7-ஆமிடத்ததிபன் சூரியனாகில், சொல்லுகின்ற தலைவலி, காய்ச்சல், ரோகங்களுண்டாம். இவைகள் தீரவேண்டுமென்றால் பரிகாரங் கேட்பாயாக. சூரிய நமஸ்காரம் பக்தியோடு செய்தால், இந்த நோய்கள், சுகப்பிராப்தியுண்டாகும் என்று சாஸ்திரங்களில் ஆராய்ந்து தெளிந்த வல்லவர்கள் சொல்லுகின்றனர். எ - று. 5

ஆக விருத்தம் 118.

செவ்வாய்திசைப் படலம்

வேறு

தாமுருஞ்செவ்வாய்திசையிலேழாண்டு
தனிற்பலனரசர்சோராக்னி
மாமனப்பயநோய்களத்திரசண்டை
வருந்தரித்திரியமுமற்பச்
சேமமாங்கிரகமாற்றந்துற்கருமஞ்
சிறந்திடும்பிதுர்க்கள்புத்திரர்கள்
பூமியுநாசமென்றுரைபகர்ந்தார்
பூங்குயிலனையபொற்கொடியே.

(இ - ள்.) பூங்குயிலனைய பொற்கொடியே! செவ்வாய்திசைஞல 7-க்கு பலன் கூறுமிடத்து அரசராலும், சோரராலும், அக்கினியாலும், மனப்பயமுண்டாம், நோயாலும் பீடிக்கப்படுவர். களத்திரத்தால் சண்டையுண்டாம், தரித்திரமுண்டாக்கும், அற்பமான சௌக்கியங்களும் உண்டாம். கிரகமாறுதலும், கெட்டகாரியங்களில் தலையிடுதலும், பிதா, புத்திரர், பூமிநாசங்காட்டுமென்று சோதிடவல்லவர் கூறினர் எ - று. 1

பொற்புறுமுச்சமிரண்டினிற்பத்திற்
புகழ்ந்திடுமூன்றினிலாறில்
நற்பலவானய்சேயிருப்பானேல்
நலமுடன்சுபமுடன்ராச்சியங்
கற்புளகளத்திரபுத்திரவஸ்திரம்
காதல்சேர்சகோதராபரணம்
விற்பொறுநுதலாயிதுவெலாங்கிடைக்கும்
விளங்கிடுமேன்மையுந்தருமே.

(இ - ள்.) வில்லைப்போன்ற புருவமுடையவளே! அழகுபெற்ற உச்சத்தும், 2, 10, 3, 6-ஆமிடங்களில் பலவானய், செவ்வாய் இருந்தால், நல்லசுபமுடன் ராச்சியங்களுண்டாம். கற்புள்ள களத்திரமும், புத்திரரும், வஸ்திரலாபமும், வாஞ்சையுற்ற சகோதரர்களும், ஆபரணங்களும் கிடைக்கும். மேன்மை விளங்கிடும் என்றும் சொல்லுக எ - று. 2

வேறு

மேன்மையில்சட்டாட்டவியந்தனிலுறிற்றுற்பலமாய்
மிகுசெவ்வாயுற்றிருக்கிற்புத்ரமித்ரகளத்ரம்
ஆனதொருவஸ்திரபூஷணநாசமாகும்
அதிகுன்மரோகமொடுவிபசாயங்குறுகு
மான்விழியாய்த்தனநாசஞ்சகோதரமுநாசம்
வருஞ்சுபனேடேகூடில்வளர்கலகமுண்டாம்
ஈனமிலாத்திசையாதிதனநாசம்நடுவி
லிசைசோராக்கினிமுடிவிலிகலுறுஞ்சத்துருவே. 3

(இ - ள்.) மான்போன்ற விழிகளையுடைய பெண்ணே! மேன்மையில்லாத 6, 8, 12-ல், செவ்வாய் நின்றாலும், அதிலும் நீசாஸ்த

மனமாகி நின்றாலும், புத்திரர், மித்திரர், களத்திரம், வஸ்திரபூஷணம் நாசமடையும் அதிகமான குன்மவியாதிகளுண்டாம். விபசாயக் குறைச்சலும், தனமும், சகோதரமும் நாசமடையும், சுபக்கிரகத்தோடு செவ்வாய் கூடிநின்றால், விருத்தியாகின்ற கலகங்களுண்டாம். குற்றமில்லாத திசை ஆரம்பத்தில், தனநாசமும், நடுவில் அக்கினி, சோரர்களால் பயமும், கடைசியில் சத்துருக்களால் பீடிக்கப் படுவன் எ - று. 3

ஆக விருத்தம் 121.

செவ்வாய்திசை செவ்வாய்புத்தி

இகலாரற்றிசையதனினபகாரமதுதா
 னிசைமாதநாலுமிருபத்தேழுநாளில்
மிகவேதான்சேய்கேந்திரதிரிகோணம்பெறினும்
 மிருந்தலக்னுதிபன்றன்னுடன்கூடியிடினுஞ்
செகமீதிலற்பசவுக்கியமற்பலாபந்
 திகழ்சோம்பல்அபகாரமத்தியிற்குடும்பப்
பகையாகுஞ்சகோதரங்கள்புத்திரசந்தோஷம்
 பால்பாக்கியமரசரால்நிதிதான்யம்வருமே.

(இ - ள்.) வலிமைபெற்ற செவ்வாய்திசையில், தனதபகாரம் பொருந்திய மீ 4, நாள் 27-க்கும் பலன்களாவன:—செவ்வாய், 1, 4, 7, 10-ஆமிடகேந்திரமும், 1, 5, 9-ஆமிட திரிகோணம் பெற்றாலும், மகிமைபெற்ற லக்கினாதிபதியோடு கூடியிருந்தாலும், பூமியில் அற்பசௌக்கியமும், சொற்பமானலாபமும், சோம்பலும், அபகாரமத்தியில், குடும்பப்பகைகளும், சகோதரங்கள், புத்திரர்கள், சந்தோஷமும், பால்பாக்கியமும், அரசர்களால் பொன்னும் தான்யமும் வந்துசேரும் எ - று. 1

வருமைதருநீசமஸ்தமனத்தையடைந்தாலும்
 வருமெட்டாறீராறில்வதிந்திடுவனெனினும்
பெருமையில்லாயானபங்கமனஸ்தாபந்தீயாற்
 பெருத்தகள்ளராற்பயமாஞ்சகோதரத்தாலுறவால்
பொருமையிலாவிரோதமுடன்பிணிராசகோபம்
 பொருந்தும்விலங்குடன்மூத்திரகிரிச்சிரரோகங்கள்

தருமேபின்பயமுண்டாமென்றுவடநூலோர்
சாற்றினர்தப்பாதிதுவுந்தார்குழற்பெண்ணரசே.

(இ - ள்.) மாலையணிந்த கூந்தலுடையவளே! தரித்திரத்திற் கேதுவான நீசம், அஸ்தமனத்தை செவ்வாய் அடைந்தாலும், 8, 12-ஆமிடங்களில் நின்றாலும், பெருமையில்லாத மானபங்கமும், மனஸ்தாபங்களும், அக்கினியாலும், திருடராலும் பயமுண்டாம். சகோதரராலும், சிநேகர்களாலும், விரோதமும் நோயும் ராசகோபத்தால் விலங்குபூணுதலும் மூத்திரகிரிச்சிரரோகங்களும் உண்டாம். பின்னால் பலனுண்டாமென்று வடநூலில் பராசரமுனிவர் சொல்லியபடி தப்பாது என்று உரைத்தனர் எ - று. 2

சேயவனும்சுபாங்கிசமாய்ச்சுபனோடேகூடித்
திகழ்ந்தவனாலேபார்க்கிற்சேர்கிரகம்பூமி
ஆயமொருநாற்காலிபசுவாபமரச
ரனுக்கிரகமிட்டசித்தியதிகசுகமுண்டாந்
தீயவன்றனவர்க்கேழுக்கதிபதியதாகிச்
சேர்ந்திருக்கில்வெகுபீடைமனவியாதியாகும்
தூயபரிகாரமதுமங்களநாள்விரதந்
தொடுத்தொருமண்டலமிருக்கத்தோசமகன்றிடுமே.

(இ - ள்.) செவ்வாய் சுபரங்கிசமேறியும் சுபனோடுகூடியும் சுபரால் பார்க்கப்பட்டாலும், கிரகம், பூமி, கன்றுகாலி, பசு, பாக்கிய சேர்க்கையும், பரமனனுக்கிரகமும், இஷ்டமான பொருள் சித்தியும் அதிகமான சுகமும் உண்டாகும். பாவர்கள் 7-க் கதிபதியாகி செவ்வாயுடன் கூடிநிற்கில் அதிக பீடையும் மனதில் துக்கமும் உண்டாம். இதுதீரப் பரிகாரம் கேட்பாயாகில் செவ்வாய் வாரவிரதம் மண்டல நாள் தொடுத்து இருக்க தோஷங்கள் விலகிச் சுகம் கொடுக்கும் எ - று. 3

ஆக விருத்தம் 124.

செவ்வாய்திசை இராகுபுத்தி

அதிகமிகுஞ்சன்றிசையில்ராகுவபகாரம்
ஆண்டொன்றுநாள்பதினெட்டாகுமதின்பலன்கேள்

பதியானசேய்க்கரவந்தர்க்கதனுயிருக்கிற்
பாரசண்டைராசபயந்தனதான்யநாசம்
அதிகமனவியாதியுடனுற்காலிநாசம்
அவமானஞ்சத்ருபயம்விபசாயநட்டஞ்
சதிசெவ்வாய்ராகுமொருபாதமதிலிருக்கில்
தருராசபயங்கலகஞ்சார்ந்திடுமென்றுரையே.

(இ - ள்.) பாவமிகுதிபெற்ற செவ்வாய்திசையில், ராகு புத்தி வரு 1, நாள் 18-க்கும் பலன் சொல்லக்கேளாய்! பலம்பெற்ற செவ்வாய்க்கு ராகு பலவானுகி ஓரிடத்திருந்தாலும் அதிகமான சண்டையும், ராசாக்களால் பயமும், பொருள் தான்யநாசமும், அதிக வியாதியும், நாற்காலிகள் நாசமும், அவமானமும், சத்துருவால் பயமும், விபசாய நஷ்டமும் உண்டாம். செவ்வாயும், இராகுவும், ஓரே நக்ஷத்திரபாதத்தில் நிற்கில், அரசரால் பயமும், கலகங்களு முண்டாகும் என்று சொல்லக்கடவாய் எ - று. 1

உரைத்தபணிசேய்சுபனேடேகூடினுலு
முற்றசுபனுர்பார்வையுற்றிடம்பெற்றுலுந்
தரைத்தலத்தில்மூன்ருறுதசமதிற்பன்ஞென்றிற்
சார்ந்திடினுந்திரிகோணகேந்திரமுற்றிடினும்
நிரைத்தபுலனரசரபிமானமதினுலே
நெடும்பூமிலாபமுத்தியோகமதுதன்னுல்
வரைத்தனத்தாய்தனலாபங்களத்திரபுத்திரர்கள்
வாழ்வுடனேவிபசாயம்வளருமிகத்தானே.

(இ - ள்.) சொல்லப்பட்ட ராகுவும், செவ்வாயும், சுபக்கிரகத்தோடு கூடினுலும், பார்த்தாலும், சுபவர்க்கம்பெற்றுலும், 1, 3, 6, 10, 11-மிடங்களில் நின்றுலும், 1, 5, 9-ஆமிட திரிகோணம் பெற்றுலும், 1, 4, 7, 10-ஆமிடமாகிய கேந்திரம் பெற்றுலும், வரிசையான பலன்கள், அரசரபிமானத்தால், பூமிலாபமும், உத்தியோகமும், உத்தியோகத்தால் தனலாபங்களும், களத்திர புத்திரர்களாகிய வாழ்வுண்டாம். விபசாய சேர்க்கைகளும் உண்டாகி மேன்மேலும் வளரும் என்க எ - று. 2

தாணியலாபத்துடனேதருஞ்சமுத்ரஸ்நானந்
தான்கிடைக்கும்மத்தியிலன்னியதேசஞ்செல்வன்

ஆனதொருகளத்திரபுத்திரகிலேசம்வழிமார்க்க
மதிற்சோரபயமுண்டாமந்தியத்திலேதான்
கோனவன்றன்கிருபையினல்நினைத்ததெல்லாங்கூடும்
குறித்திடுசட்டாட்டவியம்பாவியுடன்கூடில்
மானனையாய்சுபர்நோக்குப்பெற்ருலுமரசர்
மனஸ்தரபம்விபசாயம்நாசமுறுந்தானே.

(இ - ள்.) மான்சாயலையுடையவளே! தானியலாபமும், சமுத்திர ஸ்நானமும் உண்டாகும். மத்தியபாகத்தில், அன்னிய தேசஞ் செல்லுதலும், களத்திரபுத்திர கிலேசங்களும், வழிமார்க்கங்களில் திருடரால் பயமுண்டாகும். கடைசிப்பாகத்தில் அரசரின் கிருபையால் நினைத்தகாரியங்கள் கூடுதலுண்டாம். 6, 8, 12-ஆமிடங்களில் இந்த ராகு பாவியுடன்கூடிநின்ருலும், சுபர்களால் பார்த்தாலும், ராசகோபமும் விபசாயநாசமும் உண்டாம் எ - று. 3

நாசமுறுந்தேகபித்தக்ஷயரோகமுண்டாம்
ராசராலக்கினியாற்சோரராற்பயமாம்
பாசமுறும்பருவிலங்குபாதமதிற்பூட்டும்
பகர்ந்திடுமூன்ருறுபத்துபன்னென்றிலேனும்
நேசமுறுந்திசைநாதன்தனக்குலாபத்தில்
நின்ருலும்வித்தைவருமதிகசவுக்கியமாந்
தேசமதில்விபசாயம்தனதான்யலாபஞ்
செகராசர்கிருபையினற்சந்தோஷம்வருமே.

(இ - ள்.) தேகமெலிவும், பித்தரோகமும், க்ஷயரோகங்களும் உண்டாம். திருடர், அக்கினி, ராசர்களாற் பயமும், பந்தமுள்ள விலங்கு பாதத்திற் பூணுதலும் உண்டாம். சொல்லுகின்ற 3, 6, 10, 11-ஆமிடங்களில் இராகுநின்ருலும், திசாநாதனுகிய செவ்வாய்க்கு 11-ஆமிடத்தில் நின்ருலும் வித்தையுண்டாகும். அதிக சௌக்கியமுண்டாகும். வியவசாயங்களும், தனதான்யலாபங்களும் உண்டாம். அரசர்கள் கிருபையால் சந்தோஷமும் உண்டாம் எ - று. 4

வருமேதானிவன்புத்தியாதியிலேபீடை
மத்தியத்திற்சுபாசுபங்கள்வந்திடுமந்தியத்திற்
றருமேதானதிகசுகமிரண்டேழிற்செவ்வாய்
தானிருக்கிலவமிருத்துப்பயங்களுண்டாமதற்குப்

பரிகாரஞ்சிவபூசைபண்ணினர்சுகமாம்
 பவளவிதழ்க்குவளைவிழிபாலனஞ்சேர்மொழியாய்
உருகாதவிரும்பினையுமுருக்குமிளங்குயிலே
 உரைத்தனர்சோதிடமறிந்தவுத்தமர்கள்தானே.

(இ - ள்.) பவளம்போன்ற அதரமும், கருங்குவளைமலர்போன்ற கண்களும், பாலைப்பார்க்கிலும் நன்மைபெற்ற இனிய சொல்லையும், உருகாத இரும்பையும் உருக்குகின்ற இளங்குயில்போன்ற மொழியையுமுடையவளே ராகு புத்தி, ஆதியில்பீடையும் மத்தியபாகத்தில் சுப அசுபம் கலந்துகாட்டலும், அந்தியபாகத்தில் அதிக சுகமுண்டாகும். 2, 7, ஆமிடங்களில் செவ்வாய் நிற்கில், அவமிருத்துபயங்களுண்டாம். அதற்குப்பரிகாரம் சிவபூஜைசெய்ய நன்மையுண்டாமென்று சோதிடங்கற்ற உத்தமர்கள் சொற்றனர் எ - று. 5

ஆக விருத்தம் 129.

செவ்வாய்திசை குருபுத்தி

நேசமுறுஞ்செவ்வாயிற்குருபுத்திமாசம்
 திகழ்த்துபதினொன்றேடுநாளாறின்பலன்கேள்
வாசமுறுகுருகுசனுக்கந்தர்கதனுகி
 வந்திடினும்கேந்திரகோணத்தையடைந்தாலும்
ராசனூற்சன்மானமதிசீர்த்தியுண்டாம்
 நல்லவஸ்திராபரணம்வருமிராசமூலத்தார்
பேசரியகனமுடனேசாமரங்கள்சுருட்டி
 பெருஞ்சிவிகைலாபமெல்லாம்பெற்றிடுவன்மாதே.

(இ - ள்.) நேசமுற்ற செவ்வாய்திசையில் வியாழபுத்தி மீ 11-நாள் 6-க்கும் பலன் கேட்பாயாக. கீர்த்தியுள்ள குரு செவ்வாயோடு கூடியவனுகிவந்தாலும், 1, 4, 7, 10-ஆமிடமாகிய கேந்திரத்தானத்தும், 1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணத்தும் நிற்கில், அரசர்களால் சன்மானங்களும், அதிகமான கீர்த்தியுமுண்டாம். நலமான வஸ்திராபரணமுமுண்டாம். ராஜசமுகத்தால் சொல்லுதற்கரிதான பெருமையுடனே சாமரம், சுருட்டிகளோடுகூடிய பல்லக்கையும் அடைவன் எ - று. 1

பெற்றவுச்சசொக்ஷேத்திர ந்தன்னிலிருந்ததிகப்
பெலவானுய்சுபாங்கிசனுயிருந்தாலுஞ்சுபனு
யுற்றசுபலக்கினத்தையடைந்தாலும்ஸ்திரீயா
லுறுபயனுந்தசாதிபதிபார்த்திருந்திட்டாலும்
கொற்றவர்கள்சன்மானங்நாற்காலிலாபங்
கூடும்விபசாயமுடன்ருனியமும்லாப
மற்றுமிகபெரியோர்களுறவுவரும்பின்னே
மாதீர்த்தமாடுவன்பின்வரும்பலனைக்கேளே.

(இ - ள்.) பெருமைபெற்ற உச்சத்தேனும், ஆட்சியேனும், பெற்ற வியாழன் பலவானுய், சுபாங்கிசம்பெற்றும், சுபர்வீட்டிலிருந்தாலும் பெண்களால் பலனடைவன் என்பதாம். திசாதிபதி செவ்வாய் ஷ வியாழனைப்பார்த்தால், அரசசன்மானமும், கன்றுகாலிலாபமும், விபசாயங்கூடுதலும், தானியலாபமும், பெரியோர்கள் உறவும், தீர்த்தமாடுதலும் உண்டாம். பின்னும் பலன்களைக் கேட்பாயாக எ - று. 2

கேடிலாச்சிவிகையொடுவஸ்திர ஆபரணங்
கிடைத்திடுமேபூமிபுத்திரலாபமட்டசித்தி
கூடவேசட்டாட்டவியந்தனிலேபாவர்
கூடிடினுமவராலேகொடும்பார்வையுரினும்
ஈடிலா நீசமஸ்தமனத்தையடைந்தாலும்
இமயகுருபெலவீனனுகியிருந்தாலும்
ஊடலாமரசராற்சோரராற்றீயா
லுறுபயமாஞ்சர்ப்பவிடமுற்றிடுமின்னுளே.

(இ - ள்.) கெடுதலில்லாத பல்லக்கும், வஸ்திரங்கள், ஆபரணங்கள், வெகுபூமியும், புத்திரரும் லாபமாம், அஷ்டமாசித்தியுண்டாம், இவ்வியாழன் 6, 8, 12-ஆமிடங்களில் இருக்க, பாவர்கள் சேர்ந்தாலும், பார்த்தாலும், உவமைசொல்லமுடியாத கஷ்டங்களுண்டாம், குருவானவர் நீசம், அஸ்தமனமாயிருந்தாலும், பலவீனனுயிருந்தாலும், சண்டைசச்சரவும், அரசர், சோரர், அக்கினியாற் பயமும், பாம்பால் விஷமும் தீண்டிடும் என்பதாம் எ - று. 3

மின்னே நீயின்னமுங்கேள் நீரிழிவுரோக
மிகுத்துவருங்கெட்டபோசனம்பந்துநாசம்

பின்னேயுமவனிருந்தவீடுவிட்டுப்போவான்
　பெருத்ததொருகோணகேந்திரலாபத்தான
மன்னேன்போயிருந்தாலுமரசரபிமான
　மதிகசகோதரசவுக்கியமாந்தான்யலாபம்
பன்னுளும்விபசாயசவுக்கியமாரோக்யம்
　பால்பாக்யங்களத்ரபுத்ரலாபமூறுமாதே.

(இ - ள்.) மின்னற்சாயலுடையவளே! இன்னும், நீரிழிவு ரோகம் மிகுத்துவந்துசேரும், கெடுதலான போஜனமும், பந்துக்கள் நாசமும் பொருந்தும், குடியிருந்த வீட்டையும்விட்டு அயலிடம் போவான். 1, 4, 7, 10-ஆமிடகேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும் பலம்பெற்ற ஸ்தானுதிபதிகள் வியாழனோடு கூடினுல் அரசரபிமானமும், அதிகமான சந்தோஷங்களும், சௌக்கியமும், தான்யலாபம், விபசாய சௌக்கியம், மிகவும் ஆரோக்கிய திடகாத்திரமும், பால்பாக்கிய புத்திர களத்திராதிகளுமுண்டாம் எ - று. 4

தேடாதசட்டாட்டவியத்தினிலேகுருவுந்
　திகழ்பாவியுடன்கூடிப்பாவர்பார்த்தாலுங்
கூடாதுதருமசிந்தைபாவம்வந்தேசேருங்
　குறித்ததனதாணியமும்வெகுநாசமதற்கு
ஈடாகுமாதியிலேசவுக்கியமதாகு
　மிசைந்தமத்தியந்தியத்திற்றுற்கேள்வியுடனே
வாடாதநாற்காலிவிபசாயநாசம்
　வரும்பீடைசர்ப்பபயமக்னிபயந்தானே.

(இ - ள்.) 6, 8, 12-ஆமிடங்களில் நின்ற வியாழனைப் பாவர்கள் கூடினுலும், பார்த்தாலும், தருமசிந்தை இல்லாதவனுமாவன் பாவங்கள் வந்து சேரும். தனம், தான்யங்கள் நாசமடையும், புத்தி ஆதியிலே சௌக்கியமும், மத்தியபாகம், அந்தியபாகத்தில் துர்ப்போதனைக் கேள்வியும், கன்று காலி, விவசாயநாசமும் பீடைகளும், சர்ப்பம் அக்கினியாலும், பீடைபயமுண்டாம் எ - று. 5

பயமாகுமரசராற்சோறருற்கலகம்
　பதிகிரகம்பேர்ந்துவிடுமனவியாதியுண்டாம்
நயமானவிரண்டேழுக்கிவனுதனுகில்
　நாடுமவமிருத்துபயம்பரிகாரமதற்குச்

செயமீதுசிவனுருக்கபிஷேகஞ்செய்து
சேமமுறவேழைகளுக்கனதானஞ்செய்ய
கயமாறுங்கோடதனைப்பழித்திளக்கிக்கனத்துக்
கமலமுகைபோலெழுந்தகனதனப்பெண்கொடியே.

(இ - ள்.) யானையின் நிறைந்த மருப்பைப்பழித்து மேன்மை பெற்றுக் கனத்து, தாமரை யரும்புபோலெழுந்த பெருமைபெற்ற தனங்களையுடைய கொடிபோல்பவளே! இன்னும் அரசர், திருடர், இவர்களால் கலகங்களும், பதிவிட்டுப்போதலும், மனவியாதியும் உண்டாம். 2, 7-ஆமிடங்களுக்கு, வியாழன் அதிபதியாகில், அவமிருத்துபயமுண்டாம், அதுநீங்குவதற்கு பரிகாரமாவது சிவனுருக்கு அபிஷேகஞ்செய்தும், ஏழைகளுக்கு அன்னதானஞ்செய்ய நிவர்த்தியாகும் எ - று. 6

ஆக விருத்தம் 135.

செவ்வாய்திசை சனிபுத்தி

கொடியேகேள்செவ்வாயிற்சனிபுத்திமாதங் [ள்
கூறுபதின்மூன்றதின்மேல்நாளொன்பான் பலன்கே
படிமீதிற்குசனுக்குக்காரியந்தர்க்கதனுய்ப்
பதிந்திடினுஞ்சொக்ஷேத்ரகேந்ரதிரிகோணம்
வடிவாகுமூலத்ரிகோணத்திலேனும்
வகுத்தவுச்சமூச்சாங்கமாகியிருந்தாலுங்
கடிதானமூன்றுறுபத்துலாபத்திற்
கனபிலனுய்ச்சுபராலேநோக்கமுற்றுற்கேளே.

(இ - ள்.) பூங்கொடிபோல்பவளே! செவ்வாய் திசையில், சனி புத்தி வரு 1, மீ 1, நாள் 9-க்கும், பலன்கேட்பாயாக:-பூமியில் செவ்வாய்க்கு சனி மித்துருவாய்க் கூடியிருந்தாலும், அழகிய ஆக்ஷி, உச்சம், உச்சாங்கிஷமாகியிருந்தாலும், 1, 4, 7, 10-ஆமிட கேந்திரம் 1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணம் இவ்விடங்களில் நின்றாலும், 3, 6, 10, 11-ஆமிடங்களில் சனிநின்று, பலம்பெற்று சுபர்கள் பார்த்தாலும் பலன்களைக் கேட்பாயாக எ - று. 1

உற்றராச்சியஞ்சுகமாமகாகீர்த்தியுண்டா
முயர்ந்திடுபுத்திரலாபங்களத்திரலாபமுமா
மற்றரசசன்மானபுத்திரவிர்த்தியுந்தான்
வருமவன்றன்மாதமதில்மகாசவுக்கியமாகுங்
குற்றமுறுநீசனுய்ச்சட்டாட்டவியத்திற்
கூடமிலேச்சர்துடுக்கராற்பயமதாகுஞ்
செற்றமிகுமரசராலுறுதனதானியங்கள்
சேதமதுவுண்டெனவுஞ்செப்புவர்கற்றோரே.

(இ - ள்.) ராச்சியங்கிட்டும், சுகமான நற்கீர்த்திகளும் உண்டாம், உயர்வான புத்திரலாபம், களத்திரலாபமும் உண்டாம். அல்லாமலும், அரசர்சன்மானம், புத்திராள்விருத்தியும் உண்டாகும், சனியின்புத்தி மாதங்களில் மிகுந்த சௌக்கியங்களையும் உண்டாக்குவன். குற்றம்பொருந்திய நீசமானாலும், 6, 8, 12-ல், சனி இருந்தால், சோரர்கள் பயத்தால் சங்கடமாம். அரசரால் பொருந்திய தனம், தானியங்கள், நஷ்டமுண்டாம் என்றும் சோதிடர்கள் சொல்லுவார்கள் எ - று. 2

ஓரைமிகுவாக்கினிலும்பிதுர்த்தானத்திினிலு
முறுபாவியுடன்கூடிற்பயந்தனநாசமுமாம்
பாரதனிலன்னியதேசங்களிற்சஞ்சாரம்
பருவிலங்குமனநோயிசகோதரமும்நாசம்
வீரமிகுமரசராற்சோரராற்றீயால்
மிகுபயமுண்டாகிவிடும்வியன்கிரகம்போகும்
மாரணமாங்காரியமதாய்ச்சத்துருபயமு
மக்வுபந்துகளத்ரமுடன்மாதுர்பிதுர்கேடே.

(இ - ள்.) மேலும், சனியானவர் 2-ஆமிடம், 9-ஆமிடங்களில், பாவியுடன் சேர்ந்து நின்றால், பயமும் தானியச் சேதங்களும் உண்டாகி அந்நியதேசசஞ்சாரமும் உண்டாம். பெரிய விலங்குபூணுதலும், மனதில் பீடையும், சகோதரர் நாசமும், அரசரால், சோரரால், அக்கினியால் மிகுந்த பயமுண்டாம். பெருத்தவீடும் தன்னைவிட்டகலும். மரணபயமான சத்துருக்களால் கேடும், புத்திரர், பந்துக்கள், களத்திரம், மாதுர், பிதிரர் கேட்டையும் என்பதாம் எ - று. 3

கேடிலாச்சனிகேந்திர திரிகோணலாபங்
கிடைத்திருந்தாலதிகீர்த்தியன்னியபாவத்தில்
வீடல்லாமன துவருஞ்சிலகருடமிசையு
மெழிலார்மா துருநாசமனநோயுமுண்டாம்
மாடுபோங்கிரகம்போந்தான்யம்போமெதிரி
வருஞ்சமரிலபசெயமா நீரிழிவுரோகம்
ஊடலுருஞ்சட்டாட்டவியந்தனிலும்பாவி
யுடன்கூடுவானுகிலவமிருத்துபயமே.

(இ - ள்.) குற்றமில்லாத சனி 1, 4, 7, 10-ஆமிடமாகிய கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணத்தும், 11-ஆமிடத்தும், இருந்தால் அதிககீர்த்தியுண்டாம். அது பாபகேந்திரமாயில், கெட்ட சிந்தனையுண்டாம், சிலகாரியங்கைகூடும். அழகிய மாதுர்நாசமும், மன வியாகூலமும் உண்டாம். மாடு கன்றுகள், வீடு, தானியம் நீங்கிவிடும். சத்துருவுண்டாம், அபஜெயமடைவன், நீரிழிவுரோகமும் உண்டாம். மேலும், சனி 6, 8, 12-ஆமிடங்களில், பாவியுடன் கூடிநின்றால் அவமிருத்து பயமுண்டாம் எ - று. 4

மேதினியிலரசராற்சோரராற்றீயால்
விழுங்குசர்ப்பத்தாற்பயமாமிகுசுரமுண்டாகு
மோதரியதலைவலியும்வாதபித்தரோக
முடன்வயிற்றுவலியாகும்தனநாசமிரண்டேழ்
நாதனிவனுகில்மிருத்துடயயமுண்டாகும்
நல்லபரிகாரமதுநவின்றிடக்கேளணங்கே
நீதமொடுசிவபூசைபயபக்தியுடனே
நித்தமுஞ்செய்திடிற்றோஷம்நீங்கிடும்நீநிலத்தே.

(இ - ள்.) எ, தெய்வமாதே! இன்னும் கேட்பாயாக:-பூமியில் அரசர், அக்கினி, திருடர், பாம்பு இவைமுதலான பயமும், மிகுதலான சுரநோயும், தலைநோவும், வாதபித்தரோகங்களும், வயிற்றுவலியும், ரணவியாதியும் உண்டாம். 2, 7-ஆமிடத்துக்கதிபதி சனியாகில் அவமிருத்து பயம் உண்டாம். இத்தீதுகள் அகலப் பரிகாரங்கள் சொல்வேன் கேட்பாயாக:-பயபக்தியோடு சிவபூஜையை, நித்தியம் செய்துவந்தால் தோஷம்நீங்கிச் சுகப்பிராப்தியுண்டாம் எ - று.

ஆக விருத்தம் 140.

செவ்வாய்திசை புதன்புத்தி

நிலத்திலேபிறந்தவன்றன் றிசையத்தனிற்புந்தி
நிற்குமபகாரமது திங்கள்பதினொன்று
பெலத்துவரும்நாளிருப்த்தேழினுக்குப்பலன்கேள்
பேசுபுதன்குசனுக்கந்தர்க்கதனுகிடினுஞ்
சொலத்தகுகேந்திரகோணந்தன்னிலிருந்தாலுஞ்
சொலும்புராணக்கேள்விதர்மதானமுடன்கீர்த்தி
நிலைத்திடுஞாயங்கள்சொல்வனல்லபோசனமும்
நிறைசிவிகைவஸ்திரபூஷணலாபமாமே.

(இ - ள்.) பூமிபாலகனுன செவ்வாய் திசையில் புதன்புத்தி மாசம்-11, நாள் 27-க்கும் பலன்களைக் கேட்பாயாக:–செவ்வாயோடு சேர்ந்து புதன், பலவானு யிருந்தாலும் 1, 4, 7, 10-ஆமிடகேந்திரத்தும், 1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணத்தும் நின்றாலும், சொல்லுகின்ற புராணக்கேள்வியும், தர்மதானஞ் செய்தலும், சர்க்கீர்த்தி நிலைத்தலும், ஞாயமான விவகாரங்கள் செய்தலும், நல்லபோஜனங்களும், பல்லக்கு, வஸ்திரபூஷணலாப்மும் உண்டாம் எ - று. 1

மேதையுறு நீசனுயஸ்தமனமாயும்
வியத்தானஞ்சட்டாட்டமேவிடவேமிருத்தும்
நீதமிலாப்பருவிலங்குபந்துசனமக்கள்
நேரிழையாள் நாற்காலி நாசமிகவுண்டாம்
பேதமொடுதிசாதிபனேடேகூடினுலும்
பெருத்தசத்துருபீடைபயம்பிரதேசகமன
மோதரியராஜவிரோதமுங்களத்ரகலக
முற்றிடுமென்றுரைத்தனர்கள்கற்றறிவுள்ளோரே.

(இ - ள்.) மேதையான புதன், நீசாஸ்தமனமாகி 6, 8, 12-ஆமிடங்களில் நிற்கில் அவமிருத்தும், காரணமில்லாமல் விலங்கு பூணுதலும், பந்து ஜனங்கள், மனைவி, கன்று காலி, நாசமுண்டாகும். திசாநாதனுகிய செவ்வாயுடன், புதன் கூடுவானுகில் பலமான சத்துருபீடை, பயம், அந்நியதேசகமனம். சொல்லுதற்கரிதான ராஜபயம், களத்திரத்தால் கலகம் பொருந்துமென்று சோதிடங்கற்றறிவுள்ளவர்கள் சொல்லினர் எ - று. 2

மறைவிலாக்கேந்திரகோணத்தினிலேதானும்
  வருமுச்சத்தடைந்தவனைமாலவன்கூடிடினும்
நிறைலாபத்தடைந்தாலும்ராஜசன்மானங்கள்
  நீங்கரியஉத்யோகம்வஸ்திராபரணங்
குறைவிலாப்புத்ரகளத்திரலாபமுடனே
  கூறியசாஸ்திரகேள்விஞானவாசிப்பு
முறையாகலட்சுமிகடாக்ஷமதுண்டாகும்
  முதுமொழியோர்சொன்னமொழிதப்பாதுமயிலே.

(இ - ள்.) மயில்சாயலேயுடையாய்! மறைவில்லாத 1, 4, 7, 10-ஆமிடகேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும் உச்சனைக் கூடிய புதன் நின்றாலும், 11-ஆமிடத்தில் கூடிநின்றாலும், ராஜ சன்மானங்களும் நீங்குதலில்லாத உத்தியோகமும், வஸ்திராபரணங்களும், குறைவில்லாத புத்திரகளத்திர லாபங்களுடன், சாஸ்திரக்கேள்விகளும், ஞானவாசிப்பும், முறைமையான இலக்ஷிமிகடாட்சமுமுண்டாகுமென்று பழமையான சோதிடசாஸ்திரங்களை கற்ற பெரியோர்கள் தப்பாமல் சொன்னார்கள் எ - று. 3

தப்பாதுசட்டாட்டவியமதிலேபாவி
  தான்புதனோடேகூடிலதுமானபங்கம்
பொய்ப்பாவந்தனில்மனதுசெலுமீனச்சாதி
  போராட்டம்நற்கருமநாசமதுவாகும்
இப்பாரிலரசராற்சோரராற்றீயால்
  ஏற்படும்நட்டம்பலமாய்ச்சண்டைமிகவுண்டு
மெய்யானரெண்டேழுக்கிவனுதனுகில்
  மேதினியிலரிசகஸ்திரநாமசெபஞ்செய்யே.

(இ - ள்.) 6, 8, 12-ஆமிடங்களில் புதன், பாவரோடு சேர்ந்து நிற்கில், மானபங்கமுண்டாம். பொய், பாவமான சிந்தனையில் மனதைச் செலுத்துபவன், எளிய ஜாதிக்காரர்களால் போராட்டமும், நல்லகாரியங்கள் கெடுதலும், அரசரால், அக்கினியால், திருடரால் பலமான நஷ்டங்களும் கலகங்களும் உண்டாம். உண்மையாய் புதன் 2, 7, ஆமிடத்ததிபனுகில், அவமிருத்துபயம் உண்டாம். அதுநீங்க விஷ்ணுவின் சகஸ்திரநாமார்ச்சனையும், ஜெபமும் செய்வாயாக எ - று.

ஆக விருத்தம் 144.

செவ்வாய்திசை கேதுபுத்தி

நாமமுறுஞ்சேய்திசையிற்கேதுபுத்தியதுதான்
நால்மாதமிருபத்தேழ்நாட்பலனைக்கேளாய்
சேமமுறுங்கேதுகுசற்கந்தர்க்கதனுகிற்
சேர்ந்தசோதரத்தானஞ்சம்பத்துலாப
மாமுச்சகேந்திரகோணந்தனிலேயேனு
மவனிருந்தாற்சொர்ப்பசவுக்கியத்துடனேலாபம்
தாமதஞ்சேர்செலவதிகமாதிபுத்தியதிலே
தனித்தமத்திசுபாவசுபமந்யபலன்கேளே.

(இ - ள்.) பயஞ்செய்கின்ற செவ்வாய் திசையில் கேதுவின் புத்தி மீ 4, நாள் 27-ன் பலன்களைக் கேட்பாயாக:—செவ்வாய்க்கு, கேது மித்துருவாய்க் கூடியிருந்தாலும் 3, 9, 11-ஆமிடங்களிலும், உச்சத்தும், 1, 4, 7, 10-ஆமிட கேந்திரம், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும் கேது நின்றால், அற்ப சௌக்கியத்துடன்கூடிய லாபமுண்டாம். செலவு அதிகமுண்டாம். புத்தியின் மத்தியபாகத்தில் அசுப சுபங்கள் கலந்து வருதலுமாம் எ - று. 1

பலமுறவேதனதான்யங்காலிமிகலாபம்
பார்த்திபர்கள்சன்மானம்பகைவியஞ்சட்டாட்டம்
நலமில்லாப்பாவனோடிருப்பானேயாகில்
ராசபயஞ்சத்ருபயம்பீடைமனவியாதி
கலகமிகுங்காரியமுங்கெடுதியதிபயம
காலவுணவிட்டசனவுபத்திரமுங்காட்டுந்
தலைவலியுங்காச்சலுடனீரிழிவுஞ்சாரும்
சகோதரத்தில்மரணமுறுமவமிருத்துமுண்டே.

(இ - ள்.) கடைப்பாகத்தில் தனம், தான்யம், கன்று காலி லாபம், ராஜசன்மானமும் உண்டாம். பகையான 6, 8, 12-ல் நன்மையில்லாப் பாவியோடு கேது சேர்ந்துநின்றால், ராசர்களாலும், சத்துருவாலும் பயமுண்டாம். பீடைகளும், மனோவியாதியும் உண்டாம். கலகங்களுண்டாதலும், காரியக் கெடுதியும், பயமும், அகால போஜனங்களும், இஷ்டர், பந்துக்களால் உபத்திரவமும், தலைவலி, காய்ச்சல், நீரடைப்பு முதலாய ரோகங்களுண்டாம். சகோதரவர்க்கத்தில் மரணமும், அவமிருத்தும் உண்டாம் எ - று. 2

அவமானமூன்றுறுபத்துபன்னென்றீ
ராறிலிருப்பினுமற்பசவுக்யமற்பபலனுந்
தவமானலாபத்தானத்திலுறிற்சுபமாந்
தான்பொல்லாவிடந்தன்னிற்கேதிருந்தானுனல்
பவமானவாதியிலேதனநாசம்நடுவிற்
பகர்சொர்ப்பசவுக்கியமாம்பன்னிரெண்டாட்டாறி
லிவர்பாவியுடன்கூடிற்கபாலதந்தரோகம்
இராசசோராக்கினிபயஞ்சயம்பீடைதானே.

(இ - ள்.) பாவசம்பந்த 3, 10, 11, 12-ஆமிடங்களில் கேது நிற்கில், அற்பமான பலனும். 11-ஆமிடத்தில் நிற்கில், புத்தி ஆதியில் தனநாசம். நடுவில் சொற்ப சௌக்கியம். அந்தியத்தில் லாபமும் உண்டாகும். 6, 8, 12-ல் கேது பாவியுடன் கூடிநின்றால், கபாலம், தந்தங்களில் ரோகமுண்டாம். க்ஷயரோகமும், அரசர், திருடர், அக்கினியாதி பயங்களும் உண்டாவதுடன் எ - று. 3

தாரமிகும்புத்திரர்க்குவெகுநாசமுண்டு
தானிரண்டேழாமிடமாந்தனத்திறையாயிருந்தாற்
கோரமிகுமவமிருத்துதோஷமதாமதற்குக்
குணமானபரிகாரங்கூறிடுவன்கேளாய்
வீரமிகுஞ்சிவபூசைபத்தியுடன்செய்தால்
வெகுசுகமதாகுமெனவிளம்பினர்கள்கணிதர்
ஆரமும்பூணணியுமணிந்திலங்கியபூண்முலையா
யாடவர்களுயிர்கவருமமுதமொழிமானே.

(இ - ள்.) புஷ்பமாலையாலும், அழகிய ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட ஸ்தனங்களையும், ஆடவர்களின் உயிரைக் கவரும்படியான இனிமை வசனத்தையும், மான்போன்ற சாயலையுமுடையாய்! களத்திரம், புத்திரர்களுக்கு நாசம் உண்டாம். கேது 2, 7-ஆமிடத்ததிபனுடன் சம்பந்தம் பெற்றால், கொடுமையான அவமிருத்து தோஷங்களுண்டாம். இவ்வவமிருத்து விலகுவதற்குச் சிவபூஜை பத்தியுடன் செய்தல் வேண்டுமெனக். கணிதவல்லவர்கள் கணித்தார்கள் எ - று. 4

ஆக விருத்தம் 148.

செவ்வாய்திசை சுக்கிரபுத்தி

மானேகேள்சேய்திசையிற்கவிபுத்தியதுதான்
 மாதமதுபதினுலில்வரும்பலனைச்சொல்வே
ணுனுலுஞ்சுக்கிரன்சேய்க்கந்தர்க்கனுகி
 யதிகவுச்சசொக்ஷேத்ரம்கேந்திரகோணத்திற்
ருனேநற்சுபரோடேகூடியிருந்தாலுந்
 தனராச்சியலாபமுடன்றந்திபரிலாபந்
தேனேறுமலர்க்குழலாயதிகசௌக்கியமும்
 க்ஷேமமினிப்பெருவனெனச்செப்பினர்சோதிடரே.

(இ - ள்.) தேனிறைந்த மலர்மாலை யணிந்த கூந்தலுடைய மானே! சேய்திசையில் சுக்கிரபுத்தி வரு 1, மாசம் 2-க்கும் பலன் களைச் சொல்வேன் கேட்பாயாக. சுக்கிரன் செவ்வாயோடு கூடி யிருந்தாலும், அதி உச்சம், ஆட்சியில் சுபக்கிரகத்தோடு கூடியிருந் தாலும் 1, 4, 7, 10-ஆமிடம் கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிடம் திரிகோணத்தும் சுபரோடேகூடிய சுக்கிரன் நின்றாலும் திரவியம், ராச்சியம், யானை, குதிரை லாபமாம். அதிக சௌக்கியமும், க்ஷேமத்தையும் அடைவார்களென்று சோதிடவல்லவர்கள் சொல் லினர் எ - று. 1

திடமானலக்கினுதிபதியுடனேகூடிற்
 சேர்ந்தகளத்திரபுத்திரசம்பத்துவிர்த்தி
யுடனேதான்றேகசவுக்கியமதிகசுகமா
 முறுலாபாதிபனிவன்றனுடல்கூடுவானேல்
அடவாகபுத்திரபாக்கியமதிகசுகத்தோ
 டானைபரிலாபமுறுமரசரபிமான
மிடமானகிரகமதிற்றிருநிறைந்துவாழு
 மென்றுரைத்தாற்கணிதமுணர்ந்திசைத்தமதியோரே.

(இ - ள்.) திடமுள்ள லக்கினுதியுடன் சுக்கிரன் கூடிநின்றால், சேருகின்ற மனையாள், புத்திரர், சம்பத்து விருத்தியுண்டாவதோடு, தேகசௌக்கியமும், அதிக சுகப்பிராப்தியுமுண்டாம். 11-ஆமிடத் ததிபனும், இச்சுக்கிரனோடு கூடிநின்றால், முறையான புத்திர பாக் கியமும், அதிகமான சௌக்கியமும், யானை, குதிரை லாபமும்,

அரசாபிமானமும், லக்ஷ்மிகரம் பொருந்திய கிரகங்களுமுண்டாகுமென்று அறிவுமிருந்த சோதிடவல்லவர்கள் அறிவித்தனர் எ-று. 2

மறைவானவாறெட்டீராறிலிருந்தாலும்
வருநீசனுகவிருந்தால்மார்பிற்குத்துக்
குறையாகுஞ்சமரதனிலபஜெயமுண்டாகுங்
கொடுந்தீயாற்பயங்களத்திரகலகமிருங்கிரக
முறைபோந்துதென்றிசையிற்சஞ்சாரமுண்டா
முழுக்கட்டந்தானுதவும்புதன்சசியோடேதா
னிறைபலமாய்ச்சேர்ந்திருக்கிலரசரபிமானம்
நீங்காதுயிட்டசித்திகீர்த்திவரும்நிசமே.

(இ - ள்.) மறைவிடமான 6, 8, 12-ஆமிடங்களில் சுக்கிரனிருந்தாலும், நீசனுக இருந்தாலும், மார்பில் குத்தும், குறைவுபட்ட யுத்தத்தில் அபஜெய முண்டாம். அக்கினியால் பயமும், ஸ்திரீயால் கலகங்களும், கிரகம் பெயர்ந்து தென்திசையில் சஞ்சாரமும், முழுமையான கஷ்டங்களும் உண்டாக்குவன். புதன், சந்திரனும் பலமாய்ச் சுக்கிரனோடு சேர்ந்திருக்கில், அரசரால் அபிமானமும் நீங்காமல், நினைத்த காரியங் கைகூடுதலும், கீர்த்தியும் உண்டாம் எ - று. 3

மேவியதோரொன்பதுக்குமிலாபமதுதனக்கு
மிக்கதிபனுடன்கவிதான்கூடிடுவானுகிற்
பூவினிலேபிதுர்சவுக்கியந்திரவியம்பூலாபம்
பொருந்துமணத்துடன்புத்திரலாபமிகவுண்டாம்
பாவையரேரோகபரிகாரமதுவாகும்
பகர்கேந்திரதிரிகோணமூன்றுபதினென்றி
லாவலுடனடைந்தாலுமதிற்செய்யும்பலனை
அறையக்கேளமுதமெனப்பகருமொழிமயிலே.

(இ - ள்.) அமிர்தம்போன்ற இனிய வசனமும், மயிற்சாயலையுமுடையாய்! 9, 11-ஆமிடத்ததிபர்களோடு சுக்கிரன் கூடிநின்றால், பூமியின்கண் பிதா சௌக்கியமும், திரவியம், பூமி லாபமும், கல்யாணங்கூடுதலும், புத்திரலாபமும் உண்டாம். ரோக பரிகாரமான 1, 4, 7, 10-ஆமிடம் கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிடம் திரிகோணத்தும், 3, 11-ஆமிடங்களிலும் சுக்கிரனிருக்கில், அதன் பலன் சொல்வேன் கேட்பாயாக எ - று. 4

மயிலேகேள்கவிபுத்தியாதியிலேதானும்
வருமேபுண்ணியதீர்த்ததானமுடனதிகச்
செயலானதேவதாதெரிசனமுமுண்டாஞ்
செய்தானதர்மமுடன்றடாகப்ரதிட்டை
நயமானபூலாபம்வஸ்திரபூஷணமும்
லாபமுறுந்தளகர்த்தனுதவியினுற்க்ஷேமம்
புயமாதுபோலதிகவடிவுடையமாதே
பூதலத்திலிப்படியேபுகன்றிடுமுன்னூலே.

(இ - ள்.) லக்குமிபோன்ற அதிக வடிவமைந்த மாதே! சுக்கிரபுத்தி ஆரம்பத்தில் புண்யதீர்த்தங்களில் ஸ்நானமும், தேவதா தெரிசனைகளும், தானதர்மச் செயல்களும், தடாகப்பிரதிஷ்டையும் செய்வன். பூமிலாபமும், வஸ்திராபரணமும், தளகர்த்தர்களின் உதவியால் க்ஷேமமும் உண்டாகுமென்று ஆன்றோர்கள் முன்சொல்லிய நூல்களில் கூறப்படுகின்றது எ - று. 5

நூலோர்கள்சொன்னபடிசட்டாட்டவியத்தி
னேக்கரியரவியுடனேசேர்ந்திருப்பானுகில்
மேலேதானதிகதுக்கமரசராற்கடினம்
விலங்குவருங்கேந்திரத்தில்வியாதிபயமுண்டாம்
பாலர்களுநங்களத்திரமும்வெகுநாசமரசர்
பயமுடனேசோராக்கினிபயமிரண்டேழினுக்குச்
சீலமுடனிவனுதனுகிவிடில்ரோகஞ்
செய்வதற்குப்பரிகாரஞ்சிவபூசைதானே.

(இ - ள்.) சோதிடர்கள் சொல்லியபடி சுக்கிரன் 6, 8, 12-ஆமிடங்களில் சூரியனுடன் கூடியிருந்தால், மேலும் மேலும் துக்கமும் அரசர்களால் விலங்குபூணுதலும், நேத்திரங்களில் வியாதியுமுண்டாம். பாலர்களும், மனையாளும் நாசமாம். அரசர்களின் பயமும், திருடர், அக்கினியினுல் பயமும் உண்டாம். 2, 7-ஆமிடத்ததிபன் சுக்கிரனுகில், கொடுமையான ரோகமுண்டாம். இவை நீங்க பரிகாரம். சிவபூஜையைப் பக்தியுடன் செய்யப் பீடைநீங்கிச் சுகமடைவன் என்பதாம் எ - று. 6

ஆக விருத்தம் 154.

செவ்வாய்திசை சூரியபுத்தி

நேரானசேய்திசையிலாதித்தன்புத்தி
  நிகழ்மாதநாலுடனே நாளாறதாகுஞ்
சீரானசேயதனுக்கிரவியந்தர்க்கதனுய்
  திகழ்சொக்ஷேத்திரவுச்சகேந்த்ரமடைந்தாலுஞ்
சீராருமூலத்ரிகோணமடைந்தாலுந்
  தேகசவுக்கியமரசரபிமானங்கீர்த்தி
மாராததலையிடிநாற்காலிபந்துநாச
  மவன்வாரந்தனிலரசர்பேட்டிமிகவருமே.

(இ - ள்.) நேர்மையுள்ள செவ்வாய்திசையில் சூரியபுத்தி மீ 4, நாள் 6-க்கும் பலன்களைச் சொல்லக் கேட்பாயாக. செவ்வாய்க்கு சனி பிரியாமல் ஒன்றாயிருந்தாலும், பிரகாசிக்கின்ற உச்சம் ஆட்சி பெற்றிருந்தாலும், 1, 4, 7, 10-ஆமிடம் கேந்திரம் பெற்றாலும், 1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணம் பெற்றாலும், தேகசௌக்கியம், ராசாபிமானம், கீர்த்தியுண்டாம். நீங்காத தலையிடி, கன்று, காலி, பந்துக்கள் நாசமுண்டாம். அரச பேட்டி உண்டாம் எ - று. 1

புவிமீதிற்சட்டாட்டவியத்திினிலாதித்தன்
  பொருந்தாதபாவருடனீசருடன்கூடி
லவமானகிலேசமுடன்பந்துசனக்கலக
  மதிகமனஸ்தாபமுடனுதியினிற்கஷ்டம்
பவமான நடுவிலுமந்தியத்திலுமேயதிக
  பலக்கேடுபரதேசசஞ்சாரமுண்டாம்
நவில்போலுங்கணைபோலும்வேல்போலும்விழியாய்
  நாவினிலிப்படியுரைத்தார் நல்லறிஞர்தாமே.

(இ - ள்.) வாள், வேல், அம்புபோன்ற கண்களையுடையவளே! பூமியில் சூரியன் 6, 8, 12-ஆமிடத்தில் பாவர்களுடன் கூடியிருந்தாலும், நீசனோடு கூடியிருந்தாலும், அவமானம், கிலேசம், பந்துஜனங்களால் கலகம், அதிகமான மனஸ்தாபமும் உண்டாம். புத்தி ஆதியில் கஷ்டமும், நடுவிலும், அந்தியத்திலும் அதிகமான பலக்கேடும், பரதேச சஞ்சாரமுமுண்டாம் என்று சோதிடங்கற்றவறிஞர் உரைத்தார்கள் எ - று. 2

இப்படியேசட்டாட்டவியந்தனிலேபாவ
 ரீனமுறு நீசனுடனிவன்கூடுபவனே
லெப்படியுங்கிலேசமுறும்பந்துசனக்கலக
 மிசைபுத்தியாதியிலேயதிகஷ்டமுண்டாஞ்
சொற்படியேமத்திபமந்தியத்தினிலேகஷ்டந்
 தொலைந்துவிடும்பரதேசசஞ்சாரமுண்டாம்
மைப்படியுங்குழலாளேமூன்றுபத்துலாபம்
 வதிந்திருந்தாலதன்பலனைவகுத்துறைக்கக்கேளே.

(இ - ள்.) மேகம் போன்ற கூந்தலையுடையவளே! மேலும், 3, 6, 10, 11-ஆமிடங்களில் சூரியன்நின்றால், அதின் பலனைக் கேட்பாயாக. பாவர் நீசருடன் கூடிநின்றால், கிலேசம், பந்து ஜனக்கலகம், முன்னும் பின்னும் கஷ்டமுண்டாம். மத்திமிலும், அந்தியத்திலும் கஷ்டம் நீங்கிவிடும். பரதேச சஞ்சாரமுண்டாகும் எ - று. 3

வகுத்துரைக்கிற்றனதான்யம்வஸ்திராபரணம்
 வருமரசசன்மானமிகவுண்டாமற்றுந்
தொகுத்திடுகேந்திரகோணத்தானமதிலிருந்தாற்
 சொர்னலாபத்துடனேசுகமதிகத்திடமும்
மிகுத்துவருமரசரபிமானமிகவுண்டாம்
 விவசாயத்தாற்றன்யலாபமிகச்சேருஞ்
செகத்தினிலேசட்டாட்டவியத்தானத்திரவி
 சென்றாலும்பாவியுடன்கூடினுங்கேள்பலனே.

(இ - ள்.) சொல்லுமிடத்து தனம், தான்யம், வஸ்திரம், ஆபரணம் உண்டாம். அரசரால் சன்மானம் பெறுவன். திரிகோண கேந்திரங்களில் நின்றால், பொன், பொருள் இலாபமடைவதுடன் மிகுந்த சுகமும், திடகாத்திரமும், அரசர்களால் அபிமானமும் உண்டாம். விபசாயத்தால் தனதானியச் சேர்க்கையும் உண்டாமென்க. பூமியில் 6, 8, 12-ஆமிடத்தில் சூரியன் நின்றும், பாவிகளுடன் கூடினாலும், அதின் பலனைக் கேட்பாயாக எ - று. 4

கூடசதமனஸ்தாபமதிகபயமுடனே
 கொடிதான நீரிழிவுசரீரமதிற்பீடை

வாடாதவாசாரந்தனநாசமாகும்
வருங்கிரகம்பேர்ந்துவிடுவாக்கேழுக்கிவனே
ஈடாகுந்திசைநாதனுகிலதிசுரமு
மிசைந்ததலைவலிசர்ப்பபயமுமிகவுண்டாஞ்
சோடாருந்துணைமுலையாய்ப்பரிகாரமதற்குச்
சூரியனைநமஸ்காரம்பண்ணிவரிற்சுகமே.

(இ - ள்.) இணை சொல்லமுடியாத ஸ்தனங்களை யுடையவளே! பொருந்தக்கூடாத மனஸ்தாபங்களும், அதிக பயமும், கொடிய தன்மையான நீரிழிவு நோயும், தேகத்திற் பீடையும், ஆசாரந்தப்பி நடத்தலும், பொருட்சேதமும், கிரகம் பேர்தலும் உண்டாம். 2, 7-ஆமிடத்திற்கு இச்சூரியன் அதிகாரியாயின், அதிதீவிர சுரமும், தலைநோவும், சர்ப்பத்தால் பீடையும், பயமும் உண்டாம். இத் தோஷம் நீங்கச் சூரியநமஸ்காரம் செய்துவந்தால், சுகப்பிராப்தி யுண்டாம் என்று கூறினர் எ - று. 5

ஆக விருத்தம் 159.

செவ்வாய்திசை சந்திரபுத்தி

பண்ணியசேய்திசையதனில்மதிபுத்திமாதம்
பகர்ந்திடுமேழதுதனிலேபலனதுதான்சொலக்கேள்
நண்ணியதோர்சேய்தனக்குச்சசியந்தர்க்கதனுய்
நணுகிடினுமுச்சசொக்ஷேத்திரலாபம்பெறினும்
புண்ணியகேந்திரகோணந்தன்னையடைந்தாலும்
புகழ்சுபரால்நோக்கமுற்றுப்பெலவானுயிடினுந்
திண்ணமிகுமவன்புத்தியாதியிலேபுண்ணிய
தீர்த்தமுடன்றேவதாதெரிசனமுண்டாமே.

(இ - ள்.) உண்டாக்கப்பட்ட செவ்வாய்திசையில், சந்திரபுத்தி மாசம் 7-க்கும் பலன் கேட்பாயாக. செவ்வாய்க்குச் சந்திரன் பிரியாமலிருக்கினும், உச்சம் ஆட்சி பெற்றாலும், புண்ணியம்பெற்ற 1, 4, 7, 10-ஆமிடம் கேந்திரம் பெற்றாலும், 1, 5, 9-ஆமிடம் கேந்திரம் பெற்றாலும், 11-ஆமிடம் உள்ளிருந்தாலும், புகழப்பட்ட சுபக்கிரகங்களால் பார்க்கப்பெற்றாலும், பலம்பொருந்திய சந்திர

புத்தி ஆகிபாகத்தில் புண்ணியதீர்த்த ஸ்நானம்செய்வதும், தேவதா தெரிசனமுஞ் செய்வன் எ - று. 1

மேலாகுமரசராலதிகசம்பத்துண்டாம்
விவாகமுடன்புத்திரவுற்பத்திமிகவுண்டாஞ்
சேலாருந்தடாகமாலயப்பிரதிட்டைசெய்வன்
ஶ்ரீதேவிகிருபைமிகுஞ்செகராசர்சவுக்கியம்
பாலாருமொழிகளத்திரபுத்ரமித்ரசுகமாம்
பால்பழத்தோடனம்புசிப்பன்பார்த்திபர்களாலே
மாலாருங்கேடில்லைசுபலாபமுண்டு
வடிவாளைப்பழித்தவிழிமங்கையருக்கரசே.

(இ - ள்.) கூர்மைபெற்ற வாளாயுதத்தைப் பழித்த கண்களை யுடைய மங்கையர் திலகமே! பெருமையுற்ற அரசரால் அதிக சம்பத்துண்டாம். கல்யாண சுபசோபனங்களும், புத்திரோற்பத்தியு முண்டாம். செய்வதற்கறிதாகிய தடாகம், ஆலயப்பிரதிஷ்டை செய்வன். லக்ஷிமி கடாக்ஷமுண்டாம். அரசரால் சௌக்கியமும், களத்திரம், புத்திரர் சௌக்கியமுண்டாம். பால், பழத்துடன் புசிப்பனுவன். பார்மன்னராலே யாதொரு கேடுமில்லை. சுபத்தொழிலில் இலாபம் உண்டாம் எ - று. 2

மங்கையேவளர்மதியமாகிடிற்பல்நூல்கள்
வாசிப்பும்பூமிக்குமன்னவனுமாவான்
பொங்கமுள்ளவடதிசையிற்பிரயாணஞ்சென்று
பூமன்னர்பேட்டிதன்னிற்புகழுமிகவுண்டா
மிங்கிவன்ருனீசனுய்ச்சட்டாட்டவியத்தி
விசைந்திருந்தாற்பித்தனுய்த்தேகமுறுநாசம்
பங்கமுறும்பசுத்தான்யமரசர்சோராக்னி
பயமுமிகவுண்டெனவேபகர்ந்தனர்தேன்மொழியே.

(இ - ள்.) தேனினுமினிய மொழித்திருவே! மேலும் பூர்ண சந்திரனுயிருந்தால் பல சாஸ்திர ஆராய்ச்சியும், புவிக்கு அரசனுமாவான். பெருமையாக வடதிசையில் பிரயாணமுண்டுசெய்ய மன்னவர்களால் பேட்டியுண்டாம். அதினுல் மிகுந்த கீர்த்தியுண்டாம். இந்தச் சந்திரன் நீசனுகி 6, 8, 12-ஆமிடங்களில் இருந்தால்,

கோடிகொள்வன். தேக நாஸ்தியும் உண்டாம். தான்யம், தனம், பசுக்கள் நாசமடையும். அரசரால், திருடரால், அக்கினியால் பயமுண்டாம் எ - று. 3

தேனனையமொழிமாதேபவருடன்லாபத்திற்
சேருமதிபதியுடனேகூடிடுவானுகில்
ஞானமுறும்பொன்னவனுற்பார்க்கப்பட்டாலும்
நலமுடனேகூடிடினும்ராச்யமிகலாபம்
ஆனதொருசந்தனமுஞ்சுகந்தபுஷ்பலாபம்
ஆலயமுந்தடாகமுடன்பிரதிட்டையுடனே
தானமிகுபுண்யதருமங்களெல்லாஞ்சேருந்
தானரனூர்பூசைசெய்வன்ருரணியில்மாதே.

(இ - ள்.) சந்திரன் பாவனுயிருந்தாலும், அமரபக்ஷத்திய சந்திரனுபிருந்தாலும், 11-ஆமிடத்தில் இருந்தாலும், அவ்வதிபனுடன் கூடி 11-மிடத்தில் நின்றாலும், அறிவுள்ள குருவாற் பார்க்கப்பட்டாலும், நன்மையாய்க் கூடியிருந்தாலும், ராஜ்ஜியலாபமுண்டாம். சந்தனம், சுகவாசனையுடைய புஷ்பங்கள் லாபமாம். ஆலயம், தடாகம் பிரதிஷ்டைசெய்வன். தானத்தில் பெருமிதமான தருமங்கள் எல்லாம் ஒழுங்காய்ச்செய்வன். அங்கியிலும், சிவபூஜையும் பூமியில் செய்பவனுமாவன் எ - று. 4

தாரணியிலேயதிகேந்திரலாபத்தேனுந்
தருமிரண்டாமிடத்தேனுஞ்சார்ந்திருக்கிற்சவுக்யங்
காரணமாந்தானதன்மமிகலாபங்கல்வி
காவியங்கள்மிகப்பழகுஞ்சிவிகைவஸ்திராபரணம்
வாரணமுமிகலாபந்தளகர்த்தனுக
வருமெடுத்தகாரியமுமதிகசெயமாகும்
பூரணமாம்வித்தையதுபிதுர்சவுக்கியமாகும்
பூங்கொடிபோலிலங்குமிடைபொற்கொடிமின்னுளே.

(இ - ள்.) அழகிய கொடிபோன்ற இடையையும், பொற்கம்பி போன்ற மின்னல்சாயலையுமுடையாய்! சந்திரன் 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 2, 11 - ஆமிடத்திலும் சுபரோடு சேர்ந்து நிற்கில், சௌக்கியமும், தான தர்மங்கள் செய்தலும், மிகுந்த லாபமும், கல்வி,

காவியங்களில் மிகவும் பழக்கமும், பல்லக்கு, வஸ்திராபரணமும், யானை வரவும், தளகர்த்தனுமாகுவன். எடுத்தகாரியங்களை அதிக' செயமாக முடிப்பவனுமாவன். கற்றவித்தைகள் பூரணபலமடையும். பிதா சௌக்கியமுண்டாம் எ - று. 5

பொற்பில்லாச்சட்டாட்டவியந்தனிலேபாவி
பொருந்துசசியுடன்கூடிதேகசுகமுடனே
நற்புவிசேர்மன்னராற்கோபமுண்டாம்பயித்தியம்
நண்ணிடுமனோவியாதியாதிபுத்திதனிலே
யற்புதமாஞ்சோபனமத்தியிற்சவுக்யமுண்டா
மந்தியத்திலவமிருத்துபயம்பரிகாரந்தான்
விற்பொருதும்நுதலாளேஒருமையுளமனாய்
விநாயகர்க்குப்பூசைசெய்யமிகுசுபமுண்டாமே.

(இ - ள்.) வில்லைப்பழிக்கின்ற நுதலுடையவளே! அழகைத் தாராத, 6, 8, 12-ஆமிடங்களில், பாவிகளோடு சந்திரன் கூடியிருந்தால் சுகக்கெடுதியும், அரசரால் கோபமும், பயித்தியரோகமும் உண்டாம். மனக்கிலேசமும், நேத்திரரோகமும் உண்டாம். சந்திரபுத்தி ஆதியில், அற்புதமான சோபனங்களும், மத்தியில் சௌக்கியமும், அந்தியத்தில் அவமிருத்துபயமும் உண்டாம். இப்பயம் நீங்கப் பரிகாரம் விநாயகருக்குப் பூஜைசெய்ய, அவமிருத்துநீங்கி மிகுந்த சுபமுண்டாகும் எ-று. 6

ஆக விருத்தம் 165.

இராகுதிசைப் படலம்

சுகமானராகுதிசையாண்டுபதினெட்டிற்
சொற்பலன்கேளாயிதினிற்சர்வாங்கரோகஞ்
செகமீதுசித்தமதுபிரமைகொள்வன்றுக்கஞ்
சேந்திடுமேசத்துருவாற்பீடைமிகவுண்டாம்
அகமதினூற்பாவமதுசெய்திடுவன்மிடியு
மடைந்திடுவன்மூன்றுறுதசலாபத்தேனு
மிகுமேதானுச்சத்தில்ராகுவிருந்தாலும்
வியன்பலனைச்செப்பிடுவேன்மேன்மைபெறுமாதே.

(இ - ள்.) மேன்மைபெற்றமாதே! சுபத்தைக் கொடுக்கின்ற ராகுதிசை ௵ 18-லும், சொல்லுகின்ற பலன்களைக்கேட்பாயாக :– சர்வாங்கமும் ரோகமுண்டாம், பூமியில் சித்தப்பிரமைகொள்வன், துக்கம் உண்டாகும், சத்துருவால் பீடையுண்டாகும், மனத்தால் பாவச்செய்கையும், தரித்திரமடைதலும் உண்டாம். 3, 6, 10, 11-ஆமிடங்களில், உச்சத்தோடுகூடிய ராகுவிருந்தால், அதிகமான பலன் களைச் சொல்வேன் எ - று. 1

மாதேகேள திகசுபம்ராச்யமதுலாபம்
வளர்புத்ரகளத்ரமுடன்வஸ்திராபரணந்
தீதேதுமில்லாதவிவசாயமதனுற்
சேருமேநவதான்யலாபமிகவுண்டாங்
கோதாகுமுன்சொன்னதானங்கள்தவிரக்
கூறுமற்றத்தானமதினீசனுயிருக்கும்
போதேநான்கெட்டபலன்பயித்தியங்குன்மங்கள்
புகரிலாக்ஷயரோகம்பொருந்திடுமென்றுரையே.

(இ - ள்.) மாதே கேட்பாயாக! அதிக சுபகாரியங்களும் ராஜ்ய லாபமும், வளர்கின்ற புத்திரருடன் களத்திரமும், வஸ்திராபரண மும் லாபமாம். குற்றமற்றவிவசாயத்தால் நவதான்ய லாபங்களுண் டாம். மேல்சொல்லிய இடங்களைத்தவிர இந்த ராகு, மற்றத்தானத் தில் நீசமாயிருக்கும்போது, கஷ்டபலன்களும், பயித்தியம், குன்ம நோயும்|அடைவதுடன், அரிதாகிய க்ஷயரோகமும் உண்டாம் எ - று.

உரையாருந்திசையாதிதனிலரசர்பயமு
முறுதீயாற்சோரராற்பயமுமிகவுண்டா
நிரையாகுமத்தியினிற்றனலாபங்கடையில்
நித்தியமாய்ச்சவுக்கியமும்பெருகிவருமதனிற்
றடையாகுஞ்சுகங்களெல்லாம்நின்றேபோகும்
ருன்கடையில்விலங்குடனேயதிகபயரோகங்
குரையாததேகமதிற்பீடைமிகுந்தனமுங்
குறைந்துவிடுமென்றுலகிற்கூறினர்கற்றோரே.

(இ - ள்.) சொல்லுகின்ற ராகுதிசை, ஆதியில் அரசர் பயமும், அக்கினி, திருடர், பயமும் உண்டாம். மத்தியபாகத்தில் பொருள் லாபமும், கடைப்பாகத்தில் உறுதியான சௌக்கியமும் பெறுவ.

துடன், கடையிலும், கடைப்பாகத்தில் விலங்கு பூணுதலும் அதிக பயமுள்ள ரோகங்களும், தேகத்தில் விஷபீடையும், பொருள் நஷ்ட முண்டாகுமென்று உலகத்தில் கற்றோர்கள் சோதிடநூலில் கூறினர் எ - று. 3

ஆக விருத்தம் 168.

இராகுதிசை ராகுபுத்தி

உலகில்மிகுராகுதிசைதனிற்றனதுபுத்தி
யுறுமாதமுப்பத்தியிரண்டுடனுளீராற்
பெலமுடையோன்புத்திவரும்போதுநாற்காலி
பிரபலமாங்களத்ரமுடன்றனதான்யநாசம்
நலமில்லாச்சத்துருவினுற்பீடைபயமாம்
நாடியேவாதபித்தவயிற்றுவலியுடனே
சொலவரியபரதேசஞ்சஞ்சாரமுண்டாஞ்
சுயகிரகம்பேர்ந்துவிடுஞ்சுகமில்லைதானே.

(இ - ள்.) உலகத்தில் இராகுதிசையில் ராகுபுத்தி வரு 2, மீ 8, நாள் 12-ன் பலன்களைக் கூறுமிடத்து பலமான ராகுபுத்தி நடக்குங்காலத்தில், கன்று காலி பிரபலமாம். களத்திரம், பொருள், தான்யம், நாடங்காட்டும் நன்மையில்லாத சத்துருவாலும் பீடையாலும், பயமுண்டாம். வாத பித்தரோகமும் வயிற்றுவலியுமுண்டாம். சுயக்கிரகம் பெயர்ந்து அந்நியஇடம் சஞ்சாரஞ்செய்வன், சுகக்கெடுதியும் உண்டாம் எ - று. 1

தானுணகடகமதில்ராகுவிருந்தாலுந்
தனித்திடுமன்னியராசியடைந்திருந்தாலுந்தான்
காணுருமாடிமனைவஸ்திராபரணங்
காசினியில்விவசாயந்தனதான்யலாபம்
ஆனுலுமரசர்வெகுமானமதிகீர்த்தி
யதிகதளகர்த்தமுடன்புத்திரலாபமுமாந்
தேனுருமொழியாய்கேள்தாயாதிசத்துரு
செயசிவிகையுடன்குடக்குத்திசைபயணங்கூறே.

(இ - ள்.) தேனினைப்பழித்த சொல்லாய்! கடகவிராசியில், ராகுவிருந்தாலும், சந்திரனோடு கடகத்தில் தங்கினுலும், தென்ற

லோங்கும் மாடியுள்ள மனைகளும், வஸ்திராபரணங்களும், விபசாயங் தனதான்யம் இலாபமடைதலும், அரசரால் வெகுமானமும் அதிக கீர்த்தியும், தளகர்த்தராகுதலும், புத்திரலாபமும் உண்டாகும். தாயாதியாலும், சத்துருவாலும், கிழக்குத்திசைப் பயணமுண்டென் றும் கூறினர் எ - று. 2

கூறியமூன்ருறுபத்துப்பன்ஞென்றிலரச
குணமுண்டயசுபருடனேகூடினும்பார்த்தாலும்
வீறுசெறிசட்டாட்டவியத்திலிருந்தாலும்
வியனேழொன்பதுதனிலேமேலும்லக்கினத்திற்
றேறியதுரவியுடனேகூடியிருந்தாலுந்
திகழுமவன்புத்தியிலேகட்டபலனுடனே
நாறுமலர்ப்பூங்குழலாய்த்தனதான்யநாசம்
நற்கிரகம்பேர்தல்பிதுர்மாதுர்கட்டமுறுமே.

(இ - ள்.) வாசனைவீசுகின்ற பூமாலையணிந்த கூந்தலுடைய வளே! சொல்லுகின்ற 3, 6, 10, 11-ஆமிடங்களில், ராஜத்தன்மை பொருந்திய சுபக்கிரகங்களோடாவது அல்லது பார்வைபெற்றிருந் தாலும், கொடிதான 6, 8, 12-ஆமிடங்களிலிருந்தாலும், 7, 9-ஆ மிடங்களிலும், லக்கினத்திலும், சூரியனுடனே கூடியிருந்தாலும், இவ்விராகுபுத்தியில் கஷ்டமான பலன்களுடன்கூடியும் கிரகம் பெயர்தலும் பிதா, மாதா, கஷ்டமுமுண்டாம் எ - று. 3

கட்டமுறுமனவ்யாதிபுத்திரர்நாற்காலி
கனநாசம்பந்துசனஞ்சீவனுறுநாசம்
நட்டம்வருந்தலைவலிநோய்சுரம்விலங்குண்டாகும்
நாடியதோர்கருமவிக்னநாசமுறுந்தார
மிட்டமிகுகேந்த்ரதிரிகோணலாபத்தி
லிசைந்திடினுமுச்சசொக்ஷேத்திரமடைந்தாலுந்தான்
மட்டவிழ்பூங்குழல்மடவாமதன்பலனைத்தானே
வகைவகையாயுறைத்திடக்கேள் மான்விழிமின்னுளே.

(இ - ள்.) தேன் ஒழுகுகின்ற புஷ்பங்களைச்சூடிய கூந்தலையும், மானைநிகர்த்த விழிகளுமுள்ள அணங்கே! கஷ்டத்தால் மனவியாதி யும், புத்திரர், கன்று காலி சேதமும், பந்து இனங்கள் ஜீவனும், கஷ்டமடையும், மிகுந்த நஷ்டமுண்டாம்; தலைவலிநோயால் கஷ்ட

மும், சுரமும், விலங்குபூணுதலும் உண்டாம். காரியக்கெடுதலும், மனையாள் ரோகமுமுண்டாம். 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும், 11-ஆமிடத்தும், உச்சத்தோடு கூடிய ராகுவிருந்தால், அதின்பலன்களை வகையாக விரித்துரைப்பன் கேட்பாயாக எ - று. 4

மின்னிடையாயதிகசுகம்ராசமூலத்தால்
மிகுகிராமபூமிவரும்விளங்குமிட்டதெய்வம்
தன்னையுமேபிரார்த்தனைசெய்திடுவனிசைகிரகந்
தன்னிலேதிருவாழுந்தனித்தபுத்ரபீடை
பின்னுமேமாதுர்மதிநாசமுமுண்டாகும்
பேசுமிரண்டேழிலிருந்தாற்றூரநாசஞ்
சொன்னதொருபரிகாரந்துர்க்கைதனைப்போற்ற
துயர்தீர்ந்துசுகமுண்டாஞ்சொன்னபடிதானே.

(இ - ள்.) மின்போன்ற இடையுடையாளே! அதிக சுகமும், ராஜமூலத்தால் கிராமம், பூமி, வரத்தும், இஷ்டதேவதை பிரார்த்தனையும், கிரகத்தில் லக்ஷிமிகடாட்சமுண்டாகும். ஒப்பற்ற புத்திர பீடையும், தாயும் புத்திக்கேடும் உண்டாம். 2, 7-ஆமிடங்களில், ராகு இருந்தால், தாரதோஷமுண்டாம். இத்தோஷந்தீரப் பரிகாரங் கூரக்கேள்! துர்க்காதேவியைப்போற்ற துயரங்கள்நீங்கி சுகமுண்டாமென்று பெரியோர்கள் சொல்லியபடியே கூறுகின்றேன் எ - று. 5

ஆக விருத்தம் 173.

இராகுதிசை குருபுத்தி

தானமுறுமிராகுவினிற்குருபுத்திமாதந்
தானிருபத்தெட்டுடனிருபத்துநாலா
மானபலன்ராகுவுக்குக்குருவந்தர்க்கதனு
யாயிடினுங்கேந்திரகோணத்தையடைந்தாலும்
ஈனமில்லாலாபருச்சசொக்ஷேத்திரந்தன்னி
லிருந்துமூச்சாங்கிசஞ்சுபாங்கிசம்பெற்றாலுந்தான்
தேனையுமுப்பழத்தினையுமொன்றாகச்சேர்த்துத்
திரட்டியசேற்றினில்முளைத்தசெழுங்கரும்பன்னாளே.

(இ - ள்.) தேனையும் முப்பழத்தையும் ஒன்ருகச்சேர்த்துப் பிழிந்த சாற்றினில் முளைத்த கரும்பினும் இனியமொழியாய்! திசா பலனுடைய ராகுவில், வியாழபுத்தி வ௵ 2, மீ° 4, நாள் 24-ன் பலன் களைக் கேட்பாயாக:—ராகுவுக்கு குரு ஒன்ருய் ஒரு வீட்டிலிருந்தாலும், 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்து நின்ருலும், லாபாதிபதி உச்சம் ஆட்சியிலிருந்து அவர்களின் அங்கிசவீட்டிற் குருவிருந்தாலும் கேட்பாயாக எ - று. 1

பன்னகபரணனெடுமால்மறையோன்பூசை
பண்ணிடுவன்பட்டாபிஷேகமதுசேரும்
நன்னகரீகமிகுகீர்த்திசத்ருநாசம்
ராஜயோகம்ராசகிரகத்தில்வாச
மென்னளுஞ்சிவிகைவரும்பால்பாக்யமுண்டா
மிசைகுடக்குத்திசைநிருதிமூலையில்மன்னவரா
லன்னளிற்பிரயாணமதிற்கார்யங்கூடு
மரியபுண்யதீர்த்தமெல்லாமாடிடுவன்மாதே.

(இ - ள்.) சிவன், விஷ்ணு, பிரம்மா இவர்களைப்பூசிப்பன். பட்டாபிஷேகமுண்டாம். நல்ல நாகரிகமான கீர்த்தியும், சத்துரு நாசமும் உண்டாம். ராஜயோகமும், ராஜமனையில் வாசமும், பால், பல்லக்குயோகமும், பாக்கியமுண்டாம். கீழ்திசையில், நிருதிதிசையில், இராஜகாரியமான பிரயாணங்கூடுதலும், அதினல் காரியசித்தியடைதலும், புண்ணிய தீர்த்தங்களெல்லாம் நீராடுவன் என்பதாம் எ - று. 2

புண்ணியவானிவன்றனக்குவெகுகிராமலாபம்
போசனங்கள்சவுக்கியமாம்புகழுமிகவுண்டா
மெண்ணமிகுகுருவஸ்தமனஞ்சத்ருவீட்டி
லிருந்தாலுஞ்சட்டாட்டவியத்திலிருந்தாலுந்
தண்ணியகோள்கூடுகினுமவனேக்குற்ருலுஞ்
சதாவேளைபாவத்தில்மனமிகவேசெல்லும்
நண்ணியதோர்தனதான்யபுத்ரகளத்திரமும்
நாசமுறுராசகாரியநாசமாமே.

(இ - ள்.) புண்ணியவானவன், பூமி, கிராமங்கள் இலாபமும், போஜன சௌக்கியமும் புகழும் உண்டாம். யோசனைமிகுந்த வியா

மூன் அஸ்தமனத்திலும், சத்துருவீட்டில் இருந்தாலும், 6, 8, 12-ல் இருந்தாலும், பாவக்கிரகங்கள் கூடிநின்றாலும், பார்த்தாலும், எப்போதும் பாவசிந்தனைபெறுவன், தன்னையடைந்தபொருளும் புத்திர களத்திரங்களும், நாசமுண்டாம் எடுத்தகாரியங்களும் நாசமடையும் எ - று. 3

நாசமுறுங்கிரகமதில்மார்பினிலேநோயாம்
நலமில்லாமனநோயிதானுமிகவுண்டு
வாசமதாய்க்கேந்திரகோணத்திலிருந்தாலும்
வாக்கினிலும்பதினொன்றிலேனும்வதிந்தாலும்
பேசரியகிரகக்ஷேத்திரம்வஸ்திராபரணம்
பெற்றிடுவனல்லபோசனம்புசிப்புண்டாகும்
மாசிலாத்தேகவாரோக்யபுத்ரகளத்ர
வர்த்தனையோடேசிவிகைவந்திடும்பெண்ணரசே.

(இ - ள்.) பெண்கள் நாயகமே! இரகநாசமும் உண்டாம், மார்பினில் நோயும், மனதில் தீராத சஞ்சலங்களும் உண்டாம். 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும், 2, 11-ஆமிடங்களிலேனும் குருவிருந்தால் பெரிய கிரகங்களும், க்ஷேத்திரங்களும், வஸ்திராபரணங்களும் பெற்றிடுவன். நல்லபோஜனப் பொசிப்புண்டாம். குற்றமில்லாத தேகாரோக்கியங்களும், புத்திரகளத்திர விருத்தியுடனே பல்லக்குமுண்டாம் என்று அறிவாய் எ - று. 4

வந்திடுமேசிறிதிடத்திற்சவுக்கியமாமதிலே
வருங்கடையிற்றிரவியநாசமும்ராசகோபந்
தந்திடுஞ்சட்டாட்டவியந்தன்னிலேபாவி
தன்னுடனேகூடிநிற்கிற்றனநாசமுண்டாம்
முந்திவருமரசரால்வெகுகலகஞ்சத்ரு
முழுவிரோதம்மிகுந்தவிடஞ்சேத்ரநாசந்
தொந்தமுறுங்குளிர்காச்சல்முன்பாதிதனிலே
சுகமுண்டாம்பிற்பாதித்தூயமொழித்திருவே.

(இ - ள்.) மதர்த்தெழுந்து விம்மிப்புடைத்து வளர்ந்த தனங்களையுடைய திருவே! சிறிதுகாலம் சௌக்கியமுண்டாம். கடைசியில் திரவிய நஷ்டமும், ராஜாக்களால் கோபமும் உண்டாம். 6, 8, 12-ஆமிடங்களில் பாவியோடுகூடி வியாழன் நின்றால், தன ஆனியும், அரச

ரால் கலகமும், சத்துருவால் பீடையும், பெரியகிரகங்கள் மாறுதலும், முற்பாதியில் குளிர்காய்ச்சலுண்டாம்; பிற்பாதியில் சுகமுண்டாகும் எ - று. 5

திருவேகேள்சுபனுடனேகுருகூடுமாகிற்
றினலாபமுச்சசொக்ஷேத்திரத்திலிருந்தாக்காற்
குருபூசைசிவபூசைமேலோர்கள்நேசங்
கூறுசகோதரசுகமுங்கூடும்வஸ்திராபரணம்
நரவாகனங்கிடைக்குந்தளகர்த்தனாவன்
நற்புத்தியாதியிற்புண்ணியதீர்த்தஸ்நானம்
வருமேபிற்பாதியிலேதனச்செலவுண்டாகு [சே.
மதத்தெழுந்துபுடைத்துவிம்மி வளர்தனப்பெண்ணர

(இ - ள்.) இலக்ஷுமியே கேட்பாயாக. சுபக்கிரகத்தோடு குரு கூடியிருந்தாலும், 2, 11-ஆமிடங்களில் உச்சம் ஆக்ஷியில் இருந்தாலும், குருபூஜையும், சிவபூஜையும் செய்வதுடன் மேலோர்கள் நேசமும் உண்டாம். சகோதரருண்டாம். வஸ்திராபரணத்தோடு பல்லக்குமுண்டாம். தளகர்த்தனாகுவன். இந்தப் புத்தி ஆதியில் தீர்த்தஸ்நானமும், பிற்பாதியில் தனச்செலவும் உண்டாம் எ - று. 6

அரசனிரண்டேழினுக்குநாதனாயிருந்தா
லதிகதலையிடிகாச்சலதுசேருமதற்குப்
பரிகாரமொருமனதாயீசனுக்குப்பூசை
பண்ணிவிடத்தோஷம்போம்பால்பாக்கியத்துடனே
வருமேபின்னதிகசவுக்கியமிகவுண்டாகி
வளர்ந்திடுவனிளந்தளிரைவாட்டிடுமென்பதஞ்சேர்
திருவேநல்லிளமயிலேகணிதமதாராய்ந்தோர்
செப்பினர்களிப்படியேசெகதலத்தின்மீதே.

(இ - ள்.) இளந்தளிரையும் வாட்டக்கூடிய மிருதுவான பாதங்களும், இளமைபெற்ற மயில் சாயலையுடைய திருவே! வியாழன் 2, 7-ஆமிடங்களுக்கு அதிகாரியாயிருந்தால், அதிகமான தலையிடி, காச்சல் உண்டாகும். அதற்குப் பரிகாரஞ் செய்யவென்றால், ஏகாக்ர சித்தத்தோடு சிவபூஜை செய்ய சகல தோஷமும் நீங்கி பால் பாக்கியத்துடன் வாழ்வுபெற்று, பின்னால் அதிக சௌக்கியமுண்டாகி

வாழ்வுபெறுவன் என்று பூமியில் சோதிடநூலாராய்ந்த பெரியோர்கள் தெரியச் செய்தனர் எ - று. 7

ஆக விருத்தம் 180.

இராகுதிசை சனிபுத்தி

தலத்திலேராகுதிசைகாரிபுத்திமாதந்
தான்முப்பானுலுடனேநாளாறுதன்னில்
நலத்திலோராகுவுக்குக்காரியந்தர்க்கதனுய்
நண்ணிடினுங்கோணகேந்திரசொட்சேத்திரத்தில்
பலத்தமிகுமூலத்ரிகோணத்திலேனும்
பதிந்திடில்மூன்ருறுபத்துப்பதிெனுன்றிலேனும்
பெலத்திருக்கிற்காரிகொடுத்திடும்பலனையிதமாய்ப்
பேசிடக்கேளமுர்தரசம்பிரளுமொழித்திருவே.

(இ - ள்.) அமிர்தத்தின் சுவையும் கைக்கும்படியான வசனமுள்ள திருவே! கேட்பாயாக. பூமியில் ராகு திசையில், சனிபுத்தி வூ 2, மாசம் 10, நாள் 6-க்கும் பலன்கள். நலமான ராகுவுக்கு சனி பிரியாதவனுய்க் கூடிநின்ருலும், 1, 4, 7, 10-ஆமிடம் கேந்திரத்திலும், 1, 5, 9-ஆமிடம் கேந்திரத்தும், சொற்சேத்திரத்தும், பலமான மூலத்திரிகோணத்து நின்ருலும், 3, 6, 10, 11-ஆமிடங்களில் சனி பலத்திருக்கினும், இதமான பலன்களைக் கொடுத்திடும் கேட்பாய் எ - று. 1

திருவாழும்ராச்யமிகச்சேர்ந்திடுமேசிவிகை
சேரும்விவாகஞ்சேருமதிகசுகஞ்சேருந்
தருமாதிபுண்ணியங்கள்தான்வந்துசேரும்
தானேபூந்தோட்டமுடன்விபசாயஞ்சேரும்
வருங்கூபந்தடாகப்ரதிஷ்டையதுசேரும்
மன்னராற்புவிசேரும்மன்னவராலிலாபம்
பொருவேலவடிவாளைமதன்பாணமதனை [ரே.
பொருதுவென்றகடைவிழியாய்புகன்றனர்முன்னோ

(இ - ள்.) போர் செய்கின்ற வேலையும், கூர்மைபெற்ற வாளையும், மன்மதன் பாணத்தைத் தோற்கடித்த கடைக்கண்களுடைய

பெண்ணே! லக்ஷிமிகரம் பொருந்திய ராச்சியமும், சிவிகை, விவாகஞ்சேர்தலும், அதிகசுகம், தர்மமுதலான புண்ணியங்கள் உண்டாதலும், அழகிய பூந்தோப்பும், விபசாயச் சேர்க்கையும், கூபம், தடாகப் பிரதிஷ்டையும், மன்னவரால் பூமி, பொருள் சேர்க்கையும் உண்டாமென்று சாஸ்திரங்கற்ற முன்னோர் சொல்லினர் எ - று. 2

முன்னனசுபக்ரகத்தொடுங்காரிகூடில்
  முதியலக்கினதிபதியுடன்கூடிலேனுஞ்
சொன்னலாமிட்த்துடையோனுடன்கூடிலேனுந்
  தோய்ந்தஇலக்கனம்பத்தோனுடன்கூடிலேனும்
நன்னகரீகமொடுகளத்ரபுத்ரவர்த்தனே
  நற்புத்திசாதியிலேகள்ளர்சர்ப்பபயமும்
மின்னருமாயுதத்தால்வெகுபயமுமுண்டாம்
  வெற்பினையும்பொருதுசெயமேவுமுலேமயிலே.

(இ - ள்.) பொருப்பை வென்று ஜெயமடைந்த ஸ்தனங்களேயுடைய மயில் சாயலுடையாய்! சுபக்கிரக வக்ரத்தோடு சனிகூடியிருந்தாலும், 4-ஆமிடத்தோனுடன் சனி கூடினலும், இலக்கினதிபனும், 10-ஆமிடத்ததிபனுடனும் சனி கூடினலும், நல்ல நாகரீகமான களத்திர விருத்தியும், புத்திர விருத்தியும் உண்டாம். புத்தியின் ஆதியில் கள்ளர், சர்ப்ப பயமும், ஆயுதத்தால் பயமும் உண்டாம் எ - று. 3

மேவியதோரபகாரக்கடையினிலேதனந்தான்
  மிகலாபமதிகசவுக்கியமிகவுண்டாகும்
நாவலர்கள்சொலுஞ்சுக்லபட்சத்துச்சசிபோல்
  நாளுக்குநாளதிகமாநிதியஞ்சேரும்
ஆவலருஞ்சப்ரமஞ்சமதுசேரும்பின்னே
  அதிகசுகமரசசன்மானங்களுடன்பூமி
கோவரசர்பேட்டிவஸ்த்ராபரணமிகலாபம்
  கொடுக்குமெனக்கற்றுணர்ந்தோர்கூறினதிப்படியே.

(இ - ள்.) சனிபுத்தி கடைசியில் தனலாபம், அதிக சௌக்கியமும் உண்டாவதோடு, வித்துவான்களால் விரித்துச்சொல்லப்பட்ட சுக்கிலபட்சத்திய சந்திரன்போல் நாளுக்குநாளாய் அதிக திரவியச் சேர்க்கையும், சப்ரமஞ்சமுஞ் சேரும். பின்னும், அதிக

சுகமும், அரசரால் சன்மானங்களும், பூமி சேர்க்கையும், ராஜ பேட்டியும், வஸ்திராபரண லாபமும் கொடுப்பன் என்று கற்ற சோதிடர்கள் கூறினர் எ - று. 4

படிமீதிற்பெண்பிறக்கும்விபசாயத்தாலே
பலதான்யலாபமுறும்ராசகாரியத்தில்
வடிவாகுமேற்றிசையிற்பிரயாணமாகும்
வந்தபின்புராசசன்மானத்துடனேகிராமம்
நெடிதானபூமிமிகலாபமுமுண்டாகும்
நீங்காதகளத்திரமுடன்புத்திரருமுண்டாம்
துடியாகுமிடைமயிலேகெணிதமாராய்ந்தோர்
சொன்னபலன்சமுசெயம்வராதெனச்சொல்வாயே.

(இ - ள்.) துடிபோன்ற இடையையுடையாய்! பெண், புத்திரர் பிறத்தலும், விபசாயத்தால் பல நவதான்யங்கள் லாபமுண்டாம். ராஜகாரியத்தில் மேற்றிசையில் பிரயாணமுண்டாம். பின்பு, ராஜ சன்மானமும், கிராமம், பூமி லாபமுண்டாம் என்று சோதிடகணித மாராய்ந்த பெரியோர் சந்தேகமறச் சாற்றினர் எ - று. 5

சொல்லியதோர் நீசக்ஷேத்திரத்திலிருந்தாலுந்
தோன்றியவர்சட்டாட்டவியத்திலிருந்தாலும்
வல்லதொருசட்டாட்டவியத்திலிருந்தாலும்
வாக்குத்தானந்தனிலேபதிந்திருந்தானேனும்
நல்லதொருமன்னவராற்சோரராற்றீயால்
நடுங்குபயம்புத்ரகளத்திரநாசமாகு
மெல்லவருந்தலையிடியுஞ்சுரத்துடனேக்ஷயமு
மிகுந்தேசாந்தரகெமனமுண்டாமென்றுரையே.

(இ - ள்.) சொல்லுகின்ற நீசஸ்தானங்களிலும், 6, 8, 12-ஆமிடங்களில் சனிநின்று, அவ்வீட்டதிபர்கள் சனிக்கு 6, 8, 12-ஆமிடங்களில் இருந்தாலும், அல்லது 2-ஆமிடத்திலிருந்தாலும், அரசரால், கள்ளரால், தீயால், நடுக்கமான பயமும், புத்திர களத்திர நாசமுண்டாம். சுரமும், தலையிடியும், க்ஷயம் முதலான நோய்களுண்டாம். தேசாந்தரம் செல்ல மனமுண்டாமென்று சொல்லக்கடவாய் எ - று. 6

உரைத்தவிடம்பந்துசன நாசமுமேயாகு
முற்றிடுநாற்காலியினுற்சீவனுக்குநாசந்
தரைத்தலத்தையாளுமன்னர்வெகுகோபஞ்செய்வர்
சார்கோணகேந்திரத்திற்சனியிருந்தானேனும்
நிரைத்தமூன்றொன்பான்பன்னொன்றிலேதானும்
நீங்காதபாவியுடன்கூடியிருந்தாலும்
வரைக்கிணையாய்புடைத்தெழுந்துவளர்ந்ததனமயிலே
வரும்பலனைவகைவகையாய்வகுத்துரைசெய்வோமே.

(இ - ள்.) மலைக்கிணையாயெழுந்து விம்மி வளர்ந்த தனங்களை யுடைய மயிலே! தான் சொன்ன சொல்லும், பந்து ஜனங்களும் நாசமுண்டாம். மிருகத்தால் ஜீவனுக்குப் பயமும், ராஜகோபமும் உண்டாம். பொருந்திய 1, 4, 7, 10-ஆமிடம் கேந்திரத்தில் சனி யிருந்தாலும், 3, 9, 11-ஆமிடங்களில் சனி பாவியுடன் கூடியிருந் தாலும் அதனால் வரும் பலன்களை வரிசையாய்ச் சொல்வோம் கேட் பாயாக எ - று. 7

செய்யதொருகளத்ரபுத்ர நாசமிகவுண்டாந்
திகழ்புத்தியாதியிலேயதிகசவுக்கியமாம்
வையகத்தையாளுமன்னரபிமானமந்த்யம்
வரும்நடுவிற்சுபாசுபங்கள்வகுத்திடுமந்தியத்திற்
றுய்யதொருமன்னவரால்வெகுகோபமுண்டாஞ்
சொற்கிரகம்போர்ந்துவிடுமனவ்யாதியாகும்
பையரவின்மணிமுடியைப்பழித்தவல்குற்றிருவே
பராசரமாமுனியுறைத்தபலனுமிதுவாமே.

(இ - ள்.) பையையுடைய சர்ப்பத்தின் முடியைப்பழித்த அல் குலையுடைய திருவே! செவ்விதாகிய களத்திரம், புத்திரர் நாசமுண் டாம். அரசரால் அபிமானமுண்டாம். நடுவில் சுபமும், அசுபமும் கலந்த பலன் கொடுப்பன். கடைசியில் பரிசுத்தமான அரசர்களால் கோபமும், கிரகம்போர்தலும், மனவியாதியுமுண்டாம் என்று பராசர முனிவர் பகர்ந்தனர் எ - று. 8

இனிதானவிப்சாயத்தாற்றுன்யநாச
மெதிர்த்துவரும்பயித்யமதில்மரணமிகவுண்டாம்

அணியாயமபகீர்த்தியான துக்கம்பந்து
அடுத்தடுத்துநாசமுறுமாறீராறெட்டில்
வணிதாய்கேள்பாவியுடனேகூடுவானேல்
மார்பிலுறுரோகமுடனவமானஞ்சேரு
மனராலுங்களராலுமக்கினியாலுந்தான்
வரும்பயமுமேகசயங்குன்மமுமுண்டாமே.

(இ - ள்.) இனிமையான விபசாயத்தால், 'நவதானிய நாசங்களும், விடாமல் வரும் பயித்தியத்தால் மரணபத்துண்டாம். அநியாயமான அபகீர்த்தியும், துக்கங்களும், பந்துக்கள் நாசமும் உண்டாம். 6, 8, 12-ஆமிடங்களில் பாவிகளுடன் சேர்ந்த சனியாகில், மார்பில் ரோயும், அவமானமும், மன்னர், கள்ளர், அக்கினி இவை முதலான பயமும், மேகம், க்ஷயம், குன்மம், ரணம் முதலிய வியாதிகளுமுண்டாம் எ - று. 9

உண்டாகும்வயிற்றுவலிசிரரோகமுடனே
யொருவேளையகாலமதிற்கெட்டபோசனமா
மண்டாதகோபமுறுமரசருடன்சேர்வா
னதிகநோய்பந்துபகையாகிவிடுமப்பால்
ரெண்டேழுக்கிவனுதனுகிடில்மந்தியத்தில்
நீங்காதகுளிர்காச்சல்குன்மம்வருமதற்கு
வண்டாருங்குழல்மடவாய்பரிகாரமதுதான்
மகேசுரனைப்பூசைசெய்யமாறிவிடுந்தானே.

(இ - ள்.) வண்டுமொய்த்த கூந்தலையுடைய மடவாய்! வயிற்றுநோய், சிரசில் ரோகம், அகாலத்தில் ஒருவேளை ஆகாரமும், அதுவும் ரம்மியமில்லாமலும் கிடைக்குமாம். அதிக கோபமுண்டாகும். அரசனுடன் பகையும், அதிகமான ரோகங்களும், பந்துக்கள் பகையுமுண்டாம். 2, 7-ஆமிடங்களுக்குச் சனி அதிபதியாகில் கடைசிப் பாகத்தில் சனி, நீங்காத குளிர்காய்ச்சலும், குன்ம வியாதியும் உண்டாக்கும். இதற்கு மகேசுரபூஜை செய்ய பரிகாரமாகி, மேல்கண்ட சங்கடங்கள் மாறி குணமுண்டாம் எ - று. 10

ஆக விருத்தம் 190.

இராகுதிசை புதன்புத்தி

தானானராகுதிசையதுதனிலேபுந்தி
　தனித்தபுத்திமாதமுப்பானுள்பதினெட்டந்த
கோனானராகுவுக்குப்புதனந்தர்க்கதனைக்
　கூறுமுச்சசொக்ஷேத்திரம்பாக்கியத்தானத்தில்
மானேகேள்திரிகோணம்வாக்குலாபத்தில்
　வந்திடினும்பார்த்தாலுமதிலாபமாகு
மானாலுந்தனதானியநாற்காலிலாப
　மவன்றனக்குக்கலியாணமாகுமடமயிலே.

(இ - ள்.) தானாகின்ற ராகு திசையில் புதன்புத்தி வருஷ 2, மாதம் 6, நாள் 18-ல், ராகுவுக்கு புதன் மித்திரனைக் கூடியிருந்தாலும், சொல்லுகின்ற உச்சம், ஆட்சி 1, 4, 7, 10-ஆமிடம் கேந்திரம், 1, 5, 9-ஆமிடம் திரிகோணம், 2, 11-ஆமிடங்களில் புதன் இருந்தாலும், அதிக லாபமுண்டாம். பொருள், தானியம், கன்று காலி லாபங்களும், கல்யாணமுமுண்டாம் எ - று. 1

ஆகுமேதனதான்யமதிகசவுக்கியமு
　மானநல்லபோசனமுங்களபமுதற்புஷ்பம்
வாகுபெறுமலங்காரங்கட்டிலிலேசயன
　மாதர்களைக்கலவிசெய்வன்வளர்சுபனோடேதான்
யோகமுறக்கூடிடினுஞ்சுபனூர்பார்த்தாலு
　முறுபுதல்வர்களத்திரலாபம்மதிகவித்தை
தோகையேகட்டிடமும்புண்யதர்மலாபந்
　தொகுத்ததேசாதிபத்யஞ்சிவிகையுந்தான்வருமே.

(இ - ள்.) தனதான்யங்கள் உண்டாம். அதிக சௌக்கியஞ் சேரும். நல்ல போஜனாதிகளும், களப புஷ்பங்களும், அழகு செய்யக்கூடிய ஆபரணங்களும், சப்ரம்ஞ்ச சயனமும், மாதர் போகங்களும் துய்ப்பவனாவன். சுபக்கிரகங்களோடு புதன் கலந்து இருந்தாலும், அல்லது சுபர்களால் பார்வைபெற்றாலும், புத்திர களத்திர லாபமும், அதிகாரத்தையும், கட்டிடமுண்டாதலும், புண்ணிய தர்மங்கள் லாபமும், தேசாதிபத்தியங்களும், பல்லக்குமுண்டாம் எ - று. 2

மேதினியிற்சட்டாட்டவியத்திலிருந்தாலும்
விளங்குபுந்திசூரியனாற்பார்க்கப்பட்டாலு
மோதரியகளத்திரத்தாற்கலகமாரகத்தோ
டுற்றதனச்செலவுபந்துவுபகாரஞ்செய்வார்
தீதிலாக்கோணகேந்திரலாபத்தானஞ்
சேர்ந்தாலும்நல்லபோசனமதிகசவுக்யம்
பூதலத்தில்விபசாயந்தனதான்யலாபம்
பொருந்தவாகனமும்வரும்பூவையருக்கரசே.

(இ-ள்.) பெண்கள் நாயகமே! பூமியில் புதன் 6, 8, 12-ஆமிடங்களில்நின்றாலும், சூரியனால் பார்க்கப்பட்டாலும், சொல்லுதற்கரிதான களத்திரத்தால் கலகமும், மாரகமும்பொருந்தி தனச்செலவும், பந்துக்களால் அற்ப உபகாரங்களும் உண்டாம். குற்றமில்லாத 1, 4, 7, 10-ஆமிடம் கேந்திரம், 1, 5, 9-ஆமிடம் திரிகோணம், 11-ஆமிடத்தில் சூரியனோடு புதன் கூடிநின்றால், நல்ல போஜனம், அதிக சௌக்கியம், பூமி, விவசாயம், தனதான்ய லாபம், பொருத்தமான வாகனங்களும் உண்டாம் எ - று. 3

பூமியிலேதடாகமுடனாலயப்பிரதிட்டை
பொருந்தியிடுங்கிராமமுடன்பூமிமிகலாபந்
தாமதமாஞ்சட்டாட்டவியத்திலிருந்தாக்காற்
சண்டைவரும்விலங்குவருந்தனையர்குருநாச
மாமிரண்டேழுக்குடையோனாகியவனிருந்தா
வருமிருத்துதோஷமுண்டாமதிற்பரிகாரங்கேள்
நேமமுடன்சிவபூசைசெய்ததோஷமகன்று
நீங்காதசுகமென்றுநிகழ்த்தினர்கற்றோரே.

(இ-ள்.) தடாகம், ஆலயப் பிரதிஷ்டைகளும், கிராம பூமி வரத்தும் அதிகமுண்டாம். 6, 8, 12-ஆமிடங்களில் புதன் நின்றால், கலகங்களுண்டாம். விலங்கு பூணுதலும், புத்திரர், குருக்களும் நாசமடைவர். 2, 7-ஆமிடங்களுக்கு புதன் அதிபதியாயிருந்தால், அவமிருத்து தோஷங்களுண்டாம். இதற்குப் பரிகாரம், அரிபூஜை, சிவபூஜை செய்ய தோஷம் நீங்கி, சுகப்பிராப்தியாகுமென்று சோதிஷ வல்லவர்கள் சொல்லினர் எ - று. 4

ஆக விருத்தம் 194.

இராகுதிசை கேதுபுத்தி

தினகரன்றன்பகைத்திசையிற்கேதுபுத்தியதுதான்
சேர்ந்திடுமேயோராண்டுநாள்பதினெட்டதிலே
பனகமதற்கந்தர்க்கதனுக்கேதுற்றாலும்
பயித்தியமுமரசர்பயந்தலைவலியுஞ்சுரமும்
மனநடுங்குங்குளிர்காச்சல்நேத்ரவியாதியுந்தான்
வருந்தாரம்புத்திரர்கள்நாசமிகக்காட்டுஞ்
சொன்னதொருநாற்காலிகட்குசீவனுக்குமோசஞ்
சொல்லிடக்கேள்பராசரர்முன்சொன்னமொழிப்படியே.

(இ - ள்.) சூரியன் பகையாகிய இராகுதிசையில், கேதுபுத்தி, துலங்குகின்ற 1 - வரு, நாள் 18-க்கும் பலன்கேட்பாயாக:-ராகுவோடு, கேது இருந்த வீட்டதிபன் சேர்ந்தாலும், பயித்தியரோகம், அரசரால்பயம், தலைவலி, சுரநோய் உண்டாவதோடு மனதை நடுக்கும்படியான குளிர்காய்ச்சலும், நேத்திரவியாதியும் உண்டாம். தாரம், புத்திரர் நாசமுண்டாம். ஆடு, மாடு, கன்றுகள் சேதமும் உண்டாகுமென்று பராசரமகாமுனிவர் பகருகின்றார் எ - று. 1

சொன்னதொருவாகனத்தானத்துடையோனுடனே
சொற்கேதுசேர்ந்தாக்காற்சிவிகையதுசேரும்
நன்னயமாய்ச்சுபக்கிரகத்துடன்கூடினாலும்
நட்டமுறுஞ்சுபராலேபார்க்கப்பட்டிடிலோ
மன்னவர்சன்மானமுடனதிகசவுக்கியமாய்
வருமதிகசுபம்புத்திரலாபமுந்தான்கொடுக்குங்
கன்னலின்பாலுடன்றேனைக்கலந்ததுபோல்ருசித்துக்
கழியுமொழிமடமயிலேகருதினர்கற்றோரே.

(இ - ள்) கரும்புரசத்துடன் பாலையுந் தேனையுங் கலந்தது போல, ருசி கனிந்த வசனமும், மயில்சாயலையுமுடையாய்! 4-ஆமிடத்ததிபதியுடன் கேதுசேர்ந்தால் பல்லக்குண்டாம். நல்ல நயமான சுபக்கிரகத்தோடு கேது கூடியிருந்தாலும், அல்லது அந்தச் சுபரால் கேதுவைப்பார்க்கப்பட்டாலும், அரசசன்மானங்களும் அதிகமான சௌக்கியங்களும், சுபகாரியங்களும் புத்திரலாபமும் உண்டாம் என்று கற்றவர் சோதிடநூலில் சொல்லுகின்றனர் எ - று. 2

கருதரியசட்டாட்டவியந்தனிலேகேது
கலந்திருந்தாற்சுயமானங்காணலாமிரண்டில்
வருகேதுவிருந்தாக்கால்விஷபீடைமூன்றில்
வந்திருந்தாற்கந்தையுடுத்துவனென்பானுகி
லரியபிதுர்நாசம்வருநாலிருப்பானுகி
லவன்மாதுர்நாசமுறுமாறுபத்துமூன்றில்
பிரியமுடனிருப்பானேலதிகசவுக்கியமும்
பெருத்ததனலாபமுந்தான்பெற்றிருப்பன்மாதே.

(இ - ள்.) மாதேகேள்! நினைத்தற்கரிதான 6, 8, 12-ஆமிடங்களில் கேது மேற்சொன்ன சுபர்களுடன் கூடியிருந்தாலும் அவமானமுண்டாம். 2-ஆமிடம் கேதுவிருந்தால் விஷபீடையாம். 3-ல் கேதுவிருந்தால் கந்தைத்துணிகட்டுவன். 9-ஆமிடம் நின்றால் பிதுர் நாசமாம். 4-ஆமிடத்திலிருந்தால் மாதுர்நாசம். 3, 6, 10-ஆமிடங்கள் கேதுவிருந்தால் அதிக சௌக்கியமும் பெரிதான தனலாபமும் பெறுவன் எ - று. 3

பெற்றிருக்குமுச்சமுற்றாலிராச்யதனதான்யம்
பெரியநரவாகனமும்பெறுவன்பாலனமும்
உற்றிடுபோசனமுண்டாங்கேந்திரகோணத்தி
லுற்றாலுமூன்றினிலேயுறைந்திருந்தாலுந்தான்
குற்றமில்லாச்சுபாசுபமும்விபசாயங்காலங்
கூடிவருமந்தியத்திற்கஷ்டபலன்கொடுக்கும்
நற்றமிழோருரைத்தபடிசட்டாட்டவியத்தில்
நவில்பாவியுடனிவன்றான்கூடிடிற்கேள்பலனே.

(இ - ள்.) கேது உச்சம்பெற்றால் ராஜ்யம், தனம், தான்ய லாபமுண்டாம். பெரிதான பல்லக்கும், பாலன்னம் பொருந்திய ஆகாரங்களும் 1, 4, 7, 10-ஆமிடகேந்திரம், 1, 5, 9-ஆமிட திரிகோணம் பெற்றிருந்தாலும், 3-ஆமிடத்தில் இருந்தாலும், சுபா சுபங்கள் கலந்து உண்டாகும். வியவசாயகாலங்கூடும். புத்தி அந்தியத்தில், கேது கஷ்டமான பலன்களைக்கொடுப்பானென்றும் 6, 8, 12-ஆமிடங்களில் கொடும்பாவிகளுடன் கேது கூடியிருந்தால், சோதிடங்கற்ற பெரியோர்கள் உரைத்த பலன்களைக் கேட்பாயாக எ - று. 4

கூடுமேதலைவலியுங்குளிர்சுரமும்விஷமுங்
கொடுத்துவிடும்விபசாயநாசமுறும்பின்பு
வாடுமேசர்வபந்துசன்பீடையுடனே
மன்னவர்கள்கோபமுறுமகரசிம்மங்கடகம்
நாடியேயிருந்தாலுந்தேளிலிருந்தாலும்
நற்களத்ரசண்டையுண்டாம்நாசமவமிருத்து
தேடியேதேசாந்திரசஞ்சாரமுண்டாம்
தேகசுகக்குறைவுடனேபீடையெனச்செப்பே.

(இ - ள்.) தலைவலி, காய்ச்சல், குளிர், விஷநீர் சம்பந்தமான வியாதிகளும் உண்டாம். விபசாய நாஸ்தியும், பந்துக்கள் வாட்டமும், பீடையும், ராஜகோபமும் உண்டாம். மகரம், சிம்மம், கடகம், விருச்சிகம், இந்த ராசிகளில் கேதுவிருந்தால், நல்ல களத்திரத்தால் கலகமும், நாசமுமுண்டாம். அவமிருத்து தோஷமுமுண்டாம். தேசாந்தர சஞ்சாரமுமுண்டாகும். தேகசுகக்கெடுதலும், ரணமுதலிய பீடை யுண்டாகுமென்றும் சொல்லக்கடவாய் எ - று. 5

வேறு

பீடையாகிடுமட்டமம்பெற்றிடில்
பாடுசேருமிருத்துபயமதே
கூடுமேசிவபூசையினால்நலம்
நாடுமேசுகமென்றுநவின்றிடே.

(இ - ள்.) பீடையை உண்டாக்கும் 8-ஆமிடம் பாடாகிய 7-ஆமிடம் இவைகளில் கேது நின்றால், அவமிருத்துபயமுண்டாம். இதற்குப் பரிகாரமாக சிவபூஜைசெய்யில், கேடுநீங்கிச் சுகமுண்டாகும் என்று நவில்வாய் எ - று. 6

ஆக விருத்தம் 200.

இராகுதிசை சுக்கிரபுத்தி

வேறு

சுகமானராகுமகாதிசைதனிலேதானுஞ்
சுக்கிரனூர்புத்தியதுமூன்றுண்டதாகுஞ்
செகமீதுபாம்புக்கந்தர்க்கதனதாகித்
திருட்டியில்லான்சேர்ந்தாலுந்திரிகோணகேந்ந்ர
மிகவுறவாயிருந்தாலும்லாபத்தானத்தில்
மேவிடினும்பலவான்களுடன்கூடினுலுந்
தகவுடையவரசானுற்றனஞ்சேருமேலோர்
சன்மானந்தனையருண்டுசனங்களும்சேர்ந்திடுமே.

(இ - ள்.) சுகமுள்ள ராகுதிசையில் சுக்கிரபுத்தி வரு 3-க்கும், பலன் கேட்பாயாக:–ராகுவுக்கு சுக்கிரன், பலமான சேர்க்கைபெற்று லும், 1, 5, 9-ஆமிட திரிகோணம், 1, 4, 7, 10-ஆமிட கேந்திரம் பெற்றுலும், 11-ஆமிடத்தில் ராகுநின்றுலும், பலவான்களுடன் கூடியிருந்தாலும், பெருமைபொருந்திய அரசரால் பொருள்சேர்க்கை யும், பெரியோர்களால் சன்மானமும், புத்திரோற்பத்தியும், ஜன சேர்க்கைகளுமுண்டாம் எ - று. 1

மேலானசொக்ஷேத்ரந்தன்னிலிருந்தாக்கால்
மிகுத்துவரும்வாகனமும்நற்பலனுங்கொடுக்கும்
மாலானவிவாகம்வருமிராசசன்மானங்கள்
வருமதிகசவுபாக்கியம்வருங்கிரகம்பூமி
சேவாரும்விழிகளத்திரபுத்திரரும்லாபஞ்
சேரும்நாற்காலியினுற்சீவலாபங்கள்
பாலாருமொழியாய்கேள்மங்களசோபனமும்
பலத்திடும்பார்நற்பலன்கள்பங்கயப்பெண்ணரசே.

(இ - ள்.) பால்போன்ற மொழியுடைய லக்ஷுமியொப்பான வளே! பெருமைபொருந்திய ஆட்சியில் சுக்கிரனிருந்தால், மிகுந்த வாகனங்களும் நல்ல பலனையும் கொடுப்பன், விவாகமுண்டாம். அரச சன்மானங்களுண்டாம், அதிக சௌபாக்கியஞ்சேரும், கிரக வாகன பூமி லாபமும், களத்திர புத்திரருமுண்டாம். நாற்கால் முதலிய ஜீவ லாபங்களும், மங்களசோபனங்களுண்டாம் எ - று. 2

பங்கமிகுசட்டாட்டவியந்தனிலேகவிதான்
பதிந்திடினுமங்கிசத்திற்சந்திரனுருடனே
துங்கமுறக்கூடிடினுங்காரணமாய்ச்சண்டை
சொல்லுமிக்கதிரேகமதில்ரோகமிகவுண்டாம்
தங்குகளத்திரபுத்திரநாசமதுசேருந்
தன்னரசன்பகையும்வெகுகஷ்டமுமுண்டாகும்
பொங்கமுறுந்தாயாதிதனிற்கலகமுடனே
புகழான்பந்துசனபீடைகளுண்டாகும்.

(இ - ள்.) கேடுசெய்கின்ற 6, 8, 12-ஆமிடங்களில் சுக்கிரனின்ருலும், அங்கிசத்தில் சந்திரனுடனே கூடிநின்ருலும், அகாரணமான சண்டைகளும், தேகத்தில் ரோகங்களும், புத்திர களத்திர நாசமுமுண்டாம். ராசத்துவேஷமும், வெகுவான கஷ்டபலனும் தாயாதி கலகமும் பந்துஜன பீடைகளும் உண்டாம் எ - று. 3

பீடையில்லாத்திரிகோணகேந்திரத்திலேனும்
பிலத்துவருமூன்ருறென்பதுபதினென்றேனும்
நாடியதோர்சுபக்கிரகத்துடன்கூடியிருக்கில்
நற்கிரகப்பிரவேசநாற்காலிலாபங்
கூடிவரும்ராச்சியத்தோடன்னவஸ்த்ராபரணக்
குடைசுருட்டிசாமரமும்புத்திரருமுண்டாந்
தேடுபுகழரசரினல்நினைத்ததுகைகூடுந்
திகழ்பந்துநன்மைகுடதிசைப்பயணஞ்சொல்லே.

(இ - ள்.) குற்றமற்ற 1, 4, 7, 10-ஆமிடகேந்திரம் 1, 5, 9-ஆமிட திரிகோணங்களிலும், 3, 6, 9, 11-மிடங்களில், சுபக்கிரகத்தோடு சுக்கிரன்கூடியிருக்கில், புதுக்கிரகப் பிரவேசமும், கன்று காலி லாபமும் உண்டாம். ராஜ்ஜியமும் கூடிய வஸ்திராபரணங்களும், குடை, சுருட்டி, சாமரமும், புத்திரருமுண்டாம். புகழ்பெற்ற அரசரால் நினைத்தகாரியங் கைகூடுதலும் உண்டாம். பந்துக்கள் நன்மையும், கீழ்திசையில் பயணமுமுண்டாம் எ - று. 4

சொல்லுவாய்சட்டாட்டவியந்தனிலேயிருந்து
சொலும்பாவியுடன்கூடிலரசர்சோராக்னி

மல்லாரும்பயமுடனே நீரிழிவுரோக
மதிற்குன்மரோகமுடன்பருவிலங்குபூணும்
நல்லதொருதலைவலியுமகாலபோஜனமும்
நாடியவாக்குடனேமுக்கிவனுதனுகில்
வல்லமைசேரவமிருத்துதேகபயமுண்டாம்
வறியோராயறிந்தவருக்கனதானஞ்செய்யே.

(இ - ள்.) 6, 8, 12-ஆமிடங்களில் பாவருடனே கூடிச் சுக்கிரனின்றால், அரசர், சோரர், அக்கினியால் துன்பங்களும், நீரழிவு ரோகமும், குன்மரோகமும், விலங்குபூணலும், தலைவலி, அகால போஜனமும் உண்டாம். 2, 7-ஆமிடத்திற்கு, சுக்கிரன் அதிபதியாகில், அவமிருத்தும் தேகபயமுமுண்டாம். இத்தோஷம் நீங்கும்படி ஏழைகளுக்கு அன்னதானம் செய்விப்பாயாக எ - று. 5

ஆக விருத்தம் 205.

இராகுதிசை சூரியபுத்தி

செய்ததொருராகுதிசைதனிலிரவிபுத்தி
சேர்மாதம்பத்துடனேநாள்மூவெட்டாகுந்
துய்யதொருராகுவினுக்கந்தர்க்கதனுயிடினுஞ்
சொக்ஷேத்ரவுச்சகேந்திரத்திலிருந்தாலும்
வையகத்திலிரண்டஞ்சோன்பானிலிருந்தாலும்
வருஞ்சுபனோடேகூடிச்சுபன்பார்த்திட்டாலு
மையிலகுவிழிமடவாய்தன்பலனைத்தானே
வகுத்துவகைவகையாகவழுத்திடுவன்கேளே.

(இ - ள்.) அஞ்சனம் தோய்ந்த கண்ணுளே! செவ்விதாகிய ராகுதிசையில், சூரியபுத்தி மீ 10, நாள் 24-க்கும் பலன் கேட்பாயாக:-ராகுவுக்கு சூரியன் பிரியாதவனுகி கூடிநின்றாலும், ஆட்சி உச்சம் பெற்றாலும், 1, 4, 7, 10-மிட கேந்திரத்தில் நின்றாலும், 2, 5, 9-ஆமிடங்களில் நின்றாலும், சுபக்கிரகங்களோடு கூடியிருந்தாலும், அல்லது பார்த்தாலும், சூரியனின்பலனை வகைவிவரமாகச் சொல்லுவேன் கேட்பாயாக எ - று. 1

வழுவில்லா அரசனுடசன்மானங்கீர்த்தி
வருமற்பசவுக்கியமுஞ்சுபாசுபமுமுண்டாம்

பழுதிலாச்சொற்பராச்சியலாபமுடனே
பதிகளத்ரபுத்ரரும்வர்த்தனையுமுண்டாந்
தழுவியிலக்கினமொன்பதாமிடத்துக்குடையோன்
றனைக்கூடிகுருசசியாற்ருன்பார்த்திட்டாலு
முழுமதிசேர்முகமுடையராசாபிமான
முத்துரத்னக்குடைலாபமுற்றுமுண்டாயிடுமே.

(இ - ள்.) பூர்ணசந்திரன்போன்ற முகத்தாய்! குற்றமில்லா அரசசன்மானமும், கீர்த்தியும், அற்பமான சௌக்கியமும், அசுபம், சுபம், மருவிவருதலும், சொற்பமான பூமிபலிதமும், களத்திர புத்திர விருத்தியுமுண்டாம். லக்கினம், 9-க்குடையோர்களைக்கூடி குருவாலும், சந்திரனுலும் பார்க்கப்பெற்ற சூரியனுயிருந்தால், ராஜாபிமானமும், முத்து ரத்தினக்குடையுமுண்டாம் எ - று. 2

உண்டாகும்ஸ்திரீமூலமரசர்மூலத்தா
லுற்றிடும்பூலாபமொடுகெசமசுவஞ்சிவிகை
கொண்டிடுவனுச்சசொக்ஷேத்ரத்தானமாகக்
குறித்தமூன்ருறுபத்துப்பதினென்றிலிருக்கில்
விண்டாலுமனேகவிதப்பலன்களுமுண்டாகும்
வியமாறெட்டாமிடத்தில்மிப்பாவியுடனே
வண்டாருங்குழல்மடவாய்கூடினுந்துற்பலமாய்
வதிந்திரவியிருந்தாலும்மற்றுங்கேள்வகுப்பாய்.

(இ - ள்.) வண்டுமொய்த்த கூந்தலாய்! ஸ்திரீமூலம் அரசர் மூலமாய் பூமிசேர்க்கையும், கரி, பரி, சிவிகை, வாகனங்களும் உண்டாம். சூரியன் உச்சம் ஆட்சி, 3, 6, 10, 11-ஆமிடமிருக்கில், அநேக விதமான மேலான நற்பலன்களை யடைவன். 6, 8, 12-ஆமிடங் களில் சூரியன் பாவியுடன் நின்ருலும், சூரியன் துர்ப்பலமானுலும், பலன்களைச் சொல்லுவோமாக எ - று. 3

வகுத்ததொருதிசைநாதனுடன்புத்ரநாதன்
வரும்பாவியாயிருக்கில்கர்மாதிரோகஞ்
செகத்தினிலேசோரர்பயமரசர்நிட்டூரம்
ஸ்திரீகலகம்கிரகம்போஞ்சத்துருபயமுண்டாந்
தொகுத்துரைக்கிலரசர்சோராக்னிபயஞ்சேருந்
தோன்றும்பற்பலர்கலகங்களத்ரபுத்ரநாசம்

பகுத்துவரும்விலங்குடனேபீடைசகோதரங்கள்
பந்துசனதனநாசம்பகர்ந்திடுபூங்கொடியே.

(இ - ள்.) பூங்கொடிபோல்வாய்! திசைநாதனுக்கு புத்திநாதனுன சூரியன் பாவியானபடியால், கர்மாதிரோகங்களும், சோரர் பயமும், அரசரால் நிட்டூரமும், ஸ்திரீமூலத்தால் கலகமும், கிரகம் பெயர்தலும், சத்துருக்களால் பயமுமுண்டாம். வரிசையாகச் சொல்லுமிடத்து அரசர், திருடர், அக்கினியால் பயமும், பற்பல கலகங்களும், களத்திர புத்திரர் நாசமும், விலங்குபூணுதலும், சகோதர பீடையுமுண்டாவதோடு, பந்துக்களும் பொருளும் நாசமுறும் என்பதாம் எ - று. 4

திடமானகேந்திரகோணத்தையடைந்தாலுஞ்
செப்பரியமூன்றுபதினென்றிலிருந்தாலும்
அடைவானராசசன்மானத்துடனேதக்க
அவனிவரும்புத்ரகளத்திரசுகமுண்டாகும்
இடமாகுமிரண்டேழுக்கிவனதிபனுகி
யிகலுமவமிருத்துபயமிட்டசனவிரோத
மடவாரேசேய்பார்த்தாற்பெரியோர்கள்பகையும்
வருகுமினுஞ்சிலதீதுவெனவகுத்துச்சொல்லே.

(இ - ள்.) சூரியன் திடம்பெற்ற 1, 4, 7, 10-ஆமிடம் கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிடம் திரிகோணத்தும், 3, 11-ஆமிடங்களில் நின்றாலும், முறையான ராச சன்மானமும், சரியான பூமி சேர்க்கையும், புத்திர களத்திரர் சுகமுமுண்டாம். 2, 7-ஆமிடங்களுக்குச் சூரியன் அதிகாரியாயிருக்கில், அவமிருத்து பயமும், போராட்டமும், இஷ்டமானவர்கள் விரோதமும், செவ்வாய் சூரியனைப் பார்த்தால், பெரியோர்கள் பகை முதலான சில தீதுகளும் உண்டாகுமென்று வகையாகச் சொல்லுவாயாக எ - று. 5

ஆக விருத்தம் 210.

இராகுதிசை சந்திரபுத்தி

சொலும்ராகுதிசைதனிலேசசிபுத்தியிதுதான்
றேன்றிவரும்பதினெட்டுமாதமதுதனிலே
நலமாகும்ராகுக்குச்சசியந்தர்க்கதனுய்
நண்ணிடினுமுச்சசொக்ஷேத்திரத்தையடைந்தாலும்
பெலமான திரிகோணகேந்திரலாபங்கள்
பெற்ருலும்சுபனேடேகூடியிருந்தாலுங்
குலராசரபிமானஞ்சிவிகைவஸ்திராபரணம்
கூறுபுத்ரலாபமெல்லாங்கூடிடும்பெண்மயிலே.

(இ - ள்.) பெண்மயிலே! சொல்லக்கூடிய ராகுதிசையில், சந்திரபுத்தி ௵ 1, மாசம் 6-க்கும் பலன்களைக் கேட்பாயாக. இந்த ராகுவுக்குச் சந்திரன் சிநேகமாய்ப் பிரியாமலிருந்தாலும், உச்சம், ஆட்சியில் நின்ருலும், பலமான 1, 4, 7, 10, 5, 9, 11-ஆமிடம் கேந்திரகோண லாபமுற்ருலும், சுபனேடுகூடிய சந்திரனுக இருந்தாலும், மேன்மைபெற்ற குலத்துடைய அரசரால் அபிமானமும், பல்லக்கு, வஸ்திர பூஷண லாபமும், கூறுகின்ற புத்திர லாபமும் உண்டாம் எ - று. 1

கூடியதோர்பூரணசந்திரனுதியிருந்தாற்
குறையாதபாலன்னம்லாபமிகவுண்டாந்
தேடரியகெசமசுவலாபம்நாற்காலி
சேர்தான்யலாபமொடுகளத்ரபுத்ரலாப
மூடலுறுஞ்சட்டாட்டவியந்தனிலேபாவி
யுடன்கூடிச்சீரணசந்திரனுனலாகிற்
றேடவிழும்பூங்குழலாய்களத்ரபுத்ரநாசஞ்
சொலும்பூமிபிதுர்நாசந்தோன்றிடுமென்றுறையே.

(இ - ள்.) முறுக்கவிழ்ந்த புஷ்பமாலை தரித்த கூந்தலுடையவளே! பூர்ணகலையோடுகூடிய சந்திரனுனல், பாலோடுகூடிய போஜனங்களும், தேடுதற்கு அரிதான யானை, பரி, தேர்கள் லாபமுண்டாம். கன்று காலி, பொருள், களத்திரம், புத்திரர் லாபமுண்டாம். சங்கடஞ்செய்கின்ற 6, 8. 12-ஆமிடத்தில் பாவியுடன் கூடிய க்ஷீண சந்திரனுனல் களத்திர புத்திரர்கள் நாசமும், பூமி, பிதுர் நாசமடையுமாம் என்று சொல்லுவாய் எ - று. 2

நாசமில்லாத்தென் திசையிற்பிரயாணமாகும்
ராசாக்கள்பேட்டியுறும்நாற்காலிலாபம்
பேசரியநற்கிரகலாபமிகவுண்டாம்
பின்னஞ்சுபன்னொன்றாமிடமதிலுமற்றுந்
தோஷமில்லாக்கேந்திரத்திற்றானிருந்தபோதுஞ்
சுயகிரகமதுதனிலேசீதேவிசேருங்
காசினியில் நினைத்ததெல்லாமதிலாபமாகுங்
கருதரியதனஞ்சேருமதிகசுகமாமே.

(இ - ள்.) தென்றிசையில் பிரயாணமும், ராசர்கள் பேட்டியும், நன்று காலி லாபமும், கிரக லாபமும் உண்டாம். 5, 11-ஆமிடத்திலும், 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், சந்திரன் நின்றால், லக்ஷிமிகடாட்சம்பெற்ற கிரகமும், நினைத்த காரியங்கள் கைகூடுதலும், அதிகமான பொருட்சேர்க்கையும், சுகமும் உண்டாம் எ - று. 3

அதிகீர்த்தியுடனரசசன்மானமுண்டா
மானதெய்வபூசனைகளதுமிகவுஞ்செய்வான்
மதியாதசோரரால்ரணத்தினால்மரணம்
வாக்கேழுக்கிவனுதனுகிலவமிருத்து
விதியாகும்பரிகாரம்நவக்கிரகமதனை
மெய்யுடனேனிதம்பணியவிலகுமிந்தத்தோஷம்
கதிசேருமான்குளம்பையரவபடமதனைக்
காய்ந்தமதபீடமெனக்கணிக்குநல்குற்றிருவே.

(இ - ள்.) மான் குளம்பையும், பாம்பின் படத்தையும் கோபித்துக் காமபீடமெனக் குறிக்கின்ற அல்குலையுடைய இலக்ஷிமியே! அதிகீர்த்தியும், அரசரால் சன்மானமுமுண்டாம். தெய்வ பூஜைகள் புரிவாள். 2, 7-ஆமிடத்திற்குச் சந்திரன் அதிகாரியானால், சோரராலும், ரணத்தினாலும், அவமிருத்தாலும், பிராண பயமுண்டாம். இதற்கு நவக்கிரக அர்ச்சனை செய்து பணிந்தால், அவமிருத்து தோஷம் நீங்கிச் சுகமான பலன் நடக்கும் என்று சொல்லுவாய் எ - று. 4

ஆக விருத்தம் 214.

இராகுதிசை செவ்வாய்புத்தி

திருவேகேளாயரவுதிசையதனிற்செவ்வாய்
சேர்ந்தபுத்திவருடமொன்று நாள்பதினெட்டாகும்
பரிவாகச்செவ்வாய்ராகுக்கந்தர்க்கதனுய்
பதிந்தாலுங்கேந்திரகோணத்தையடைந்தாலும்
பெரிதானுச்சசொக்ஷேத்திரலாபம்பெறினும்
பெலவானுயிருந்தாலுஞ்சுபாங்கிசம்பெற்றிடினும்
அரிதானசுபருடனேநோக்குறினுமூன்றில்
ஆறுபத்துப்பதினென்றிலிருந்தாலுங்கேளே.

(இ - ள்.) இலக்ஷிமிக் கொப்பாகிய பெண்ணே! இராகுதிசையில் செவ்வாய்புத்தி வருஷம் 1, நாள் 18-க்கும் பலன்களைக் கேட்பாயாக. ராகுவுக்கு செவ்வாய் சிநேகமாய்க் கூடினுலும், 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட கேந்திரத்து நின்றுலும், பேர்பெற்ற உச்சம், ஆட்சியில் நின்றுலும், 11-ஆமிடத்தில் இருந்தாலும், சுபாங்கிசம்பெற்றுலும், சுபர் பார்வைபெற்றுலும், 3, 6, 10, 11-ஆமிடத்தில் செவ்வாய் நின்றுலும் பலன் தரும் எ - று. 1

ஆனதொருசவுக்கியமாம்யோகமுடன்பூமி
ஆதாயமதிகபலனுற்காலிசேருங்
கோனவன்றன்பேட்டிவருந்தேவப்பிரசாதங்
கூடிவருமதிகசவுக்கியம்வஸ்த்ராபரணந்
தானமிகுபுத்திரலாபம்பெருகுமுயர்ந்த
தன்மனையிற்கலியாணசோபனமுமுண்டா
மீனினையும்வாளினையும்வேலினையும்பழித்து
விளங்கியகாதோடுவாதாடும்விழிக்குயிலே.

(இ - ள்.) மீன், வேல், வாளையும் பழித்து, காதோடு வாதாடுகின்ற கண்களையும் உடைய குயில் மொழியாய்! சௌக்கியமுண்டாவதுடன் யோகமும், பூமி லாபமும், அதிக பலன் கொடுக்கும். கன்று காலிகளும் உண்டாகும். அரசரின் பேட்டியும், தெய்வப் பிரசாதங்களு முண்டாம். மிகுந்த சௌக்கியம், ஆடை, ஆபரண லாபம், புத்திர லாபம், தன் கிரகத்தால் கல்யாண சுபசோபனங்களு முண்டாம் எ - று. 2

வாதாடுஞ்சட்டாட்டவியந்தனிலேபாவ
வர்க்கமுடன்கூடியேநீசனுயிடினுந்
தீதாருங்களத்திரத்தால்வெகுகலகமுண்டாஞ்
சேயுடனேகளத்திரமும்வெகுநாசமாகும்
மாதேகேள்பரதேசசஞ்சாரஞ்சமரில்
வந்துவிடுஞ்செயங்களதுகாரியுடன்கூடில்
ஏதேனுங்காரியினுல்நோக்குற்ருலுந்தான்
இசைபுத்திரநாசமுண்டாமானபங்கமாமே.

(இ - ள்.) உடலாகிய 6, 8, 12-ஆமிடங்களில் பாவக் கிரகமுடன் கூடி, நீசனுன செவ்வாயாகில் குற்றமுள்ள களத்திரத்தால் வெகு கலகங்களுண்டாம். புத்திர களத்திர நாசங்காட்டும். அந்நிய தேச சஞ்சாரமும், சமரில் அபசெயமும் உண்டாம். சனியோடு கூடிய செவ்வாயானுலும், சனி பார்க்கப்பட்ட செவ்வாயானுலும், புத்திர நாசமும், மானபங்கமும் உண்டாம் எ - று. 3

மேதினியிற்கேந்திரகோணத்தையடைந்தாலும்
விளங்கியமூன்ருென்பதிலேவீற்றிருந்தானேனும்
ஓதரியபூமியற்பலாபமதுவாகும்
உயரரசரபிமானஞ்சோபனமுஞ்சேரும்
நீதமுறும்பரதேசசஞ்சாரங்களிலே
நீதிமன்னர்பேட்டியதுநிதநிதமுண்டாகுஞ்
சூதினையுமருப்பினையும்பொருப்பினையும்பழித்துத்
துத்திபடர்ந்திலகுமுலைத்தூயமதரதியே.

(இ - ள்.) சொக்கட்டான் காயையும், யானைமருப்பையும், மலையையும் பழித்து, தேமல் படர்ந்து பிரகாசிக்கின்ற ஸ்தனங்களையுடைய பரிசுத்தமான ரதிதேவிக் கொப்பானவளே! 1, 4, 7, 10-ஆமிடம் கேந்திரத்தையும், 1, 5, 9-ஆமிடம் திரிகோணத்தையும் பெற்று செவ்வாய் நின்ருலும், 3-ஆமிடம், 9-ஆமிடங்களில் நின்ருலும், சொல்லுதற்கரிதான சொற்ப பூமி லாபமுண்டாம். அரசரபிமானமும், சுபகாரியங்களும் உண்டாம். அந்நிய தேச சஞ்சாரங்களில் பொருள் வரவும், ராஜாக்கள் பேட்டியும் நீங்காமல் உண்டாகும் எ - று. 4

தூயதொருசட்டாட்டவியந்தனிலேசெவ்வாய்
சொலும்பாவியுடன்கூடில்களத்ரபுத்ரநாச
மாயதொருசகோதரநாசம்பந்துவிரோத
மானகளத்திரமதனுல்வெகுகலகமுண்டாந்
தீயதனுலரசராற்சோரர்பயமாகுஞ்
சேர்தனதானியநாசநீரிழிவுஞ்சேருங்
காயமதில்விடதிட்டிபரதேசகமனங்
கலியாணமத்தியத்திற்சவுக்கியமூண்டாமே.

(இ - ள்.) 6, 8, 12-ஆமிடங்களில் செவ்வாய் பாவியுடன் கூடிநிற்கில், களத்திர புத்திரர் நாசமும், சகோதர தோஷமும், பந்துக்கள் விரோதமும், களத்திரத்தால் வெகு விரோதங்களும், கலகங்களும் உண்டாம். அரசன், திருடர், அக்கினியால் பயமும், தனதான்யங்கள் நாசமாம். நீரிழிவு, வெட்டுக்காயம், விஷபீடிகை, பரதேச கமனமும், அந்திய பாகத்தில், கல்யாண முதலிய சௌக்கியங்களை அடைவான் என்று சொல்லுக எ - று. 5

வேறு

மத்தியமிரண்டேழுக்கும்வாக்குக்குமதிபனுகிற்
சத்தியாயகாலமிர்த்துத்தான்வரும்பரிகாரங்கேள்
சுத்தமாய்நவக்கோள்தன்னைச்சுற்றிடிற்சுகமாமென்று
பத்தியாய்பராசர்சொன்னுர்பகுத்தறிந்திதனைச்செய்யே.

(இ - ள்.) 2, 7-ஆமிடங்களுக்கு செவ்வாய் அதிகாரியாயின், சீக்கிரமாக அவமிருத்து தோஷமுண்டாம். இதற்குப் பரிகாரங் கேட்பாயாக:—பரிசுத்தத்தன்மையோடு நவக்கிரகங்களைச் சுற்றிடில் சுகங் கொடுக்குமென்று பராசரமுனிவர் சொல்லியபடியால் இதை விபரமாயறிந்து செய்வாயாக எ - று. 6

ஆக விருத்தம் 220.

குருதிசைப் படலம்

செயமானவியாழதிசைபதினாறுண்டாகுஞ்
செய்யதிசையதிற்பலன்கேளிராச்சியலாபங்கள்
நயமானதருமம்வருந்தனதான்யலாபம்
நலந்திகழ்சொக்ஷேத்திரவுச்சம்நாடியிருந்தாக்காற்
கயமோடுபரிசிவிகையதிகராச்சியமுங்
கதித்துமிகலாபமுறுங்கனசிவிகைசேரும்
வயமானராஜரபிமானமுண்டாமென்று
வகுத்துரைத்தார்பராசரமாமுனிவடநூல்தனிலே.

(இ - ள்.) ஜெயம்பெற்ற வியாழதிசை வரு 16-க்கும், பலன்களைக் கேட்பாயாக:—ராச்சியலாபங்கள், நல்லதருமங்கள் தனதான்யலாபம் உண்டாம். நன்மை பிரகாசிக்கின்ற ஆட்சி உச்சம் நாடிக் குருவிருந்தால், யானை, பரி, சேனை, பல்லக்குடன் அதிகராஜ்யமுண்டாம். பொன் பூஷணலாபமும் கிட்டும், வெற்றிபொருந்திய அரசரால் அபிமானமுண்டாகும். என்று பராசரமுனிவர் வடமொழியில் வரிசையாய் தொகுத்துச் சொல்லினர் எ - று. 1

வடநூலின்மொழிப்படியேதிரிகோணத்தேனும்
வாக்கினிலாபத்தேனும்வளர்குருவந்துற்றுத்
திடமீறுஞ்சவுக்யமுடன்சிவிகைவஸ்த்ரலாபம்
சிவபூசைதான்புரிவன்சட்டாட்டவியத்தில்
கொடுநீசனாயிருந்தாலதிகதுக்கம்வந்து
கூடுமன்யதேசமதிற்சஞ்சாரமுண்டாம்
படிமீதிற்றனதான்யம்வெகுநாசமாகும்
பாலினையுந்தேனினையும்பழித்தமொழியணங்கே.

(இ - ள்.) பாலைத் தேனைப்பழித்த மொழியுடைய அணங்கே! வடநூல்மொழிப்படி குருவானவர், 1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணத்தும், 2, 11-ஆமிடத்திலும் அமர்ந்திருந்தால், திடம்பெற்ற சவுக்கியத்துடன் சிவிகை, வஸ்திராபரணலாபம் உண்டாம். சிவபூஜை செய்வன். 6, 8, 12-ஆமிடங்களில் நீசனாய் குருவந்திருந்தால், அதிக துக்கமும் வந்துசேரும். அந்நியதேச சஞ்சாரமுண்டாம். பூமியில் தனம் தானியம் வெகுநாசமடையும் எ - று. 2

ஆக விருத்தம் 222.

குருதிசை குருபுத்தி

கேடிலாவியாழதிசைதனிற்றனதுபுத்தி
 கேட்டிடுவாய்மாதமிருபத்தைந்தினுடனே
ஈடில்லாநாட்பதினெட்டாகுமதுதனிலே
 யிசைந்தகுருவுச்சசொக்ஷேத்திரத்தையடைந்தாலும்
நாடியேகோணகேந்திரத்தையடைந்தாலும்
 நல்லபலன்சந்தோஷம்ராசசன்மானங்கள்
கூடுமேகலியாணஞ்சோபனமோடில்லிற்
 குறித்ததிருவாழுமென்றுகூறினர்கற்றோரே.

(இ - ள்.) குற்றமில்லாத வியாழதிசையில் குருபுத்தி ௵ 2, ௴ 1, நாள் 18-க்கும், குருவானவர் உச்சம் ஆட்சியில் இருந்தாலும், 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தில் இருந்தாலும், நன்மையான சந்தோஷம், ராசசன்மானமும் விவாகங் கூடுதலும், கிரகத்தில் லக்ஷிமிகரம் உண்டாமென்றும் கற்றவர்கள் கூறினர் எ - று. 1

கூடியதோர்சிவபூசைநற்கருமந்தியானங்
 குலமன்னர்சன்மானம்நாற்காலிலாபந்
தேறியதோர்வஸ்திராபரணலாபங்கள்
 தேகசவுக்கியமுடனேசெல்வமிகவுண்டாம்
சீறியதோர்நீசாங்கிசநீசராசியினிலே
 சேர்ந்தாலுஞ்சட்டாட்டவியத்திலிருந்தாலும்
மீறிவருமரசராற்கோபமுறுஞ்சத்ரு
 மிகுந்தபயந்தாயாதிவிரோதமிகவுண்டாம்.

(இ - ள்.) சிவபூஜையோடு கூடிய நற்கருமங்கள் செய்தலும், சிவத்யானமும், குலமன்னரால் அபிமானமும், நாற்காலி இலாபமும், மேலான வஸ்திராபரணங்களும், தேக சௌக்கியமுடன் அதிகமான செல்வமும் உண்டாம். சீற்றமுடைய 6, 8, 12-ஆமிடங்களில் நீசமும், நீசாங்கிசமும் பெற்றிருந்தால், அரசரால் கோபமும், சத்துருவால் மிகுந்த பயமும், தாயாதி விரோதமுமுண்டாம் எ - று. 2

தாயாதிகலகமுடன்றனதான்யநாசந்
 தனையர்களத்திரம்பிரிவுதானேயுற்றிடுமாம்

ஓயாமற்பரதேசசஞ்சாரஞ்செய்வ
னுறும்வாக்கினுடனேழுக்கிவனுதனுகில்
மாயாதவவமிருத்துபயமாகுமதற்கு
வரும்பரிகாரஞ்சொலக்கேள்மனமுவந்துவஏழை
நோயாளிதனக்கவிழ்தமன்னமதுதந்து
நோம்பொருமண்டலஞ்சனிநாள் நூற்றிடநன்ருமே.

(இ - ள்.) தாயாதி கலகமாவதுடன், பொருள், தான்யங்கள் நாசமுண்டாம். புத்திரர், களத்திரம், பிரிதலோடு நோயுமடைவர். நீங்காமல் பரதேச சஞ்சாரமும் உண்டாம். 2, 7-ஆமிடத்ததிபன் வியாழனுகில், விடாத அவமிருத்து பயமுண்டாம். அதற்குப் பரி காரம் கேட்பாயாக. நல்ல மனத்தோடு நோயாளிகளுக்கு அவிழ்த மும் கொடுத்து, அன்னம், வஸ்திரமளித்து ஒரு மண்டலகாலம் விரதமிருந்து, சனிவாரம் விரதமனுஷ்டித்தால் அவமிருத்து பயம் நீங்கி, நல்ல சுகமுண்டாம் எ - று. 3

ஆக விருத்தம் 225.

குருதிசை சனிபுத்தி

உற்றகுருதிசையதனிற்சனிபுத்தியதுதான்
உரைத்திடுமுப்பதுமாதம்நாட்பனிரெண்டதனில்
அற்றமில்லாக்குருவுக்குச்சனியந்தர்க்கதனுல்
ஆயிடினுமுச்சசொக்ஷேத்திரத்திலிருந்தாலும்
மற்றுமுறுகேந்திரகோணத்திலிருந்தாலும்
வருமூன்ருற்பத்துபதினென்றிலிருந்தாலும்
வெற்றிபெறும்வேல்விழியாய்குயில்மொழியாய்பலனே
விபரமுடனேயெடுத்துவிளம்பிடுவன்கேளே.

(இ - ள்.) வெற்றிபெற்ற வேல்போன்ற விழியையும், குயில் இசைபோன்ற மொழியையுமுடையாய்! பொருந்திய வியாழதிசை யில் சனிபுத்தி வருஷம் 2, மாதம் 6, நாள் 12-க்கும் பலன் கேட் பாயாக. குற்றமில்லாத குருவுக்குச் சனி பிரியாதவனுகி ஒன்று யிருந்தாலும், உச்சம் ஆட்சியிலிருந்தாலும், மற்றும் 1, 4, 7, 10-ஆ மிடம் கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்துள் நின்றுலும், 3, 6, 10, 11-ஆமிடத்தில் நின்றுலும், பலன்களை விவரமாகச் சொல்லுவேன் கேட்பாயாக எ - று. 1

விளம்பக்கேள்ராச்சியங்கலிலாபமிகச்சேரு
மிகுத்ததனதான்யவஸ்திராபரணமிகவுண்டாம்
வளம்பெருகுஞ்சிவிகையுடன்நாற்காலிலாபம்
வளர்புத்ரகளத்ரசுகம்மன்னவர்கள்பேட்டி
தொழுங்குடக்குத்திசையதனிலதிகபயமுண்டாந்
தூயதொருதீர்த்தயாத்திரையுமிகபலிக்கும்
இளங்கதிர்சேர்மதிநுதலாய்பராசரமாமுனியும்
இயம்புமொழிப்படிதமிழிலியம்புவன்பூங்கொடியே.

(இ - ள்.) பூங்கொடி போன்ற மூன்றும்பிறையை நிகர்த்த புருவமுடையாய்! ராஜ்ஜியங்கள் அதிகமாகச் சேர்தலும், மிகுதியான தனம், தான்யம் லாபமுண்டாம். வளம்பெற்ற பல்லக்கு, கன்று காலி லாபமுண்டாகும். வளர்ந்து வருகின்ற புத்திரர், களத்திரர் சுகமாம். ராஜபேட்டியும், கிழக்குத் திசையில் பயணமுஞ் சேரும். தீர்த்த யாத்திரையும் செய்வன் என்று பராசரமுனிவர் வடமொழியிற் சொல்லியதை, உனக்குத் தென்மொழியிற் சொல்லுகிறேன் கேட்பாயாக எ - று. 2

இயம்பியசட்டாட்டவியந்தன்னிலிருந்தாலு
மிசையுமஸ்தமனமாகியிவனிருந்தானேனுஞ்
செயம்புனேயானீசனுயிருந்தாலுந்தான்யந்
திகழ்தனம்புத்திரனுசங்களத்திரத்தாற்கலகம்
வயப்பொருந்துமன்னராற்சோரராற்றீயால்
வருபயமுங்கிரகமதிற்சுபங்களுமுண்டாகுந்
தயங்குமனவியாதியுடன்பருவிலங்குசேருந்
தளதளெனப்பளபளென த்தயங்குமுலைத்திருவே.

(இ - ள்.) தளதளப்போடு கூடி, பளபளப்புடனே பிரகாசிக்கின்ற தனங்களை யுடையவளே! சொல்லுகின்ற 6, 8, 12-ஆமிடங்களில் சனி நின்றாலும், அஸ்தமனமாயிருந்தாலும், செயமில்லாத நீசஸ்தானத்திருந்தாலும், பொருள், தான்யம், புத்திரர், களத்திரத்தால் கலகமும், வெற்றிபெற்ற அரசர், திருடர், அக்கினியால் பயமும், கிரகங்களில் அசுபகாரியம் நடத்தலும், மனவியாதியும், விலங்கும் உண்டாம் எ - று. 3

வெய்யவன்றன்மகன்புத்தியாதியிலேயரசர்
மிகக்கோபந்தனதான்யநாசமதுவாகும்
வையமதிற்றனதான்யலாபமர்ப்பசவுக்கியம்
வருங்கடையிற்களத்திரமும்பிதிர்நாசமாகுந்
துய்யதொருகேந்திரகோணத்திலிருந்தாலுஞ்
சொலுமூன்றிற்பதினொன்றிலிவனிருந்தானேனும்
வையகத்திற்றனதான்யம்பூமிபுத்திரலாபம்
வாகாகக்கிடைக்குமெனமதித்துரைசெய்வாயே.

(இ - ள்.) சூரியன் மகனாகிய சனியின்புத்தி ஆதியில் அரச கோபமும், தனம், தான்யம் நாசமுண்டாம். நடுப்பாதியில் தன தான்ய லாபமும், அற்ப சௌக்கியமு முண்டாம். கடைப்பாகத்தில் களத்திரமும், பிதாவும் நாசமடைவர். பரிசுத்தமான 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்து நின்றாலும், 3, 6, 11-ஆமிடங்களில் சனி இருந்தாலும், பூமியில் பொருள், தானியம், பூமி, புத்திரர் லாபமும், அழகுபெற உண்டாமென்று மதித்து சொல்லுவாயாக எ - று. 4

மதித்திடுஞ்சட்டாட்டவியந்தனிற்பாவியுடனே
மந்தனிருப்பானாகிற்றனதான்யநாசங்
கதித்திடுமுத்யோகமித்ருபந்துசனநாசங்
கனபீடையுண்டிரண்டேழுக்குடையோனாகின்
அதிற்பலன்கேளவமிருத்துபயம்பரிகாரந்தான்
அரிசகஸ்ரநாமசெபமாங்கிரகசெபமும்
விதத்துடனேசனிநேரம்பூமண்டலமட்டிருந்து
மேலுமெளியோர்க்கன்னமீய்ந்திட நன்றாமே.

(இ - ள்.) மதிக்கப்பெற்ற 6, 8, 12-ஆமிடங்களில் சனி பாவி யுடனே நின்றாலும், பொருள், தானிய நாசமும், உத்தியோகம், பந்து ஜனங்கள் நாஸ்தியாகும். அதிகமான பீடையுண்டாம். 2, 7-ஆமிடங்களுக்கு அதிபன் சனியாகில், அவமிருத்து பயமுண்டாம். அது தீரப் பரிகாரங்கேட்பாயாகில், அரியின் சகஸ்திரநாம ஜெபம் செய்தும், கிரகஜெபம் செய்தும், சனிவார விரதம் மண்டலமாகிய 40-நாளிருந்து எளியோர்க்கன்னதானமிட அபமிருத்து பயம் நீங்கிச் சுகப்பிராப்தி யுண்டாகும் எ - று. 5

ஆக விருத்தம் 230.

துருதிசை புதன்புத்தி

அரசனூர்திசையதனிற்புந்தியபகாரம்
ஆனவிருபத்தேழுமாதந்நாளாறின்
உரைகுருவுக்கந்தர்க்கதனுய்ப்புதனுனுலு
முற்றசவுக்கியந்தனலாபங்கள்மிகவுண்டாந்
தரையதனிற்றிசைநாதனேக்கமுற்றுநேனிற்
றருசுகமுமிராச்சியமும்லாபமிராசாக்கள்
பிரசாதமகிமையினுல்நினைத்ததுகைகூடும்
பின்புசேர்தனலாபம்பெருகுமெனப்பேசே.

(இ - ள்.) வியாழதிசையில் புதன்புத்தி வூ 2, மீ 3, நாள் 6-க்கும், பலன் கேட்பாயாக. குருவிற்கு புதன் சிநேகனுய்ப் பிரியாமல் கூட இருந்தாலும் சவுக்கியம் தனலாபம் அதிகமாயுண்டாம். திசைநாதனை வியாழன் புதனைப்பார்த்தாலும், சுகத்தோடு கூடிய ராச்சிய லாபமும், அரசர்களின் ஒத்தாசையால் நினைத்த காரியம் கைகூடுதலும், தனம்பெருகுதலாகிய நன்மையுமுண்டாம் எ - று. 1

பேசியசெவ்வாய்நோக்கம்புந்திக்குண்டாகிற்
பெரிதானகட்டமுறுமிராச்சியமுநாசம்
மோசம்வருந்தனதான்யவிபசாயங்காச்சல்
முழுதானரோகமுண்டுஞ்சொக்ஷேத்திரத்தேனுங்
காசினியோர்புகழ்ந்திடுகேந்திரத்திலிருந்தாலுங்
கருதரியவாக்குலாபத்திலிருந்தாலுந்
தேசுபெறுதேமல்படர்ந்தழகுபெறுந்தனத்தாய்
செப்பிடுநற்பலன்களெல்லாந்தெளிந்துரைசெய்வாயே

(இ - ள்.) அழகான தேமல் படர்ந்து அதனுல் அழகு ஜொலிக்கின்ற தனங்களையுடையவளே! செவ்வாய்ப் பார்வைபெற்ற புதனுகில், பெரிய ஆபத்துண்டாம். ராச்சியம் நாசமடையும். தனம், தானியம், விபசாயங்கள் நஷ்டமடையும். காய்ச்சல் முதலான ரோகங்களுண்டாம். ஆட்சியிலும், உச்சத்திலும் நின்ற புதனுக இருந்தாலும், 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிடத் திரிகோணத்திலிருந்தும், 2, 11-ஆமிடங்களில் இருந்தும், புதன் புத்தி நடத்துவானென்றுல், நல்ல பலன்கள் உண்டாகுமென்று தெளிவாய்ச் சொல்லுவாயாக எ - று. 2

செப்பிடுங்கால்தவறியதோரிராச்சியமுஞ்சேரும்
செயத்தாலேலாபமுறும்பந்துசனஞ்சுகமா
மொப்பரியவிவாகமுடன்சுகபலனுண்டாகு
முயர்மேற்குதிசையதனில்மன்னவர்பேட்டியுமே
தப்பிதமல்லாதுநினைத்ததுபலிதமாகுந்
தண்டிகையும்பூமியுடன்மிகலாபஞ்சேரும்
மைப்புயலைப்பொருந்துசெயம்படைத்தபூங்குழலாய்
வருமொழிநூற்படிதமிழின்வகுத்தனர்கற்றோரே.

(இ - ள்.) கறுப்பாகிய மேகத்தைப்போன்ற அழகிய கூந்தலுடையவளே! சொல்லுமிடத்து, தவறிப்போன ராஜ்ஜியங் கைகூடுதலும், வெற்றியால் லாபமும், பந்து ஜனங்கள் சுகமும், ஒப்பில்லாத கல்யாண காரியங்களும், சுகமான பலன்களுமுண்டாம். மேற்குத்திசையில் மன்னர் பேட்டியுமுண்டாகும். குற்றமில்லாமல் நினைத்த காரியம் பலிக்குமாம். பல்லக்கு லாபமும், பூமி லாபமும் சேரும் என்று வடமொழியிற் கூறியதை, தமிழின் முறையாகக் கற்றோர் வகுத்தனர் எ - று. 3

வகுத்திடுசட்டாட்டவியத்தானத்திலேதான்
மாபாவியுடன்கூடியிருக்கினுநோக்குறினுந்
தொகுத்திடும்பாவந்தனிலேமனதுமிகச்சென்று
தூயபொருளதனாலேவெகுசேதமாகுஞ்
செகத்தினிலேபயித்தியமாமனவியாதிவிலங்கு
சேர்கிறபேயாச்சியுடன்குளிர்சுரமுங்காணும்
மிகுத்ததலைவலியுடனேதனச்சேதமாகும்
வீணையிசைபோலுமொருமெல்லியருக்கரசே.

(இ - ள்.) வீணையிசைபோன்ற மெல்லிய சொல்லையுடையாய்! வகுத்தபடி 6, 8, 12-ஆமிடத்தில் பாவியுடன் கூடிய புதனிருந்தாலும், பாவியால் பார்க்கப்படினும், வரிசையாகப் பாவச்செய்கையில் மனது பொருந்தி, அதனால் வெகு பொருட்சேத முண்டுபண்ணுவன். பூமியில் பயித்தியமான நோயுண்டாம். மன வியாதியும், விலங்கும் உண்டாம். கிரகம் மாறி வேறு இடத்தில் குடிபுகலும், குளிர் சுரம், தலைவலியுடன், பொருட்சேதமுண்டாம் எ - று. 4

வீணையுடையவன்கோணகேந்திரத்திலேனு
மிகுத்தவொன்பான்பதினென்றிலுச்சத்திலேனும்
காணறியவுச்சாங்கிசத்திலிருந்தாலுங்
கருதரியவிரண்டில்மூன்றினிலிருந்தானேனும்
வாணிபமும்பலிக்குநரவாகனமுஞ்சேரும்
மன்னராலுற்றசெயமாதுர்பிதுர்சுகமுங்
காணுமிகும்புதுக்கிரகமுண்டாகும்ஞானங்
கல்வியறிவதுபெருகிகண்ணியவானவான்.

(இ - ள்.) வீணையையுடைய புதன், 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும், 11-ஆமிடத்திலேனும், உச்சத்திலேனும், பார்க்கவறிதான உச்சாங்கிஷத்திலேனும், 2, 5-ஆமிடத்திலிருந்தாலும், வியாபாரமும் பலிக்கும். பல்லக்கும், மன்னவரால் நல்ல செய்கையும், மாதுர் பிதுர் சுகமுண்டாம். புதிய வீடுகளும், ஞானமும், கல்வியறிவும் உண்டாம். கண்ணியவானகுவன் எ - று. 5

அறிவுமிகும்புலவனுஞ்சட்டாட்டவியந்தனிலே
யரும்பாவியுடன்கூடிச்சுபர்நோக்கில்லாத
குறியுடையோனகிடிலுந்தனதான்யநாசம்
குவலயத்திற்பரதேசசஞ்சாரங்கொடுக்கும்
சிறியவர்கள்பகையுண்டாம்நீரிழிவுரோகஞ்
சேருமந்தப்பாவியுடன்நீசத்திலிருந்தால்
வருமைதரும்நாற்காலிநாசமுடன்கலகம்
வரும்விலங்குண்டாகுமின்னம்வகுத்திடக்கேள்மானே

(இ - ள்.) அறிவு மிகவுண்டாக்கும் புதன் 6, 8, 12-ஆமிடங்களில் பாபருடன் கூடி, சுபர் பார்வை பெருமல் நின்றால், பொருள், தான்யம் நாசமாம். பூமியில் பரதேச சஞ்சாரம் செய்வான். அற்பர்கள் பகையுண்டாம். நீரிழிவு ரோகமுண்டாம். புதன் நீசத்தானத்தில் நின்றால், தரித்திரமும், நாற்காலி தோஷமும், கலகம் உண்டாதலும், விலங்கு பூணுதலும் உண்டாகும் எ - று. 6

நேயமிகுஞ்சாதகனுக்கவமிருத்துபயமும்
நிகழ்த்திடுவாய்சுபக்கிரகம்நோக்குறில்நற்பலனும்

ஆயதொருவிரண்டேழுக்கிவனுதனுகி
லவமிருத்துதோஷமுறுமதிகபரிகாரம்
மாயவன்றன்சகஸ்ரநாமஞ்செபிக்கத்தீரும்
மதன்மகுடந்தனை நிகர்த்துநிமிர்ந்துதிருமார்பிற்
பாயுமிருகோடனையுதனஞ்சுமந்தேயிளைத்துப்
பசுங்கொடிபோலசையுமிடைபைந்தொடிப்பெண்ணமுதே.

(இ - ள்.) மன்மத மகுடத்தை யொத்து, மார்பில் நிமிர்ந்து பாய்கின்ற தந்தங்கள்போன்ற ஸ்தனங்களைச் சுமந்து, இளைத்துப் போன பசுமையான கொடிபோலசைகின்ற இடையையும், பசிய வளையலையணிந்த கையையுடைய பெண்ணே! நேயம்பெற்ற ஜாதகனுக்கு அவமிருத்து பயமுமுண்டாம் என்று சொல்லக்கடவாய். சுபக்கிரகங்களால் பார்க்கப்பெற்றால் நல்ல பலனுக நடக்கும். 2, 7-ஆமிடத்திற்கு புதன் அதிபதியாயின் அவமிருத்து தோஷமுண்டாகும். அதற்குப் பரிகாரமாவது, விஷ்ணுவின் சகஸ்ரநாமார்ச்சனை செய்யத் தீருமாம் எ - று. 7

ஆக விருத்தம் 237.

குருதிசை கேதுபுத்தி

பொன்னவனூர்திசையதனிற்கேதுபுத்தியதுதான்
பொருந்துபதினெருமாதம்நாளாறின்பலன்கேள்
அன்னவனுக்கேதந்தார்க்கதனுகினுலும்
அவன்சுபரோடிருந்தாலுமர்ப்பசவுக்கியமாம்
வின்னமுறுந்தரித்திரமுங்கெட்டபோசனமு
மிகுந்ததலையிடிவாதம்பித்தமதிசாரஞ்
சொன்னதொருயிருமலுடனுறுரோகங்குன்மஞ்
சொலுமரசர்கோபமுண்டாமென்றுரைசெய்வாயே.

(இ - ள்.) குருதிசையில் கேதுபுத்தி 11-மாசம், நாள் 6-க்கும் பலன் கேட்பாயாக. வியாழனுக்கு கேது பிரியாமல் சேர்ந்திருந்தாலும், கேது சுபக்கிரகத்தோடு சேர்ந்திருந்தாலும், அற்பமான சௌக்கியமுண்டாம். பின்னமுற்ற தரித்திரமும், கெட்ட போஜனஞ்செய்வதும், தலையிடியும், வாதபித்த நோயும், அதிசாரமும்,

இருமல் நோயும், குன்ம ரோகமும் உண்டாம். அரசர் கோபமும் உண்டாமென்று சொல்வாயாக எ - று. 1

உரையாதசட்டாட்டவியந்தனிலேபாவி
யுடன்கூடியிருந்தாலும்பாவிகள்பார்த்தாலுந்
தரைமீதுகளத்ரபுத்ரநாசமுறும்பயமாந்
தரணிமன்னர்கோபமுறுந்தனபந்துநாசஞ்
சிறைசேர்க்கும்விலங்கதனுல்மனவியாதியுண்டாஞ்
சேர்ந்திரண்டேழாமிடத்திலிருப்பானேயாகிற்
குறையாதவவமிருத்துபயங்களத்திரநாசங்
கூறுதற்குப்பரிகாரஞ்சிவபூசைசெய்யே.

(இ - ள்.) சொல்லத்தகாத 6, 8, 12-ஆமிடங்களில் பாவியுடன் கூடி, கேதுவிருந்தாலும், பாவிகளால் பார்க்கப்பெற்ருலும், பூமியில் களத்திரம், புத்திராள் நாசங்காட்டும். பயமுண்டாகும். இராஜாக்களால் கோபமுண்டாம். பொருள், பந்துக்கள் நாசமடையும். சிறைச்சாலையும், விலங்கும் உண்டாம், மனேவியாதியுண்டாகும். 2, 7-ஆமிடங்களில் கேது நின்ருல், அவமிருத்து பயமும், களத்திர தோஷமும் உண்டாம். இது விலகுவதற்குப் பரிகாரமாக சிவபூஜை செய்ய வேண்டும் எ - று. 2

ஆக விருத்தம் 239.

குருதிசை சுக்கிரபுத்தி

செய்யதொருகுருதிசையிற்கவிபுத்தியதுதான்
சேர்மாதமுப்பத்திரண்டதனின்பலன்கே
ளையமில்லாப்புகர்குருவுக்கந்தர்க்கதனுகில்
அதிகதிரிகோணகேந்திரத்தையடைந்தாலும்
மெய்யிலங்குவுச்சசொக்ஷேத்திரத்திருந்தாலுந்தான்
மிகுந்தவுச்சாங்கிசமாகிவீற்றிருந்தானெனிலுங்
கையுடையகயமசுவசிவிகைமிகலாபங்
கருதரிய நாற்காலிபூலாபஞ்சுகமே.

(இ - ள்.) செவ்விதாகிய குருதிசையில் சுக்கிரன் புத்தி வரு 2, மாதம் 8-க்கும் பலன்கேட்பாயாக:—சந்தேகமில்லாத சுக்கிரன் வியாழனேடு கூடி ஒன்ருயிருந்தாலும் 1, 4, 7, 10-ஆமிட கேந்திரம்,

ஆயதொருவிரண்டேழுக்கிவனுதனுகி
லவமிருத்துதோஷமுறுமதிகபரிகாரம்
மாயவன்றன்சகஸ்ரநாமஞ்செபிக்கத்தீரும்
மதன்மகுடந்தனை நிகர்த்துநிமிர்ந்துதிருமார்பிற்
பாயுமிருகோடணையுதனஞ்சுமந்தேயிளைத்துப்
பசுங்கொடிபோலசையுமிடைபைந்தொடிப்பெண்ணமுதே.

(இ - ள்.) மன்மத மகுடத்தை யொத்து, மார்பில் நிமிர்ந்து பாய்கின்ற தந்தங்கள்போன்ற ஸ்தனங்களைச் சுமந்து, இளைத்துப் போன பசுமையான கொடிபோலசைகின்ற இடையையும், பசிய வளையலையணிந்த கையையுடைய பெண்ணே! நேயம்பெற்ற ஜாதகனுக்கு அவமிருத்து பயமுமுண்டாம் என்று சொல்லக்கடவாய். சுபக்கிரகங்களால் பார்க்கப்பெற்றால் நல்ல பலனாக நடக்கும். 2, 7-ஆமிடத்திற்கு புதன் அதிபதியாயின் அவமிருத்து தோஷமுண்டாகும். அதற்குப் பரிகாரமாவது, விஷ்ணுவின் சகஸ்ரநாமார்ச்சனை செய்யத் தீருமாம் எ - று. 7

ஆக விருத்தம் 237.

குருதிசை கேதுபுத்தி

பொன்னவனூர்திசையதனிற்கேதுபுத்தியதுதான்
பொருந்துபதினொருமாதம்நாளாறின்பலன்கேள்
அன்னவனுக்கேதந்தார்க்கதனுகினுலும்
அவன்சுபரோடிருந்தாலுமர்ப்பசவுக்கியமாம்
வின்னமுறுந்தரித்திரமுங்கெட்டபோசனமு
மிகுந்ததலையிடிவாதம்பித்தமதிசாரஞ்
சொன்னதொருயிருமலுடனுறுரோகங்குன்மஞ்
சொலுமரசர்கோபமுண்டாமென்றுரைசெய்வாயே.

(இ - ள்.) குருதிசையில் கேதுபுத்தி 11-மாசம், நாள் 6-க்கும் பலன் கேட்பாயாக. வியாழனுக்கு கேது பிரியாமல் சேர்ந்திருந்தாலும், கேது சுபக்கிரகத்தோடு சேர்ந்திருந்தாலும், அற்பமான சௌக்கியமுண்டாம். பின்னமுற்ற தரித்திரமும், கெட்ட போஜனஞ்செய்வதும், தலையிடியும், வாதபித்த நோயும், அதிசாரமும்,

இருமல் நோயும், குன்ம ரோகமும் உண்டாம். அரசர் கோபமும் உண்டாமென்று சொல்வாயாக எ - று. 1

உரையாதசட்டாட்டவியந்தனிலேபாவி
யுடன்கூடியிருந்தாலும்பாவிகள்பார்த்தாலுந்
தரைமீதுகளத்ரபுத்ரநாசமுறும்பயமாந்
தரணிமன்னர்கோபமுறுந்தனபந்துநாசஞ்
சிறைசேர்க்கும்விலங்கதனுல்மனவியாதியுண்டாஞ்
சேர்ந்திரண்டேழாமிடத்திலிருப்பானேயாகிற்
குறையாதவவமிருத்துபயங்களத்திரநாசங்
கூறுதற்குப்பரிகாரஞ்சிவபூசைசெய்யே.

(இ - ள்.) சொல்லத்தகாத 6, 8, 12-ஆமிடங்களில் பாவியுடன் கூடி, கேதுவிருந்தாலும், பாவிகளால் பார்க்கப்பெற்றாலும், பூமியில் களத்திரம், புத்திராள் நாசங்காட்டும். பயமுண்டாகும். இராஜாக்களால் கோபமுண்டாம். பொருள், பந்துக்கள் நாசமடையும். சிறைச்சாலையும், விலங்கும் உண்டாம், மனோவியாதியுண்டாகும். 2, 7-ஆமிடங்களில் கேது நின்றால், அவமிருத்து பயமும், களத்திர தோஷமும் உண்டாம். இது விலகுவதற்குப் பரிகாரமாக சிவபூஜை செய்ய வேண்டும் எ - று. 2

ஆக விருத்தம் 239.

குருதிசை சுக்கிரபுத்தி

செய்யதொருகுருதிசையிற்கவிபுத்தியதுதான்
சேர்மாதமுப்பத்தியிரண்டதனின்பலன்கே
ளையமில்லாப்புகர்குருவுக்கந்தர்க்கதனுகில்
அதிகதிரிகோணகேந்திரத்தையடைந்தாலும்
மெய்யிலங்குவுச்சசொக்ஷேத்திரத்திருந்தாலுந்தான்
மிகுந்தவுச்சாங்கிசமாகிவீற்றிருந்தானெனிலுங்
கையுடையகயமசுவசிவிகைமிகலாபங்
கருதரிய நாற்காலிபூலாபஞ்சுகமே.

(இ - ள்.) செவ்விதாகிய குருதிசையில் சுக்கிரன் புத்தி வூ 2, மாதம் 8-க்கும் பலன்கேட்பாயாக:-சந்தேகமில்லாத சுக்கிரன் வியாழனோடு கூடி ஒன்றாயிருந்தாலும் 1, 4, 7, 10-ஆமிட கேந்திரம்,

1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணம் பெற்றாலும், உண்மையான உச்சம், ஆக்ஷியாயிருந்தாலும், உச்சாமிசம் பெற்றிருந்தாலும், கையோடு கூடிய யானை, துரகம், பல்லக்கு லாபங்களும், கன்று காலி பூமியும் லாபமுண்டாம் எ - று. 1

சுகமுடையகிரகமதிலிந்திரைசேர்ந்திடுவாள்
துடிமன்னர்சமானமுடன்சாலுவையுஞ்சேருந்
தகவுடையசாரதாதன்னிடம்வந்துறுவள்
தனித்துவடதிசையதனில்தனிமன்னர்பேட்டி
அகமதனிலதிகசுபசோபனமுண்டாகும்
அன்னையுடன்பிதாவினுக்குமதிகசுகமாகும்
நிகரில்லாச்சிவபூசைமிகக்கிடைக்குஞ்சுகமே
நெட்டிலைவேல்விழியுடையநெறிசுரிபூங்குழலே.

(இ - ள்.) நீண்ட இலைபோன்ற வேலாயுதம்போன்ற விழிகளையுடைய, நெரிந்த சுருண்ட கூந்தலையுடையபெண்ணே! சுகமான கிரகத்தில் லக்ஷுமிவசிக்கும் அரசசமானமாவன். சாலுவைவரும், பெருமைபொருந்திய சரஸ்வதி தன்னிடம் வசிப்பள். வடதிசையில் மன்னர்பேட்டியுண்டாம். மனையில் சுகமான பாலன்ன போஜன முண்டாம். பிதா, மாதா சுகமும், ஒப்பில்லாத சிவபூஜை புரிவன் எ-று. 2

பூவினிற்சட்டாட்டவியமதுதனிலேபுகர்தான்
பொல்லாதநீசனுயிருக்கும்வெகுகஷ்ட
மாவலுறும்பந்துஜனக்கலகமுடன்களத்திர
மதுதனக்குப்பீடையுறுமதிபயமுண்டாகும்
மாவலிதாய்ச்சனிசெவ்வாய்ப்புகர்தனைப்பார்த்தாலும்
வருங்கலகம்ராஜநிஷ்டூரங்களுடன்விலங்கு
கேவலமாயதிரோகம்மங்கையர்மூலத்தார்
கிட்டிடுமேவிஷங்கலந்தவன்னபோசனமே.

(இ - ள்.) பூமியில் சுக்கிரன் 6, 8, 12-ஆமிடங்களில் நின்றாலும், பொல்லாத நீசனானாலும் வெகுகஷ்டமும், ஆசையோடு கூடிய பந்துக்கள் கலகமும், களத்திரபீடையும், அதிகபயமும், உண்டாகும். வலிதாகச் செவ்வாய் சுக்கிரனைப்பார்த்தால் கலகமுண்டாம். நிட்டூரமாய் விலங்குண்டாம். கேவலமான அதிகரோகமுண்டாம். மங்கையர்களால் விஷங்கலந்த அன்னமும் கிடைக்குமாம் எ - று. 3

கிட்டிடுமுன்பெண்கொடுத்தமாமனுடன்கலகங்
கிடைத்திடுநற்சோதரற்குப்பீடையதுசேரும்
நட்டமுறுந்தனதான்யகேந்திரகோணத்தில்
நலமாகுமிரண்டுபதினொன்றிலிருந்தாலுஞ்
சட்டமுடன்களத்திரபுத்திரதனதான்யலாபந்
தரணிவளர்பேட்டியுடன்றண்டிகையுஞ்சேரும்
இட்டமிகுநாற்காலிவிர்த்தியதுசுகமு
மெய்துமெனவுரைத்தனர்களிசைக்கணிதர்தாமே.

(இ - ள்.) கிட்டிநிற்கின்ற பெண்கொடுத்த மாமனுடன் கலகங்களுண்டாம். நல்ல சகோதரற்குப் பீடைகாட்டும். தனம், தானியங்கள் நஷ்டமடையும். 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும், 2, 11-ஆமிடங்களிலும் சுக்கிரனிருந்தால், அலங்காரமான களத்திர, புத்திரர், தனம், தான்யங்கள் லாபமாம். ராஜபேட்டியும் பல்லக்குமுண்டாம். நாற்காலி விருத்தியும் சுகமுமுண்டாமென்று கணிதங்கற்ற சோதிடர்கள் இசைத்தனர் எ - று.

கணிதமொடுகவிபலவானுடன்கூடுவானேற்
கருதரியதனலாபஞ்சகோதரவிரோதந்
துணியுமவனபகாரத்தந்தியத்திலேதான்
சொன்னதொருதனநாசஞ்சமரிலபசெயமாந்
தணியதொருசட்டாட்டவியந்தனிலேபுகரோன்
றுனீசமாயுமஸ்தமனமாயுமிருந்தா
லணியாரும்புத்ரகளத்திரநாசம்பயமா
மானபந்துசனவிரோதம்நீரிழிவுண்டாமே.

(இ - ள்.) கணக்காகச் சுக்கிரன் பலவானுடன் கூடியிருந்தால் எண்ணுதற்கரிய பொருள்லாபமும், சகோதரவிரோதமும் தோன்றும். அச்சுக்கிரனின் அபகாரங் கடைசியில் தனநாசமும் யுத்தத்தில் அபசெயமுண்டாம். 6, 8, 12-ல், சுக்கிரன் நீசம் அஸ்தமனமாயிருந்தால், அழகுபெற்ற புத்திர களத்திர நாசமும் பயமும் பந்து ஜனவிரோதமும் நீரிழிவு ரோகமும் உண்டாம் எ - று. 5

ஆகாதவாக்கேழுக்கிவனதிபனுகி
லதிலிருந்தகிரகத்தையதிபதிபார்த்தாலும்

வாகானவவமிருத்துபயமுண்டுவதற்கு
வரும்பரிகாரந்தன்னைவகுத்துரைக்கக்கேளாய்
பாகாருமொழிமாதர்மூலத்தினாலே
பகர்ந்தசிவபூசையதுபண்ணினாற்சுகமாம்
மோகாபிமானமுளவாடவர்கள்மார்பில்
முழுதுழுதபுளகமுலைமோகனப்பைந்தொடியே.

(இ - ள்.) மோகத்தில் மயக்குற்ற ஆடவர்களின் மார்பில் முழுதும் உழுத தேமற்படர்ந்த ஸ்தனங்களையும், அழகிய பசிய வளையல்களையணிந்த கையையுமுடையவளே! முடியாத 2, 7-ஆமிடத்திற்கு, சுக்கிரன் அதிகாரியானாலும் 2, 7-ல் இருந்த கிரகத்தைச் சுக்கிரன் பார்த்தாலும், பொருத்தமான அவமிருத்துபயமுண்டாம். அதற்கு பரிகாரம் வகையாகச்சொல்வேன். பாகுபோன்ற சொல்லையுடைய பெண்களால், சிவபூஜைசெய்தால், அவமிருத்துநீங்கி சுகப்பிராப்தியுண்டாம் எ - று. 6

ஆக விருத்தம் 245.

குருதிசை சூரியபுத்தி

தொடியேதாரகைக்கேள்வன்றிசையில்ரவிபுத்தி
தோன்றிவருமாதமொன்பானாட்பதினெட்டினிலே
வடிவாகுமிரவிகுருவுக்கந்தர்க்கதனாய்
வளர்கேந்திரதிரிகோணம்பற்றியிருந்தாலுங்
கொடிதானவட்டமத்தானத்தான்பார்த்தாலுங்
குருபுத்தியாதியிலேசிரநோயுஞ்சுரமும்
படிமீதுகுடியிருந்தகிரகமும்போங்கிலேசம்
பாவமதில்மனதுவரும்பருவிலங்குண்டாமே.

(இ - ள்.) வளையலையணிந்த கையையுடையவளே! வியாழதிசையில் சூரியபுத்தி மீ 9, நாள் 18-ல் நடத்தும் பலனைக் கேட்பாயாக:—கூராகிய சூரியன் வியாழனுக்குப் பிரியாதவனாகி ஒன்றாயிருந்தாலும் 1, 4, 7, 10-ஆமிடகேந்திரத்தும், 1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணத்து நின்றாலும், கொடிய அட்டமத்தானதிபன் பார்த்தால்

குருபக்தியும், பின்னால் சிரநோவும், சுரமும், பூமியில் குடியிருந்த வீடு மாறுதலும் கிலேசமுண்டாம். பாவகாரியங்கள் செய்வதில் மனதும், விலங்கு பூணுதலும் உண்டாகும் எ - று. 1

விலங்குடனே சத்துருவாற்பீடைபயமாகும்
விருதாவிற்கலகமுறுமேலாங்கேந்திரத்தில்
நலங்கொளுஞ்சொக்ஷேத்திரதிரிகோணத்திலிருந்து
நற்சுபரால்நோக்குறினுந்தனதான்யலாபங்
பெலங்கொள்மகாகீர்த்திவஸ்திராபரணம்பூலாபம்
பேசரியசட்டாட்டவியந்தனிலேயிரவி
கலந்திருக்கிற்பாவியுடனேகூடிலேனுங்
கருதரியநீசனுயிருந்தாலுங்கேளே.

(இ - ள்.) விலங்கோடு சத்துருவாலும் ரோகத்தாலும் பயமுண்டாம். பிரயோசனமில்லாக் கலகங்களுண்டாம். மேலான 1, 4, 7, 10-ஆமிடகேந்திரத்தில் 1, 5, 9-ஆமிட திரிகோணத்திலிருந்தும், ஆட்சியாயிருந்தாலும், சுபரால் பார்க்கப்பெற்றால் தன தான்யம் லாபமும் பலமான கீர்த்தியும், வஸ்திராபரணமும் பூமிலாபமும் உண்டாம். சொல்லுதற்கரிதான 6, 8, 12-ஆமிடங்களில், சூரியன் பாவருடனாவது அல்லது பாவர்களால் பார்த்துநின்றாலும், நீசனுயிருந்தாலும் கேட்பாயாக எ - று. 2

நீசருடபகைமீறுங்காரியங்கள்நாசம்
நெடுந்தேசசஞ்சாரநீதிமன்னர்கலகம்
பூசல்மிகுஞ்சோரராலக்கினியாற்பயமாம்
பொருந்தியதன்வாரத்தில்நாற்காலிநாசம்
பாசமுறும்பந்துசனமித்திரவிரோதம்
பார்த்திபர்களாலதிகதனச்செலவுண்டாகும்
வாசமிகும்புழுகுடனேகளபமிகுங்கலந்து
வரைத்தனத்திற்பூசியிடுமான்விழிப்பெண்ணமுதே.

(இ - ள்.) வாசனைமிகுந்த புழுகுடன் கலந்த சந்தனமணிந்து மலைபோன்ற தனங்களும், மான்போன்ற கண்களையுமுடைய பெண்ணமிர்தமே! நீசர்களால் பகையும், காரியங்கள் நாசமும், நெடுந்தேச சஞ்சாரமும், நீதியுடைய அரசர்களால் கலகமும், போராட்டமும், கள்வராலும், அக்கினியாலும் பயமுண்டாம். பொருந்திய நாட்களில்

கன்றுகாலி சேதமும், பாசமான பந்துஜனங்கள் மித்திரர்கள் பகை யும் அரசர்களால் பெருந்தனச்செலவும் உண்டாகும் எ - று. 3

பெண்ணமுதேகேந்திரகோணத்திலிருந்தாலும்
பிசகாமல்மூன்றென்பான்றலத்திலிருந்தாலும்
எண்ணறியதனநாசங்களத்ரபுத்ரநாச
மிராசகோபம்பந்துநாசமுறும்பீடை
நண்ணிவரும்வயிற்றுவலிசுபன்பார்த்திட்டாலும்
நற்சுபனோடேகூடியிருந்தாலுஞ்சுகமாந்
திண்ணமுறும்தனலாபம்ராச்சியலாபங்கள்
சேர்ந்துவருஞ்சுபாசுபங்கள்சேருமிளங்குயிலே.

(இ - ள்.) பெண்ணமிர்தமே! சூரியன் 1, 4, 7, 10 - ஆமிட கேந்திரத்தும் 1, 5, 9-ஆமிடமாகிய திரிகோணத்தும் 3, 9-ஆமிடத்தி லிருந்தாலும் பாவர்களால் பார்க்கப்பட்டால் அளவில்லாத பொருட் சேதமும், களத்திரப் புத்திரர்நாசமும், இராஜகோபமும் பந்துநாச மும் உண்டாம். பீடையான வயிற்றுவலியும் உண்டாம். சுபக்கிர கம் பார்த்தாலும், கூடியிருந்தாலும் சுகமுண்டாம். பலமான தன லாபமும் ராச்சியலாபங்களும் சேர்ந்துண்டாகும். சுபகாரியங்களும், அசுபகாரியங்களும் கலந்துண்டாமென்க எ - று. 5

வேறு

சேராதவிரண்டேழுக்குச்செங்கதிர்நாதனுகில்
வாராதவிலங்குகாலில்வருமவமிருத்துண்டாகும்
நேராமாதித்தன்றன்னை நிதம்நமஸ்காரம்செய்ய
சீராருங்கண்டதோஷஞ்சென்றிடுமென்றுசொல்லே.

(இ - ள்.) பொருந்தாத 2, 7-ஆமிடங்களுக்கு சூரியன் அதி காரியானல், வாராத விலங்குபூணலும், அவமிருத்தும் உண்டாம். இதற்குப்பரிகாரம் சூரியனை நித்தியமாய் நமஸ்காரம் செய்யின், குறிப்பாய் கண்ட தோஷங்கள் விலகும் என்று சொல்லக்கடவாய் எ - று. 5

ஆக விருத்தம் 250.

குருதிசை சந்திரபுத்தி

சொல்லியதோர்குருதிசையிற்சந்த்ரபுத்தியதுதான்
றுகைபெறுமேபதிஞறுமாதமதின்பலன்கேள்
நல்லகுருவுக்குமதியந்தர்க்கதனுகில்
நலந்திகள்கேந்திரகோணமுச்சசொக்ஷேத்திரத்தில்
வல்லதொருபதிஞறுகலையுமொன்ருய்க்கூடி
வந்திருக்கில்ராச்சியலாபம்மதிகக்கீர்த்தி
யில்லமதிற்சிவிகைவருமாபரணஞ்சேரு
மெழிலாருங்களத்ரசவுக்கியமுந்தருமே.

(இ - ள்.) சொல்லப்பட்ட குருவின் திசையில் சந்திரபுத்தி ஷூ 1, மாசம் 4-க்கும் பலன்கேட்பாயாக:—மேன்மையான குருவுக்குச் சந்திரன் விலகாமல் ஒன்றுசேர்ந்து நின்றாலும், நன்மை பிரகாசிக்கின்ற 1, 4, 7, 10-ஆமிடகேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும், உச்சத்துடனுவது, ஆட்சியாவது பெற்று வன்மைபெற்ற 16-கலைபொருந்திய சந்திரனுகவந்திருந்தால், ராச்சியலாபமும் பிரபலமான கீர்த்தியும், கிருகத்தில் பல்லக்கு முதலிய பவுசும், ஆபரணச் சேர்க்கையும், அழகுபெற்ற களத்திர சௌக்கியமும் உண்டாம் எ - று. 1

தருமேனகலைவஸ்த்ரலாபமிகவுண்டாந்
தரணிமன்னர்சன்மானம்பாலனபோசனமுந்
வருமேசாதகனிருக்குமனைதனிற்சீதேவி
வாழ்ந்திருக்குங்கெசமசுவம்நாற்காலிலாபம்
திருமேவுஉத்தரத்திலரசனுடபேட்டி
சேருமந்தமன்னவராலதிபாக்கியமுண்டாங்
கருசாகும்பொன்னுமுத்தராயணத்துரவியுங்
கதிர்மதியுங்கூடிடில்யுத்தகளத்திலபசெயமே.

(இ - ள்.) விதவிதமான வஸ்திரங்களும் லாபம் அதிகமாயுண்டாம். அரசர்கள் சன்மானம் பெறுவன். பாலன்னபோஜன முண்டாம். இந்த ஜாதகருக்கு மனையில் ஸ்ரீதேவி வாசம்பெறுவள். ரத, கஜ, துரக, பதாதிகள் உண்டாம். கன்றுகாலி சேர்க்கையும், உத்தரதிக்கில் அரசர்களின் பேட்டியுண்டாம். அரசரால் அதிகமான பாக்

இயங்கள் சேரும். உத்தராயணத்தில் சூரியனும் சந்திரனும் ஒன்று கூடி நிற்கில் (அமாவாசை) பொன், பொருள், சேதம், யுத்தத்தில் அபஜெயமுமுண்டாம் எ - று. 2

செயமில்லாச்சட்டாட்டவியந்தனிலேமதிதான்
சீரணமாய்த்தானிருக்கிற்கீர்த்திதனநாசம்
நரமில்லாப்பந்துஜனராஜமன்னர்கோபம்
நாடியிடுமனைபோகும்பீனிசரோகமுமாம்
பயமுள்ளநீரிழிவுரோகமிகவுண்டாம்
பாக்கியகோணத்திருந்தால்விபசாயலாபம்
வயமுள்ளதிருச்சேரும்பூலாபஞ்சுகமாய்
வஸ்த்ரபூஷணங்கிரகவாகனமுண்டாமே.

(இ - ள்.) செயமில்லாத 6, 8, 12-ஆமிடத்தில் சந்திரன் க்ஷீணம் பெற்றிருக்க கீர்த்தியும் பொருளும் நாசமாம். நயமில்லாத பந்து ஜனங்களும், அரசர்களும் கோபமடைவார்கள். குடியிருந்த மனையும், பாழாகும். பீனிசரோகமுண்டாம். நீரிழிவுநோயும் உண்டாகும். 1, 5, 9-ஆமிடங்களில் சந்திரனிருந்தால் விபசாயலாபமும், வெற்றி பெற்ற லக்ஷிமிகரம் உண்டாம். பூமிலாபமும், சுகமான வஸ்திரம், பூஷணலாபங்களும், கிரகம் வாகனங்களுமுண்டாம் எ - று. 3

மேவியிடும்வாக்கினிற்பாக்கியத்திலிருந்தாக்கால்
வெகுதனதானியமொடுபல்பூஷணமும்லாபம்
பூமிதனிற்றளகர்த்தத்துவமதுவுமுண்டாம்
போந்தாரெட்டீராறிற்பாவியுடன்கூடி
லாவதுறுந்தனநாசமிராசகோபமுமா
மக்கினியாற்சோரராற்பயஞ்சுரமுங்குளிருங்
கேவலமாய்ச்சிரநோவாஞ்சுபன்கூடிப்பார்க்கிற்
கெண்டையின்மடமாதேவெகுசவுக்யமிகுமே.

(இ - ள்.) கெண்டைமீனையொத்த கண்களையுடையாய்! பொருந்து கின்ற 2, 9-ஆமிடத்தில் சந்திரனிருந்தால் அதிகமான தானிய லாப மும் பல ஆடை ஆபரணங்களும் லாபமாம். புவியில் தளகர்த்த உத்தியோகமும் உண்டாம். பெயர்ந்து 6, 8, 12-ஆமிடங்களில் பாவரோடுகூடிய சந்திரனுகில், தனங்கள் நாசமாவதும், அரசர்களின்

கோபமும், அக்கினி திருடர்களாற் பயமும், குளிர்காய்ச்சலும் கேவலமான சிரநோயும் உண்டாம். சுபக்கிரகமானது சந்திரனைக்கூடினு லும் பார்த்தாலும், அதிகமான சௌக்கியங்கள் உண்டாம் எ - று. 4

வேறு

மேன்மைசேரிரண்டேழுக்குமிருந்ததிபதியேயாகில்
ஆனதோர்தாரநாசமதற்குமேபரிகாரந்தான்
தானுறு துர்க்காதேவிசெபமதுதானேசெய்தால் [லே.
பானுறுபணிப்போற்றோஷம்பறந்துபோமென்றுசொல்

(இ - ள்.) மேன்மையுற்ற 2, 7-ஆமிடங்களுக்கு, சந்திரன் அதிபதியாயின், தாரதோஷமுண்டாம். அதற்குப் பரிகாரங்கேட்பாயாகில், துர்க்காதேவியின் செபத்தைத் தானே செய்துவந்தால் சூரியனைக்கண்ட பனியது தோஷம் நீங்குமாம் என்று சொல்லக்கடவாய் எ - று. 5

ஆக விருத்தம் 255.

குருதிசை செவ்வாய்புத்தி

சொல்லக்கேள்குருதிசையிற்குசன்புத்தியதுதான்
தொகுத்தபதினொருமாதம்நாளாறதாகும்
நல்லசெவ்வாய்குருவுக்கந்தர்க்கதனுயிடினும்
நாடிடுமூன்றாறுபத்துப்பதினொன்றிலேனும்
வல்லமையாமுச்சசொக்ஷேத்திரகேந்திரத்தேனும்
வதிந்திருந்தாலற்பசவுக்கியஞ்சொற்பலாபம்
மெல்லியலேமுற்பாதிதனநாசமாகும்
வியாதியும்பிற்பாதியிலேவரும்பலனைக்கேளே.

(இ - ள்.) மெல்லிய நல்லாய்! குருதிசையில் செவ்வாய் புத்தி மீ 11, நாள் 6-க்கும் பலன்கேட்பாயாக:—செவ்வாய் குருவுக்கு சிநேகனுகி ஒன்றா யிருந்தாலும், நாடுகின்ற 3, 6, 10, 11-ஆமிடங்களிலேனும் உச்சம் ஆட்சிபெற்று, செவ்வாய் நின்றாலும் 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தேனும் இருந்தால், அற்பமான சௌக்கியமும், சொற்பலாபமும், முன்பாதியில் தனநாசமும் வியாதியும் உண்டாம். இன்னும் பிற்பாதியில் உண்டாகும் பலன்களைக் கேட்பாயாக எ - று.

பலனான தனதான்யலாபமிகவுண்டாம்
பதிவாகுமிவன்வீட்டிற்சீர்சுபவிசேடம்
நிலமான தனதான்ய நாசமற்பசவுக்யம்
நேரானதேவதெரிசனமுண்டாம்பின்னே
நலனானபுவிராசர்சன்மானமுண்டாம்
நல்லவஸ்த்திராபரணமுதன்மையுடனெய்தும்
வலிதானராசருடபிலத்தினால்விரோதம்
வந்துவிடுமென்றுசொல்லிவகுத்தனர்முன்னோரே.

(இ - ள்.) பலமான பொருள்களும், தானியங்களும், லாபமுண்டாம். பதியான கிரகத்தில் சிறப்பும், சுபகாரிய விசேஷங்களும், பூமி, தனம், தான்யம், சொற்பலாபமும், சௌக்கியமும், நேர்மையான தேவதரிசனமும் உண்டாம். பின்னும் நன்மையுற்ற பூமி அரசர்களாற் சன்மானமும், நயமான வஸ்திராபரணங்களும், முதன்மைபெறக்கிட்டும். வலிதான ராஜசமுகத்தால் கலகங்களும் உண்டாம் என்று சாஸ்திரங்கள்கற்ற முன்னோர்களால் சொல்லப்படுகின்றதாம் எ - று. 2

வந்தவன்றான்சட்டாட்டவியந்தனிலேயிருந்து
வளர்பாக்கியாதிபதிசேய்தனைப்பார்த்தாக்கால்
பிந்திவருமற்பசுகலாபமிகுஞ்செலவாம்
பெருகேந்திரகோணத்தையடைந்திருந்தானேனுஞ்
சொந்தமுடனென்பதுபன்னொன்றிலிருந்தாலுஞ்
சுகமானபோசனமும்ராசசன்மானமுமாஞ்
செந்திருவைநிகர்மாதேவட திசையிற்செயமுஞ்
செகராசராற்பூமிலாபமுமுற்றிடுமே.

(இ - ள்.) செந்திருவை நிகர்த்த மாதே! செவ்வாய் 6, 8, 12-ஆமிடங்களிலிருந்து 9-ஆமிடத்ததிபனால் பார்க்கப் பெற்றால், பின்னால் சொற்பமான சுகங்களும், லாபமும் உண்டாம். பின் செலவும் உண்டாம். 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட கேந்திரமும் பெற்று இருந்தாலும், 11-ஆமிடத்தில் நின்றாலும், சுகமான போஜனமும், ராசசன்மானமும் உண்டாம். வடதிசையில் ஜெயமடைதலும், அரசரின் பூமியும் வந்து சேருமாம் எ - று. 3

பூமிமகன்சுபனோடேகூடியிருந்தானேல்
பூமன்னர்சன்மானஞ்சிவிகைவரும்நடுவில்
மாருதமாங்கடைசியிலுமதிககஷ்டம்பாவர்
தன்னோடேகூடியிடிற்றனதான்யமுடனே
நேமகமாய்விபசாயநாசமுறும்பின்பு
நேத்திரத்தில்வியாதிவரும்பரதேசகமனஞ்
சாமியிவனிரண்டேழுக்காகிடுவானாகிற்
சாருமவமிருத்துதனக்கன்னதானஞ்செய்யே.

(இ - ள்.) அழகிய சுபக்கிரகங்களோடு கூடி, செவ்வாய் மேற் சொன்ன இடங்களில் நின்றால், அரச சன்மானமும், பல்லக்குமுண் டாம். பின்னால் கஷ்டமும் உண்டாம். அசுபர்களோடுகூடி செவ் வாய்நின்றால், பொருள், தானியம், விபசாய நாசமடையும். நேத்திர வியாதியுண்டாம். பரதேச சஞ்சாரமும் உண்டாம். செவ்வாய் 2, 7-ஆமிடங்கட்கு அதிகாரியாயின், பொல்லாத அவமிருத்து வந்து சேருமாம். இதற்குப் பரிகாரம், ஏழைகளுக்கு அன்னதானஞ்செய்ய நன்மையுண்டாம் எ - று. 4

ஆக விருத்தம் 259.

குருதிசை இராகுபுத்தி

தானான குருதிசையிலிராகுபுத்திமாதந்
தானிருபத்தெட்டுடனேமூவெட்டுநாளாம்
வானாருங்குருவுக்குப்பாம்பத்தர்க்கதனாய்
வரும்பாவியுடன்கூடினாலுங்கேந்திரத்தி
லானாலுந்திரிகோணத்தடைந்திருந்தாலுந்தா
னதிகசண்டையரசர்பயமவன்கிராமந்தனிலே
மானேகேள்தனதானியநாசமுறுங்களத்திர
மகவுடனேயிஷ்டபந்துதனிநாசமாமே.

(இ - ள்.) மான்போன்ற சாயலாய்! குருதிசையில், ராகுபுத்தி வருடம் 2, மாசம் 4, நாள் 24-க்கும் பலன் கேட்பாயாக. குருவுக்குப் பாம்பாகிய ராகு, ஒன்று சேர்ந்து, பிரியாமல் நின்றாலும், பாவியுடன் கூடினாலும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தில் இருந்தாலும், அதிக

மான சண்டையும், அரசர்களால் பயமும், கிராமத்தில் அதிகக் கலகங்களும், தனதானியங்கள் நஷ்டமும், களத்திரம், புத்திரர், பந்துக்கள் நாசமுண்டாம் எ - று. 1

நாசமுறும்விதவையுடன்கூடிடுவனப்பால்
நற்களத்திரகிலேசமுமுஞ்சுபன்கூடுவானேல்
நேசமுறுஞ்சுபாசுபங்கள்பூமிசொற்பலாபம்
நேரானசோதரமும்விரோதமிகவுண்டாம்
பேசரியசட்டாட்டவியந்தனிலேயிருந்தால்
பெருத்திடுந்தீயாற்சோரராலரசர்பயமாந்
தேசமதிற்சாதகற்குநீரிழிவுபீடை
சேர்ந்திடுமென்றுரைத்தனர்சோதிடக்கணிதர்தாமே.

(இ - ள்.) கேடுத்தன்மைபெற்ற விதவைகளின் சம்போகமும், களத்திரத்தால் கிலேசமும் உண்டாம். சுபக்கிரகம் கூடினும், பார்க்கப்பட்டாலும், துக்கமும், சுகமும் மாறிமாறி நடக்கும். சகோதர விரோதமும் உண்டாம். ராகு 6, 8, 12-ஆமிடங்களில் நின்றால், திருடர், அக்கினி, அரசர்களாற் பயமும், தேகத்தில் நீரிழிவு பீடையும், உஷ்ணரோகமும், விஷமான ரோகங்களும் உண்டாகுமென்று தொன்னூன்முறையான சோதிடங்கற்ற வல்லவர்கள் தொகுத்துச் சொல்லுகின்றனர். 2

திடமானகேந்திரகோணத்தையடைந்தாலும்
செய்யசுபர்பாவியுடனேகூடினாலும்
அடைவானதாயாதிவிபகாரமுண்டாம்
அபகீர்த்திபரதேசசஞ்சாரமுடனே
படராகுஅபகாரத்தாதியிலேகட்டம்
பகர்நடுவிலந்தியத்தில்வெகுசவுக்கியமாகும்
வடமேருநிகரானமுலைக்கொடிமின்னாளே
வகுத்துரைத்தார்பராசரனார்வடமொழியிற்றானே.

(இ - ள்.) மகாமேருவொத்த ஸ்தனங்களையும், கொடிபோன்ற இடையையுமுடையவளே! ராகு கேந்திரகோணங்களில் நின்றாலும், செவ்வையான சுபர்களால் பார்த்தாலும், பாவியோடு கூடிநின்றாலும், பார்த்தாலும், மிசிரபலமுண்டாம். தாயாதி விவகாரமும், அபகீர்த்தி

யும், அந்நியதேச சஞ்சாரமும் உண்டாம். ராகுவின் முதல்பாகத்தில் கஷ்டமான பலன்களும், நடுப்பாகமும், கடைப்பாகமும், வெகு சௌக்கியங்களுண்டாம் என்று பராசரனர் வடமொழியில் சொன்னதைத் தமிழ் மொழியில் கூறுகின்றேன் எ - று. 3

பராசரனுருரைத்தபடியாறெட்டீராறிற்
பதிந்திருக்குந்திசைநாதன்றன்னுடனேகூடக்
கராசலம்போலுடன்ராகுவதிந்திருப்பானகிற்
காசினியிற்சுபமாகுங்கருதுமிரண்டேழுக்
கிராசனுயிவனிருந்தால்வருந்தேகநாச
மிசைந்தகளத்திரநாசமனேபீடையுண்டாஞ்
சராசரமெல்லாநிறைந்தயிரவிதனைநிதமுந்
தம்பதியோடேபணியச்சகலசுகந்தானே.

(இ - ள்.) மேலும், 6, 8, 12-ஆமிடங்களில் திசைநாதனுன குருவிருக்க அதோடுகூடி ராகுவும் இருப்பானகில், பூமியில் வெகு சுகமுண்டாம். 2, 7-ஆமிடங்களுக்கு அதிபனுனல், தேகநாசமும் பொருந்தி, களத்திர நாசமும், மனேவியாதியும், அவமிருத்துமுண்டாம். இத்தோஷம் நீங்குவதற்கு சூரிய நமஸ்காரத்தை, சதி—பதியாகிய இருவரும் கலந்து செய்யில் துக்கம் நீங்கிச் சுகமுண்டாம் எ - று. 4

ஆக விருத்தம் 263.

சனிதிசைப் படலம்

சகல்புவிதனைவிளக்குமிரவிமகன்றிசையிற்
ருனுறும்பத்தொன்பானுண்டினிற் பலனைச்சொல்வேன்
தகவில்லாவிலங்குவரும்ராசர்சோராக்னி
தரும்பயமாந்தனதான்யமிகநாசமாகும்
புகலரியபரதேசசஞ்சாரமுடனே
பொருந்துபிதிர்வர்க்கமதில்நாசமதுசெய்யும்
மிகவிந்தச்சனிதிசையுற்றிடும்போதுண்டாகு
மேதினியிலுச்சனுய்ச்சனியிருந்தார்கேளே.

(இ - ள்.) பூமி அனைத்தையும் விளக்குகின்ற சூரியன் மகனுன சனிதிசையின் வருஷம் 19-ன் பலன்களைக் கேட்பாயாக. பெருமை

யில்லாத விலங்குண்டாகும். அரசர், சோரர், அக்கினியால் பயமும், தனம், தானிய நாசங்களும், பரதேச சஞ்சாரமுண்டாம். பிதிர் வர்க்க நாசமும், திசையின் ஆரம்பத்தில் செய்வான். உச்ச சனியா யிருந்தால் பலன்களைக் கேட்பாயாக எ - று. 1

தாலமதிற்கிராமமொடுபூமிவித்தைலாபந்
தன்பிதா நாசமுடன்பந்துசனக்கலகம்
நீலனுமேசொக்ஷேத்திரகேந்திரத்திலிருந்தால்
நீங்கரியபரதேசசஞ்சாரமுடனே
பாலைவனந்தனில்வாசஞ்செய்திடுவன்மூன்று
பத்தாறுபதினொன்றிலிருந்திடுவானாகில்
ஞாலமிகுபலனுண்டாங்களத்ரபுத்ரலாபம்
நற்சிவிகைவஸ்த்ராபரணமுமுண்டாமே.

(இ - ள்.) கிராமங்கள், பூமி, வித்தை லாபங்களுண்டாம். பிதா பந்து ஜனங்களில் கலகமுமுண்டாம். சனி ஆட்சிபெற்று கேந்தி ரத்திலிருந்தால், நீங்காத பரதேச சஞ்சாரமும், பாலைவன வாசமும் உண்டாம். 3, 6, 10, 11-ஆமிடங்களில் சனிநின்றால், பூமியில் மிகுந்த பலனுண்டு. களத்திர, புத்திர லாபமும், பல்லக்கும், வஸ் திராபரணமும் உண்டாமென்று சொல்லுக எ - று. 2

மேதினியிற்கேந்திரகோணந்தனிலேகாரி
வீற்றிருக்கிலகீர்த்திராசசன்மானங்கள்
சோதிமிகுமாபரணம்வஸ்திரலாபங்கள்
சுகமதிகமாகவுண்டுவாக்கெட்டுவியத்தில்
நீதியிலாதிவனிருக்கில்அரசரால்நாசம்
நீங்காதுகளத்திரத்தின்பீடைதொழில்நாசம்
மோதியிடில்விபசாயத்தாற்பூமிலாப
முற்றசயரோகமாதியிற்களத்ரம்போமே.

(இ - ள்.) பூமியில் சனி, 1, 4, 7, 10-ஆமிட திரிகோணத்தும் நிற்கில் அதிகமான கீர்த்தியும், சன்மானங்களும் பெறுவன். ஒளி மிகுந்த நீலரத்தினாபரணங்களும், வஸ்திரங்களும் லாபம். அதிக சுகமனுபவிப்பவனும். 6, 8, 12-ஆமிடங்களில், நீசம் பகையான சனியாயிருந்தால், அரசரால் நாசம், களத்திர பீடை, தொழில் நாசம், விபசாயத்தால் பூமி நஷ்டம், க்ஷயரோகமும், திசை ஆரம் பத்தில் களத்திர தோஷமும் உண்டாம் எ - று. 3

திரமானசகோதரங்கள்விரோதமிகவாகுந்
திசைமத்யப்பரதேசசஞ்சாரத்துடனே
விரைவாகப்பரதேசவாசமுமுண்டாகும்
வீணுகாபாலன்னபோசனமுங்கிடைக்குந்
தரைமீதுகடைசிதனிலதிகட்டமாகுந்
தங்குமருப்பினைப்பழித்துச்சகோரமதைச்செயித்தே
வரையோடுபொருதெழுந்தவமுதரசத்தேனை
வைத்திடும்பொற்கலசமெனவளருமுலைக்கொடியே.

(இ - ள்.) யானை மருப்பைப்பழித்து, சகோரப் பக்ஷியைச் செயித்து, மலையோடு போர்செய்து, எழுந்து நின்று, அமிர்தரசம், தேன்களையும் வைத்துக்கட்டிய பொற்கலசம்போன்று வளருகின்ற ஸ்தனங்களையுடைய பூங்கொடிபோல்வாய்! திறம்பெற்ற சகோதரர்களின் விரோதமுண்டாம். கடல் மத்தியப் பிரதேச சஞ்சாரமுண்டாம். பரதேச வாசமும், இப் பலன் வீண்போகாது பாலன்ன போஜனமும் உண்டாம். சனிதிசைக் கடைசிப் பாகத்தில் அதிகமான கஷ்டமுண்டாகும் என்று சொல்வாயாக எ - று. 4

ஆக விருத்தம் 267.

சனிதிசை சனிபுத்தி

கொடியதொருசனிதிசையிற்றனதபகாரந்தான்
கூறுண்டுமூன்றுடனேநாள்மூன்றின்பலன்கேள்
கடியதொருபீடைவருங்கிரகம்போமரசர்
கள்ளராலக்கினியால்வெகுநாசமாகும்
வடிவுடையகளத்திரத்தோடுடன்பந்துநாசம்
வருவிலங்குபந்தனமுந்தாயாதிகலகம்
படியினிலேமுடவன்றன்மாதத்திற்பயமாம்
பரிதியுடமாதமதிற்சுகமெனவும்பகரே.

(இ - ள்.) கொடிதாகிய சனிதிசையில், சனியின்புத்தி வருஷம் 3, நாள் 3-க்கும் பலன் கேட்பாயாக. கடிதாகிய பீடையுண்டாகும். கிரகங்கள் நாசமடையும். அரசர், திருடர், அக்கினியால் நாசமுண்டாம். களத்திரம், பந்துக்கள் நாசங்காட்டும். விலங்கு பந்தனமும், தாயாதி கலகங்களுண்டாம். பூமியில் சனி மாதமாகிய தைமுதல்

ஆனிவரை உத்தராயனத்தில் கஷ்டமும், சூரிய மாதமாகிய ஆவணி முதல் மார்கழிவரை தக்ஷணாயனத்தில் சுகமென்று சொல்வாயாக எ - று. 1

பகராததொருமாதந்தன நாசமாகும்
பதிமூலகோணசொக்ஷேத்திரத்தையடைந்தாலு
மிகவேதான்சுபாங்கிசத்துச்சத்தானந்தனிலே
வின்மீனத்திருந்தாலுமதிகசவுக்கியமாஞ்
செகலாபமதிகீர்த்திபுத்திரலாபங்கள்
செயம்பொருந்துசந்தோஷராசசன்மானமுமாம்
வகையாருஞ்சபைக்கிவனே நாயகனுமாவான்
வளர்பரியுந்தந்தியுடன்வாகனமுண்டாமே.

(இ - ள்.) இதில் சொல்லாத ஆடிமாதத்தில் தனநாசமுண்டாம், பதிவான ஆட்சி மூலத்திரிகோண ராசிகளில் சனியிருந்தாலும், மிகுதலான சுபர்களில் உச்சாமிசதானமாகிய தனுசு, மீனங்களில் இருந்தாலும், சனி அதிக சௌக்கியமும், பூமி லாபமும், அதிகமான கீர்த்தியும், புத்திர லாபமும், செயம்பெற்ற சந்தோஷங்களும், அரச சன்மானங்களும் கொடுப்பன். இன்னும் சபைக்கு நாயகனுமாவதுடன், ரத, கஜ, பரி வாகனங்களுமுண்டாம் எ - று. 2

கனராசரால்நினைத்தகாரியங்கள்கூடும்
கமலமின்னாளிவன்மனையில்வாசமதுசெய்வாள்
வனமாறும்நாற்காலிதன தான்யலாபம்
வந்துவிடுஞ்சட்டாட்டவியந்தனிலேபாவி
தனதாகவிவனுடனேகூடிடுவானெனினுஞ்
சனிநீசமாகவேயிருந்திட்டானெனினு
மனராலுமதிகபயம்விஷபீடையாகு
மாடுமுதலாபமெனவகுத்துரையுமின்னே.

(இ - ள்.) பெரிய அரசர்களால் நினைத்த காரியங் கைகூடுதலும், தாமரை வாசியாகிய இலக்குமியும் இவன் மனையில் குடியிருப்பன். அழகிய நாற்காலி, தனம், தான்ய லாபங்களும் உண்டாம். 6, 8, 12-ஆமிடங்களில் பாவியுடன்கூடி சனியிருந்தாலும், சனி நீசமாக இருந்தாலும், மன்னரால் அதிக பயமும், விஷ பயமுமுண்டாம். மாடுகள், ஆடுகள் லாபமுண்டாமென்று சொல்வாயாக எ - று. 3

மின்னேகேளதிகசண்டையுடன்வயிற்றுக்கடுப்பு
  மிகுகுன்மரோகமுறும்ராகுதனில்சிரநோய்
பின்னேயுமதிகசுரபத்தியினிற்றீயாற்
  பெருத்தகள்ளராற்பயமாந்தானியமுஞ்சேதஞ்
சொன்னாலுமிகுபீடையந்தியத்தில்விவாகந்
  துடிமன்னராதுசுருதிசுகமிகவுண்டாகும்
பன்னுகப்பட்மதனையரசிலையைத்தேரைப்
  பஞ்சபாணன்மனையைப்பழித்தவல்குற்றிருவே.

(இ - ள்.) அரவின் படத்தையும், அரசிலையையும் பழித்த அல்குலையும், ரதியைப் பழித்த அழகினையுடைய திருவே! கேட்பாயாக. அதிகமான சண்டைகளும், வயிற்றுக்கடுப்பு, குன்மரோகம், ராகு சித்திரத்தில் சிரசில் நோயும் உண்டாம். அரசர்களாலும், தீயாலும், திருடராலும் பயமும், தானிய சேதமும், மிகுந்த பீடைகளும், கடைசியில் விவாகமும், மன்னரால் பரிசும், சுகங்களும் உண்டாகும் எ - று. 4

வேறு

வேலுந்திரைவாளுங்கடல்மீனும்பொருவிழியாய்
  மிகுமூன்றிலும்வருமாறிலும்விளலாபமதிலும்
நீலன்றனித்திருந்தானெனிலேனும்மதன்பலன்கேள்
  நிதிதானியமுடனேசுகமுறுவாக்கினிலெட்டில்
ஞாலந்தனையுடையோனுடனிவன்கூடிடிலவமாம்
  நலமில்லவமிருத்தெய்திடும்நாடும்பரிகாரம்
கோலந்திகழொருமண்டலமெட்டீபமுஞ்சனிக்கே
  கொடுத்தேநிதம்வலமாய்வரக்குறைநீங்கியுஞ்சுகமே.

(இ - ள்.) வேலாயுதத்தையும், உரை கழட்டிய வாளாயுதத்தையும், கடலின் மீனத்தையும் பழித்த கண்களையுடையவளே! 3, 6, 11-ஆமிடங்களில் சனி தனித்திருந்தால், அதன் பலனைக் கேட்பாயாக. பொருள் சேர்க்கையும், தானியங்களுமுண்டாம். 2, 7-ஆமிடங்களில் சனி, செவ்வாயுடன் கூடிநிற்கில், அவமானக் கெட்ட பலன்களைக் கொடுப்பதோடு அவமிருத்து தோஷமும் உண்டாம். இதற்குப் பரிகாரம். ஒரு மண்டலம் சனிக்கு எள் தீபமிட்டும், சனிபகவானை வலம்வந்து நமஸ்காரஞ் செய்ய, தோஷம் நீங்கிச் சுகம் கொடுப்பன் எ - று. 5

ஆக விருத்தம் 272.

சனிதிசை புதன்புத்தி

ஆமேசனிதிசையிற்புதனபகாரமதத்துதா [ள்
னறுநான்குடனிறுநான்கெனவவன்மாதமொன்பானு
பூமிதனிற்சனிக்கேயுறுபுதனந்தர்க்கதனுய்ப்
பொருந்துந்திரிகோண்கேந்திரம்புகுந்தாலுமுச்சத்திற்
ருமேவினுஞ்சொக்ஷேத்திரத்திருந்தாலும்பன்னொன்ற
ததிலும்பிதுர்த்தானத்தினிலேனுஞ்சுபாங்கிசமாய்
தாமேயிருந்தாலுஞ்சுபன்றன்பார்வையுற்ருலுந்
தன்ராச்சியம்பரராச்சியந்தருமேயினிக்கேளே.

(இ - ள்,) ஆகுமே சனிதிசையில் புதனபகாரம் வருஷம் 2, மாதம் 8, நாள் 6-க்கும் பலன்களாவன. சனிக்குப் புதன் பிரியா தவனுகி ஒன்ருயிருந்தாலும், 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும், புதன் உச்சத்தானத்திலிருந் தாலும், ஆட்சி பெற்ருலும், 11-ஆமிடத்தில் சுபர்களின் அங்கிச வீட்டைப் பெற்ருலும், சுபர் வீட்டில் புதன் நவாங்கிசத்தில் இருந் தாலும், சுபர்களால் பார்வைபெற்ருலும், ஒப்பற்ற ராஜ்ஜியங்களும், அந்நிய ராஜ்ஜியங்களையும் கொடுப்பன் எ - று. 1

இனிதாகியநரவாகனமிசைராஜர்கள்போக
மியல்பாய்வருமுச்சாங்கிசமிவற்றிலுயிற்சுகமாம்
வனிதாய்நவதீர்த்தந்தரும்வளர்யாத்திரைபலனும்
வருமாருடனிருநாலினும்வகையாவியந்தனிலும்
முனிவானசத்துருக்ஷேத்திரமுடனீசவீடேனும்
முறையாயிருந்தாலுஞ்சனிசேய்பாவியுஞ்சேரில்
தனநாசமுமிறைகோபமுமெதிராளிகள்பயமுந்
தானேவரும்விலங்குண்டெனச்சகமீதினிலுரையே.

(இ - ள்.) பெண்ணே! மனதுக் கினிமைபெற்ற பல்லக்கும், இராஜ போகத்தை யனுபவிப்பவனுமாவன். சுகமும் பெறுவன். புதுமையான தீர்த்தயாத்திரைகளும் உண்டாம். 6, 8, 12-ஆமிடங் களில் புதன் இருந்து, சத்துரு வீட்டையடைந்தும், நீசனுயிருந் தாலும், சனி, செவ்வாய் சேர்ந்தாலும், தனநாசமடைவதும், இரா ஜாக்கள் கோபமும், எதிராளிகளால் பயமும் உண்டாம். விலங்கும் பூணுவான் என்று சொல்வாயாக எ - று. 2

உரைகேந்திரகோணத்தினிலுயர்மூன்றுபன்னொன்றி
லுற்றாலவன்றனக்கேசுகசவுக்யவித்தையுடனே
தரைமீதினில்மிகவாழ்வுறுசகராசர்களாவன்
றனதாகவேவெகுதேசகிராமம்பலசாருங்
குறையாதிதுபலனுதியில்கொடுக்கும்நடுக்கடையில்
கூர்சத்துருபயம்பீடையுங்குலபந்துடன்றனம்போம்
நிறையாகியபிதுர்மாதுருசுகமாஞ்சுபனாலே
நேர்பார்த்திடிலதிலேவரும்பலன்கேளினிநீயே.

(இ - ள்.) வாள்போன்ற விழியுடையாய்! சொல்லக்கூடிய 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும், 3, 11-ஆமிடத்திலும் புதன்நின்றால், சுக சௌக்கியத்தையும், வித்தையும், பூமியில் மிகுந்த செல்வத்துடன் வாழ்வும்பெற்று இராஜனாகுவன். சொந்தமாகப் பல கிராமம், பூமிகளுமுண்டாம். இப்பலன் புத்தி ஆதியில் கொடுப்பன். நடுப்பாகத்திலும், கடைப்பாகத்திலும் கூறுகின்ற சத்துருக்களால் பயமும், பீடையும், பந்து, தனம் நஷ்டமடைவதும், வரிசைபெற்ற தாய் தந்தையர் சுகமும் உண்டாம். சுபக்கிரகங்களால் புதனைப் பார்க்கப்பெற்றால் பலன்களைக் கேட்பாயாக எ - று. 3

கேளாயினிமதிபாக்கியங்கெடிமன்னர்சன்மானங்
கீர்த்திப்பிரபலமாகுவன்கிடைக்குங்கனலாபந்
தாளாதுயர்நரவாகனந்தானேவரும்பந்து
தான்மித்திரகளத்ராதிகள்சார்வஸ்திரலாபம்
வேளாமெனவெழில்மீறுவன்வெகுபூஷணங்கிடைக்கும்
மிகுபுத்தியும்வரும்போதினில்சுகமத்தியமதனில்
வாளார்விழியாய்த்தானியலாபங்கடையதனில் [ரே.
மனஸ்தாபமுண்டாமென்றுமுன்வகுத்தேயுரைத்தா

(இ - ள்.) வாளாயுதம்போன்ற கண்களையுடையவளே! அதிக பாக்கியமும் மன்னர் சமானமான கீர்த்தியும், பிரபலனுமாயிருப்பன். அதிகமானலாபமும் கிடைக்கும். சீக்கிரமாக நரவாகனமுண்டாம். பந்து மித்ர களத்ராதிகள் சேர்க்கையும், வஸ்திரலாபமும் உண்டாம். மன்மதனை ஒப்பான அழகுடையவனாவன். பூஷணங்களும் லாபமுண்டாம். மிகுந்த புத்தி தீக்ஷண்யமும் புத்தியின் ஆரம்பத்தில்

புதனுல் கிடைக்கும் மத்தியபாகத்தில், தனம் தானியம் லாபம் உண்டாகும். கடைசிப்பாகத்தில் மனஸ்தாபங்களும் கலகங்களும் உண்டாகுமென்று பெரியோராகிய சோதிடநிபுணர்கள் முந்நூலில் பிரித்துரைத்தனர் எ - று. 4

வகுத்தேசொலுமாறெட்டிலும்வாகாய்வியந்தனிலும்
வரும்பாவிகளுடன்கூடியெவதிந்தாலவன்றனையே
தொகுத்தேசுகனுடன்கூடினுஞ் சுபன்பார்வையுற்றாலும்
சுகலாபமெல்லாமற்பமதாகுமவன்புத்தி
மிகுத்தாதியில்நரவாகனசுபசோபனலாப
மிகுதர்மமுண்டாகும்நடுவினிலேமனேபோகும்
பகுத்தோதிடில்மிகப்பீடைகள்பலவாய்வரும்போகும்
பராசர்கள்சோராக்கினிபயந்தான்மிகவருமே.

(இ - ள்.) பிரித்துச் சொல்லுகின்ற 6, 8, 12 - ஆமிடங்களில், புதன் பாவிகளுடன் கூடியிருந்தாலும், அதோடு சுபக்கிரகம் சேர்ந்தாலும் சுபர்களால் பார்த்தாலும் சுகலாபங்களெல்லாம் அற்பமாய்க் கொடுப்பான். புத்தி ஆதியில் நரவாகனம் சுபசோபனங்கள் லாபமுண்டாம். நடுப்பாகத்தில் மேல்கண்டபலன் நீங்கும். கடைப்பாகத்தில் பீடையுண்டாகுதலும் பலமாய் சங்கடங்கள்வந்து விலகுதலும், அரசர் திருடர் அக்கினி பயங்களும் உண்டாகும் எ - று. 5

வேறு

வருங்கடையினிலேகட்டம்வாக்கேழுக்குடையோனுகிற்
றருமலமிருத்துண்டாகும்தான்பரிகாரங்கேளாய்
அருமையாய்முடவர்நோயாரந்தகரிவர்கட்கன்னம்
பெருமனதுடனேசெய்யபீடைபோஞ்சுகமுண்டாமே.

(இ - ள்.) மிகுந்த கஷ்டங்களும் உண்டாகும். புதன் 2, 7-ஆமிடத்திற்கு அதிகாரியாயின், அவமிருத்துபலனுண்டாம். இதற்குப் பரிகாரம் கேட்பாயாக:—பெருமையோடு முடவர், குருடர், நோயாளிகள் இவர்களுக்கு பரிசுத்தமனதுடன் அன்னதானம் செய்யில் பீடையான பயம்நீங்கி சுகமுண்டாக்கும் என்பதாம். 6

ஆக விருத்தம் 278.

சனிதிசை கேதுபுத்தி

உண்டாகுஞ்சனிதிசையிற்கேதபகாரந்தா
னுறுமாதம்பதிமூன்றுநாளொன்பானுகுந்
தண்டாதசசியுடனேகேதுறுங்காலத்திற்
சரீரத்திற்பிராணபயந்தனேயர்மிகநாசங்
கொண்டாடும்பாவியுடன்கூடிடுவானுகிற்
குடியிருந்தமனேபோகுமதிகபயம்விலங்கு
வண்டாரும்பூங்கூந்தற்களத்ரபுத்ரநாசம்
வந்துவிடும்பரதேசசஞ்சாரந்தானே.

(இ - ள்.) வண்டுமொய்த்த கூந்தலாய்! சனிதிசையில் கேது புத்தி ஷ 1, மீ 1, நாள் 9-க்கும் பலன் கேட்பாயாக:—சந்திரனோடு கேது சேர்ந்திருந்தால், சரீரத்தோடு பிராணபயமும், புத்திரர்கள் கேடும், கேது பாவிகளுடன் கூடியிருந்தால், குரு யிருந்தாராகில் போய்விடும். அதிக பயமுண்டாக்கும். விலங்குபூணும், களத்திர தோஷமும் வந்துவிடும். அங்கியதேசசஞ்சாரஞ் செய்பவனுமாவன் எ - று. 1

சாரமுறுலக்கினதிபருடனேயிருந்தாற்
ருனதிபுத்தியிலேசவுக்யதனலாபந்
தீரமிகுகெங்காஸ்த்தானத்துடனேயதிக
சிவபூசையுங்கிடைக்குங்கேந்திரகோணத்தில்
வாரமுடனிருந்தாலுஞ்சட்டாட்டவியத்தில்
வந்தாலுமவமிருத்துபரிகாரமதற்கு
வீரமுளசனிவிரதமண்டலமட்டிருக்க
வெகுசுகமுண்டாகுமெனவிளம்பினர்முன்னேரே.

(இ - ள்.) லக்கினதிபதி சுபக்கிரகங்களுடன் நின்றாலும், 1, 4, 7, 10-ஆமிடங்களில் நின்றாலும், புத்தியாதியில் சவுக்கியமும், தன லாபமும், கெங்காஸ்நானமும், அதிகசிவபூஜையும் உண்டாம். 6, 8, 12-ஆமிடங்களிலும், 2, 7-ஆமிடங்களுக்கு அதிகாரியுடன் கேது கூடியிருந்தாலும் அவமிருத்து தோஷங்களுண்டாம். இதற்குப் பரிகாரம் மண்டலநாள் சனிவிரத மிருக்கில் தோஷம் நீங்கிச் சுகமுண்டாகுமென்று சோதிடங்கற்ற முன்னோர்கள் சொல்லினர் எ - று. 2

ஆக விருத்தம் 280.

சனிதிசை சுக்கிரபுத்தி

அணங்கேகேள் சனிதிசையிற்சுக்கிரனார்புத்தி
யதுமுப்பத்துடனெட்டுமாதமதின்பலன்று
ணிணங்குமிந்தச்சுக்கிரனுருச்சசொக்ஷேத்திரத்தி
லிருந்தாலுங்கேந்திரகோணத்திலிருந்தாலுங்
குணம்பெறவெட்டிரண்டுபதினென்றிலிருந்தாலுங்
கூறுபுத்திரகளத்ரசவுக்கியமதிகசுகமாஞ்
சுணங்குபடர்ந்தடிகனத்துப்புடைத்திளகிவிம்மி [சே.
துடியிடைதாங்காதெழுந்ததுணைமுலைப்பெண்ணர

(இ - ள்.) தேமற்படர்ந்து இடமகன்று இளகி விம்மிப் பருத்தும், உடுக்கைபோன்ற இடைதாங்காமல் எழுந்த ஸ்தனங்களையுடைய பெண்கள் நாயகமே! தேவமாதே கேட்பாயாக:—சனிதிசையில் சுக்கிரன்புத்தி வருஷம் 3, மீ 2-க்கும் பலன் கூறுமிடத்து புத்திநாதனான சுக்கிரன் உச்சம் ஆட்சிபெற்று இருந்தாலும், 1, 4. 7, 10-ஆமிடக் கேந்திரம் பெற்றும், 1, 5, 9-ஆமிட திரிகோணம்பெற்றும், குணம் பெறும்படியான 2, 11-ஆமிடங்களில் நின்றாலும் சொல்லுகின்ற புத்திரர் மனையாள் சௌக்கியங்களும் அதிகசுகமுண்டாம் எ-று. 1

செயமிகுந்தகீர்த்தியுடன்பூமிலாபமுமாஞ்
செகராசர்சன்மானந்தீவினிலும்பொருள்கள்
நயமிகுந்துவரும்வியாழநதிசாரமாகி
நாலோனைச்சேர்வானேல்பாக்கியலாபமுமாம்
வயமிகுந்தகாரியதிசாரமாயிருந்த
வனைச்சேர்வானாகில்மகாராசயோகமுமாம்
பயமுறவாறுமிடத்தில்மூடமானாலும்
பகர்ந்திடுஞ்சட்டாட்டவியத்திருந்தாலுங்கேளே.

(இ - ள்.) ஜெயம்படைத்த கீர்த்தியுண்டாம். பூமிலாபமும் ராஜசன்மானங்களும், தூரதீவினின்றும் பொருள்வரத்தும், வியாழன் அதிசாரத்துடன் 4-ஆமிடத்து அதிபனைக்கூடில் பாக்கியலாபமுண்டாம். சனியதிசாரமாயிருந்து 4-ஆமிடத்ததிபனைச் சார்ந்து இருந்தாலும், மிகுந்த ராஜயோகமுண்டாம். பயமுண்டாக்கும். 6-ஆமிடத்தில் வியாழன் சனி சுக்கிரன் மூடமானாலும், சுக்கிரன் 6, 8, 12-ஆமிடங்களில் நின்றாலும் பலன் கேட்பாயாக எ - று. 2

திருந்தாதிதாரமுறும்நாசமனவியாதி
சேர்ந்திருக்குமனைபோகும்பந்துசனக்கிலேசம்
வருந்தாதராஜரால்நிட்டூரஞ்சேரும்
வளர்பாக்கியங்கேந்திரகோணத்தையடைந்தாலும்
பொருந்தாதலாபனுடனிவன்பொருந்தினாலும்
பூமன்னர்சன்மானமதிகசந்தோஷமுமாங்
கிரந்தாதிவித்தையுடன்வஸ்திராபரணங்
கிடைத்திடுமேபெரியோர்கள்நேசமின்னங்கேகேளே.

(இ - ள்.) திருத்தமான தாரம் நாசமடையும். மனவியாதி யுண்டாம். மனைபோய்விடும். பந்துஜனங்கள் கிலேசமும் ராஜாக்க ளால் நிஷ்டூரம் உண்டாம். நிறைந்த பாக்கியங்கள் கேடடையும் என்க. சுக்கிரன் வளர்கின்ற 1, 4, 7, 10-ஆமிடகேந்திரத்தும், 1, 5, 9-ஆ மிட திரிகோணத்தும் 11-ஆம் இடத்ததிபனுடன் கூடியிருந்தாலும், அரசர் சன்மானமும் அதிக சந்தோஷமும் உண்டாகும். சமஸ்கிருத முதலான வித்தையுண்டாம். வஸ்திராபரணங்கள் கிடைத்திடும். பெரியோர்கள் சிநேகமுண்டாவதுடன் இன்னமுங் கேட்பாயாக எ - று. 3

குறையாதுசிவபூசைபுத்திரலாபங்கள்
கோவேந்தர்கிருபையினாற்சிவிகைமிகுலாபம்
நிறைவுபெறுமாறெட்டீராறிலிருந்தாலும்
நீங்கரியயிரவியுடனிவன்கூடினாலுங்
குறைவதாங்களத்ரநாசமும்நேத்ரரோகங்
கூறுதந்தரோகமுடன்குன்மவலிசேருந்
தறைதனிலேமரமேறிவீழ்ந்திடுவனுற்ற
சகோதரமுநாசமுறுந்தாரணிபூங்குழலே.

(இ - ள்.) மாலையணிந்த கூந்தலாய்! குறையாத சிவபூஜையும், புத்திரலாபங்களும், ராஜாக்கள் கிருபையால், பல்லக்கு லாபமும் உண்டாம். 6, 8, 12-மிடங்களில் சுக்கிரன் நின்றாலும், சூரியனோடு கூடியிருந்தாலும், களத்திரநாசமும் நேத்திரரோகங்களும், தந்தரோக மும், குன்மம் வயிற்றுவலியுண்டாம். மரத்தின் மேலேறி விழ்த லும், உற்ற சகோதர நாஸ்தியுமுண்டாம் எ - று. 4

தாரணியில்ராகுவுக்குசத்துருவானாலுந்
 தானேமுன்சொன்னபலன்சரியாகக்கொடுக்கும்
பூரணமாயிரண்டேழுக்கிவனுதனுகிற்
 பொரிகளத்ரகிலேசமுடன்குன்மவலிசேருங்
காரணமாம்பரிகாரமது துர்க்கைபூசை
 கண்டேழைக்கன்னமிடப்பீடைபோஞ்சுகமாம்
வாரணிந்துபுடைத்துவிம்மிமதர்த்துமிகக்கனத்து
 வளர்முலேயைத்தாங்குமிடைவாடிடுமின்னாளே.

(இ - ள்.) கச்சணிந்து அதிலடங்காது புடைத்து உயர்ந்து மதர்த்து அதிகமாகப்பருத்த ஸ்தனங்களே சுமந்துவாடுகின்ற மின்ன லிடையையுடையவளே! பூமியில் சுக்கிரன் குருவுக்கு சத்துருவா யிருந்தாலும் மேற்சொல்லிய பலன் சரியாகப் பலிக்குமாம். சுக்கிரன் 2, 7-ஆமிடங்களுக்கு அதிகாரியாயிருந்தால், களத்திர கிலேசமும், குன்மவலியும் உண்டாகும். இதற்கு காரணமான பரிகாரம் என்ன வெனில், துர்க்காதேவியைப்பூஜித்து ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்யில் பீடைநீங்கிச் சுகமடையும் என்பதாம் எ - று. 5

ஆக விருத்தம் 285.

சனிதிசை சூரியபுத்தி

வாடாதசனிதிசையிலிரவிபுத்தியதுதான்
 வருமாதம்பதினென்றுநாள்பனிரெண்டாகுந்
தோடார்தாமரைநண்பனவன்மகனுக்கேதாஞ்
 சொல்லரியவந்தர்க்கதனுகியிருந்தாலு
மீடானலக்னுதிபதியுடன்சேர்ந்தாலு
 மிவன்புத்தியாதியினிலற்பபயமுண்டாம்
கோடாருங்கனதனத்தாய்நடுங்கடையிலதிகக்
 கொடுங்கட்டமுண்டெனவேகூறினர்முன்னேரே.

(இ - ள்.) யானை மருப்பையொத்த பருத்த தனங்களேயுடை யாய்! வாட்டமில்லாத சனிதிசையில் சூரியன்புத்தி மாதம் 11, நாள் 12-க்கும் பலன் கேட்பாயாக:-இதழ்களேயுடைய தாமரைக்கு நண்ப னை சூரியன் தன் மகனுகிய சனிக்கு பிரியாமல் ஒன்றுயிருந்தாலும்

பலமான லக்கினாதிபதியுடன் சேர்ந்திருந்தாலும் இச்சூரியன் புத்தி ஆதியினில் அற்பமாகிய பயமுண்டாம். நடுப்பாகமும் கடைப்பாகத்திலும் கொடுமையான கஷ்டங்கள் உண்டாகுமென்று சோதிடநூற் கற்ற முன்னோர் கூறினர் எ - று. 1

கூறியிடுஞ்சென்மத்தில்சனியிருப்பானாகிற்
குறித்தபயந்தாயாதியிட்டசனக்கலகம்
மீறியதோர்சத்ருபயம்ராசாக்கள்கலகம்
வியாழநோக்குற்றக்கால்சகலமும்நாசங்காண்
சேறியதோர்சுபனோடேகூடிடுனுஞ்சுபரால்
செயும்பார்வையுற்றாலுங்கூடிவரும்பாக்ய
மாறியுடன்ராகுசனிரவிகூடிநின்றால்
மாபீடைமனவியாதியாகுமின்னங்கேளே.

(இ - ள்.) கூறுகின்ற லக்கினத்தில் சனியிருந்தால் குறிப்பான பயமும் தாயாதி பந்துக்கள் கலகமுமுண்டாம். பெரிய சத்துருக்களால் பயமும், ராஜாக்கள் கலகமும், வியாழன் பார்வைபெற்றால் சகலமும் குணமுண்டாம். தெளிவுபெற்ற சுபர்களோடு சூரியன் கூடி நின்றாலும், சுபர்களால் பார்க்கப்பெற்றாலும் பாக்கியங்கூடுதலும், ராகு சனியுடன் ரவி கூடிநின்றால் பெரிய பீடையுண்டாம். மன வியாதியுமுண்டாம் இன்னும் கேட்பாயாக எ - று. 2

ஆகாதகாச்சலோடதிசாரரோக
மன்னியதேசங்கமனம்நாற்காலிநாசம்
வாகானவுச்சசொக்ஷேத்திரகேந்திரகோணம்
வளர்லாபத்தடைந்தாக்கால்புராணகதைகேள்வி
போகாதுவிபசாயபலமிகவுமுண்டாம்
புகழ்தெய்வகீர்த்தனமாப்புகல்நீசனாற்
பாகாருமொழியாய்சத்ருவீடெய்திடினும்
பன்னிரெண்டெட்டாறினிலேபதித்திடினுங்கேளே.

(இ - ள்.) முடியாத காய்ச்சலும் அதிசாரரோகங்களும் உண்டாம். அந்நியதேசகமனமும், நாற்காலி நாசமும் உண்டாம். அழகுபெற்ற உச்சம் ஆட்சிபெற்று 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணம் [illegible] டத்தும் சூரியன் நின்றால், புராணகதை கேள்வியும் விபசாயபலமும் உண்டாகும். தெய்வபக்தி

தாரணியில்ராகுவுக்குசத்துருவானாலுந்
தானேமுன்சொன்னபலன்சரியாகக்கொடுக்கும்
பூரணமாயிரண்டேழுக்கிவனுதனுகிற்
பொரிகளத்ரகிலேசமுடன்குன்மவலிசேருங்
காரணமாம்பரிகாரமது துர்க்கைபூசை
கண்டேழைக்கன்னமிடப்பீடைபோஞ்சுகமாம்
வாரணிந்துபுடைத்துவிம்மிமதர்த்துமிகக்கனத்து
வளர்முலையைத்தாங்குமிடைவாடிடுமின்னாளே.

(இ - ள்.) கச்சணிந்து அதிலடங்காது புடைத்து உயர்ந்து மதர்த்து அதிகமாகப்பருத்த ஸ்தனங்களை சுமந்துவாடுகின்ற மின்ன லிடையையுடையவளே! பூமியில் சுக்கிரன் குருவுக்கு சத்துருவா யிருந்தாலும் மேற்சொல்லிய பலன் சரியாகப் பலிக்குமாம். சுக்கிரன் 2, 7-ஆமிடங்களுக்கு அதிகாரியாயிருந்தால், களத்திர கிலேசமும், குன்மவலியும் உண்டாகும். இதற்கு காரணமான பரிகாரம் என்ன வெனில், துர்க்காதேவியைப்பூஜித்து ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்யில் பீடைநீங்கிச் சுகமடையும் என்பதாம் எ - று. 5

ஆக விருத்தம் 285.

சனிதிசை சூரியபுத்தி

வாடாதசனிதிசையிலிரவிபுத்தியதுதான்
வருமாதம்பதினொன்றுநாள்பனிரெண்டாகுந்
தோடார்தாமரைநண்பனவன்மகனுக்கேதாஞ்
சொல்லரியவந்தர்க்கதனுகியிருந்தாலு
மீடானலக்னாதிபதியுடன்சேர்ந்தாலு
மிவன்புத்தியாதியினிலற்பபயமுண்டாம்
கோடாருங்கனதனத்தாய்நடுங்கடையிலதிகக்
கொடுங்கட்டமுண்டெனவேகூறினர்முன்னோரே.

(இ - ள்.) யானை மருப்பையொத்த பருத்த தனங்களையுடை யாய்! வாட்டமில்லாத சனிதிசையில் சூரியன்புத்தி மாதம் 11, நாள் 12-க்கும் பலன் கேட்பாயாக:—இதழ்களையுடைய தாமரைக்கு நண்ப னான சூரியன் தன் மகனாகிய சனிக்கு பிரியாமல் ஒன்றாயிருந்தாலும்

பலமான லக்கினாதிபதியுடன் சேர்ந்திருந்தாலும் இச்சூரியன் புத்தி ஆதியினில் அற்பமாகிய பயமுண்டாம். நடுப்பாகமும் கடைப்பாகத்திலும் கொடுமையான கஷ்டங்கள் உண்டாகுமென்று சோதிடநூற் கற்ற முன்னோர் கூறினர் எ - று. 1

கூறியிடுஞ்சென்மமதில்சனியிருப்பானாகிற்
குறித்தபயபந்தாயாதியிட்டசனக்கலகம்
மீறியதோர்சத்ருபயம்ராசாக்கள்கலகம்
வியாழநோக்குற்றாக்கால்சகலமும்நாசங்காண்
சேறியதோர்சுபனோடேகூடிடுனுஞ்சுபரால்
செயும்பார்வையுற்றாலுங்கூடிவரும்பாக்ய
மாறியுடன்ராகுசனிரவிகூடிநின்றால்
மாபீடைமனவியாதியாகுமின்னங்கேளே.

(இ - ள்.) கூறுகின்ற லக்கினத்தில் சனியிருந்தால் குறிப்பான பயமும் தாயாதி பந்துக்கள் கலகமுமுண்டாம். பெரிய சத்துருக்களால் பயமும், ராஜாக்கள் கலகமும், வியாழன் பார்வைபெற்றால் சகலமும் குணமுண்டாம். தெளிவுபெற்ற சுபர்களோடு சூரியன் கூடிநின்றாலும், சுபர்களால் பார்க்கப்பெற்றாலும் பாக்கியங்கூடுதலும், ராகு சனியுடன் ரவி கூடிநின்றால் பெரிய பீடையுண்டாம். மனவியாதியுமுண்டாம் இன்னும் கேட்பாயாக எ - று. 2

ஆகாதகாச்சலோடதிசாரரோக
மன்னியதேசங்கமனம்நாற்காலிநாசம்
வாகானவுச்சசொக்ஷேத்திரகேந்திரகோணம்
வளர்லாபத்தடைந்தாக்கால்புராணகதைகேள்வி
போகாதுவிபசாயபலமிகவுமுண்டாம்
புகழ்தெய்வகீர்த்தனமாப்புகல்நீசனானாற்
பாகாருமொழியாய்சத்ருவீடெய்திடினும்
பன்னிரெண்டெட்டாறினிலேபதிந்திடினுங்கேளே.

(இ - ள்.) முடியாத காய்ச்சலும் அதிசாரரோகங்களும் உண்டாம். அங்கியதேசகமனமும், நாற்காலி நாசமும் உண்டாம். அழகுபெற்ற உச்சம் ஆட்சிபெற்று 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரி[illegible]டத்தும் சூரியன் நின்றால், புராணகதை கேள்[illegible] உண்டாகும். தெய்வபக்தி

யும், தீர்த்தமாடுதலும் உண்டாம். நீசமானாலும், சத்துரு க்ஷேத்திரத்தையடைந்தாலும் 6, 8, 12-ஆமிடங்களிலே இருந்தாலும் பலன் கேட்பாயாக எ - று. 3

பதிவில்லாப்பீடைதலைவலிகாச்சலுடனே
  பகர்ந்தபிதுர்கிலேசமுறுங்காரணமாய்க்கலக
மதியில்லாத்தாயாதியிட்டசனக்கலகம்
  வளரக்னிபயமுடனே நீரிழிவுரோகந்
துதிபெருங்கேந்திரகோணம்லாபத்தானத்திற்
  சூரனுரச்சகோதரநாசங்காட்டுமிந்தப்
புதுமனைபோய்பரதேசசஞ்சாரமாகும்
  புகழ்பெருகுந்தனதான்யநாசமுறுந்தானே.

(இ - ள்.) நடை சஞ்சலங்களும், தலைவலி, காய்ச்சல், பிதாவின் கிலேசமும், காரணமில்லாத கலகங்களும், தாயாதி இஷ்டர்களால் கலகங்களும், அக்கினிபயமும், நீரிழிவுநோயும் உண்டாம். மேலே சொன்னபடி கேந்திரம், திரிகோணங்களிலும், சூரியன் தங்கியிருந்தால் சகோதரநாசமுண்டாம். புதிதான மனையைவிட்டு அந்நியதேச சஞ்சாரமுண்டாம். பெருமைபொருந்திய தனமும் தானியமும் நாசமுண்டாம் எ - று. 4

நாசமுறுமன்னியர்கள்பணிவிடையுஞ்செய்வார்
  நலமில்லா நீசமங்கைசங்கமமுமகால
போசனமுங்கிடைக்குமபகீர்த்திமிகவுண்டாம்
  பொருந்துதொழில்நாசமுறுஞ்சட்டாட்டவியத்தில்
வாசமுறிலதிபீடையதிககட்டவிதமும்
  வளர்மனைபோந்தனச்செலவுசோராக்கினிபயமாம்
நேசமிகுமாடவரையிளநகையாலுருக்கும்
  நேரிழையேபராசரமாமுனியுரைத்தபலனே.

(இ - ள்.) ஆசைமிகுந்த ஆடவரை புன்சிரிப்பால் உருக்குகின்ற ஆபரணமணிந்தவளே! கெட்டவர்கள் பணிவி... ...ம் செய்வார்கள். நன்மையில்லாத நீசஸ்திரி சங்கமும், அகாலபோஜன... உண்டாம். அபகீர்த்தியும் தொழில்நா... 8, 12-ஆமிடங்களில் சூரியன் நின்றால், அதிகமான... ...மும் உண்டாம்.

வளர்கின்ற மனையும் கெட்டுவிடும். தனச்செலவுண்டாம். திருடர்களாலும், அக்கினியாலும் பயம் என்று பராசரமுனிவர் பலன் சொல்லினர் எ - று. 5

வேறு

பலனுறுமிரண்டேழுக்குபதிரவியானபோதில்
நலமிலாதவமிருத்தும்நற்பரிகாரந்தானே
நிலமதிலொளிகொள்சூர்யநமஸ்காரம்நிதஞ்செய்தாக்கா
லிலகியசுகமுண்டாகுமென்றுதானியம்புமின்னே.

(இ - ள்.) பலன்பெற்ற 2, 7-ஆமிடத்திற்கும், சூரியன் அதிபதியாகில், நன்மையில்லாத அவமிருத்துண்டாம். அதற்குப் பரிகாரமாவது, பூமிக்கு ஒளிகொடுக்கின்ற சூரியநமஸ்காரம் தினந்தோறும் செய்யில், துக்கம் விலகி சுகமுண்டாகுமென்று இயம்புவாய் எ - று.

ஆக விருத்தம் 291.

சனிதிசை சந்திரபுத்தி

மின்னிடையாம்சனிதிசையிற்சந்திரன்றன்புத்தி
　மிகுமாதம்பத்தொன்பததன்பலனைக்கேளாய்
நன்னயமாய்க்காரிக்குச்சனியந்தர்க்கதனுய்
　நண்ணிடினும்புதன்பார்வையுற்ருலப்புதனே
டுன்னிவிதுக்கூடிடினும்பட்டாபிஷேக
　முயரிராச்சியலாபமிராசபேட்டியுமா
மன்மதன்றன்னரமனையாயரசிலையைத்தேரை
　மாசுணத்தின்படத்தைவென்றுவளருமல்குற்றிருவே.

(இ - ள்.) அரசிலையையும் தேரையும் பாம்பின் படத்தையும் வென்று, மன்மதன் அரண்மனையாக வளருகின்ற அல்குலையுடையவும், மின்னற்கொடிபோன்ற இடையையுடைய திருவே! சனிதிசையில் சந்திரன்புத்தி ஸூ 1, மாதம், 7-க்கும், பலன்களைக் கேட்பாயாக:— சனிக்கு சந்திரன் பிரியாதவனுகி ஒன்றுசேர்ந்தாலும், புதனுல் பார்க்கப்பட்டாலும், புதனோடு சந்திரன் கூடியிருந்தாலும், பட்டாபிஷேகமும் உயர்வான ராச்சியலாபமும், ராசபேட்டியுமாம் எ - று. 1

திருவேகேள்சிவிகையுடன்வஸ்த்திராபரணஞ்
　சேர்ந்திடுநாற்காலிவரும்பிதுர்மாதுர்சவுக்கியந்

தருமேநற்சுகமெல்லாமுச்சசொக்ஷேத்திரத்தைத்
 தானுடைந்துபூரணசந்திரனுடன்கூடினும்
வருகேந்திரகோணத்திலிந்துவிருந்தாலும்
 வளமாகமுன்சொன்னபலனுகுஞ்சசிதான்
முருகார்பூங்குழலாய்பூரணசந்திரனுகி
 முழுப்பாவியுடன்கூடில்மொழிபலனேக்கேளே.

(இ - ள்.) லக்ஷூமிக்கொப்பானவளே! பல்லக்குடன் வஸ்திராபரணமுமுண்டாம். நாற்காலிவரும், மாதுர்சௌக்கியமும், மற்றும் நல்ல சுகங்களுண்டாம். உச்சம் ஆட்சிபெற்ற பூரணசந்திரனுகி 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும் நின்றாலும், முன்சொன்னபலன்கள் பிரபலியமாம். பூரணசந்திரனுகி முழுமையான பாவியுடன்கூடில் மொழிகின்ற பலனேக் கேட்பாயாக எ - று. 2

பாவியுடன்விதுகூடிற்களத்ரபுத்ரநாசம்
 பகர்மாதுர்நாசமுடன்மிகுபீடையதுவாம்
பூவினிலேகேந்திரகோணத்தினிலுற்றாலும்
 புகலரியமூன்றுபதினொன்றிலிருந்தாலுங்
கோவரசரபிமானந்தனலாபந்தேசங்
 குறைவில்லாக்கிராமமுடன்வெகுலாபமாகு
மேவியமத்தியத்திலந்தியம்வரைக்குந்தானே
 மிகுராசர்பீடைவரும்விரைசெறிபூங்குழலே.

(இ - ள்.) வாசனேபொருந்திய கூந்தலாளே! சந்திரன் பாவியுடன் கூடிடில் களத்திரம், மாதுர் புத்திராள் நாசமாம். மிகுந்த பீடையுண்டாம். 1, 4, 7-10 கேந்திரத்திலும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும் 3, 11-ஆமிடத்தில் நின்றாலும், பூமி அரசரால் அபிமானமும், பொருள்லாபமும், குறைவில்லா பூமிவரத்தும், அதிகமான லாபமாம். சந்திரபுக்தி மத்தியமுதல், அந்தம்வரைக்கும் ராசரால் பீடையுண்டாம் எ - று. 3

பூங்குழலேசட்டாட்டவியத்தினிலேசசிதான்
 பொருவரியபெலவானுய்ப்புகுந்தினிதாயிருக்கி
லாங்கவர்க்குநல்லபோசனமதிகசுகமா
 மண்டலர்கள்நாசமுறுமதிற்பாவிசேரி

லோங்கியவப்பாவியினூற்பார்வையுற்றாலேனு
முறுவிலங்குகிரகம்போம்பீடைபந்துநாசங்
கோங்கவிம்பும்பூங்கரும்பும்பொருதமுலைமொழியாய்
குறித்தனர்சோதிடமுணர்ந்துகூறியவல்லோரே.

(இ - ள்.) கோங் கரும்பை வென்ற ஸ்தனங்களையும், பூங் கரும்பை வென்ற மொழியையுமுடைய பெண்ணே! 6, 8, 12-ஆமிடங்களில் சந்திரன் பெலவானாய் நிற்கில், அவர்களுக்கு நல்ல போஜனமும், அதிக சுகமாம். பூமி நாசமும் உண்டாம். அதனோடு பாவி கூடியிருந்தாலும், பாவிகளால் பார்வைபெற்றாலும், விலங்கும், கிரகம் நாஸ்தியுமடையும். பீடையும், பந்துக்கள் நாசமுமுண்டாம் என்று சோதிடமுணர்ந்து கூறிய வல்லோர் குறித்தனர் எ - று. 4

வேறு

வல்லதோரிரண்டேழுக்குமதிநாதனுகிப்பின்னும்
அல்லல்சேர்பாவியோடேயவன்வந்துகூடுவானேல்
சொல்லுவாய்மரணமந்தத்துன்பங்கள்தீரத்தானே
நல்லதோர்பரிகாரத்தைநாமினிப்புகலுவோமே.

(இ - ள்.) வன்மை பெற்ற 2, 7-ஆமிடங்களுக்குச் சந்திரன் அதிபனுயிருந்தாலும், பாவிகளோடு கூடியிருந்தாலும், மரண பயமுண்டாகுமென்றும் சொல்லக்கடவாய். அந்தத் துன்பங்கள் விலக்க வேண்டுமென்றால், பரிகாரம் சொல்லுவோம் கேட்பாயாக எ - று. 5

ஓமெனும்பிரணவத்தையுறுதியாய்மனதில்வைத்து
நேமமாய்யந்திசந்திநித்தியந்தியானஞ்செய்து
பூமியில்மகேசுரர்க்குப்பூசைசெய்தேழைக்கன்னம்
தாமிடச்சகலதோஷஞ்சார்ந்திடாதகலுந்தானே.

(இ - ள்.) ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை உறுதிபெற மனதில் தியானித்து, அதே நியமமாக நித்தம் அந்தி, சந்தி ஜெபித்தும், மகேசுரபூஜை செய்தும், ஏழைகளுக்கு அன்னதானங்களைத் தாமே செய்யச் சகல தோஷமும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும் என்பதாம் எ - று. 6

ஆக விருத்தம் 297.

சனிதிசை செவ்வாய்புத்தி

சுகமிலாச்சனிதிசையிற்செவ்வாய்தன்புத்தி
சொலுமாதம்பதின்மூன்றுநாளொன்பததற்கு
மிகுசெவ்வாய்மந்தனுக்கந்தர்க்கதனுனாலும்
விளங்கியகேந்திரகோணலாபமுற்றுனேனும்
புகலரியவுச்சசொக்ஷேத்திரத்தடைந்தானேனும்
பொருந்துதசாதிபனுடனேகூடினுனேனுஞ்
சகமதனில்விலங்குதருஞ்சுரதோஷமிஷ்ட
சனனுசம்வாதமொடுபித்தபிணியுறுமே.

(இ - ள்.) சுகமில்லாத சனிதிசையில் செவ்வாய்புத்தி சொல்லுகின்ற வருஷம் 1, மாதம் 1, நாள் 9-க்கும் பலன்களைக் கேட்பாயாக. செவ்வாய் சனிக்குப் பிரியாதவனுகி ஒன்றுயிருந்தாலும், செவ்வாய் 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தேனும், 1, 5, 9-ஆமிடத் திரிகோணத்தேனும், 11-ஆமிடத்திலேனும் தங்கியிருந்து உச்சம், ஆட்சிபெற்றுலும் விலங்குண்டாம். சுரதோஷமுண்டாம். சந்நியாசம் செய்வதும், வாதநோயும், பித்த நோயுமுண்டாம் எ - று. 1

உற்றலக்கினுதிபதியுடன்கூடினுலு
முச்சத்திலிருந்தாலுமொருமூன்றிலாறிற்
பெற்றசமலாபமதிலிவனிருந்தாலுந்தான்
பெருகுமதுசந்தோஷம்வஸ்திரலாபங்கள்
கொற்றவராற்றளகர்த்தஞ்சமரமதிற்செயுமாங்
கூடுசுகம்புதுக்கிரகலாபமதுண்டாகுங்
குற்றமில்லாத்தனலாபம்பால்பாக்யத்துடனே
கூடிவருமென்றுரைத்தார்குறியுணர்ந்தோர்தானே.

(இ - ள்.) லக்கினுதிபதியுடன் செவ்வாய் கூடியிருந்தாலும், உச்சத்திலிருந்தாலும், 3, 6, 10, 11-ஆமிடங்களில் இருந்தாலும், பெருகிய சந்தோஷமுண்டாம். வஸ்திர லாபங்களுண்டாம். அரசரால் தளகர்த்தமும், சமரத்தில் வெற்றியுண்டாம். சுகமுண்டாம். புதுக்கிரக லாபமும் உண்டாம். குற்றமில்லாத பொருட்சேர்க்கையும், பால் பாக்கியத்துடன் கூடிவருமென்று சாஸ்திரக்குறியுணர்ந்த பெரியோர் கூறினர் எ - று. 2

கூடியதோர்லக்கினத்துக்கிவனுடையோனுற்
குறித்தசமரினிற்செயமாங்குவலயமுஞ்சேருந்
தேடியசகோதரத்தால்விரோதமிகவாகுந்
திகழ்ந்துவருமெட்டேழுக்கிவனுதனுகில்
நீடில்லாவிரண்டுடையோனிவன்கூடுவானே
டிசையுமவமிருத்துபயமிதுதீரவென்றுல்
ஆடுங்காவடிமுருகன்றனக்கெடுத்துவேழைக்
கன்னமிடதோஷமது அகலுமவமிலையே.

(இ - ள்.) கூடிய லக்கினத்துக்குச் செவ்வாய் அதிகாரியானுல், குறித்த யுத்தத்தில் ஜெயமடைவன். பூமி சேர்க்கை யுண்டாம். சகோதர விரோதமுண்டாம். 7, 8-ஆமிடங்களுக்குச் செவ்வாய் அதிகாரியாகி 2-க்குடையவனேடு கூடியிருந்தால் அவமிருத்து பயமுண்டாம். இது தீரவென்றுல், ஆடுகின்ற காவடியை முருகனுக்கு எடுத்து ஏழைகளுக்கு அன்னதானஞ்செய்யத் தோஷம் நீங்கும். இது வீண் போகாது எ - று. 3

அவனிமகன்சட்டாட்டவியத்திலிருந்தாலு
மஸ்தமனமானுலுமதிநீசனெனினும்
புவனமதிலரசரால்சோரராற்றியாற்
பொருந்துபயங்கிரந்தியொடுமேகமுமுண்டாகும்
பலமிகுந்தவிலங்குவருங்கிராமம்போந்துணைவர்
பகையாகுந்தாயாதிசனக்கலகமுண்டாந்
தவமுறுகேந்திரகோணலாபத்திற்பெலவான்
றன்னுடனேகூடியிருந்தாலுமினிக்கேளே.

(இ - ள்.) பூமிபாலனுன செவ்வாய் 6, 8, 12-ஆமிடத்தில் நின்றுலும், அஸ்தமனம் நீசம்பெற்றுலும், பூமியில் அரச, சோராக்கினி பயமும், கிரந்திநோயும், மேகநோயுமுண்டாம். விலங்கு பூணலும், கிராம நாசமும், சகோதர பகையும், தாயாதி பந்து கலகமும் உண்டாகும். சேய் 1, 4, 7, 10 கேந்திரமும், 1, 5, 9 திரிகோணமும், 11-ஆமிடமும் பெற்று, பெலவானுடன் கூடினுலும், பலன் கேட்பாயாக எ - று. 4

இனியதொருமூன்றிலிருந்தாலுமிகுந்தவனே
யெழிற்சுபர்கள்பார்த்தாலுமதிகசந்தோஷங்கள்

தனதான்யலாபமுறுங்கலியாணம்நடக்குந்
  தானேநாற்காலிவருமாதியற்பபலனுங்
கனியாகுமத்தியத்திற்சவுக்யதனலாபங்
  கடையதனிற்றனதான்யமுறுநாசமாகும்
தினைதானுமிடைபோகர்தேநெருங்கிப்புடைத்துத்
  திரண்டெழுந்தகனதனச்செப்புடையமடமயிலே.

(இ - ள்.) தினையூடு செல்லாமல் நெருங்கி உயர்ந்து பருத்து எழுந்த கனமான செப்புப்போன்ற தனங்களையுடையவும், இளமையான மயிற்சாயலையு முடையவளே! இனிமையுற்ற 3-ஆமிடத்தில் செவ்வாய் இருந்து அச்செவ்வாயை அழகு பெறும்படி சுபர்கள் பார்த்தாலும், அதிகமான சந்தோஷங்களும், தனதான்ய லாபமும், கல்யாணங்கூடுதலும், நாற்காலிலாபங்களும், ஆதியில் அற்ப பலனுகியும், மத்திய பாகத்தில் சவுக்கிய பலனும், கடைப்பாகத்தில் தனம், தானியங்கள் நாசமடையுமாம் எ - று. 5

செப்பிடக்கேள்சட்டாட்டவியந்தனிலேபாவி
  சேயுடனேயிருந்தாக்காற்சேரும்நீரிழிவு
தப்புதலைவலிகாச்சலெதிராளிசமரிற்
  ருனுண்டாமபசெயமுமரணமும்வந்தெய்துங்
கொப்பிலகுங்குழையுடனேவாதாடிப்பொருதுங்
  கூராரும்வடிவாளைவேலினையும்பழித்து
மைப்படியும்விழியிணையாலாடவர்களுயிரை
  வாட்டிடுஞ்சிற்றிடையுடையமங்கையருக்கரசே.

(இ - ள்.) ஆபரணமணிந்த காதுகளுடன் வாதாடியும், கூர்மை பெற்ற வேலையும் வாளையும் பழித்து, அஞ்சனம்பெற்ற இணையான கண்களால் ஆடவர்களுயிரை வாட்டுகின்ற சிறிய இடையையுடைய மங்கையர்க்கரசே! சொல்லக் கேட்பாயாக. 6, 8, 12-ல் செவ்வாய் பாவிகளுடன் கூடியிருந்தாலும், பார்த்தாலும் நீரிழிவு உண்டாம். கொடுமையான தலைவலி, காய்ச்சலான நோயும், எதிராளிகள் யுத்தத்தில் அபஜெயமும், மரணமுமுண்டாம் எ - று. 6

ஆக விருத்தம் 303.

சனிதிசை இராகுபுத்தி

வேறு

மங்கையேசனிதிசையில்ராகுவகுத்தத்தியதேதெனில்
மாதமுப்பதுநாலினேடாறுநாளதாமதுதானும்
துங்கமாகியமந்தனுக்கிவனந்தரர்க்கதனுகிலுஞ் [ம்
சொல்லுகின்றமனேவியாதிகள்கலகமோதிடபீடையா
பொங்கமாகிறஞாதிமார்விபகாரமேவிடுநாசமாம்
பொருளுநாசமிராசகோபமதாகுமேபுவிநாசமாந்
தங்குதேசமகன்றுபின்பரதேசமேயுறுவானவன்
றனியக்குடமதுநிகர்த்தபயோதரத்திருவாமினே.

(இ - ள்.) பொற்குடம்போன்ற ஸ்தனங்களையுடைய திருவே! சனிதிசையில் ராகுபுத்தி வருஷம் 2, மாதம் 10, நாள் 6-ன் பலன் கேட்பாயாக. சனி ராகுவுக்குப் பிரியாதவனுகி ஒன்றுயிருந்தாலும், மனேவியாதியும், கலகங்களும், அதிகமான பீடையுண்டாகுமாம். பொங்கமாகின்ற ஞாதிகள் விவகாரமும், பொருள் நாசமும், அரச ரால் கோபமுண்டாம். பூமி நாசமுண்டாம். இருந்த தேசம் விட்டு அந்நியதேச சஞ்சாரமும் செய்வான் எ - று. 1

திருவிளங்கியலக்கினுதிபனுடனுரைந்திடுவானெனிற்
சேருமாதியிலேசவுக்கியநடுவிலுங்கடையதிலுமே
வருமிகுந்ததிகஷ்டபீடைகள்வாகுசேர்தனதானிய
வகையினுசமதாகுமூன்றினில்மருவுமாறினிற்பத்தினிற்
பொருளதாகியலாபமீதுபுகுந்திடிலிடபமும்
போற்றுனற்கடகத்தினேடுறுபூவை வீணையிலெய்திலு
தருமிராசசன்மானவஸ்திரபூஷணுதிகலிலாபமாந் [ந்
தானினைத்ததுபலிதமாஞ்செயசர்வகாரியலாபமே.

(இ - ள்.) லக்ஷிமீகரம் பொருந்திய லக்கினுதிபதியோடு ராகு சேர்ந்துநின்றால், புத்தி ஆதியில் சௌக்கியமும், நடுவிலும், கடையிலும் அதிக கஷ்டமான பீடைகளுண்டாம். தனம், தானியங்கள் நாசமுண்டாம். 3, 6, 10, 11-ஆமிடங்களில் ராகு நின்றாலும், கடகம், ரிஷபம், மிதுன விராசிகளில் நின்றாலும், அரச சன்மானங்களும், பூஷணுதிகள் லாபமும் நினைத்தகாரிய பலிதமும், சர்வ காரிய பலிதமும் உண்டாம் என்று சொல்வாயாக எ - று. 2

காரியத்துடனிருதிமூலகதித்தனற்பயனத்தினிற்
காசினிக்கிறைபேட்டியுண்டிசைகருதுதேவதாபூசையு
சாருமேசனிராகுவாம்விவர்தானுமேமூவரோரிடந் [ஞ்
தானுதித்திடிலேகளத்திரமோடுதந்தையுநாசமாம்
வாறமுற்றிடுமாதுர்நாசம்வகுத்தவிஷ்டகிலேசமே
வந்துசேருமோராறிலெட்டிலும்வளர்வியத்திலுமாயினும்
நேரதுற்றதோர்கோணகேந்திரம்நிற்கிலுஞ்சுபர்கூடினு
நித்யமற்பசவுக்யமாமெனநீபுகன்றிடுவாய்மினே.

(இ-ள்.) காரியமாக நிருதிமூலையில் பிரயாணமும், அதில் ராஜபேட்டியு முண்டாம். ஞானம் கொடுகின்ற தேவதா பூஜையு முண்டாம். லக்கினதிபதியும், சனியும், ராகுவுமாகிய இம்மூவரும் 6, 8, 12-ஆமிடத்தில் நின்றால், களத்திரமும், பிதிருமாதுரும் நாசமாம். இஷ்டர்கள் கிலேசமுமுண்டாம். இம்மூவரும் நேரான 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும் நிற்கில், அற்ப சவுக்கியமுண்டாமென்று கூறுவாய் எ-று. 3

புகலுகின்றதொர்பாவியானவர்புத்தராவொடுகூடினாற்
பொருந்துமேயபகீர்த்தியோடதிபயமுறுங்கனநாசமாந்
தகவுருஞ்சுபருடனிருந்தவர்தங்கள்பாருவைதங்கிடில்
தரணிமன்னர்சமானமுங்கலியாணமுந்தருஞானமே
மிகவிரும்பினுநல்லகர்மமிகுக்குமேவிபசாயமும்
விளங்கிரண்டுடனேழில்மாசுனமேருநாதனுங்கூடிடில்
செகமறிந்திடவருமிகுந்ததிதீதுசேரவமிருத்துவுந்
தீரவேசிவபூசையானதுசெய்திடச்சுபமாகுமே.

(இ-ள்.) சொல்லுகின்ற பாவர்கள் ராகுவோடு கூடிநின்றால், அபகீர்த்தி அடைவதுடன் பயமும், தனநாசமு முண்டாம். சுபருடன் கூடினும், சுபர் பார்வை பெறினும், அரச சன்மானமும், விவாகமுமுண்டாம். ஞானமிகுதியும், நல்ல காரியச் செய்கையும், விபசாய பலிதமும் உண்டாம். 2, 7-ஆமிடங்களில் லக்கினதிபதியுடன் ராகு கூடிநின்றால், பூமியோரறிய அவமிருத்து அதிக தீதோடு கூடியுண்டாகும். அது தீருவதற்குச் சிவபூஜை செய்தால் சுகமுண்டாம் எ-று. 4

ஆக விருத்தம் 307.

சனிதிசை குருபுத்தி

சுகமுறுஞ்சனிதிசையிலேகுருதோன்றிடும்மபகாரமே
சொல்லில்முப்பதுமாதம்நாள்பனிரெண்டதாமதிலேபலன்
மிகவுருஞ்சனியுறையிடந்தனில்வேதனந்தர்க்கதனதாய்
மேவிலுநல்லகோணகேந்திரலாபமீதுறுவானெனில்
அகமகிழ்ந்திடுசுகமுமின்குறுமாடையாபரணங்களு
மரசராலபிமானமுமவரால்நினைத்ததுபலிதமுஞ்
செகதலந்தனிலதிகராச்சியலாபமுந்திடதந்தியுஞ்
சேருமேபரிலாபமோடதிசெல்வமும்பெறுவார்களே.

(இ - ள்.) சுகமான சனிதிசையில் குருபுத்தி ௵ 2, மீ 6, நாள் 12-க்கும் பலன் கேட்பாயாக. சனியோடு குருவும் பிரியாமல் ஒன்றுகூடியிருந்தாலும், 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும் குருநின்றால், சந்தோஷமான சுகங்களும், மின்னுகின்ற ஆடையாபரங்களும், அரசரால் அபிமானமும், அந்த அரசர்களால் நினைத்த காரியங்கள் பலிதமும், பூமியும், இராஜ்ஜியங்கள் லாபமும், திடம்பொருந்திய யானை, குதிரை லாபமோடு, அதிக செல்வமும் பெறுவான் என்பதாம் எ - று. 1

பெருகுமுச்சமடைந்தபொன்னொடுபின்புமேசுபர்கூடினு
பேணியேசுபரங்கிசத்திடைபலமதாயிவனெய்தினுந்[ம்
தருமமுற்றிடும்பிரபுநேசமுந்தனம்புவிகளுமூறுமே
தாரணிதனிற்கீர்த்திசேர்தளகர்த்தத்துவமெய்திடும்
பொருள்மிகுத்திடுவாய்வுதிக்கினிலுடன்வரும்பிரயாணமே
பூமிமன்னர்கள்பேட்டிவஸ்திரலாபமுந்தனலாபமும்
திருவுரைந்திடுமிவனுறுஞ்சமர்செய்துடன்ஜயமாகுவன்
செகதலங்களைவிலைகொளும்படிசேர்பயோதரமாமினே.

(இ - ள்.) பூமியெல்லாம் விலை கொள்ளும்படியான தனங்களுடையாய்! பெருகுகின்ற உச்சமெய்திய குருவோடு சுபக்கிரகங்கள் கூடிநின்றாலும், சுபர்களின் அங்கிசத்தில் வியாழன் நின்றாலும், தர்மப்பிரபுக்கள் நேசமும், பொருளும், பூமியும் உண்டாம். பூமியில் அதிகீர்த்தி வாய்ந்த தளகர்த்தனுமாவன். பொருள் மிகுதியாய்ச் சேர்ந்திடும். வாயு திக்கில் பிரயாணமுண்டாம். பூமி அரசர்கள்

பேட்டியும், வஸ்திரலாபம், தனலாபமும், லக்ஷிமிகரமும், யுத்தத்தில் செயமடைதலும் உண்டாம் எ - று. 2

சேர்ந்திடும்பனிரெண்டிலெட்டினில்சேருமாறினிலிரணியன்
சேரிலோசுபர்பாவியானவர்சேருவாரெனிலாபமும்
ஆர்ந்தசொற்பமதாகுமற்பசவுக்கியந்தருமாதமு
மதிகபீடையதாகியேயுறுபாவமேல்மனமாகிடுந்
தேர்ந்துரைத்திடிலீனமங்கையர்சேர்க்கைதானுறுமென்றுசொல்
செய்யகேந்திரகோணமூன்றொடுதிகிரிலாபமடைந்திடி
வாய்ந்தராசர்கள்நட்பினல்நரவாகனங்கயமிவுளியும் [ல்
வஸ்த்ரபூஷணம்வந்துகூடிடுமாதருக்கொருதிலகமே.

(இ - ள்.) மாதர் திலகமே! 6, 8, 12-ஆமிடங்களில் வியாழன் இருக்க, சுபர் பாவர்கள் சேர்ந்திருந்தால், சொற்ப லாபங்களும், சொற்பமான சௌக்கியங்களு முண்டாம். அதிக பீடையும் உண்டாம். பாவச் செய்கையில் மனது செல்லும். தேர்ந்து சொல்லுமிடத்து, நீச மங்கையர்கள் சேர்க்கையுண்டாம். சொல்வாயாக. திரிகோண கேந்திரங்களுடன் 3, 10, 11-ஆமிடங்களில் நின்றால், அரசர்கள் சிநேகத்தால் பல்லக்கு, யானை, குதிரைகளுண்டாம். வஸ்திராபரணங்கள் வந்து சேருமென்று கூறுவாயாக எ - று. 3

மாதுரோடுறுபிதுர்சவுக்கியம்வளரும்வித்தைபுராணநூல்
வரவுகேள்விமிகுக்குமாறுவளர்வியத்திலுமெட்டிலுந்
தீதுதானுறுநீசனோடுறவாகிவாதியிலேமிகச்
சேர்ந்திடும்மதிமூடமுந்தனதான்யபந்துடநாசமா
மோதிலாதவியாதிபுத்திரநாசமுற்றகளத்திர
முடன்விரோதமகாலபோசனமுடநிராசவிரோதமும்
பாதமீதினில்நிகளபந்தனமாகுமென்றுபகுத்தனர்
பருவமாதர்களரசதாயுயர்பங்கயாசனமங்கையே.

(இ - ள்.) பருவமுற்ற மாதர்களுக்கரசாகியும், பங்கயாசன முள்ள லக்ஷிமிக்கொப்பானவளே! மாதுர், ஸ்ரீ துர்சௌக்கியமும் வளருகின்ற வித்தைலாபமும், புராண இதிகாசம் கேள்விகளும் உண்டாம். 6, 8, 12-ஆமிடங்களில் தீதுற்ற நீசக்கிரகத்தோடு வியாழன் சேர்ந்திருந்தால், புத்தி ஆதியில் மிகுந்த கிலேசமும் மூடமான அறிவுண்டாம். தனம், தானியம், பந்துக்கள் நாசமுண்

டாம். சொல்லுவதற்கரிதான வியாதியும், புத்திரகளத்திர நாசமுடன் விரோதமும், அகால போஜனமும், ராஜவிரோதமும், பாதத்தில் விலங்குபூணுதல் உண்டாகுமென்று சோதிட சாஸ்திரங்களில் பெரியோர் பகுத்துக்காட்டுகின்றனர் எ - று. 4

மங்கையேயிவனுச்சவங்கிசமாயிருந்தவனுடனுமே
வந்துமேசுபற்கூடிநாலதில்வரும்பலாபலன்மிகவுமே
பொங்கமர்கியசிவிகைமேதினிபுகழ்சவுக்கியலாபமாம்
புத்திராதிபருத்திராதிபொருந்தியேமிகவாழுவார்
துங்கராசர்கள்கிருபையுண்டதிசோரராற்சத்ருநாசமாஞ்
சொன்னபுத்தியதந்தியத்தினிலேமிகுத்திடுங் கட்டமா
பங்கமிற்சுபரானபேர்கடம்பார்வைதானுறவேசுகம் [ம்
பாலதாமொழிசேலதாம்விழிபவளமாமிதழ்மடமினே.

(இ - ள்.) பால்போன்ற மொழியும், சேல்போன்ற விழியும், பவளம்போன்ற இதழ்களையுமுடைய இளமைபெற்ற மின்னே! இவ்வியாழன், உச்சனுடனும், உச்சங்கிசமாயிருந்தவனுடன் சேர்ந்து சுபர் பார்வைபெற்றால், அதில் நல்லபலன் மிகவும் உண்டாம். உயர்வுள்ள பல்லக்கு, பூமியோர் புகழப்பெற்ற அதிகமான சௌக்கியமும், புத்திரபௌத்திரர்களுடன் கூடிய வாழ்வும், உயர்வு பெற்ற அரசர்களின் கிருபையுமுண்டாம். திருடர் சத்துருக்கள் நாசமடைவர். வியாழபுத்தி அந்தியத்தில் மிகுந்த கஷ்டங்களுண்டாம். குற்றமில்லாத சுபர்களால் பார்க்கப்பெற்றால் மிகுந்த சுகம் உண்டாகுமாமென்க எ - று. 5

வேறு

பலமிகுமிரண்டேழுக்குப்பதிகுருவாகினுக்கா
லவமிருத்துடனேசேருமரிசகத்திரநாமத்தோ
டுவமையிற்றுர்க்காதேவிதனக்குமர்ச்சனையுஞ்செய்ய
பவமெலாமகன்றுநல்லபாக்கியமாகும்மாதே.

(இ - ள்.) பாவமிகுந்த 2, 7-ஆமிடங்களுக்கு அதிபன் குருவாகில் அவமிருத்துண்டாம். அது நீங்கும்படியாக அரிசகஸ்திரநாமார்ச்சனையும், பொருந்திய துர்க்காதேவிக்கும் அர்ச்சனைசெய்யில், பாவங்கள் அகன்று நல்லபாக்கியமுண்டாவதுடன், அவமிருத்துதோஷமும் விலகிவிடுமென்று சொல்லக்கடவாய் எ - று. 6

ஆக விருத்தம் 313.

புதன்திசைப் படலம்

மாதுடையபுதன்திசைதான்பதினேழாண்டாகும்
 வருங்காலமங்கையர்கள்சம்போகம்வித்தை
நீதமுறுநவரத்னமாலைமிகுலாபம்
 நீங்காதசவுக்யமுண்டாகுமுச்சத்தேனுங்
கோதகலுஞ்சொக்ஷேத்திரமடைந்தாலும்வித்தை
 குறைவில்லாமற்கொடுக்குந்தனதான்யலாபந்
தீதகலும்வியாபாரம்பூமிபுத்திரருடனே
 திகழும்வஸ்திராபரணமிகலாபமெனச்செப்பே.

(இ - ள்.) மாதுடைய புதன்திசை வருஷம் 17, நடக்கும் காலத்தில், மங்கைப் பருவப்பெண்கள் சம்போகமும் வித்தையில் நியாயங்களும், நவரத்தின மணிமாலைகளும், இடைவிடாத சௌக்கியங்களுமுண்டாம். உச்சம் பெற்றாலும், ஆட்சிமூலத் திரிகோணம்பெற்றிருந்தாலும், வித்தை குறைவில்லாமல் கொடுப்பன். தனதான்ய லாபமுண்டாம். குற்றமில்லாத வியாபாரம் பூமி புத்திரருடனே பிரகாசிக்கின்ற வஸ்திராபரண லாபமுண்டாகுமென்று செப்புவாயாக எ - று. 1

செப்பியதோரிரண்டினிலேயிவனிருந்தாற்றனே
 செயமானவில்வித்தைலாபமிகச்சேரும்
ஒப்பரியதளகர்த்தர்சிவிகைசங்கீதங்க
 ளுயர்வாத்தியக்கேள்வியுண்டாமுற்றகேந்திரத்தில்
தப்பிதமில்லாத்திரிகோணத்திருந்தாலதிக
 சவுக்கியமுங்கீர்த்தியுடன்றரணிமிகக்கிடைக்கும்
இப்புவியில்புராணநூல்வித்தையெல்லாம்படிப்ப [சே.
 ளிடையொடியாபுடைத்தெழுந்த விளமுலைபெண்ணர

(இ - ள்.) இடையானது ஒடிந்துவிடாமல் புடைத்தெழுந்த இளமையுற்ற தனங்களுடையவளே! செவ்விதாகிய 2-ஆமிடத்தில் புதன் நின்றால் தனக்குச்செயமான வில்வித்தைலாபமுமுண்டாம். ஒப்புதற்கரிதாகிய தளகர்த்தனுமாவன். பல்லக்கும், சங்கீதங்கள், உயர்வுற்ற வாத்தியங்கள் கேள்வியுண்டாம். 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும் 1, 5, 9-ஆமிடமான திரிகோணத்தும் புதன் நின்றால் அதிகமான சௌக்கியமும் கீர்த்தியும், பூமிலாபமும் உண்டாம்.

பூமியில் புராண இதிகாசமுதல் சர்வவித்தைகளும் கற்பான் என்று கூறுவர் எ - று. 2

பெண்ணேகேளொன்பதாமிடத்தினிலுற்றாலும்
பெலமானபாக்கியத்துக்குடையவனோடேனும்
வண்ணமிகுபாக்கியத்தோனங்கிசத்திற்பத்தில்
வதிந்தவனோடுற்றாலும்வளருமிலக்கினத்துக்
கெண்ணமிகுமதிபதியாயிருந்தாலுங்கேந்த்ர
மிசைந்தாலுஞ்சிவிகைதந்தியிவுளிமிகலாபங்கள்
திண்ணமுறுங்களத்ரபுத்திரலாபமுண்டாமென்று
செப்பினர்கெணிதமெல்லாந்தேர்ந்துரைசெய்தவரே.

(இ - ள்.) பெண்ணே! புதன் 9-ஆமிடத்தில் நின்றாலும், அவ்வாதிபனுடன் கூடிநின்றாலும், 9-ஆமிடத்ததிபன் அங்கிசத்தில் 10-ஆமிடத்ததிபனோடு சேர்ந்திருந்தாலும், லக்கினத்துக்கதிபதியாயிருந்தாலும், கேந்திரத்தில் நின்றாலும், பல்லக்கு யானை குதிரை லாபமும், இடம்பெற்ற களத்திர புத்திரர் லாபமாம். என்று கணித சோதிடங்கற்ற பெரியோர் தேர்ந்து செப்பினர் எ - று. 3

கணிதமாஞ்சட்டாட்டவியத்திலிருந்தாலும்
கருதரிய நீசாஸ்தமனமாறிலேனுந்
துணிவுடனேயிவனிருந்தாற்றனதான்யநாசஞ்
சொல்லும்விபசாயநஷ்டங்களத்திரமும்நாச
மணியாருந்திசையாதிதனதான்யலாப
மாநடுவில்ராசசன்மானங்கிடைக்குங்கடையில்
பிணிசேருமிட்டசனவிரோதமுண்டாமென்று
பேசினர்கள்கற்றுணர்ந்தபெரியவர்கள்தானே.

(இ - ள்.) கணிக்கப்பட்ட 6, 8, 12-ஆமிடங்களில் புதனிருந்தாலும் நீசம், அஸ்தமனமடைந்தாலும் 6-ஆமிடத்தில் துணிவோடு நின்றாலும், தனம் தான்யம் நாசமடையும். சொல்லுகின்ற வியாபாரம் நஷ்டமும் களத்திரநாசமுமுண்டாம். திசையின் ஆதியில் தனம் தானியலாபமும், நடுப்பாகத்தில் ராஜசன்மானமும் கிட்டும், கடையில் பிணியுண்டாம். இஷ்டஜனவிரோதமும் உண்டாகுமென்று சோதிடங்கற்றுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள் எ - று. 4

ஆக விருத்தம் 317.

புதன்திசை புதபுத்தி

கற்றுணர்ந்தோன் றிசைதனிலேதன தபகாரந்தான்
கதித்ததிங்களிருபத்தெட்டிருபத்தேழ்நாளாம்
மற்றவன் றன்புத்திவரும்போதிலாரோக்கியம்
வஸ்திரபூஷணஞ்சிவிகைமகவுவிபசாயம்
உற்றதனலாபமொடுவித்தியாலாபம்
உயர்பந்துசனக்கீர்த்திராசாபிமானம்
பற்றலர்மார்பினிலுருவும்வேல்போன்றவிழியாய்
பராசரமாமுனியுரைத்தபலன்களிதுவாமே.

(இ - ள்.) சத்திரவாதிகளின் மார்பைத் துளைக்கின்ற வேல் போன்ற கண்களையுடையவளே! புதன் திசையில் புதன் புத்தி வரு 2, மாசம் 4, நாள் 27-க்கும் பலன் கேட்பாயாக:—ஆரோக்கியமும் வஸ்திரபூஷணங்கள் லாபம். பல்லக்கு, புத்திரர், விபசாய லாபமாம், தனம், வித்தை, லாபமும் உண்டாம். உயர்ந்த பந்து ஜனங்களால் கீர்த்தி ராஜாபிமானமும் உண்டாகுமென்று பராசரமாமுனிவர் திருவாய்மலர்ந்தருளினராம் என்று சொல்லுவாய் எ - று. 1

பலனிலாச்சட்டாட்டவியத்திலிருந்தாலும்
பாவியுடன்கூடினுந்தன தான்யநாசங்
குலமதிலேபந்துசன நாசமுறும்பின்னே
குன்மெமாடுபருவிலங்குங்கூடமதுசேர்வன்
றலமன்னர்விரோதமதாற்றன நாசமாகும்
தனித்தவுச்சசொக்ஷேத்திரகோண்கேந்திரத்தில்
நிலமைபெறுலாபத்திலிருந்தாலும்பலனை
நிகழ்த்திடக்கேளுபயதனநெருங்கியபொற்கொடியே.

(இ - ள்.) நெருங்கிய இருதனத்தையுடைய பொற்கொடிபோல்பவளே! பலன்றாரத 6, 8, 12-ஆமிடங்களில் பாவருடன் கூடிப் புதனிருந்தால் பொருள் தானியம் நாசமாம். குலத்தில் பந்து ஜன நாசமுறும். பின்னும் குன்மரோயும், விலங்குசேர்த்து சிறைச்சாலையில் சேர்விக்கும். புவியாசரால் பொருள் நஷ்டமுண்டாம். ஒப்பற்ற உச்சம் ஆட்சியிலும், 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிடம் திரிகோணத்தும், 11-ஆமிடத்தும் புதன் இருந்தால் பலன்களைக் கேட்பாயாக எ - று. 2

தனதான்யவஸ்திராபரணத்தோடதிகத்
தாரணியும்புத்திரரும்லாபமிகவுண்டாம்
மனராலேபேட்டியுண்டுசமரதனில்வெல்வன்
வாத்தியசங்கிதமிகுலாபமிகவுண்டாங்
கனமானசந்தோஷம்பிதுர்மாதுர்சுகமாங்
கருதுபந்துசுகமுடனேகனசிவிகைலாப
மனமானநடையுடனேசிறுமருங்குளொசிய
வளர்ந்தெழுந்துதிரண்டமுலையரிவையருக்கரசே.

(இ - ள்.) அன்னமன்ன நடையையும் சிற்றிடை ஒடியும்படி வளர்ந்தெழுந்த திரண்ட ஸ்தனங்களையும் உடைய பெண்களுக்கரசே! தனம், தான்யம், வஸ்திரம், ஆபரணம், அதிகமான பூமி புத்திரர் லாபமுண்டாம். மன்னர்பேட்டியும், சமரில் வெற்றியும், வாத்தியம் சங்கீதம் லாபமுண்டாம். மேன்மையான சந்தோஷமும், மாதுர் பிதுர் சுகமுமுண்டாம். பந்துக்கள் சுகமும், பல்லக்கு முண்டாம் என்று கூறுவர் எ - று. 3

வேறு

அரிவையையுடையோன்வாக்கேழதிபதியாகினுக்கால்
வருங்களத்திரநாசந்தான்மாறிடப்பரிகாரங்கேள்
குருமொழிப்படியேமாயன்சகத்திரநாமங்கூறிற்
றிருவளர்மாதேமிக்கசெல்வமுஞ்சுகமுண்டாமே.

(இ - ள்.) அறிவுள்ள புதன் 2, 7-ஆமிடங்களுக்கு அதிகாரியாயிருந்தால், களத்திரநாசமுண்டாம். இத்தோஷம் மாறுவதற்குப் பரிகாரங்கேட்பாயாக:-குருவின் வாக்குப்படி விஷ்ணுவின் சகஸ்திர நாமார்ச்சனைசெய்யில், மிக்க செல்வமும் சுகமுண்டாவதுடன் தோஷ நீங்குமென்று சொல்லுக. 4

ஆக விருத்தம் 321.

புதன்திசை கேதுபுத்தி

உண்டானபுதன் திசையிற்கேதபகார்ந்தா
 னுறுமாதம்பதினென்று நாளிருபத்தேழாந்
தண்டாரும்புதனுக்குச்சிகியந்தர்க்கதனுய்த்
 தானிருக்கத்திரிகோணகேந்திரத்துற்றாலுங்
கொண்டாடுஞ்சுபனுடனேகூடினும்பார்த்தாலுங்
 குறித்தலக்கினதிபனேடேகூடினாலுஞ்
செண்டாருமுலைமடவாயதின்பலனைவகையாய்ச்
 செப்பக்கேள்மைக்கருங்கண்டெரிவையருக்கரசே.

(இ - ள்.) பூச்செண்டையொத்த ஸ்தனங்களும், மைதோய்ந்த கண்களையுமுடைய மங்கயர்க்கரசே! அறிவுண்டான புதன்திசையில் கேதுபுத்தி மாசம் 11, நாள் 27-ன் பலனைக்கூறுமிடத்து புதனுக்குக் கேது பிரியாதவனுய்க் கூடியிருந்தாலும் 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும் 1, 5, 9-ஆமிட திரிகோணத்து நின்றாலும் போற்றப்படுகின்ற சுபனேடு கூடினாலும் பார்த்தாலும், லக்கினதிபனேடு கூடி நின்றாலும் அதின்பலன்களை வகையாகப்பிரித்துச் சொல்வதைக் கேட்பாயாக எ - று. 1

செயமாகுமற்பசவுக்கியமற்றலாபஞ்
 சேர்ந்தபந்துசனசுகமாந்திரவியமும்லாபம்
நயமான நாற்காலிலாபமேற்றிசையில்
 நற்பயணமரசர்கடம்பேட்டியுமுண்டாகும்
வயமீறுஞ்சமரதனிலதிகசெயமுண்டாம்
 வருமாறெட்டீராறில் வதிந்திருப்பானேனும்
பயமீறும்பாவியுடன்கூடிடிற்பார்த்தாலும்
 பலாபலனைவகைவகையாய்ப்பகுத்துரைசெய்வாயே.

(இ - ள்.) சொற்பமான ஜெயமும் சௌக்கியமும் லாபமும் பந்துஜனங்கள் சுகமும் திரவியலாபமும் உண்டாம். அற்பமான கன்றுகாலிலாபமும் மேற்றிசையில் பிரயாணமும் அரசர்பேட்டியும், வெற்றிபொருந்திய சமரத்தில் வெற்றியுண்டாம். 6, 8, 12-ஆமிடத்தில் பாவியுடன் கூடினும், பார்த்தாலும், அதன்பலன்களைக் கேட்பாயாக எ - று. 2

ஏறிவரும்வாகனத்திற்றவறிவீழ்ந்திடுவ
ணிராசராற்சோரராலக்கினியாற்பயமாம்
வீறுசேர்புத்ரபயந்தேளிடபமதிலே
வீற்றிருப்பானகிலதிபயம்நீசனுடனே
சேரில்வருங்கலகமிரண்டேழிலிருப்பானேற்
றேகபயம்பரிகாரமேழைகளுக்குணவு
மாருமற்றுனமதுசெய்திடவேதோஷ
மகன்றுவிடும்பராசர்சொன்னவகையிதுவுமாமே.

(இ - ள்.) ஏறிவருகின்ற வாகனத்திலிருந்து தவறிவீழ்தலும், ராஜ சோராக்கினிபயமும், வெற்றியுள்ள புத்திரர் பயமும் உண்டாம். விருச்சிகம் ரிஷபத்தில் கேது நின்றாலும், அதிக பயமுண்டாம். நீசனோடு சேர்ந்திருந்தாலும் கலகங்களுண்டாம். 2, 7-ஆமிடங்களில் கேதுவிருந்தால் மரணபயமுண்டாம். இதற்குப் பரிகாரம். ஏழைகளுக்கு அன்னதானம்செய்யில் தோஷமகன்று சுகம் கிடைக்குமென்றும் பராசரமாமுனிவர் விவரித்துச்சொல்லினர் எ - று. 3

ஆக விருத்தம் 324.

புததிசை சுக்கிரபுத்தி

குவலயத்திற்புதன்றிசையிற்புகரபகாரந்தான்
குறித்தமுப்பானல்மாதங்கூடுமதின்பலன்கேள்
தவமுடையகனக்கனுக்கந்தர்க்கதனுய்புகர்தான்
சார்ந்திடினுங்குருவுடனேதான்கூடினனும்
கவலையுருன்புராணமுதற்கேள்விகளாராய்வன்
காவலர்கள்சன்மானம்நாற்காலிலாபம்
நவநிதியந்தீவுகளிலிருந்துவந்துசேரும்
நளினமுகையனையதனநங்கையருக்கரசே.

(இ - ள்.) தாமரை அரும்பையொத்த தனங்களுடைய நங்கையர் திலகமே! பூமியில் புதன் திசையில், சுக்கிரன்புத்தி வரு 2, மாதம் 10-க்கும் பலன்கேட்பாயாக:-புதனுக்கு சுக்கிரன் பிரியாதவனாகி ஒன்றாய்க் கூடியிருந்தாலும், குருவுடன் கூடியிருந்தாலும் கவலையற்றவனாய் புராணகாவிய முதலான கேள்விகளில் ஆராய்வன். அரச

சன்மானமும், கன்று காலி விருத்தி, புதிதான திரவியச் சேர்க்கை, தீவு தீவாந்திரங்களிலிருந்து வரவும் உண்டாம் எ - று. 1

நங்கையருக்கரசேதான்கன்னிதேள்சிங்கம்
நல்லதனுமேடத்திற்புகர்மேவினுக்கால்
தங்குதலைவலிகாச்சல்நோய்களத்ரசண்டை
தான்வடக்குத்திசைகமனங்காலியினுற்சீவன்
மங்கிவிடுமாவியுடன்கூடிடுவானாகில்
வருமற்பசவுக்கியங்களுண்டாமென்றுரைப்பாய்
செங்கமலப்போதிலுறைசெந்திருவைப்போலாய்ச்
செகதலத்திலதிவாழ்வுசேர்ந்திடும்பெண்கொடியே.

(இ - ள்.) நங்கையர்க்கரசே! கன்னி, விருச்சிகம், சிங்கம், தனுசு, மேடம் இதில் சுக்கிரனிருந்தால் தலைவலி, காய்ச்சல் நோயும் களத்திரத்தோடு சண்டையும், வடதிசைப் பிரயாணகமனமும், நாற்கால் ஜீவனகஷ்டமும் உண்டாம். லக்கினாதிபதியுடன் சுக்கிரன் கூடிநிற்கில், அற்பமான சௌக்கியங்களுண்டாமென்றும் லக்ஷ்மிகடாட்சம் பொருந்திய சுகவாழ்வுண்டாமென்றும் சொல்லுவாயாக எ - று. 2

சேர்ந்திடுநற்கேந்த்ரதிரிகோணலாபத்திற்
செயமாகவிருந்திடினும்பிலவான்சேர்ந்திடினும்
பாந்தமுறவுச்சசொக்ஷேத்திரத்தையடைந்தாலும்
பகர்பூமிலாபமுடன்ராச்சியமும்லாபம்
வேந்தருடசன்மானம்விபசாயலாபம்
வெகுதானதர்மமுடன்றடாகப்பிரதிட்டை
தேர்ந்துரைக்கில்நடைகிணறுபுதிதாகச்செய்வன்
திருவுமவன்மனைதனிலேசென்றுறைவள்தானே.

(இ - ள்.) 1, 4, 7, 10-ஆமிட கேந்திரத்தும், 1, 5, 9-ஆமிட திரிகோணத்தும், 11-ஆமிடத்தும், பலவானுடன்கூடிச் சுக்கிரன் நின்றாலும், உச்சம் ஆட்சிபெற்றிருந்தாலும், பூமி ராச்சியங்கள் லாபமாம். அரசசன்மானமும் விபசாயலாபமும் உண்டாம். தான தர்மங்களும், தடாகப்பிரதிஷ்டையும், ஆய்ந்துரைக்கின் நடைப்படியுள்ள விசித்திரமாகிய கிணறுகளும் புதிதாகச் செய்வன், மனையில் திரு வாழ்ந்து நடனமிடுவள் என்று சொல்லக்கடவாய் எ - று. 3

வேறு

உரைத்திடும்வாக்கேழுக்கேயுடையவனிவனேயாகிற்
றரைத்தலந்தனிலேபீடைதானுறும்பரிகாரந்தான்
வரைத்தன துர்க்காதேவிசெபஞ்செயமாறிப்போகும்
அரைத்தசந்தனச்செஞ்சேற்றையணிமுலைமடநல்லாளே

(இ - ள்.) அரைத்த சந்தனக்குழம்பை அணியப்பெற்ற தனங்களையுடைய மாதே! 2, 7-ஆமிடத்துக்கு சுக்கிரன் அதிபதியாயின் அதிகபீடையுண்டாம். அதற்குப் பரிகாரம் துர்க்காதேவி ஜெபஞ் செய்ய பீடைமாறிச் சுகப்பிராப்தியுண்டாம் எ - று. 4

ஆக விருத்தம் 328.

புதன்திசை சூரியபுத்தி

நல்லதொருபுதன் திசையில்ரவிபுத்தியதுதான்
நவின்றதிங்கள்பத்துடனே நாளாறதாகும்
வல்லபஞ்சேர்சவுமியற்குரவியந்தர்க்கதனுய்
வந்தாலுமுச்சசொக்ஷேத்திரத்தையடைந்தாலுஞ்
சொல்லரியசவுக்கியமாம்ராசாபிமானந்
தொலையாதபாக்யமுறுஞ்சேய்பார்ப்பானுகில்
வல்லைநிகர்பூண்முலையாய்புவிலாபமென்றே
வகுத்துரைத்தார்கணிதநூல்வகுத்தபெரியோரே.

(இ - ள்.) சொக்கட்டாங்காயை நிகர்த்த தனத்தாய்! நயமான புதன்திசையில் சூரியபுத்தி மாசம் 10, நாள் 6-க்கும் பலன் கேட்பாயாக. புதனுக்குச் சூரியன் பிரியாதவனுகி ஒன்றாய் இருந்தாலும், ஆட்சி உச்சம்பெற்றாலும், சொல்லுதற்கரிதான சௌக்கியங்களும், ராஜாக்களால் அபிமானமும், நீங்காத பாக்கியமும் உண்டாம். செவ்வாய் பார்த்தால், பூமி லாபமும் உண்டாமென்று சோதிடக் கணிதம் தேர்ந்த பெரியோர்கள் பிரித்துச் சொல்லினர் எ - று. 1

மறைவில்லாலக்னுதிபதிநோக்குற்ருக்கால்
வளர்சவுக்கியந்தனலாபமத்தியமந்தியத்திற்
குறையாமல்வளர்ந்தேறுஞ்சனிசெவ்வாய்ராகு
கூடியிடிற்பாவர்கடங்கொடும்பார்வைசேரிற்

றறைமீதில்மனவியாதியுடன்தேகபீடை
தனச்செலவுவுற்றசனப்பீடையுமுண்டாகும்
பிறைபோலுந்தனுப்போலும்வளைந்ததிருநுதலாய்
பெரும்பலனையிப்படியேபேணியுரைப்பாயே.

(இ - ள்.) பிறையைப்போலும், வில்லைப்போலும் வளையப் பெற்ற புருவமுடையவளே! மறைவாக லக்கினாதிபதியை சூரியன் பார்த்தால், விருத்தியாகின்ற சவுக்கியமும், பொருட்சேர்க்கையும் மத்தியத்திலுண்டாம். சூரியன்புத்தி கடைப்பாகத்தில் விருத்தி யுண்டாம். சனி, செவ்வாய், ராகு, சூரியனுடன் கூடிநின்றாலும், இவர்கள் பார்த்தாலும், பூமியில், மனவியாதியும், தேகபீடையும், தனச்செலவு, பந்துக்கள் பீடையும் உண்டாகுமென்று சொல்வா யாக எ - று. 2

பேணாதசட்டாட்டவியத்திலிருந்தாலும்
பிழைசேருமுச்சசொக்ஷேத்திரத்தையடைந்தாலும்
வீணனசோராக்னிபயங்கிரகப்பெயர்ச்சி
விஷபீடைநாற்காலியாற்சீவனுசம்
பாணுருமொழிமாதர்பிதுர்நாசமுடனே
பகருமதிகாரமுறுமிரண்டேழுதனக்குச்
சேனருமிரவிபதியாகிலவமிருத்துத்
திரபரிகாரம்ரவிநமஸ்காரஞ்செய்யே.

(இ - ள்.) கஷ்டமுண்டாக்குகின்ற 6, 8, 12-ஆமிடத்தில் ரவி யிருந்து, உச்சம் ஆட்சிபெற்றாலும், பொல்லாத திருடர், அக்கினி பயமுண்டாம். கிரகத்தைவிட்டுப் போகுதலும், விஷபீடை, நாற் காலியின் சீவ பயமும், களத்திரம், பிதிர் நாசமும், கண்ணோயும் உண்டாம். 2, 7-ஆமிடங்களுக்குச் சூரியன் அதிகாரியாயின் அவ மிருத்து தோஷமுண்டாம். இதற்கு ஸ்திரமான பரிகாரம் எது வென்றால், சூரிய நமஸ்காரம் காலையில் செய்வதேயாம் எ - று. 3

ஆக விருத்தம் 331.

புதன்திசை சந்திரபுத்தி

காராளன்றிசையதனிற்சசியபகாரந்தான்
கருதுபதினேழ்மாதங்கனமதியன்றனும்
தாராளமாய்ப்புதர்க்கதர்க்கதனுயிடினுந்
தனித்தவுச்சகேந்திரசொட்க்ஷேத்ரதிரிகோணம்
நேராகவிருந்தாலுஞ்சுக்கிரனேக்குறினும்
நிதமதிகசவுக்கியமாமதிகதனலாபஞ்
சீராருமரசரபிமானமுடன்களத்திரந்
தீர்க்கபுத்ரலாபமுடன்சிவிகைவருமின்னே.

(இ - ள்.) மின்னற் கொடிபோல்பவளே! மேகாதிபதியான புதன்திசையில் சந்திரபுத்தி வருஷம் 1, மாதம் 5-க்கும் பலன்களைக் கூறுமிடத்து, புதனுக்குச் சந்திரன் பிரியாதவனைக் கூடியிருந்தாலும், 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திரகோணம் பெற்றாலும், உச்சம் ஆட்சிபெற்றாலும், சுக்கிரனால் பார்க்கப்பெற்றாலும், அதிக சௌக்கியமும், தனலாபமுண்டாம். சிறப்புப்பெற்ற அரசரபிமானமும், களத்திர தீர்க்கமும், புத்திரர் லாபமும் உண்டாம். பல்லக்கும் சேரும் என்று கூறுவாய் எ - று. 1

சிவிகையுடன்புதுக்கிரகமுண்டாகுமதிகச்
சிறப்புறுபோசனவாத்தியலாபமுடன்சேரும்
புவியதனிற்றென்றிசைப்ரயாணமதுகூடும்
புகழரசர்பேட்டிவருந்தீவாந்திரவஸ்துங்
கவிகையுடன்க்ஷேத்திராதிலாபமுமுண்டாகுங்
கனமதிநீசஞ்சத்ருஸ்தானமடைந்தாலும்
குவிமுலையாயாறெட்டீராறினிலேயேகிக்
கொடும்பாவர்நோக்கில்மதிகுறைந்தாலுங்கேளே.

(இ - ள்.) குவிந்த தனங்களையுடையவளே! பல்லக்குடன் புது வீடுகளுண்டாம். சிறப்பான ஆகாரங்களும், வாத்திய லாபமும், தென்திசைப் பிரயாணங்களும், அதில் அரச பேட்டியும், தீவாந்திரங்களிலிருந்து பொருள் வரத்தும், பல்லக்கு, க்ஷேத்திர லாபமும் உண்டாம். நீசம் அஸ்தமனமடைந்தும், சத்துருஸ்தானத்தும் சந்திரன் நின்றாலும், 6, 8, 12-ஆமிடங்களில் நின்று, பாவர் பார்த்தாலும் சொல்கிறேன் கேட்பாயாக எ - று. 2

குறைவாகுந்தனநாசங்கிரகம்போம்பயமே
கூடிவரும்பீடையுறுமனத்தாபமுண்டாந்
தறைமீதிலிவனெடுத்தகாரியம்விக்கினமாந்
தரணிமன்னராலமைச்சராற்கனவிரோதம்
நிறையாகுஞ்சமரதனிலபசெயமுண்டாகும்
நேரானமித்ருபந்துசனச்சேதமுண்டாம்
மறைதேரும்பராசரமாமுனியருளிச்செய்த
வடநூலிற்கண்டபடிவரும்பலன்சொன்னேமே.

(இ - ள்.) தனதானிய நாசமும், கிரகம் பெயர்தலும், அதிக பயமும், அதிகமான பீடையுண்டாம். அத்துடன் மனஸ்தாபங் களும் சேரும். எடுத்த காரியங்கள் விக்கினமடைவதும், மன்ன ராலும், மந்திரியாலும் பலத்த விரோதங்களுண்டாம். யுத்தத்தில் அபஜெயமும், மித்திரர், பந்துக்கள் சேதமும், பொருள் செலவும் உண்டாகுமென்றும் பராசரமுனிவர் சமஸ்கிருதபாஷையிற் சொல் லியபடி பலன்களைத் தமிழ்மொழியாய்ச் சொற்றனம் எ - று. 3

பலனுகச்சுபக்கிரகஞ்சசியுடனேகூடிற்
பாக்கியத்தோடதிகசுகம்பகர்கேந்திரகோணம்
தலமீதிலிருந்தாலும்லாபமடைந்தாலும்
தனித்தமித்ரக்ஷேத்திரத்திலுச்சத்திலேனிற்
குலவியிருந்தாலுமகாபுண்ணியதீர்த்தங்கள்
கொடுக்குமன்னர்சன்மானஞ்சந்தோஷமுண்டாம்
நிலைமைபெறுமதிகவித்தைகற்றிடுவனெனச்சொல்
நேரிழையார்க்கதிகவெழில்நிறைந்திடுபூந்திருவே.

(இ - ள்.) பெண்களில் அழகு வாய்ந்த ரத்தினமே! சுபக் கிரகங்கள் பலமாய்ச் சந்திரனுடன் கூடினாலும், பாக்கியத்தோடு அதிகமான சுகமுண்டாகும். 1, 4, 7, 10, 5, 9-ஆமிடமாகிய கேந்திர திரிகோணங்களில் சந்திரன் நின்றாலும், உச்சம் ஆட்சியில் நின்றாலும், மகத்துவமான புண்ணிய தீர்த்தஸ்நானங்களைக் கொடுக் கும். அரசரால் சன்மானங்களும், சந்தோஷமும் உண்டாம். நிலை யான அதிகமான கல்வி கற்றலும் உண்டாமென்று சொல்லுக எ - று. 4

வெய்யதொருசட்டாட்டவியந்தனிலேசசிதான்
வீற்றிருக்கவவனுடனேபாவிகள்சேர்ந்திருந்தால்
வையகத்திலதிகட்டஞ்சுபசந்திரனுகில்
வருமந்தபுத்தியிணிலதிகசவுக்கியமுந்
துய்யகளத்திரபுத்ரசவுக்கியத்துடனே
சொலும்பூமிலாபமொடுசுருதிமறையோதுஞ்
செய்யபெரியோர்பத்தியுடையவனுமென்று
செகதலத்தோரறிந்திடவேசெப்பினர்கற்ருேரே.

(இ - ள்.) கொடிதாகிய 6, 8, 12-ஆமிடங்களில் க்ஷீணசந்திரனுப் இருக்கில் அவனுடன் பாவி கூடியிருந்தாலும், பூமியில் அதிக கஷ்டங்களும் சேர்ந்திடுமென்பாயாக. பூர்ணசந்திரன் சுபர்களோடு கூடிநின்ருல், சந்திரபுத்தியில் அதிகமான சௌக்கியங்களும், களத்திர புத்திர சௌக்கியங்களும், பூமி லாபமும், வேதமோதுகின்ற பெரியோர்களின் பக்தியும் உண்டாகுமென்று சோதிடநூல் கற்ற பெரியோர்கள் பூமியோர் அறியும்படி புகன்றனர் எ - று. 5

செப்புகின்றசசிபுத்தியாதியிலேயதிகச்
செல்வமுண்டாமத்தியத்திற்சவுக்கியதனநாச
மிப்புவியிலந்தியத்திலிராசவிரோதத்தா
லேபீடைமாதுருநாசங்காட்டுமிடியாற்
றப்பில்லாப்பயமுடனேதலைவலியுங்காச்சல்
சசியிரண்டேழுக்குடையோனுகில்வரும்பீடை
மைப்பழகும்விழிதுர்க்காதேவிசெபம்செய்தால்
மாறுமவ்மிருத்துவெனவழுத்திடுபூங்குயிலே.

(இ - ள்.) அழகிய குயில்மொழியாய்! சந்திரன்புத்தி ஆதியில் அதிகமான செல்வமுண்டாகும். மத்தியத்தில் சவுக்கியம். தனநாசமுண்டாம். அந்தியத்தில் ராஜவிரோதமும், தேகபீடையும், மாதுருநாசமும், இடியால் பயமும், தலைவலி, காய்ச்சலும், நேத்திர நோயுமுண்டாம். இச்சந்திரன் 2, 7-ஆமிடங்களுக்கு அதிகாரியாயின், அவமிருத்து பீடையுண்டாம். இதற்கு, துர்க்காதேவியின் ஜெபம் செய்தால் இவ்வவமிருத்து தோஷம் மாறிச் சுகமுண்டாமென்று சொல்லுவாய் எ - று. 6

ஆக விருத்தம் 337.

புதன்திசை செவ்வாய்புத்தி

புதன்திசையிற்செவ்வாயின்புத்தியுட்காலம்
பொருந்துதிங்கள்பதினென்றுநாளிருபத்தேழாம்
அதன்பலன்கேள்கணக்கனுக்குருசனர்ந்தர்க்கதனு
யமர்ந்தாலுங்கேந்திரகோணத்தையடைந்தாலு
மிதம்போலஉச்சசொக்ஷேத்திரத்திலிருந்தாலு
மிலக்கினதிபனுடனேகூடியிருந்தாலும்
மதன்றனக்குவாய்த்தரதிதேவியுமாகியுமே
மணநாணவெழில்மிகுத்தமாதர்சிரோமணியே.

(இ - ள்.) மதனுக்கு வாய்த்த ரதியும் மனம் நாணும்படி அழகு மிகுத்த மாதுசிரோரத்தினமே! புதன்திசையில் செவ்வாய்புத்தி மாதம் 11, நாள் 27-க்கும் பலன் கேட்பாயாக. கணக்கனை புதனுக்குச் செவ்வாய் பிரியாதவனுகி ஒன்றுபிருந்தாலும், 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திர திரிகோணம் பெற்றாலும், உச்சம் ஆட்சியில் நின்றாலும் கேட்பாயாக எ - று. 1

மணியாரம்புனைராசசன்மானமுண்டா
மனையதனிற்றிருவாழுமகாகளத்திரலாபந்
தணிவாகிநட்டமுறும்ராச்சியலாபங்கள்
தனையர்களுமிகலாபந்தான்விபசாயத்தி
லணிதான்யலாபமுறும்நீசச்சத்துருவீட்
டாதிபனைக்கூடுகினுமாறெட்டீராறிற்
றுணிவாகவிருந்தாலும்பாவிகூடிடினுஞ்
சொலும்பாவர்பார்த்தாலும்தொடர்பலனைக்கேளே.

(இ - ள்.) மணியாரம்புனைந்த ராஜ சன்மானமும், லக்ஷிமீகரம் பொருந்திய மனைகளும், களத்திர லாபமும், கெட்டுப்போன ராச்சியங்கள் வந்துசேருதலும், புத்திர லாபமும், விபசாயத்தால் அதிகமான தான்ய லாபங்களும், நீசம் சத்துரு வீட்டதிபர்களோடு கூடிச் செவ்வாய் 6, 8, 12-ஆமிடங்களில் நின்றாலும், பாவி கூடினாலும், பார்த்தாலும், தொடர்ந்துவரும் பலன்களைக் கேட்பாயாக எ - று. 2

தொடருமேதலைவலிநோய்குளிர்காய்ச்சலுடனே
துரைராசர்விரோதமுறுந்தனதான்யநாசம்

படருமேகளத்திரத்தால்வெகுகலகந்தானும்
பலுகிடுநாற்காலியதுமிகுநாசமாகுத்
திடமுடனேபீனிசமுமண்டையிடியுண்டாஞ்
சிறந்துகுடியிருக்குமனேதான்போகுமென்றே
வடகலைநூல்முழுதுணர்ந்தபராசரமாமுனிவன்
வாக்கியத்திற்கண்டபடிதப்பாதுமயிலே.

(இ - ள்.) தலைவலி நோயும், குளிர் காய்ச்சலும், ராஜ விரோதமும் தொடரும். தனதான்ய நாசமுண்டாம். களத்திரத்தால் கலகமும், பலுகுகின்ற நாற்காலி நாசமுண்டாம். பீனிசம் மண்டையிடியுண்டாம். சிறப்பாய்க் குடியிருக்கும் மனை தோஷமடையும் என்று வடகலை சாஸ்திரங்களை முழுதுமறிந்த பராசர மாமுனிவர் வாக்கியப்படி தப்பாதென்று தமிழ்மொழியிற் சொல்லக் கேட்பாயாக எ - று. 3

தப்பாதகேந்திரகோணந்தனிலேயேனுந்
தான்மூன்றுபன்னொன்றிலேனுமிருந்தாலும்
பொய்ப்பாவியுடன்கூடினுலுமதிபயமாம்
புகல்மாதுர்நாசமுடன்மனவியாதியடையு
மிப்பாரிலிவனெடுத்தகாரியம்விக்கினமா
மிசையுமபகீர்த்திசுரமிருப்புவிலங்காகுஞ்
செப்பார்பூண்முலையாய்நாற்காலியதுநாசஞ்
செழுஞ்சுபர்நோக்குறிற்சவுக்யசுகமற்பமுறுமே.

(இ - ள்.) செப்புப்போன்ற ஆபரணங்களையணிந்த தனங்களையுடையவளே! தப்பாத 1, 4, 7, 10, 5, 9-ஆமிடமாகிய கேந்திர கோணங்களில் ஆயினும், 11-ஆமிடத்திலேனும் செவ்வாய் நின்றாலும் அதிக பயமாம். மாதுர் பிதுர் நாசமடையும். மனோவியாதியுண்டாம். எடுத்த காரியங்களும் விக்கினமடையும். அரசர், சோரர், அக்கினியால் அதிக பயம். அபகீர்த்தியும், சுரமும், இரும்பு விலங்கும், கன்றுகாலி நாசமும் உண்டாம். சுபர் பார்வை பெற்றால், சவுக்கியமும், சுகமும் அற்பமாயுண்டாம் என்க எ - று. 4

உற்றதொருசட்டாட்டவியத்திலிருந்தாலு
முறும்பாவியுடன்கூடினுலுமதிகஷ்டம்

பெற்றதாயுடனுசம்ரணபீடையுடனே
பெரிதானவிலங்குவருமிராசராற்றியால்
மற்றுமிகுகள்வரால்வருமதிகப்பயந்தான்
வளர்பந்துசனத்துடனேசகோதரமுநாசங்
குற்றமில்லாப்புத்திரருங்களத்திருநாசங்
குறித்துரைக்கிலதிசாரரோகமுமுண்டாமே.

(இ-ள்.) 6, 8, 12-ஆமிடங்களில் செவ்வாய் பாவியுடன் கூடி நின்றாலும், அதிக கஷ்டமாம். பெற்ற தாய் நாசமுண்டாம். ரண பீடையும், விலங்குமுண்டாம். அரசர், திருடர், கள்ளர்களால் அதிக மான பயங்களுண்டாம். பந்து ஜனங்களுடன் சகோதர நாசமு முண்டாம். புத்திரர், களத்திரங்களும் நாசமடையும். அதிசார ரோகமும் உண்டாகும் எ-று. 5

உண்டாகுமிரண்டேழுக்கிவனுதனுகி
லுறையுமவமிருத்துபயமுண்டதற்குத்தானும்
கொண்டாடுஞ்சுப்பிரமணியருக்குப்பூசை
குறித்தபடிசெய்திடவேகுணமதுவுமுண்டாம்
பண்டோர்கள்சொன்னபடிவாராதுசொன்னேன்
பகர்பலன்போய்மிகுசுகமும்பாக்கியமுமுண்டாம்
வண்டாரும்பூங்கூந்தல்மங்கையருக்கெல்லாம்
வாய்த்ததிலகம்போன்றுவளருமிளந்திருவே.

(இ-ள்.) வண்டுமொய்த்த கூந்தலையுடைய மங்கையர் திலகம் போல்பவளுமாகி வளருகின்ற, இளமையுற்ற இலக்ஷிமி போல் பவளே! 2, 7-ஆமிடத்திற்குச் செவ்வாய் அதிகாரியாயிருக்கின், அவமிருத்து பயமுண்டாம். அதற்கு சுப்பிரமணியருக்குக் குறித்த படி பூஜை இயற்றிடில், குணமடையும் என்று பழமையான சாஸ்திர வாதிகள் சொல்லியபடி செய்தால் துக்கம் நீங்கி, சுகமுண்டாகும் என்று சொல்லக்கடவாய் எ-று. 6

ஆக விருத்தம் 343.

புதன்திசை ராகுபுத்தி

திருமதிக்குமகன் றிசையில்ராகுபுத்தியதுதான்
செப்புதிங்கள்முப்பதுடனுள்பதினெட்டிதற்கு
வருமிகுத்தகணக்கனுக்குப்பாம்பந்தர்க்கதனுய்
வந்திருந்தால்விடஞ்சோராக்கினியதனுற்பயமாம்
பொருகளத்திரநாசமுறுங்களத்திரத்தினுலே
போராட்டமுண்டாகுந்தனதான்யநாசந்
தருமதிகப்பீடையுடனகாலபோசனமே
தான்கிடைக்கும்மரணபயந்தனிக்கிரகம்போமே.

(இ - ள்.) அழகி! மதிமகனுன புதன் திசையில் ராகுபுத்திவரு 2, மீ 6, நாள் 18-ன் பலன்களைக் கேட்பாயாக:—புதனுக்கு ராகு பிரியாதவனுகி ஒன்ருய் இருந்தாலும், விஷம் சோராக்கினி பயம் உண்டாம். களத்திர நாசமும், மேலும் பகையுமுண்டாம். தனம் தானியம் நாசமடையும். அதிகமான பீடையும் அகாலபோசனமும் உண்டாம். மரணபயமும், கிரகம் பெயர்தலும் உண்டாம் என்க எ - று. 1

தனித்தமூன்ருறுபத்துப்பதினென்றிலேனுஞ்
சார்ந்தசுபர்கூடிடினுந்தானியலாபங்கள்
மனத்தினிலேசந்தோஷம்ராசாபிமானம்
வஸ்திராபரணமுதனுற்காலிலாபம்
புனத்துறையும்புண்யதீர்த்தந்தானங்கிடைக்கும்
பொருந்துமகாசவுக்கியமுந்தேகவாரோக்யங்
கனத்தபெரும்பாவியுடன்கூடிடினும்பவராற்
கடும்பார்வையுறிற்சத்ருநாசமெனக்கருதே.

(இ - ள்.) 3, 6, 10, 11-மிடங்களில் ராகு, சுபர்களோடு கூடியிருந்தால், தானியலாபங்களுண்டாம். மனச்சந்தோஷமும், ராஜாபிமானமும், வஸ்திராபரணம், நாற்காலிலாபமாம். கானகங்களிலுள்ள தீர்த்தஸ்நானம் உண்டாம். சௌக்கியமும் தேகாரோக்கியங்களும் உண்டாம். பாவியுடன்கூடி ராகுநின்ருலும், பாவிபார்த்தாலும் சத்துரு நாசமுண்டாம் என்று கருதுக எ - று. 2

நாசமுறுங்கடகசிங்கங்கும்பமாதத்தில்
ராசபயஞ்சண்டையினிலபசெயமுண்டாகும்

பேசரியசட்டாட்டவியத்திலிருந்தாலும்
பெலத்தகேந்திரகோணலாபமதுற்ருலும்
பாசமுறும்பாவியுடன்கூடினும்பார்த்தாலும்
பரராசர்விரோதமுடன்மனைபாழதாகும்
கூசிவிடுமனவியாதிதனதான்யநாசங்
கூறுமிஷ்டசனப்பகையுங்கொடுக்குமின்னங்கேளே.

(இ - ள்.) நாசமடைகின்ற கடகம், சிங்கம், கும்பமாசமாகிய, ஆடி, ஆவணி, மாசி மாதங்களில் ராஜபயமும், சண்டையில் அபஜெயமும் உண்டாம். 6, 8, 12-ஆமிடத்தில், 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திரகோணத்திலிருந்தாலும், பந்தமுள்ள பாவிகள் கூடினாலும், பார்த்தாலும், பூமியரசர்களின் பகையால், மனை பாழாவதோடு, தன தான்ய நாசங்களும், இஷ்ட ஜனங்களின் பகையுமுண்டாகுமாம். இன்னுங் கேட்பாயாக எ - று. 3

கொடுக்குமேமார்பதனிற்குத்துடனேகுன்மங்
குறித்தசமரதுதனிலேமரணமதுகாட்டும்
நடுக்குமேயுறும்வாக்குக்கேழினுக்குமின்னே
நாதனேயானுக்காலவமிருத்துபயமாம்
படுக்கண்ணுள்மகாதுர்க்கைசெபமதுதான்செய்தால்
வருமகாசுகமுடனேவாழ்வுமிகவுண்டாம்
உடுக்கைநேர்ந்திடுமிடைதள்ளாடிமிகவாடி
உயர்ந்துவிம்மிப்புடைத்தெழுந்தவுபயதனமாதே.

(இ - ள்.) உடுக்கையொத்து இடையானது சுமக்காது, வளைந்து தள்ளாடும்படி, உயர்ந்து விம்மி பருத்த தனங்களையுடைய மாதே! வாயுவால் குத்தும், குன்மரோகங்களும், யுத்தத்தால் மரணமுமுண்டாக்கும், நடுக்கமுண்டாம். 2, 7-ஆமிடத்துக்குடையவனோடு ராகு சேர்ந்திருந்தால், அவமிருத்து பயமுண்டாம். இதற்குப்பரிகாரமாக மாவடுவனைய நேத்திரத்தையுடைய துர்க்காதேவியின் செபஞ்செய்தால் வளருகின்ற சுகமும் வாழ்வுமுண்டாகும் எ- று. 4

ஆக விருத்தம் 347.

புதன்திசை குருபுத்தி

தனதானபுதன்றிசையிற்குருவினபகாரந்
தன்மாதமிருபத்தேழ்நாளாறுதனிலே
கனமானபுலவனுக்குக்குருவந்தர்க்கதனுய்க்
கதித்திருக்கிற்றனலாபமதுமிகவுண்டாகுஞ்
சொனசேயினுடன்கூடினுலதிகச்சண்டை
சொற்கேதுவுடன்கூடியிருக்கில்மன்னர்விரோத
வினைநேருஞ்சிற்றிடைப்பெண்ணமுதரசத்தேனே
விளம்பினர்கள்சோதிடத்தில்மிகமிகவல்லோரே.

(இ - ள்.) சிறிய இடையையுடைய தேனிரசம்போன்ற சொல்லையு முடையவளே! புதன் திசையில் குருபுத்தி வரு 2, மீ 6-க்கும் பலன் கேட்பாயாக:–புதனுக்கு வியாழன் பிரியாதவனுகி ஒன்றுயிருந்தாலும் தனலாபம் அதிகமாயுண்டாம். செவ்வாயுடன் கூடிநின்ருல் அதிகமான சண்டையுண்டாம். சொல்லுகின்ற கேதுவுடன் கூடிநின்ருல், மன்னர் விரோதமாம். சங்கடங்கள் உண்டாகும் என்று சோதிடங்கள்கற்ற வல்லவர்கள் தொகுத்துக் கூறினர் எ - று. 1

வல்லதொருவுச்சசொக்ஷேத்திரந்தனிலேயேனும்
வளர்கேந்திரதிரிகோணலாபத்திலேனும்
நல்லதொருகுருவிருந்தாலதிற்றேகசவுக்யம்
நாடுசுபசோபனமும்பாலனமும்புசிப்பன்
சொல்லரியவாதிபுத்திநல்லசவுக்கியமாந்
தூயநதிஸ்தானமும்புத்திரலாபமுண்டாம்
பல்பலபூஷணல்ாபமிகக்கிடைக்குமென்று
பகர்ந்தனர்சோதிடநூலின்பலனையுணர்ந்தோரே.

(இ - ள்.) வன்மை பெற்ற உச்சம் ஆட்சியிலும், 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திர கோணத்திலேனும், 11-ஆமிடத்திலேனும், நயமான குருவிருந்தால் சௌக்கியமாம். சுபசோபனங்களும், பாலன்ன ஆகாராதிகளும், புத்தி ஆதியில் நல்ல சௌக்கியமும், பரிசுத்தமாகிய வஸ்திராபரணமும் உண்டாம். பரிசுத்தநதி ஸ்தானமும், புத்திரலாபமும், பற்பலபூஷணுதிகள் லாபமுண்டாம் என்று சோதிடசாஸ்திர பலன்களையறிந்த பெரியோர்கள் கூறினர் எ- று. 2

சோதிடராராய்ந்தபடிகுருநீசனுகத்
தோன்றிடினுமஸ்தமனஞ்சட்டாட்டவியத்தில்
மாதிடமாயிருந்திடினுஞ்செவ்வாயும்ராகு
மந்தனுடனிவன்கூடிமருவியிருந்திடினுங்
கோதுடையசண்டை.வருமாதுர்பிதுர்பந்து
கொடுநாசம்ராசசோராக்கினியாற்பயமாந்
தீதுபுரிதலைவலியுங்காச்சலுமுண்டாகுஞ்
செகமன்னராற்ருன்யநாசமுறுந்தானே.

(இ - ள்.) சோதிடர் ஆய்ந்தபடி வியாழன் நீசனுகி யிருந்தாலும், அஸ்தமனமானுலும் 6, 8, 12-ஆமிடங்களில் நின்ருலும், செவ்வாய், ராகு சனி கூடியிருந்தாலும், குற்றமுள்ள சண்டைகளுண்டாம். பிதுர், மாதுர், பந்துக்கள் நாசமுண்டாம். அரசர், சோரர், அக்கினியால் பயமும், குற்றமுள்ள தலைவலியுடனே காய்ச்சலு முண்டாகும். அரசர்களால் தானியநஷ்டமும் உண்டாகுமென்க எ - று. 3

நாசமுறும்விபசாயவகையினுற்பூமி
நாசமுறுமனவியாதியதுமிகவுண்டாகும்
நேசமுறுங்கேந்திரகோணத்தையடைந்தாலும்
நீங்காதமூன்றுபதினென்றிலிருந்தாலும்
ஆசையுறுசிவபூசைதேவகுருபத்தி
அதினுடனேயகம்புரிவந்திகழ்சந்தோஷமுமாங்
காசினியிலிவன்படித்தவித்தையினுற்சிவிகை
கனலாபமுண்டெனவுங்கருதிடுபெண்ணரசே.

(இ - ள்.) பெண்ணரசே! விபசாயம் நாசம், பூமிநாசமும், மனேவியாதியும் அதிகமாயுண்டாம். 1, 4, 7, 10. 5, 9ஆமிடங்களி லும், 3, 11-ஆமிடங்களில் இருந்தாலும், ஆசையுடன் சிவபூஜை, தேவர், குருபக்தியுடன் யாகமும் புரிவன். பிரகாசிக்கின்ற சந்தோ ஷமும், பூமியில் படித்த வித்தையினுல் சிவிகை தனலாபம் உண்டா குமாமென்று எண்ணிடுக எ - று. 4

கருதியதோர்பாவியுடனிவன்கூடினுலுங்
கடும்பாவிபார்த்தாலுமார்பதனிற்குத்தோ
டுரிமையுறும்புத்திரருக்கதிநாசமாகு
முள்ளமதுபாலத்திற்சொல்லுமனவியாதி

வருமரசர்பயமுண்டாஞ்சட்டாட்டவியத்தில்
வலிகெட்டுத்துற்பலனுய்க்குருவடைந்தானுகிற்
பரிவுடனெக்காலமுமேயபகீர்த்திகளத்திர
பயம்புத்திரதனநாசஞ்சத்ருபயமுறுமே.

(இ - ள்.) எண்ணுகின்ற பாவியுடன் குரு கூடியிருந்தாலும், பாவிகளால் பார்க்கப்பெற்ருலும், மார்பில் குத்தும், புத்திரருக்கு நாசமும், பாவகிருத்தியங்களில் மனமுமுண்டாம். மனவியாதியும் அரசர் பயமுமுண்டாகுமென்க. 6, 8, 12-ஆமிடங்களில் துற்பலனுய் குருவிருந்தால் சதாகாலமும் பயமும், அபகீர்த்தியும் களத்திரபுத்திர தனநாசங்களும் சத்துருபயமுமுண்டாம் எ - று. 5

வேறு

பயமுறுமிரண்டேழுக்குப்பதிகுருவாகினுக்கால்
நயமிலேபரிகாரந்தானவிலக்கேள்பராசர்வாக்கால்
இயல்புறுஞ்சிவசகஸ்த்ரநாமமேயியற்றினுக்காற்
கயலெனவிழிசேர்மாதேகனசுகமாகுந்தானே.

(இ - ள்.) மீன்போன்ற கண்களையுடையமாதே! பயமுண்டாக்கும். 2, 7-ஆமிடங்களுக்கு வியாழன் அதிபதியாயின், மிகுந்த ஆபத்துண்டாம். அது நீங்குவதற்கு பாராசரமுனிவர் சொன்ன வாக்குப்படி இதங்கொடுக்கின்ற சிவபூஜையும், சகஸ்திரநாமார்ச்சனை செய்தால், சுகமுண்டாகுமாம் எ - று. 6

ஆக விருத்தம் 353.

புதன்திசை சனிபுத்தி

ஆகுமிந்தப்புதன்திசையிற்சனியபகாரந்தா
ஞன திங்கள்நாலெட்டுநாளொன்பதாகும்
வாகுபெருஞ்சவுமியற்குச்சனியந்தர்க்கதனுய்
வதிந்திருக்கிற்சண்டையினுல்மனச்சலனமுண்டாம்
போகுமவன்றிரவியமுமரசர்பயத்தாலே
புகழில்லாப்பாவமதிலவன்மனதுசெல்லுஞ்
சோகமுறும்பயமுண்டாமெனக்கணிதந்தேர்ந்த
சோதிடர்களுரைத்தபலன்சொல்லிடுபூங்குயிலே.

(இ - ள்.) மிகுந்த புதன் திசையில் சனிபுத்தி வரு 2, மீ 8, நாள் 9-க்கும் பலன் கேட்பாயாக :- புதனுக்கு, சனி பிரியாதவனுகி ஒன்று கூடியிருந்தாலும், சண்டையினுல் மனச்சஞ்சலங்களும், திரவிய நாசமும் உண்டாம். அரசர் பயமும், பாவத்தில் மனதைச் செலுத்தலும் என அதிகமான துக்கபய மடைதலும் உண்டாகுமென்று கணிதம்தேர்ந்த சோதிடர்களால் சொல்லப்பட்டனவென்று சொல்லுவாய் எ - று. 1

சொல்லாயவுச்சசொக்ஷேத்திரத்திலிருந்தாலுந்
தோன்றியமூன்ருறுபதினென்றையடைந்தாலும்
நல்லலக்கினுதிபதிநோக்கமுற்ருலுந்தான்
ராச்சியலாபமுமதிகசுகங்களுமுண்டாகும்
வல்லமைசேரிரணியனுல்நோக்கமுற்று நின்ருல்
வருமதிகத்தளகர்த்தமதிகசுகம்பெருகும்
அல்லவெனிற்சுபர்நோக்கமுற்ருலும்நன்மை
யதிகவித்தைலாபமதிகீர்த்தியுமுண்டாமே.

(இ - ள்.) சொல்லப்பட்ட உச்சம் ஆட்சியில், சனியிருந்தாலும், 3, 6, 11-ஆமிடங்களில் நின்ருலும், லக்கினுதிபதியால் பார்க்கப்பட்டாலும் ராச்சியலாபங்களும், அதிகமான சுகங்களும் உண்டாம். வியாழனுல், பார்க்கப்பட்ட சனியாயிருந்தால், தளகர்த்த உத்தியோகமும், அதினுல் மிகுந்த சுகமுமுண்டாம். அல்லாமல் வேறு சுபரால் பார்க்கப்பட்டாலும், நன்மையும் அதிகவித்தையும், லாபமும் கீர்த்தியும் உண்டாகும் எ - று. 2

வேறு.

மேதினியதனிற்சுபாங்கிசந்தனிலே
மேவியேசனியிருந்தாக்காற்
சேதுவிற்ருனப்புரிகுவனிந்தச்
செழுஞ்சனிபுத்தியந்தியத்தில்
மாதுயரடைவன் காரியநாசம்
வந்திடுமதிகமாம்பயங்கள்
சாதகன்றனக்குத்தேகபீடையுமாந்
தன்மனநோயதுற்றிடுமே.

(இ - ள்.) பூமியில் சுபாங்கிசத்தில் சனி நின்ருலும், சேதுஸ்நானமும் புரிவான். சனிபுத்தி யந்தியத்தில், மாதுயரடைவன்.

காரியநாசமும், அதிகமான பயமும் உண்டாகும். சாதகனுக்குத் தேக பீடையும் மனநோயு முண்டாம் எ - று. 3

வேறு

உற்றிடும்வாக்குக்கேழுக்குடையவனானல்தீது
பற்றிடுமவமிருத்தாம்பயமதுவிலகவென்றல்
பெற்றிடுஞ்சனிநாள்நோன்புபேணிமண்டலநாள்நிற்க
பற்றிடாத்தோஷமென்றுபராசரமுனிசொன்னரே.

(இ - ள்.) 2, 7-க்குடையவன் சனியானல், சங்கடத்தோடு அவமிருத்துபயமும் வந்துவிடும். அது விலகவென்றல் சனிக்கிழமை விரதம் மண்டலநாள் இருக்கத் தோஷம் உண்டாகாதென்றும் பற்றினும் விட்டுவிடுமென்றும் பராசரமுனிவர் வடநூலில் பகன்றனர் எ - று. 4

ஆக விருத்தம் 357.

கேதுதிசைப் படலம்

வேறு

மறையுங்கேதுமகாதிசையானது
தறையிலேழ்வருடப்பலன்றன்சொலிற்
குறையுமேபொருள்குன்றிடுந்தாரமு
முறைசெய்ராசபயமுமுண்டாகுமே.

(இ - ள்.) மறைந்து தோன்றுகின்ற கேதுதிசை ஷ 7-க்கும் பலன்சொல்லுமிடத்து பொருள் குறைவும், தாரபயமும், அரசர் பயமுமுண்டாமென்க எ - று. 1

பயமிலாக்கள்ளரக்கினியாற்பயம்
நயமில்பீடைசரீரத்தில்நண்ணிடும்
செயமிகுந்தமூன்றாறுடன்பத்திலே
நியமமாகநின்றாற்பலனீசொல்லே.

(இ - ள்.) அஞ்சாத் திருடராலும் அக்கினியாலும் பயமுண்டாம். குற்றமான பீடையானது தேகத்தில் சேர்ந்திடும். செயமுற்ற 3, 6, 10-ஆமிடங்களில் நியாயமாய் கேது நிற்கில் பலன் கேட்பாயாக எ - று. 2

சொல்லருஞ்சுதருந்தனதானியம்
நல்லதோர்விபசாயமும்லாபமாம்
வல்லகேந்திரகோணமுற்றிற்பல
மில்லையெண்ணிலிதின்பலன்கேண்மினே.

(இ - ள்.) சொல்லுகின்ற புத்திரரும், தன தானியங்களும், நன்மையான விபசாய லாபங்களும் உண்டாம். வலிதாகிய 1, 4, 7-10, 5, 9-ஆமிட கேந்திர கோணம்பெற்றால் பலன் சொற்பமென்றும், ஆய்ந்து இதன் பலன் கேட்பாயாக எ-று. 3

பலிதமில்மிருகப்பயமன்னரால்
வலிகொள்சோரர்வருகுந்தியாற்பயம்
நலியுங்குன்மம்பயித்தியம்நண்ணிடுஞ்
சொலிலுமிட்டசனந்துயர்சூழுமே.

(இ - ள்.) பலிதமில்லாத மிருகத்தால் பயமும், அரசர், திருடர், அக்கினியால் பயமும், மெலிகின்ற குன்மமும், பயித்திய நோயும் உண்டாம். இஷ்டஜன பந்துக்கள் துயரமும் அடையும் என்பதாம். எ - று. 4

மேவுமூன்றினிலாபத்தில்மேவிடில்
ஆவல்சேருமதிகசுகத்தொடுங்
காவல்சேர்ந்திடுங்காசினிலாபமாம்
பூவிலேவிபசாயம்பொருந்துமே.

(இ - ள்,) 3, 11-ஆமிடங்களில் கேது நின்றால், ஆவலுடன் அதிகசுகமனுபவித்தலும், காவல்கொண்ட பூமிலாபமும் விபசாயமும் உண்டாம் என்று கூறுவாய் எ - று. 5

பொருந்துமேநரவாகனம்பூணணி
முருந்துமூரல்களத்திரமும்முறுந்
திருந்திடுந்திசையாதிசுகம்நடு
வருந்திடும்பயமென்றுவகுத்திடே.

(இ - ள்.) நரவாகனம் பொருந்துதலும், இளமைபெற்ற பெண் கல்யாணமாவதும், திசையில் முற்பாகத்தில் மிகுந்த சுகமும், நடுப் பாகத்தில் பயமும் உண்டாகுமென்று சொல்லுவாயாக எ - று. 6

வகுத்தராாசர்பயம்வருமந்தத்திற்
பகுத்தவொன்பதுபத்துக்குமேயிவன்
மிகுத்தவாதிபனுகவுமேவிலுந்
தொகுத்தலக்கினத்தோனுடன்கூடியே.

(இ - ள்.) கடைப்பாகத்தில் அரசரால் பயமுண்டாம். 9, 10-க்குடையவனேடுகூடி கேது நின்ருலும், லக்கினதிபதியுடன் கூடியிருந்தாலும் எ - று. 7

கூடிநின்றிடிற்ருனியங்கோகுலஞ்
சாடிடிடும்பலராாசர்சம்பத்துடன்
தேடிடும்பொருள்யாவுஞ்சிறந்திடும்
வாடிடும்மிடைமங்கையர்தங்கமே.

(இ - ள்.) வாடுகின்ற இடையையுடைய மங்கையரில் உயர்வுடையாய்! தானியலாபமும், பசுவர்க்கவிருத்தியும், பலராச சம்பத்தும் உண்டாம். பொருள் சிறப்புண்டாகும் எ - று. 8

ஆக விருத்தம் 365.

கேதுதிசை கேதுபுத்தி

வேறு

தங்கியதோர்கேதுதிசைதனிலவன்றன்புத்தி
தான்மாதம்நாலுடனேநாளிருபத்தேழாம்
பொங்கமுடனென்பதுபத்துக்குடையோனுடனே
பொருந்திடும்லக்னுதிபதியுடன்சேர்ந்தாலுந்தான்
பங்கமில்லாப்புத்திரத்தானத்துடையோனுடனே
பதிந்திடினுஞ்சுபக்கிரகப்பார்வையுற்ருலேனுந்
துங்கநதிதீர்த்தம்விபசாயசிவபூசை
சொல்லரியதனதான்யலாபமிகவருமே.

(இ - ள்.) தங்கிய கேது திசையில் கேது புத்தி மாதம் 4, நாள் 27-க்கும் பலன் கேட்பாயாக. 9, 10-க்கதிபதியுடன் கேது சேர்ந்து லக்கினுதிபனுங் கூடிநின்ருலும், 5-ஆமிடத் ததிபனுடன் கூடிடினும், சுபக்கிரகங்களால் பார்க்கப்படினும் உயர்வுபெற்ற நதி தீர்த்தங்களும், விபசாயமும், சிவபூஜையும், தன தான்ய லாபமும் உண்டாகும் எ - று. 1

சொல்லரியபாக்கியத்தானத்தானைக்கூடிற்
சொலுஞ்செவ்வாயுடன்கூடிற்சமரில்மிகுசெயமாம்
வல்லதொருராசசன்மானங்களுமுண்டாகும்
வருந்தடாகந்தருமமாதிபலசெய்வன்
நல்லதொருகிரகமதிற்றிருநிறைந்துவாழும்
நாடியகேந்திரதிரிகோணத்தையடைந்தாலுஞ்
சில்லரைசேர்சட்டாட்டவியத்திலிருந்தாலுஞ்
செழுங்குயிலேயதன்பலனைச்செப்பிடுவன்கேளே.

(இ - ள்.) வளம்பொருந்திய குயில் மொழியாய்! சொல்லுதற் கரிதான 9-க்கதிபனுடனும், செவ்வாயுடனும் கேது கூடி இருந்தால், யுத்தம் ஜெயமாம். வலிமைபெற்ற ராஜ சன்மானங்களுண்டாம். தடாக முதலிய தர்மபலன் உண்டாகும். கிருகத்தில் லக்ஷிமிகடாட்ச முண்டாம். 1, 4, 7, 10, 5, 9-ஆமிடமாகிய கேந்திரகோணத்தில் கேதுவிருந்தாலும், குறைவுற்ற 6, 8, 12-ஆமிடங்களில் இருந்தாலும் அதின் பலன்களைக் கேட்பாயாக எ - று. 2

செப்பியதோர்தனநாசமனவியாதியுடனே
சேர்ந்தகளத்திரநாசம்புத்திரரும்நாசம்.
ஒப்பரியமனையாளாற்பிராணபயமுண்டா
முகந்தபந்துசனநாசமுறுமிரண்டேழுக்கு
இப்படியிலிவனுதனுகியேபாவி
யிவனுடனேசேர்ந்திருக்கிலவமிருத்துபயமாம்
மைப்படியுங்கண்ணாய்கேள்பரிகாரமதுதான்
மகேசுரபூசையும்புரியமாபயந்தீர்ந்திடுமே.

(இ - ள்.) அஞ்சனம்பெற்ற கண்களையுடையவளே! சொல்லு கின்ற தனநாசமும், மனவியாதியும், களத்திர புத்திரர் நாசமும், மனைவியால் பிராண பயமும், உற்ற பந்துசன நாசமுண்டாம். 2, 7-ஆமிடங்களுக் குடையவனுடன் கேது கூடிநின்றாலும், பாவருடன் சேர்ந்துநின்றாலும், அவமிருத்து பயமுண்டாம். இதற்குப் பரிகாரம் கேட்பாயாக. மகேசுர பூஜை செய்தால் சங்கடம் நீங்கி, அவமிருத் தும் விலகிவிடும் என்பதாம் எ - று. 3

ஆக விருத்தம் 368.

கேதுதிசை சுக்கிரபுத்தி

திடமானகேதுவினிற்சுக்கிரனுர்புத்தி
சேர்ந்தபதினுல்மாதமதிற்பலனைக்கேளாய்
அடைவானகேதுவுக்குக்கவியந்தர்க்கதனே
யானுலுங்கேந்திரகோணங்களிலேயேனும்
உடலானலாபத்தானத்திலேயேனு
முறுதியுடனிருந்தாலுந்திசைநாதனிருந்த
விடம்நாடிப்பதிந்தாலுங்களத்ரபுத்ரநாச
மிராச்சியமுமசுவகெசலாபமுமுற்றிடுமே.

(இ - ள்.) திடம்பெற்ற கேதுதிசையில் சுக்கிரன்புத்தி வரு 1, மாசம் 2-க்கும் பலன் சொல்லுமிடத்து, கேதுவுக்குச் சுக்கிரன் பிரியாமல் ஓரிடத்திலிருந்தாலும், 1, 4, 7, 10, 5, 9-ஆமிடமாகிய கேந்திர கோணங்களிலிருந்தாலும், 11-ஆமிடத்திலேனும் இருந்தாலும், திசாநாதனேடு சேர்ந்தாலும், களத்திர சௌக்கியமும், இராச்சியங்களும், யானை, குதிரை லாபமும் உண்டாகுமென்க எ - று. 1

உற்றுவரும்பாக்கியத்தானத்தோனைக்கூடி
லுயர்ந்தசம்பத்துண்டாகும்நீசாஸ்தமனமே
பெற்றவனேடிருந்தாலும்பாவிகூடிடினும்
பெரும்பாவிபார்த்தாலுமிராசவிரோதமுமாம்
நற்றனதானியநாசமிடியினுலரவால்
நடுக்குபயமுண்டாகுமனவியாதிசேருங்
கற்றவர்களுவமானமதற்கடங்காதெழுந்து
கண்கருத்துபுடைத்திளகுங்கனத்ததனமயிலே.

(இ - ள்.) கற்ற வித்வான்களால் உவமை சொல்ல முடியாது, உயர்ந்து கண் கருத்து இடமகன்று மிருதுவாகிய பருத்த தனங்களையுடையவளே! பொருந்திவருகின்ற பாக்கியாதிபனேடு சுக்கிரன் கூடியிருந்தால், உயர்வாகிய தனங்களும் உண்டாகும். நீசனுலும், நீசனேடு சேர்ந்தாலும், பாவிகள் கூடியிருந்தாலும், பாவிகளால் பார்த்தாலும், இராஜாக்களால் விரோதமும், தனம், தானியங்கள் நாசமும், இடியாலும், பாம்பாலும் பயமுண்டாம். மனேவியாதியும் உண்டாம் எ - று. 2

கனத்தகேந்திரகோணமதனிலிருந்தாலுங்
கதித்தமூன்றென்பானிலேவதிந்திட்டாலும்
நினைத்தகாரியஞ்செயமாந்தேகவாரோக்யம்
நீணிலத்திலாடையாபரணமிகலாப
மனத்துடனேபால்பழமுநிதநிதமும்புசிப்பன்
வருமூர்க்கூர்சவுக்யதனலாபமத்தியத்தில்
தனத்திலற்பநாசமுறுமந்தியத்திலேதான்
தன்மனைபோங்குலநாசமரசர்பயமுறுமே.

(இ - ள்.) கனமான 1, 4, 7 10, 5, 9-ஆமிடமாகிய கேந்திர கோணத்தில் இருந்தாலும், 3, 9-ஆமிடத்தில் இருந்தாலும், நினைத்த காரியஞ் செயமடையும். தேகாரோக்கியமுண்டாம். பூமியில் ஆடை யாபரண லாபமுண்டாம். நல்ல மனதோடு கூடிய பால், பழத்துடன் ஆகாரம் புசிப்பன். கிராமம் உண்டாம். சௌக்கியமும், தனலாப மும், மத்திய பாகத்தில் பொருள், அவமானம், கெடுதல்களும், கடைசிப் பாகத்தில் மனையாள் நாசமும், குலக்கேடும், அரசரால் பயமும் உண்டாம் எ - று. 3

நாசமில்லாச்சட்டாட்டவியம்வாக்கிலிருந்தால்
நற்சுக்ரபுத்தியினிலதிகசவுக்கியமாந்
தேகசுகங்களத்ரபுத்ரசவுக்கியமுமுண்டாஞ்
செகதலத்திற்றனதான்யலாபமிகவாகும்
ராசராலபிமானமிரண்டேழுக்கிவனே
நாதனுயிருந்தாக்காலதிபீடையுண்டாந்
தோஷமதுமிகத்தீரப்பரிகாரமதுதான்
துர்க்கைக்குப்பூசைசெய்யசுகமிகவுந்தருமே.

(இ - ள்.) நாசகாரணமான 6, 8, 12-ஆமிடங்களில் சுக்கிரன் நின்றால், கெடுதல்காரணமான சங்கடங்களுண்டாம். 2-ஆமிடத்தில் நின்றால், அதிக சௌக்கியமும், தேகசுகமும், புத்திர சௌக்கியமும், தனதானிய லாபங்களும், ராஜாபிமானமும் உண்டாம். 2, 7-ஆமிடங் களுக்குச் சுக்கிரன் அதிபதியாயின், அவமிருத்தோடுகூடிய பீடை யுண்டாம். அதற்குப் பரிகாரம் கேட்கில், துர்க்காதேவிக்குப் பூஜை யியற்றில் அதிக சுகப்பிராப்தி உண்டாகுமாம் என்றனர் எ - று. 4

ஆக விருத்தம் 372.

கேதுதிசை சூரியபுத்தி

தருங்கேதுதிசையிலர்தித்தனபகாரந்
தானுலுமாதமுடனுளாறதாகும்
வருங்கேதுதனக்கிரவியந்தர்க்கதனுக
வதிந்திடினுமுச்சசொக்ஷேத்திரத்தையடைந்தாலும்
இருஞ்சுபர்கள்கூடிடிலுஞ்சுபர்பார்த்திட்டாலு
மிராசவனுக்கிரகமுடன்ராசசன்மானங்கள்
பொருங்கணையைவடிவாளையெழில்வேலைப்பழித்து
புருடர்திருமார்பதனிற்பொருங்கருங்கண்மயிலே.

(இ - ள்.) போர் செய்கின்ற அம்பையும், கூர்மைபெற்ற வாளையும், அழகுபெற்ற வேலையும் கோபித்து ஆடவர்களின் மார்பில் பொருகின்ற ஸ்தனங்களையும், அஞ்சனம் தோய்ந்த கண்களையுமுடையவளே! கேதுதிசையில் சூரியபுத்தி மாதம் 4-லுடன் நாள் 6-க்கும் பலன் கேட்பாயாக. கேதுவுக்குச் சூரியன் பிரியாதவனுகி ஒன்றுயிருந்தாலும், உச்சம் ஆட்சி பெற்றாலும், மிகுந்த சுபர்களால் பார்க்கப்பட்டாலும், இராஜ அனுக்கிரகமுடன் சன்மானங்களும் உண்டாம் எ - று. 1

கருதியதோர்சட்டாட்டவியந்தனிற்கேந்திரத்திற்
கதித்ததிரிகோணமதில்நீசாங்கந்தன்னில்
வருநீசராசியினிற்பருதியிருந்தாக்கால்
மண்டையிடிதலைவலிநோய்சுரபீடைகாட்டும்
பரிவானகளத்ரபுத்ரபீடைமிகவுண்டாம்
பகர்மாதுர்நாசம்பரதேசகமனமுமே
பொருந்துசோராக்கினியால்விடத்தாலும்பயமாம்
புகழ்காலிமிகநாசம்புகன்றிடுபெண்ணரசே.

(இ - ள்.) நினைக்கின்ற 6, 8, 12-ஆமிடங்களிலும், 1, 4, 7, 10, 5, 9-ஆமிடமான கேந்திர கோணத்தும், நீசமாகியும், நீசாங்கிசம் பெற்ற சூரியன்நிற்கில், மண்டையிடி, தலைவலியும், சுரபீடையுண்டாம். களத்திர புத்திர பீடையும், மாதுர் நாசமும், பரதேச கமனமும், சோரர், அக்கினி பயமும், விஷத்தால் துன்பமும், கன்று காலி சேதமும், கண்ணேயுமுண்டாகுமென்று சொல்லுக எ - று. 2

பெண்ணேகேளிரவிபுத்தியந்தியத்திற்சுகமாம்
　பெருமிரவிகூடிடினு நீசன்கூடிடினுங்
கண்ணுகுமிரண்டேழுக்குடையவன்சேர்ந்தாலுங்
　காலமிர்த்துபயமதற்குப்பரிகாரம்புகல்வேன்
விண்ணுடர்பணிந்தசிவபூசைசெய்து துர்க்கை
　மிகப்பூசைசெய்ததன்பின்வெய்யோனுள்நோம்பு
எண்ணுறு நாள்பட்டுமிருந்திடவெப்பவமும்
　இரவிகண்டபனியெனப்போமெனவிசைத்தார்மெய்யே

(இ - ள்.) பெண்ணே கேட்பாயாக! சூரியபுத்தி அந்தியத்தில் சுகமுண்டாம். பாவியோடும், நீசனேடும் இரவி கூடிநின்றாலும், 2, 7-ஆமிடத்ததிபனுனாலும், 2, 7-க்கதிபனுடன் சூரியன் கூடினுலும், காலமிருத்துப் பயமுண்டாம். அதற்குப் பரிகாரம் கேட்பாயாகில், தேவர்கள் பணிந்து செய்யப்பட்ட சிவனைப் பூஜைசெய்து, துர்க்கை பூஜையும்செய்து பின், மண்டலகாலம் ஞாயிற்றுக்கிழமை விரதமிருக்க, ஷ்டி சூரியனைக்கண்ட பனியேபோல் சங்கடங்களெல்லாந்தீர்ந்து, சுகமுண்டாகுமென்று கணித நூலோர் உரை செய்தனர் எ - று. 3

ஆக விருத்தம் 375.

கேதுதிசை சந்திரபுத்தி

மெய்யார்செங்கேதுதிசைதனிற்சசியின்புத்தி
　மேவியதோரேழ்மாதமதன்பலனைக்கேளாய்
பொய்யாதசசிகேதுக்கந்தர்க்கதனுகிப்
　பொருந்திடினுமுச்சசொக்ஷேத்திரகோணத்தேனுஞ்
தொய்யாதகேந்திரத்திலேனுமிருந்தாலுந்
　சுபனுடனேகூடிடினுமதிகசுகமுண்டா
மையிலகுஞ்சேல்விழியாயாடவர்களுயிரை
　வாங்கியவர்தமைமருவுமங்கையரஞ்சுகமே.

(இ - ள்.) அஞ்சனம்பெற்ற கெண்டை மீனுக்குச் சமானமான கண்களால் ஆடவர்களின் உயிரையும் வாங்கி மயக்கி மருவுகின்ற பெண்கிளியே! உண்மையுள்ள சிவந்த கேதுதிசையில் சந்திரபுத்தி

மாசம் 7-க்கும் பலன் கேட்பாயாக. பொய்மையில்லாத கேதுவுக்கு சந்திரன் பிரியாமல் கூடியிருந்தாலும், உச்சத்திலும், ஆட்சியிலும் 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திர கோணத்தும், சுபக்கிரகங்களுடன் கூடியிருந்தாலும் அதிக சுகமுண்டாம் எ - று. 1

சுகமாகுந்தனலாபமிராசசன்மானங்கள்
சோபனகல்யாணமுடனுடையாபரணம்
மிகலாபம்பரிலாபந்தேவாலயங்கள்
மிகுத்தடாகங்களுடன்கட்டிடங்கள்செய்வன்
அகமோடுபுவிலாபமாகுமிந்தச்சசிதா
னதிககலைநிறைந்திருக்கிலதின்பலன்முன்போலாஞ்
செகமீதுநீசனுய்த்தேய்மதியமானுற்
சிலசவுக்கியமனநோயிசேருமின்னங்கேளே.

(இ - ள்.) சுகமான தனலாபமும், இராச சன்மானங்களும், சோபனங்களும், கல்யாணங்களும் உண்டாம். ஆபரண லாபம், யானை, குதிரை லாபம், தடாகங்கள், தேவாலயங்கள், கட்டிடங்கள் செய்வதும் பூமி லாபமும் உண்டாகும். பூரண சந்திரனுக இருந் தால் ஷை பலன்களை அதிகமாகச் செய்வான். நீசமானாலும், அமர மதியாயிருந்தாலும், சொற்பமான சௌக்கியமும், மனநோயுமுண் டாம். இன்னும் கேட்பாயாக எ - று. 2

சேருமொருவாக்குத்தானத்துடையோன்றன்னைச்
செலுமதியங்கூடியிடிற்றேகசாட்டியமாங்
கூறியிடுமனநோயிதானுண்டாமிதற்குக்
குறித்தபரிகாரமதுகுகன்பூசையாற்போம்
ஆறுடனேயெட்டுவியமதிற்சுபனைக்கூடி
லதிகசுபன்பார்த்தாலுஞ்சோபனங்கள்நடக்கும்
நேரும்நற்றருமசிந்தையாதிபுத்திசுகமே
நிலைக்குநடுசொற்பசுபங்கடையினிற்றீதாமே.

(இ - ள்.) சந்திரன் வாக்குடையவனோடு கூடியிருக்கின், தேக நஷ்டமுண்டாம். மனநோயும் பொருந்துமாம். இதற்குப் பரிகாரம், குகன் பூஜை செய்யக் குணமுண்டாம். 6, 8, 12-ஆமிடங்களில் சுபனைக்கூடிச் சந்திரன் நிற்கிலும், சுபர்களால் பார்க்கப்பட்டாலும்

சோபனங்களுண்டாம். தரும சிந்தையும், புத்தி தீட்சண்யமுமுண் டாம். சந்திரன்புத்தி ஆதியில் சுகமும், நடுவில் சொற்ப சுகமும், கடைசியில் தீதும் உண்டாக்கும் என்று சொல்லுக எ - று. 3

ஆமேகேந்திரகோணலாபத்தானத்தை
  யடைந்தாலும்பலவான்களுடன்கூடினாலும்
பூமீதுவிபசாயலாபம்வித்தைலாபம்
  புகலரசர்சன்மானம்வஸ்திராபரணம்
சீமேவுசிவிகைவருஞ்சுகபோகஞ்சேரும்
  தேகசவுக்கியமுண்டாமூன்றுபத்திலேதான்
மீமேவுஞ்சசிபூர்ணமாகியிருந்தாலும்
  விளங்குசொக்ஷேத்திரத்துறினு மிகும்பலனைக்கேளே.

(இ - ள்.) உண்டாகும் 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திர கோணத்தில் சந்திரன் நின்றாலும், 11-ஆமிடத்தில் நின்றாலும், பலவான்களுடன் கூடினாலும், பூமியில் விவசாயலாபமும், வித்தை லாபமும், அரசர் சன்மானமும், வஸ்திராபரணமுமுண்டாம். சிறப் புப்பொருந்திய பல்லக்கும், சுகபோகங்களும், தேக சௌக்கியமும் உண்டாம். சந்திரன் 3, 10-ஆமிடங்களில் பூரணனாகி நின்றாலும், விளங்குகின்ற ஆட்சிபெற்றாலும் பலன்களைக் கேட்பாயாக எ - று. 4

பலனுதவுங்காலிகன்றுஉடணிவுளிசிவிகை
  பண்பானராச்சியமும்லாபமதிசுகமாம்
நலனுதவும்புத்திரலாபம்வஸ்திரலாபம்
  நல்கும்விதுசட்டாட்டவியத்திலிருந்தாலுங்
கலகமிகுபாவியுடன்கூடியிருந்தாலுங்
  கனதனதானியலாபம்பூஷணலாபங்கள்
சொலவரியபாவர்கூடாமலவன்பார்வை
  தோன்றிடினுந்தனதான்யநாசமுறுந்தானே.

(இ - ள்.) காலி கன்று பலிதமும், குதிரை பல்லக்குண்டாம். குணம்பெற்ற ராச்சியலாபமும் உண்டாம். அதிகலாபமும் சுகமும் புத்திரர், களத்திரம், வஸ்திராபரணம் லாபமுண்டாம். 6, 8, 12-ஆ மிடங்களில் போர்செய்யும் பாவியுடன்கூடிய சந்திரன் நின்றால், தானியம் பூஷணலாபமாம். பாவர்கள் பார்வைபெற்றால், தன தான்ய நஷ்டமுமுண்டாகுமென்க. 5

தானுனபந்துசனவிரோதமுமுண்டாகுஞ்
சாதகன்றன்காலினிலேவிலங்குவந்துசேரும்
வானுருமதியிரண்டேழுக்குடையோனுகில்
வந்துவிடுமவமிருத்துபயமதற்குத்தானே
மானுருமீசனுக்குஅபிஷேகஞ்செய்ய
வருந்துயர்போயதிகசுகமுண்டாகுமென்றூர்
தேனேடுபால்கருப்பஞ்சாற்றினையுஞ்சேர்த்துத்
தெளிந்தெடுத்தவமுதமெனச்செப்புமொழித்திருவே.

(இ - ள்.) தேன், பால், கருப்பஞ்சாறு சேர்த்து அதைத் தெளித்த அமுதம்போன்ற சொல்லையுடைய திருவே, பந்து ஜன விரோதங்களும், காலில் விலங்கு பூணுதலும், சந்திரன் 2, 7-ஆமிடத்துக்கு அதிகாரியாகில் அவமிருத்துகண்டம் உண்டாம். அதற்குப் பரிகாரங்கேட்பாயாக:–மானேந்திய ஈசனுருக்கு அபிஷேகஞ் செய்யில் துன்பம் நீங்கிச் சுகமுண்டாமென்று சோதிடவல்லவர் கூறினர் எ - று. 6

ஆக விருத்தம் 381.

கேதுதிசை செவ்வாய்புத்தி

செப்பியதோர்கேதுவினிற்குசன்புத்தியதுதான்
சேர்ந்துவரும்நால்மாதமிருபத்தேழ்நாளாம்
ஒப்பிலாக்குசன்கேதுக்கந்தர்க்கதனுக
வுற்றுலும்கேந்திரகோணத்தையடைந்தாலும்
இப்புவியிற்றனதான்யமிகநாசமாகு
மெதிர்த்துவருஞ்சமர்தனிலேயபசெயம்வந்தெய்துந்
தப்பரியபந்துசனவிரோதமும்வந்தெய்துஞ்
சத்ருபயஞ்சுரபீடையுஷ்ணபயித்தியமே.

(இ - ள்.) சொல்லுகின்ற கேது திசையில் செவ்வாய் புத்தி மாசம் 4, நாள் 27-க்கும் பலன் கேட்பாயாக:–உவமைசொல்லத் தகாத செவ்வாய்க்கு கேது கூடி ஒன்றுயிருக்கினும், 1, 4, 7, 10. 5, 9-ஆமிடமாகிய கேந்திரகோணத்துற்றுலும், தனம் தானிய நஷ்டங்களும், சமரில் அபஜெயமும், பந்துசனங்கள் விரோதமும்,

சத்துருபயமும் சுரபீடை உஷ்ண பயித்தியமும் உண்டாகு மென்க எ - று. 1

சயபீடையுடன்மனைபோஞ்சுபாங்கிசமதாயுந்
 தனிச்சுபர்கள்சேர்ந்தாலும்முச்சசொட்க்ஷேத்திரத்தில்
நயமோடங்கிருந்தாலுமற்பசவுக்கியமாம்
 நடுமத்தியதிசவுக்கியநல்கிடுமேகடையிற்
பயமோடுபரதேசசஞ்சாரமுண்டாம்
 பார்த்திபராற்சோரராலக்கினியாற்பயமாங்
கயலாரும்விழிமடவாயதிசாரரோகங்
 காச்சலுமுண்டாமெனவேகருதினர்சோதிடரே.

(இ - ள்.) கெண்டைபோன்ற விழியாய்! சயரோகமும் மனையாள் நாசமும், சுபாங்கிசமும் சுபர்கள் சேர்க்கை அல்லது பார்வையும் பெற்று உச்சசொட்க்ஷேத்திரத்தில் பூரணசந்திரனுயிருக்கின் அற்பசௌக்கியமுண்டாம். மத்தியபாகப் புத்தியில் அதிகமான சௌக்கியமும், கடைப்பாகபுத்தியில் அதிகபயமும், பரதேசசஞ்சாரமும், அரசர், சோரர், அக்கினியாற் பீடையும், அதிசாரரோகமும், காய்ச்சலுமுண்டாகுமென்று வல்ல சோதிடர்கள் கருதிச் சொல்லினர் எ - று. 2

திடமுடையசட்டாட்டவியத்திலிருந்தாலுந்
 திரிகோணகேந்திரத்திற்பாவியுடனுறினுங்
கடன்மிகுக்குமதிகஷ்டந்தனதான்யநாசங்
 களத்திரபுத்திரநாசஞ்சுபனுடனேகூடி
லடைவுடையதனலாபம்புவிலாபமுண்டா
 மாதிபுத்திசவுக்யமத்தியாங்கடையிற்கிலேசம்
தடமுலையாய்மூன்றுறுபத்துபதினொன்றிற்
 றுனிருந்தாலதின்பலனைச்சாற்றிடுவன்கேளே.

(இ - ள்.) பருத்த தனங்களையுடையாய்! 6, 8, 12-ஆமிடங்களில் சந்திரன் நின்றாலும், 1, 4, 7, 10. 5, 9-ஆமிட கேந்திர கோணங்களில், பாவியுடன் கூடியிருக்கினும், கடனும் அதிக கஷ்டமும், தனதான்ய நாசமும், களத்திரபுத்திரர் நாசமுண்டாம். சுபனோடு கூடியிருக்கில் தனலாபமும், பூமிலாபமும், செவ்வாய் புத்தி ஆதியில் சவுக்கியமும், நடுவிலும் கடைசியிலும், கிலேசமும் உண்

டாம். 3, 6, 10, 11-மிடத்தில் செவ்வாய் நின்றால், அதின் பலனைக் கேட்பாயாக எ - று. 3

சாற்றறியபுவிலாபம்விபசாயலாபந்
 தனலாபமாதியினிற்சவுக்கியமுண்டாகு
மாற்றறியவந்தியத்திலகாலபோசனமும்
 வருஞ்சிரநோய்புத்ரமித்ரகளத்ராதிநாசம்
போற்றுகடைசியில்மரணம்வாக்கேழுக்கிவனே
 புகழ்நாதனுனுக்காற்பொருகளத்ரபீடை
தோற்றுமவமிருத்துபயமுண்டாகுமதற்குச்
 சூரியனார்நமஸ்காரஞ்செய்திடவேசுகமே.

(இ - ள்.) சொல்லற்கரிதான பூமிலாபமும், விவசாயலாபமும், தனலாபமும் உண்டாம். புத்தி ஆதியில் சௌக்கியமும், நடுவில் அகாலபோஜனமும், சிரநோவும், புத்திர களத்திரநாசமும், கடைசியில் மரணமுமுண்டாம். 2, 7-ஆமிடங்களுக்கு செவ்வாய் அதிபதியாகில் களத்திரபீடையும், அவமிருத்துபயமுமுண்டாம். அதற்குச் சூரியநமஸ்காரம் செய்யில் துக்கம் நீங்கிச் சுகமுண்டாகும் என்று கூறுவர் எ - று. 4

ஆக விருத்தம் 385.

கேதுதிசை ராகுபுத்தி

தானமுறுங்கேதுதிசைதனில்ராகுபுத்தி
 சார்ந்ததிங்கள்பன்னிரண்டுநாள்பதினெட்டாகும்
ஆனதொருகேதுவுக்குராகுவுங்கேந்திரனு
 யமர்ந்திருந்தாற்கலகமுறுமனவியாதியுண்டாஞ்
சேனைமன்னர்விரோதமொடுகெசமிவுளிதான்யஞ்
 சேர்ந்தபொருள்மிகநாசஞ்செஞ்சுபர்கள்கூடில்
ஈனமில்லாச்சுபர்பார்க்கிற்சுபாங்கிசமேரிடினு
 மிதன்பலனைவகைவகையாயெடுத்துரைக்கக்கேளே.

(இ - ள்.) தானமுறுங் கேது திசையில் ராகு புத்தி ஹ 1, நாள் 18-க்கும் பலன் கேட்பாயாக:—கலகமும் மனவியாதியு முண்டாகும். அரச விரோதமும், யானை, குதிரை, தனம், தானியம், அதிக

நாசமு முண்டாம். செவ்விதாகிய சுபர் கூடிநின்றாலும், சுபரங்கிஷ மேற, ராகு நின்றாலும் இதன் பலன் வகையாகச் சொல்லுகிறேன் கேட்பாயாக எ - று. 1

எடுத்துரைக்கிற்றனலாபமிலேச்சமன்னராலே
இசையுமகாசுபங்களுண்டாமிவன்கிராமந்தன்னிற்
கொடுக்குமொருதனலாபமவன்புத்தியாதி
கூறுசுபமத்தியத்திற்கடைசியிலுங்கிலேசம்
அடுத்ததொருசட்டாட்டவியந்தனிலேபாவி
யானவர்கள்கூடிடிலுமவர்பார்த்திட்டாலும்
வடுப்பொருந்துங்கண்ணாய்கேள்சனநாசம்ரோகம்
வருஞ்சிரநோய்குளிர்காச்சல்மகாவிடமுண்டாமே.

(இ - ள்.) மாவடுபோன்ற கண்களையுடையவளே! தன லாபமும், மிலேச்சர், மன்னரால், பொருந்தக்கூடிய சுபங்களுண்டாம். சொந்தக்கிராமத்தில் தனலாபமுண்டாம். புத்தி ஆதியில் கூறுகின்ற நல்ல சுபங்களும், மத்தியமும் கடைசியிலும், நஷ்டமும் கஷ்டமும் உண்டாம். 6, 8, 12-ஆமிடங்களில் பாவிகள் கூடியிருந்தாலும், அல்லது பார்த்தாலும், தனநாசமும், ரோகமும், சிரநோயும், காய்ச்சலும், குளிரும், விஷதோஷமும் உண்டாகும் என்பதாம் எ - று. 2

விடமுண்டாம்வியாதியுண்டாம்காரணமாய்ச்சண்டை
மேகமுடன்சரீரமதிலதிபீடையுண்டாந்
திடமுண்டாங்கோணகேந்திரலாபந்தன்னிற்
சேர்ந்திருக்கில்மூன்றாறிற்போந்தடைந்தபாம்பின்
உடனன்றும்பிலவான்கள்கூடியிருந்தாக்கா
லுறுமற்பசவுக்கியமும்பலாபமுமாந்
தொடர்ந்துபந்துசன்மானத்தாலற்பபலமாந்
தோகைமயிற்சாயலுறுந்தொடிமலர்க்கைமாதே.

(இ - ள்.) தோகையையுடைய மயில்போன்ற சாயலும் பொருந்திய வளையலையணிந்த கையையுமுடைய மாதே! விஷத்தோடு கூடிய வியாதியுண்டாம். அகாரணமான சண்டையும், அதிகமான பீடையும் உண்டாக்கும். 1, 4, 7, 10. 5, 9-ஆமிடமாகிய கேந்திர திரிகோணத்திலும், 11-ஆமிடத்திலும் இருந்தாலும், 3, 6-ஆமிடத்தில்

இருந்தாலும், சுபர்கள் கூடிநின்றால், அற்பமான சௌக்கியலாபங்களுண்டாம். தொடர்ந்துவருகின்ற பந்துக்களால், அற்பமான பலன்களும் உண்டாகுமென்க எ - று. 3

வேறு

தேசுறும்வாக்கிலேழிற்சேர்ந்தரவிருக்குமாகில்
ஆசைசோதரர்கணசமதிற்பொருள்விரையமுண்டாம்
காசினியதனிற்பிற்கூர்கனகமுந்தானியாதி
மாசுகமுண்டாமென்றுவமூத்திடுமடநல்லாளே.

(இ - ள்.) 2, 7-ஆமிடத்ததிபதியோடு ராகு கேது கூடியிருக்தால், சகோதரநாசமும், பொருட்சேதமுமுண்டாம். கடைசியில் தனதான்யலாபமும், பெரிய சுகங்களும் உண்டாகுமென்று சொல்லக்கடவாய் எ - று. 4

ஆக விருத்தம் 389

கேதுதிசை குருபுத்தி

வேறு

மடக்கொடியேகேதுவினிற்றேவகுருபுத்தி
வருமாதம்பதினொன்றுநாளாறதாகுந்
திடப்படவேகேதுவுக்குவியாழனந்தர்க்கதனுய்ச்
சென்றாலும்பாக்கியலக்கினத்தானத்தோர்கள்
இடத்திவன்போய்க்கூடிடினுந்தனதான்யலாப
மிராச்சியலாபமுமதிகசந்தோஷமுண்டாம்
நடத்திடுமேவிவாகமுடன்புத்திரருற்பத்தி
நாற்காலிலாபமிகும்நாகரிகமின்னே.

(இ - ள்.) இளங்கொடிபோல்பவளே! கேது திசையில் வியாழ புத்தி மாசம் 11, நாள் 6-க்கும் பலன் கேட்பாயாக:—கேதுவுக்கு வியாழன் பிரியாதவனுகி ஒன்றாயிருந்தாலும், 9-ஆமிடத்ததிபனேடு வியாழன் சேர்ந்தாலும், தனதான்யலாபமுண்டாகும். பூமி லாபமும், அதிக சந்தோஷமும், கல்யாணங் கூடுதலும், புத்திரோற்பத்தியுமுண்டாம். கன்றுகாலி சேர்க்கையுண்டாகும் எ - று. 1

நாகரிகமுறுமனேயிலிட்சுமிவந்திருப்பாள்
நல்லபுண்யநதிதீர்த்தயாத்திரைசெய்திடுவன்
யோகமிகுமிட்டதெய்வக்கிருபையினுலச்ச
முறிலுமுபசெயங்கேந்திரகோணலாபத்தை
வாகுபெறுமுச்சசொக்ஷேத்திரத்தையடைந்தாலும்
வருமரசசன்மானஞ்சிவிகைமிகுலாபம்
பாகுபெறுமொழியாய்வஸ்த்ராபரணமுடனே
பாவர்களத்திரலாபமிகுசுகமுண்டாமே.

(இ - ள்.) பாகுபோன்ற ருசியான சொல்லே யுடையவளே! மனேயில் நாகரிகமுண்டாகும். லக்ஷிமி வசிப்பள். நன்மையான புண்ணியதீர்த்த யாத்திரையுண்டாகும். யோகமுள்ள இஷ்டதெய்வக்கொள்கையா லச்சமுண்டாளுலும் ஜெயங் கீர்த்தியுண்டாம். 1, 4, 7, 10. 5, 9 ஆமிட கேந்திரகோணத்தை யடைந்தாலும், உச்சம் ஆட்சி பெற்ருலும், அரசசன்மானமும், சிவிகைலாபமும், ரத்திஞபரணமும், புத்திரகளத்திரங்கள் லாபமும், மிகுந்த சுகமுமுண்டாகும் என்று கூறினர் எ - று. 2

உண்டாகுங்கேந்திரகோணத்தையடைந்தாலு
முற்றதொருமூன்றிபதினென்றிலிருந்தாலுந்
தண்டாதமரசநேசவஸ்திராபரணந்
தண்டிகையும்புரவியுடன்நல்லபோசனமாங்
கொண்டாடுஞ்சட்டாட்டவியத்திலுறும்ராகு
குறித்தசுபனுடன்கூடிற்றனதான்யலாபஞ்
செண்டாருங்கரமாதேதரளமணிமாலே
சேர்ந்துமிகலாபமுண்டாஞ்சிறந்தசாதகர்க்கே.

இ - ள்.) பூச்செண்டுடைய கரத்தாய்! உண்டாகும் 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திர திரிகோணத்தானத்தில் குருவிருந்தாலும், 3, 11-ஆமிடங்களில் இருந்தாலும், அரச நேசமும், வஸ்திராபரண லாபமுண்டாம். தண்டிகையும், வஸ்திரங்கள் லாபமும், நல்ல போஜனமுமுண்டாம். 6, 8, 12-ஆமிடங்களில் ராகுவிருந்து அதோடு சுபர் கூடியிருந்தாலும், தனம் தானியலாபமும், முத்து மாலேகளும் உண்டாம். சாதகன் சிறப்புள்ளவனுமாவன் எ - று. 3

சாதகமாயிவன்புத்தியாதியிலேகஷ்டந்
தரும்பாவியுடன்கூடிற்பாவிபார்த்தாலும்
நீதமிகும்புத்திரருமித்திரருங்குரோத
நீரிழிவும்பந்துசனகுரோதமுமுண்டாகும்
பேதகமாய்நேத்திரத்தில்வியாதியினால்நாசம்
பின்பரசர்சோரராலக்கினியாற்பயமாஞ்
சூதளவாய்ச்சிமிளாகியிள நீராய்மலையாய்ச் [டியே.
சொல்லுதற்குமுவமையில்லாத் துணைமுலைப்பைந்தொ

(இ - ள்.) சொக்கட்டாங்காய் சிமிள் இளநீர் மலை இவைகளை யும், உவமைசொல்லமுடியாத ஸ்தனங்களையுடைய பசிய வளையலை யணிந்தவளே! குருபுத்தியாதியில் கஷ்டமும், தீமையையுமுண்டாக் கும். பாவியுடன் கூடியிருந்தாலும், பாவியாற்பார்த்தாலும், நண்புள்ள புத்திரரும், இஷ்டர்களும் விரோதமுண்டாக்கும். நீரிழிவு ரோக மும், கலகங்களும், நேத்திரவியாதியும், அரசசோராக்கினி பயமு முண்டாம் என்று சோதிட வல்லவர்கள் பராசரர்வாக்கியப்படி பகர்ந் தனர் எ - று. 4

வேறு

துணையிலாவாக்கேழுக்குச்சொலுநாதனிவனேயானால்
இணையிலாத்தேகபீடையிதற்குமேபரிகாரந்தான்
பணவரவணியாய்ப்பூண்டபரமனார்பூசைசெய்ய
குணமுடன்தோஷம்நீங்கிக்கூடிடுமதிகவாழ்வே.

(இ - ள்.) 2, 7-ஆமிடங்களுக்கு வியாழன் அதிபதியாயின் ஒப் பில்லாத தேகபீடையும், அவமிருத்துதோஷமும் உண்டாம். இது நீங்கப் பரிகாரம் கேட்பாயாகில், பாம்பாபரணம்பூண்ட பரமனார் பூஜை செய்யில், அவமிருத்து நீங்கும். அதிக வாழ்வுபெற்று வாழ் வான் என்றும் சொல்லக்கடவாய் எ - று. 5

ஆக விருத்தம் 394.

கேதுதிசை சனிபுத்தி

வேறு

கூடிடுமேகேதுதிசைதனிற்காரியபுத்தி
கூறுதிங்கள்பதின்மூன்றுநாளுமொன்பதாகும்
நீடுமுடற்கேதுவுக்குக் காரியந்தர்க்கதனுய்
நின்ருக்காற்றேகமதில்மிகுபீடைதானும்
நாடரசர்கலகமுறுந்தனநாசமாகும்
நல்லமனைபாழாகுமனஸ்தாபமுண்டா
மூடல்மிகும்வழிநடையிலரசராற்களரா
லுறுந்தீயாற்பயமாகும்விவாதமிகுமுடனே.

(இ - ள்.) கேதுதிசையில் சனிபுத்தி வரு 1, மாசம் 1, நாள் 9-க்கும் பலன் கேட்பாயாக. நீண்ட உடலையுடைய கேதுவுக்குச் சனி ஒன்ருய்ப் பிரியாமல் இருந்தாலும், தேகத்தில் மிகுந்த பீடையுண்டாம். அரசர் கலகங்களுண்டாம். தன நாசமடையும். நயமான மனை பாழடைந்துவிடும். பொல்லாத மனஸ்தாபங்களும் உண்டாம். வழிநடையில் கலகங்களுண்டாம். அரசர், திருடர், அக்கினியால் பயம். விவாதங்களும் உண்டாகும் எ - று. 1

உடனுனமூலத்திரிகோணத்திலேனு
முயர்ந்தசொக்ஷேத்திரத்தேனுமுச்சத்திலேனுந்
திடனுனசுபனுடனேகூடியிருந்தாலுஞ்
செழுஞ்சுபர்கள்பார்த்தாலுந்தன்வாரந்தனிலே
கிடையாதராசதெரிசனமுண்டாஞ்சிவிகை
கேடில்லாவாபரணலாபமிகவுண்டாம்
படநாகந்தனைப்பழித்துவரசிலையைப்பொருதும்
பஞ்சபாணன்மனைபோற்பகருமல்குற்றிருவே.

(இ - ள்.) பாம்பின் படத்தைப் பழித்தும், அரசிலையை வென்றும், மதன் இருப்பிடமாகக் கொண்டாடுகின்ற அல்குலையுடைய திருவே! சனி மூலத்திரிகோணம், உச்சம், ஆட்சியில் நின்று திடம் பெற்ற சுபர்களால் பார்க்கப்பெற்ருலும், அல்லது சுபர்கள் கூடி நின்ருலும், தன்னுடைய நாட்களில் கிடைக்கப்பெருத தெரிசனை யுண்டாம். பல்லக்கு, ஆபரணங்களும், தனலாபமும் உண்டாகுமென்க எ - று. 2

பகர்ந்ததொருசட்டாட்டவியத்திலிருந்தாலும்
பதிந்தவுச்சத்திருந்தாலும்பாவிகூடிடினு
மிகுந்ததொருபீடைவருமனவியாதியுண்டாம்
வெகுமனஸ்தாபங்காணுங்காரியம்விக்கினமாந்
தகுந்தபடிபாவசிந்தையுண்டாகுங்கிரகந்
தான்போகுமிருகாலிற்பருவிலங்குசேருஞ்
சுகந்தருநற்சுபன்கூடிலற்பசவுக்கியமுஞ்
சூக்ஷமதாய்த்தனதான்யலாபமுமுண்டாமே.

(இ-ள்.) சனி சொல்லப்பட்ட 6, 8, 12-ஆமிடத்திலிருந்தாலும், உச்சனுனாலும், பாவிகள் கூடிநின்றாலும், பார்த்தாலும் மிகுதலான பீடையும், மனேவியாதியும் உண்டாம். வெகுவான மனஸ்தாபமும், காரிய விக்கினங்களு முண்டாகும். பாவசிந்தனையான காரியங்கள் செய்ய மனம் உண்டாகும். கிரகம், வாகனம் நஷ்டமடையும். விலங்கு பூணுதலுண்டாம். சுபனும் கூடிநின்றாலும், பார்த்தாலும் அற்ப சவுக்கியமும், தனதான்ய லாபமும் உண்டாகுமென்று கூறுவாய் எ - று. 3

தனதானகேந்திரகோணத்தையடைந்தாலுந்
தனிலாபஞ்சகோதராதானத்தையடைந்தாலுங்
கனமானபருவிலங்குகாலிலுறும்பின்னெக்
காலமும்பாவத்தில்மனங்கசிந்துருகிப்பொருந்தும்
மிகசனங்கள்பகையாகும்விலங்கினற்பயமா
மிவன்புத்தியாதியிலேசுகமாமத்தியத்தில்
மனதினிலேயதிககஷ்டமந்தியத்திற்புத்ர
வர்த்தனையும்களத்திரத்தின்வாழ்வுமிகுமாதே.

(இ - ள்.) 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திரத்தையடைந்திருந் தாலும், 3, 11-ஆமிடங்களில் சனி இருந்தாலும், கனமான இருப்பு விலங்கு உண்டாம். இக்காலங்களில் பாவச் செய்கைகளில் மனம் பொருந்துமென்க. பந்து ஜனங்களால் பகையும், நாற்கால் விலங்கால் பயமும், இவன்புத்தி ஆதியில் சுகமும், மத்தியில் அதிக கஷ்டங் களும் அந்தியத்தில் புத்திர விருத்தியும், களத்திரத்தால் வாழ்வு முண்டாம் எ - று. 4

மாதேசட்டாட்டவியத்திற்பாவியுடனே
வதிந்தாக்கால்மனவருத்தத்தால்மரணமாகுந்
தீதேசேய்பரதேசசஞ்சாரமுண்டாந்
திரண்டகுன்மரோகம்வருஞ்செகராசர்பயமாஞ்
சூதேசெய்கள்ளராலக்கினியாற்பயமாஞ்
சொலுமிரண்டேழுக்குடையோனுகிலவமிருத்து
கோதேதுமில்லாதவரிசகஸ்ரநாமங்
கூறுசெபஞ்செய்துவந்தாற்கொடுத்திடுநற்சுகமே.

(இ - ள்.) மாதே! 6, 8, 12-ஆமிடங்களில் பாவியுடனே சனி கூடியிருந்தால், மனவருத்தமும், மரண பயமுண்டாமென்க. பரதேச சஞ்சாரமும், திரண்ட குன்ம ரோகமும், அரசர், திருடர், அக்கினியால் பயமுண்டாம். 2, 7-ஆமிடங்களுக்குச் சனி அதிபதியானல் அவமிருத்து தோஷமும் உண்டாகும். அது நீங்குவதற்கு ஹரி சகஸ்திரநாமார்ச்சனை செய்யின், அவ்வவமிருத்து நீங்கி சுகப்பிராப்தி யுண்டாதல் நியாயமென்றறிவாயாக எ - று. 5

ஆக விருத்தம் 399.

கேதுதிசை புதன்புத்தி

நற்கேதுதிசைதனிலேபுதனபகாரந்தான்
நலஞ்சேருந்திங்கள்பதினென்றிருபத்தேழ்நாள்
இற்கேதுக்கேபுதனந்தர்க்கதனுயிடினு
மிசைகேந்திரகோணவுச்சலாபமேறிடினுஞ்
சொற்சேதமில்லாதராச்சியலாபங்கள்
சுகமரசர்கிருபையினுற்சிகைதான்யலாபம்
வற்காலியுடனிரையாம்வெகுலாபமாகும்
வளர்புத்ரசவுக்கியமாமாதுசிரோமணியே.

(இ - ள்.) மாது ரத்தினமே! நல்ல கேதுதிசையில் புதன்புத்தி மாசம் 11, நாள் 27-க்கும் பலன் கேட்பாயாக. இந்தக் கேதுவுக்கு புதன்கூடிப் பிரியாமல் ஒன்ருய் இருந்தாலும், 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திர கோணத்தும், 11-ஆமிட லாபத்திலிருந்தாலும், உச்சம்பெற்ருலும், சோர்வில்லாத ராச்சிய லாபங்களும், அரசரால்

பல்லக்கும், பொருளும் லாபமாம். கன்று காலி வரிசையாய் நிறைவதும், வெகு லாபங்களும், புத்திர சௌக்யமும் உண்டாம் எ-று. 1

மணியேகேள்வாக்காதிபதியுடனேகூடி
மத்தகெசந்துரகதலாபங்கதைகள்கேள்வி
தணியாததருமசிந்தையதிகசுகமுண்டாந்
தான்வாகனுதிபதியுடன்கூடினுக்கரல்
அணியாருங்கிரகமுடன்க்ஷேத்திரமும்லாப
மாகுமிஷ்டபிரர்சன்மானங்கள்மிகவுண்டாம்
பணியாரும்படத்தினையுமதத்தினையும்பழித்துப்
பண்புபெறவேயெழில்சேர்கடிதடப்பைந்திருவே.

(இ - ள்.) சர்ப்பப் படத்தையும், மதன் தேரையும் அவமதித்த அழகுபெற்ற அல்குலையுடைய இலக்குமி போல்பவளே! 2-ஆமிடத்ததிபதியுடனே புதன் கூடியிருந்தால், ரத கஜ துரக லாபமும், கல்வி கதை கேள்விகளும், தரும சிந்தையும், அதிகமான சுகங்களுமுண்டாம். 4-ஆமிடத்ததிபதியுடன் புதன் கூடிநின்றால், கிரக க்ஷேத்திர லாபமும், இஷ்டர், பிரபுக்கள் சன்மானங்களுண்டாம் என்று கூறினர் எ - று. 2

கடிதானசட்டாட்டவியந்தனிற்செவ்வாய்நற்
காரியுடன்கூடிடினுமவர்பார்த்திட்டாலுங்
கொடிதானராசாங்கவிரோதமிகவுண்டாங்
கூபமதில்விழுந்தெழுவன்குடியிருப்பும்போகும்
படிமீதுதென்றிசையிற்பிரயாணந்தன்னிற்
பார்த்திபர்கள்கலகமிகுஞ்சமரினிலேவிரணம்
முடியாதுஆதாய்ந்தனக்குமிகுஞ்சிலவா
முழுமதிபோலிலகுமுகமோகனச்செந்திருவே.

(இ - ள்.) பூர்ண சந்திர முகத்தாய்! 6, 8, 12-ஆமிடங்களில் புதன் நின்று, அப்புதனை சனி, செவ்வாய் கூடியிருந்தாலும், அல்லது பார்த்தாலும், கொடுமையான ராச கலகங்களும், விரோதங்களுமுண்டாம். கிணற்றில் விழுந்து எழுந்திருப்பதும், குடியிருந்த மனை காலியாகும். தென்திசைப் பிரயாணத்தில், அரசால் பகையுண்டாகும். யுத்தத்தில் காயமுண்டாகுதலும் உண்டாம். ஆதாயமும், நஷ்டமும், மிஞ்சின செலவும் உண்டாகும் என்பதாம் எ - று. 3

செந்திருவேசுபக்கிரகத்துடன்கூடினாலுஞ்
 செய்யசுபன்பார்த்தாலுந்தனதான்யலாபம்
புந்திபுத்தியாதியிலேசோபனமுஞ்சுகமாம்
 புகலரியகோணகேந்திரலாபத்திருந்தால்
வந்திடும்ராசப்ரீதிகனசிவிகையுண்டாம்
 வாழ்வுமிகுதேகவாரோக்யமிகக்கூடும்
பந்தினைச்செப்பினையமுதகலசமதைப்பொருப்பைப்
 பழித்திளைஞராசையுறும்பயோதரமோகினியே.

(இ - ள்.) பந்தையும், செப்பையும், அமிர்த கலசத்தையும், பொருப்பையும் பழித்து ஆடவரால் ஆசைப்படும்படியாகிய தனங்களையுடைய திருவே! சுபர்களுடன் புதன் கூடினாலும், சுபர்களால் பார்வை பெற்றாலும், தனம், தான்யம் லாபமாம். புதன்புத்தி ஆதியில் சுகமும், சோபனமுமுண்டாம். 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திரகோணத்தில் நின்றால் இராஜப் பிரீதியும், பல்லக்கும் உண்டாம். மிகுந்த வாழ்வும், ஆரோக்கியமும் உண்டாகும் என்பதாமென்று கற்றோர் கூறினர் எ - று. 4

பயமுறுஞ்சட்டாட்டவியமதிற்பாவியுடனே
 பண்புபெறவிருந்தாலும்பாவிபார்த்திடினும்
நயமுறவே நீசனாயிருந்தாலும்புலவன்
 நண்ணுபுத்தியாதியிற்சத்துருபயங்கள்பீடை
பயமிகுந்தசுரஞ்சிரநோய்குளிர்தானுண்டாகு
 மறிவனிரண்டேழினுக்குமதிபதியாயிருந்தாற்
செயமிலவமிருத்திதற்குப்பரிகாரம்நவக்கோள்
 சென்றுதினஞ்சுற்றிவரத்தீருமிதுசெய்யே.

(இ - ள்.) பயமுறுத்துகின்ற 6, 8, 12-ஆமிடங்களில் பாவக்கிரகங்களுடன் நின்றாலும், பாவர்களால் பார்த்தாலும், நீசனானாலும், புதன்புத்தி ஆதியில் சத்துருவாலும், பீடையாலும், பயங்களும், சுரநோயும், குளிர் காய்ச்சலும், சித்தப்பிரமையு முண்டாகும். இப் புதன் 2, 7-ஆமிடங்களுக்கு அதிகாரியா யிருந்தால், அபாயமான அவமிருத் துண்டாம். இது விலகுவதற்கு நவக்கிரக அர்ச்சனை செய்து தினந்தோறும் சுற்றிவர, சுகம் உண்டாகுமென்று கூறினாராமென்க எ - று. 5

ஆக விருத்தம் 404.

சுக்கிரதிசைப் படலம்

செய்யதோர்கவிதிசையில்வருஷமிருபதுக்குஞ்
சிறந்தபலன்கவியுச்சந்தன்னிலிருந்தாலும்
ஐயமில்லாக்கேந்திரத்தையடைந்தாலுமனைவி
அபிமானமுண்டாகும்வாகனங்கலிலாபம்
வையகத்திலதிகபூஷணலாபமாகும்
வளர்பூமிலாபமுடன்வாத்தியலாபங்கள்
மையிலகும்விழியாய்கேளிவன்மனையிற்றிருவும்
வாழ்ந்திருக்கும்நல்லபோசனங்களுறுந்தானே.

(இ - ள்.) அஞ்சனந் தோய்ந்த கண்களுடையவளே! செவ்வி தாகிய சுங்கிரதிசை வருஷம் 20-க்கும், சிறப்பான பலன்களைச் சொல்லுமிடத்து, சுக்கிரன் உச்சத்திலிருந்தாலும், சந்தேகமில்லா 1, 4, 7, 10-ஆமிட கேச்திரத்தில் நின்றாலும், மனைவி அபிமானமும், வாகனங்கள் லாபமும், பூமியில் பூஷணம், பூமி லாபங்களும், சங்கீத வாத்தியக் கேள்விகளும் உண்டாம். மனையில் இலக்ஷிமிவாசமும், நல்ல போஜனங்களும் கிடைக்கும் எ - று. 1

நல்லதிரிகோணத்திற்புகரிருந்தானென்னில்
ராச்சியலாபங்கள்மிகுங்கலியாணம்நடக்கும்
வல்லதொருபுத்திரர்களுண்டாங்கைவிட்டு
வருந்தியராச்சியலாபம்வந்துடனேகூடுஞ்
சொல்லரியசட்டாட்டவியந்தனிலேபுகர்தான்
சொலுநீசனுயிடினுஞ்சத்துருவீடுறினுஞ்
சில்லறைசேர்புத்ரகளத்திரநாசமாகுஞ்
சிவிகைதனதான்யம்பசுமனைநாசமாமே.

(இ - ள்.) 1, 5, 9-ஆமிட திரிகோணத்தில் சுக்கிரனிருந்தால், இராஜ்ஜிய லாபங்களும், மிகுந்த கல்யாணங்களும் கூடும். புத்திரர் களும் உண்டாம். கைவிட்டுக் கொடுத்த ராச்சியங்களும் வந்து சேரும். 6, 8, 12-ஆமிடங்களில் சுக்கிரன் நின்றாலும், நீசனு யிருந்தாலும், சத்துரு வீட்டையடைந்தாலும், சங்கடத்தோடு கூடிய புத்திர களத்திர நாசமுண்டாம். திரவியம், சிவிகை, தனம், தானி யங்கள் நாசமுண்டாவதுடன், மனையும் பாழாகிவிடும் என்பதாம் எ - று. 2

நாசமில்லாப்பாக்கியகர்மத்துடையோனெனினும்
லக்கினநாலாமிடத்தையடைந்திருந்தானெனினும்
பேசுமந்தத்திசைதனிலேயதிகசவுக்கியமாம்
பெரிதானகிராமமுடன்பூமிமிகலாபம்
பூசுரர்களிணக்கமுடனாலயங்கோபுரங்கள்
பொருந்துதடாகப்ரதிட்டைபுண்யதன்மஞ்செய்வன்
அரசர்மகிழ்தளகர்த்தர்சன்மானமுடனே
நண்ணுசவுக்கியமரசர்சன்மானமுறுமே.

(இ - ள்.) கெடாத 9, 10-ஆமிட அதிபர்களுடனேயும் பொருந்திய லக்கினம் 4-ஆமிடத்தில் சுக்கிரன் இருந்தால், இத்திசையில் அதிக சௌக்கியமுண்டாம். பெரிய கிராமங்களும், பூமி லாபமும் உண்டாகும். ஐதீக முறையால் செய்யப்படும் ஆலயங்கள், கோபுரங்கள், தடாகப்பிரதிஷ்டை செய்வான். புண்ணிய தான தர்மமும் புரிவன். அரச சன்மானமும் பெறுவன். அழகிய தளகர்த்தனுமாவான் என்று சொல்வாயாக எ - று. 3

அரசராற்கீர்த்தியுண்டாங்களத்ரபுத்ரலாப
மதுகூடுமிரண்டேழுக்கிவனுதனுகில்
உரைசெய்வாயிவன்றனக்குப்பீடையுண்டாமென்றே
யுற்றபரிகாரமதுவெள்ளிநோம்பிருக்கத்
தரைதனிலேயதிகசுகந்தான்மிகவுண்டாகுந்
* தனதபகாரந்தனக்கும்பலனிதுவென்றுறைப்பாய்
வரையைநேருந்தனத்தாயாடவர்களுடைய
மார்பிறுகத்தழுவுமிளமடமயில்மின்னாளே.

(இ - ள்.) வடமேருவை யொத்த தனங்களால் ஆடவரின் மார்பை இருக்கித் தழுவுகின்றவும், இளமையுற்ற மயிலேயும், மின்னலேயும்போன்ற சாயலுடையாளே! அரசரால் நற்கீர்த்தியும், களத்திர புத்திர லாபங்கூடுதலும் உண்டாகும். 2, 7-ஆமிடங்களுக்குச் சுக்கிரன் அதிகாரியாயின், பீடை செய்வானென்றும் உரைப்பாயாக. இதற்குப் பரிகாரம். வெள்ளி நாள் விரதமிருக்க, பூமியில் அதிக சுகவானுகவிருப்பான் என்று சொல்லுவாயாக எ - று. 4

ஆக விருத்தம் 408.

---

* சுக்கிரதிசையில் சுக்கிரபுத்தி வருஷம் 3, மாசம் 4-க்கும் ஷ டி திசைக்குச் சொன்ன பலன்களேயாகுமென்றும் விவரித்துச் சொல்லுக.

சுக்கிரதிசை சூரியபுத்தி

மயிலேகேள்புகர்திசையில்ரவியபகாரந்தான்
மாதமொருபன்னிரண்டில்வரும்பலனைக்கேளாய்
வெயிலோன்றன்புகருக்கந்தர்க்கதனுயிருக்கில்
வெகுநாசம்நிட்டூரந்தாயாதிகலகம்
அயலார்கள்விவகாரந்தன்னிலவமான
மாகுமுச்சசொக்ஷேத்ரமிரத்திரக்ஷேத்திரத்தில்
இயல்பாகவிருந்தாலுஞ்சுபன்கூடினுலும்
இதன்பலனைவடநூலின்படியியம்புவேனே.

(இ - ள்.) மயிலே கேட்பாயாக. சுக்கிரதிசையில் சூரியபுத்தி வருஷம் 1-க்கும் பலன் விவரமாய்ச் சொல்லுகிறேன் கேட்பாயாக. சுக்கிரனுக்குச் சூரியன் பிரியாமல் ஒன்றுயிருந்தாலும், வெகுவான நாசங்களும், கலகங்களும், நிட்டூரங்களும் உண்டாகும். தாயாதி கலகமும், அயலார்கள் விவகாரந்தன்னில் அவமானமும் உண்டாம். உச்சம், ஆட்சி, மித்துரு க்ஷேத்திரத்தில் இருந்தாலும், சுபன் கூடி நின்ற சூரியனுகில் இதன் பலன்களை வடநூற்படி வகுத்துச்சொல்லுவேன் கேட்பாயாக எ - று. 1

இயம்புகின்றதேகசவுக்கியம்ராச்சியலாப
மிவன்மனையிற்சோபனமுஞ்சுபமுமிகவுண்டாம்
வயம்புனையும்ராசாபிமானத்தாற்கிராமம்
வரும்பூமிலாபமிகும்மனையிலுறுந்திருவும்
நயம்பெருகுந்திரிகோணகேந்திரத்திலிருந்தால்
நாடுமற்பபாக்கியமும்பிதுர்கிலேசமாகுஞ்
செயம்பொருந்துந்தாயாதிதனநாசமாகுஞ்
சிற்றிடைதாங்காதெழுந்துசிறந்ததனமானே.

(இ - ள்.) இடைபொறுமல் எழுந்த தனங்களுடைய மானே! சொல்லுகின்ற தேகசௌக்கியம், ராச்சிய லாபம், இவன் மனையிற் சோபனங்களும், சுபகாரியங்களும் உண்டாகும். வெற்றிபொருந்திய ராசரின் அபிமானத்தால் கிராமம், பூமி லாபம் மிகுதியாயுண்டாகும். லக்ஷிமிதேவி மனையிற் குடியிருப்பள். நயம் உண்டாம். 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திரத்தில் இருந்தால் அற்ப பாக்கியஞ்சேரும். பிதுர் கிலேசமும், தாயாதி, தனநாசமும் உண்டாகுமாம் எ - று. 2

மானேகேளிவன்புத்தியாதிசத்ருபயமாம்
மத்திசவுக்கியங்கடையில்ராசசன்மானமுமாந்
தானேசட்டாட்டவியந்தனில்நீசனாகச்
சார்பாவியுடன்கூடியாதித்தனிருந்தால்
ஆனாலும்ராசர்பயந்தொடுத்தகர்மம்நாசம்
அதிபீடையிட்டசனகலகமவமானந்
தேனாருமொழியாய்கேள்சுரஞ்சிரநோயுண்டாந்
திகழ்நீசனானால்முன்சொன்னபலன்செப்பே.

(இ - ள்.) தேன் மொழியாய்! கேட்பாயாக. இந்தச் சூரியன் புத்தி ஆதியில் சத்துரு பயமும், மத்தியில் சௌக்கியமும், அந்தத்தில் அரசரின் சன்மானங்கள் உண்டாம். 6, 8, 12-ஆமிடங்களில் நீசம்பெற்று, பாவியுடன் சேர்ந்த சூரியனாகில், அரசரால் பயமும், தொடுத்தகர்மங்கள் நாசமும், அதிகமான பீடையும், இஷ்டஜன கலகமும், அவமானமும், சுரநோயும், சிரநோயும் உண்டாம் எ-று. 3

சொன்னதொருகோணகேந்திரலாபந்தன்னிற்
சூரனிருந்தாலுமவனுடன்கூடினானெனினும்
வின்னமுறும்பாவியுடன்பிலவான்கூடினும்
மிகுத்ததனநாசமிட்டசனக்கலகத்துடனே
அன்னமதுபருந்தாகும்பாவசிந்தைசேரு
மாதிபுத்திநல்லபலன்மத்தியத்திற்கஷ்டம்
நன்னலஞ்சேர்கடைசிதனிலதிசுகமாமென்று
நவின்றனர்கள்சோதிடநூல்நாளுமுணர்ந்தோரே.

(இ - ள்.) 1, 4, 9, 10, 5, 9-ஆமிட கேந்திர கோணத்தில் சுபக்கிரகங்கள் நின்றாலும், அச்சுபர்களோடு சூரியன் கூடினாலும், பாவிகள் நின்றாலும், அப்பாவிகளோடு சூரியன் நின்றாலும், மிகுதியான பொருட்சேதமும், இஷ்டஜன கலகங்களும் உண்டாம். அன்னம் மருந்தாகிவிடும். பாவச் செய்கைகளில் மனஞ்செல்லும். புத்தி ஆதியில் நல்ல பலன்களும், மத்தியத்திற் கஷ்டமான பலன்களும், கடைசியில் நல்ல பலனாக நடக்குமென்று பல நாளாக சோதிட சாஸ்திரங்களைக் கற்றுக் கரைகண்ட பெரியோர்கள் பகர்ந்தனர்கள் எ - று. 4

ஓரையுறுஞ்சட்டாட்டவியந்தனிலேபாவி
யுடன்கூடில்ராசசோராக்கினியாற்பயமாஞ்
சாரமிகுந்தேகமதிற்பீடையுமுண்டாகுந்
தலைவலியுஞ்சுரமும்வருமனைதானும்போகும்
பாரதனிலிரண்டேழுக்கிவனுதனுகிற்
பகருமவமிருத்துபயம்பரிகாரமதற்குச்
சூரியனார்நமஸ்காரஞ்செய்துவந்தாலதிக
சுகமாகுமென்றுரைத்தாற்சோதிடர்கள்தாமே.

(இ - ள்.) குற்றஞ்செய்யப்பட்ட 6, 8, 12-ஆமிடங்களில் பாவி யுடன் கூடிய சூரியனிருந்தால் அரசர், சோரர், அக்கினியால் பய மாம். சத்து மிகுந்த தேகத்தில் ரோகமுண்டாகும். தலைவலி, சுரங் களுமுண்டாகும். மனை நீங்கும். 2, 7-ஆமிடங்களுக்கு இச்சூரியன் அதிகாரியானால் சொல்லுகின்ற அவமிருத்து பயமுண்டாகும். அதற் குப் பரிகாரம். சூரிய நமஸ்காரஞ் செய்ய அதிக சுகமுண்டாகு மென்று சோதிடர் கூறினர் என்று சொல்லுவாயாக எ - று. 5

ஆக விருத்தம் 413.

சுக்கிரதிசை சந்திரபுத்தி

சோதியுறுபுகர்திசையிற்சோமனபகாரந்
துலங்கியதோர்திங்களிருபதினில்வரும்பலன்கேள்
நீதியுறுஞ்சுக்கிரற்குமதியந்தர்க்கதனுய்
நின்றாலும்லக்கினாதிபதியுடன்சேர்ந்தாலு
ஓதியிடுஞ்சுபனுடனேகூடியிருந்தாலு
முயர்ந்தகலைபூரணமாய்மதியமிருந்தாலும்
ஆதரவாய்க்கோணகேந்திரலாபந்தனிலே
யடைந்தாலுமதின்பலனையறைகுவன்கேளனமே.

(இ - ள்.) பிரகாசம்பெற்ற சுக்கிரதிசையில் சந்திரபுத்தி வரு ஷம் 1, மாசம் 8-க்கும் பலன் கேட்பாயாக. சுக்கிரனுக்குச் சந்திரன் பிரியாதவனாகி ஒன்றாயிருந்தாலும், லக்கினாதிபதியுடன் சேர்ந்தாலும், சுபக்கிரகங்களோடு கூடியிருந்தாலும், பூரண சந்திரனாயிருந்தாலும், 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திர கோணத்திலும், 11-ஆமிட லாபத்

தானத்திலும் சந்திரன் நின்றாலும் அதன் பலன்களைச் சொல்வேன் கேட்பாயாக எ - று. 2

அன்னமும்பாலுடன்புசிப்பன்ராச்சியமும்லாப
மதிகசுகந்தளகர்த்தரரசரபிமானஞ்
சொன்னபலகிராமமுடன்பூமிமிகலாபந்
தூயநதிதீர்த்தமிவன்சென்றாடிவருவன்
பன்னுதமிழாராய்தல்புராணமிகக்கேள்வி
பகர்ந்தபிரசங்கத்தில்வாகனலாபமுமாம்
மின்னனிகர்ச்சின்னவிடைமெலிந்தொசிந்துவாட
விம்மியெழுந்துயர்ந்ததனமெல்லியருக்கரசே.

(இ - ள்.) மின்னல் போன்ற சிற்றிடை மெலிந்து வளைந்து தளர்வடையும்படி பருத்து, உயர்ந்த ஸ்தனங்களையுடைய மெல்லியருக்கரசே! அன்னமும் பாலும் புசிப்பன். ராஜ்ஜிய லாபம், அதிக சுகம், தளகர்த்தரபிமானம், பல கிராமங்களுடன் பூமி வரவு, பரிசுத்தமாகிய நதி தீர்த்தமாடுதல், பல தமிழ் நூலாராய்தல், புராண இதிகாசக் கேள்விகள், பகர்கின்ற பிரசங்கங்கள் செய்தல், வாகனங்களும் உண்டாகும் என்க எ - று. 2

கறைபொருந்துஞ்சசி நீசனுகியிருந்தாலுங்
கருதுமஸ்தமனக்கிரகந்தன்னையடைந்தாலுங்
குறைவிருந்தசட்டாட்டவியத்திலிருந்தாலுங்
குறையாததன நாசம்பரதேசகமனம்
விறைவாகுமதிகபயமனநோயதாகு
மிராசமந்திரியாலதிவிரோதமுமாம்
நறையாரும்பூங்குழலாய்வடதிசையிற்பயணம்
நலமித்திர நாசமுடனகாலமிர்த்துபயமே.

(இ - ள்.) வாசனை பொருந்திய கூந்தலுடையாய்! அமரபக்க சந்திரன் நீசனுயிருந்தாலும், அஸ்தமனக் கிரகங்களோடு சேர்ந்தாலும், குறைவு பெற்ற 6, 8, 12-ஆமிடங்களில் இருந்தாலும், குறையாத செல்வம் நாஸ்தியடையும். பரதேச கமனமுண்டாம். அதிகமான பயம் விரைவிற் சேர்தலும், மனோவியாதியும், அரசர் மந்திரியால் அதிக விரோதமும், வடதிசைப் பயணமும், மித்துரு விரோதமும் அகாலமிருத்திவும் உண்டாமென்று கூறுக எ - று. 3

மேதினியிற்கேந்திர திரிகோணபலாபத்தில்
வீற்றிருந்தால்ராசகன்மான ந்தேசங்கிராமம்
நீதிமிகுபூமிவெகுலாபமதுண்டாகும்
நிகழ்த்திலதிகீர்த்தியொடுசிவிகைவந்துசேரும்
ஓதரியவஸ்திராபரணமிகவுண்டா
முறியதடாகங்கிரகமதுபுதிதாய்ச்செய்வ
னுதிபுத்தியினிற்சுகமத்தியத்திற்கஷ்ட
மந்தியத்திலதிகசுகமாகுமெனக்கருதே.

(இ - ள்.) பூமியில் 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திர கோணங்களும், தேசம், கிராமம், அதிக பூமி சேர்க்கைகளுண்டாம். சொல்லுமிடத்து அதிக புகழோடு பல்லக்குமுண்டாம். சொல்லுதற்கரிதான வஸ்திராபரணங்களும் உண்டாகும். தடாகம், கிரகம் புதிதாக உண்டாக்கப்படுவான் என்க, சந்திரபுத்தி ஆதியில் சுகமும், நடுவில் கஷ்டமும், அந்தியத்தில் அதிக சுகமாகுமென்று கருதுவாயாக எ - று. 4

ஆக விருத்தம் 417.

சுக்கிரதிசை செவ்வாய்புத்தி

கருமேகம்பொருமழைக்கோள் திசைதனிலேதீயங்
காரகன்றன் புத்திபதினுன்மாதமாகுந்
திருமேவுசுக்கிரற்குக்குசன ந்தர்க்கதனுய்ச்
சேர்ந்தாலுந்திரிகோணகேந்திரத்துற்றுலுங்
குருநீசவீட்டிலிவனுச்சம்பெற்றுலுங்
கோதில்லாச்சொக்ஷேத்திரலாபமடைந்தாலும்
வரும்பிலவானுடனேதான் கூடியிருந்தாலும்
வலியலக்கினுதிபன்கூடிடினுமின்னங்கேளே.

(இ - ள்.) கரியமேகம் பொருந்திய மழைக்கோளாகிய சுக்கிரன் திசையில் செவ்வாய்புத்தி வருஷம் 1, மாசம் 2-க்கும் பலன் கேட்பாயாக. சுக்கிரனுக்குச் செவ்வாய் பிரியாதவனுகி ஒன்றுயிருந்தாலும், 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திர கோணம் பெற்றுலும், குரு நீச வீட்டில் செவ்வாய் உச்சம்பெற்றுலும், குற்றமில்லாத ஆட்சிபெற்

ருலும், 11-ஆமிடத்தை அடைந்தாலும், சுபர்களுடன் கூடியிருந்தாலும், லக்கினாதிபதியுடன் கூடியிருக்கினும், இன்னும் கேட்பாயாக எ - று. 1

கூடியதோர்கர்மாதிபதிபாக்கியத்துடையோன்
கூடிடினுஞ்சுபக்கிரகங்கூடிடினுஞ்சுபரால்
நாடியேநோக்குறினுமரசரபிமானம்
லட்சுமிகடாக்ஷமுண்டாம்நட்டமுற்றபூமி
தேடியேயிவனிடத்தில்வலியவந்துசேருஞ்
செழுமனையிலதிகசுகம்புத்திரவுற்பத்தி
ஆடையாபரணமுண்டாம்நினைத்ததுகைகூடு
மவன்வாரந்தனில்ராசபேட்டியுமுண்டாமே.

(இ - ள்.) இன்னும் 9, 10-க்குடையவனோடு கூடி, இன்னும் சுபக்கிரகங்களோடு கூடியும், சுபக்கிரகங்கள் பார்வை பெற்றும், செவ்வாய் நின்றால், லக்ஷிமிகடாட்சமும், நஷ்டமுற்ற பூமி தேடி இவனிடம் வந்துசேருதலும், மனையில் சிறப்பும், பொருந்திய சுகமும், புத்திரோற்பத்தியும், ஆடையாபரணமும் உண்டாம். நினைத்த காரியம் கைகூடுதலும், அவனுடைய வாரங்களில் இராஜபேட்டியும் உண்டாகும் என்க. 2

உண்டாகுஞ்சட்டாட்டவியத்திலிவனிருந்தா
லுயரரசர்விரோதமிகுஞ்சமரிலபசெயமாந்
தண்டாதகிரகம்போங்குளிர்காச்சலுடனே
தலைவலியுமனநோயிதானதிகமாகுங்
கொண்டாடுங்கேந்திரகோணத்தையடைந்தாலுங்
குறித்ததொருமூன்றினிற்பன்னொன்றிலிருந்தாலும்
பண்டானுற்றிடுமொழியாய்பச்சிளநீரதனைப்
பழித்தபயோதரத்திருவேபலாபலனைக்கேளே.

(இ - ள்.) தேன்போன்ற இனிய சொல்லையும், இளநீரைப் பழித்த தனங்களையுடையாய்! 6, 8, 12-ஆமிடங்களில் செவ்வாய் இருந்தால், உயர்வுபெற்ற அரசரால் விரோதமும், யுத்தத்தில் அபஜெயமுண்டாம். சரியான கிரகம் கெட்டுப்போகும். குளிர்காய்ச்சலும், தலைவலி முதலான நோய் அதிகமாயுண்டாம். கொண்டாடுகின்ற 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திர கோணத்தில் செவ்வாய்

இருந்தாலும், குறிப்பான 3, 11-ஆமிடத்தில் நின்றாலும் பலன்களைக் கேட்பாயாக எ - று. 3

பலன்பொருந்துதருமசிந்தையுடனதிகக்கீர்த்தி
பதிவானமனையதனிற்சேற்பனங்கள்நடக்கும்
நலம்பொருந்துந்தனதான்யம்நாற்காலிலாபம்
நன்மனையிற்றிருசேரும்விபசாயம்பலிதம்
நிலம்பொருந்துமிரண்டேழுக்கிவனுதனுகில்
நீங்காதபீடைவருங்கள்ளர்பயமுண்டாம்
பெலம்பொருந்தும்பரிகாரமுருகனுக்குப்பூசை
பேசியவார்செய்தாலோபீடைவிடுஞ்சுகமே.

(இ - ள்.) பலன்பொருந்தும் தருமசிந்தையும், அதிக கீர்த்தியும் உண்டாம். நிலையான மனைகளிற் சுபசோபன காரியங்கள், நன்மைபெற்ற தனம் தானிய லாபங்களுண்டாம். நாற்காலிலாபம் நல்ல மனையில் லக்ஷ்மிகரமுண்டாம். விவசாயபலிதமும், பூமியும் பொருந்தும். 2, 7-ஆ மிடங்களுக்கு செவ்வாய் அதிகாரியாயின் நீங்காத பீடையுண்டாகும். கள்ளர் பயமுண்டாம். இவை விலகும்படி பலமான பரிகாரம் ஏதென்றால், முருகனுக்குப் பூசை விதிப்படி செய்தால் பீடைவிட்டுவிடும் சுகமுண்டாம் எ - று.

ஆக விருத்தம் 421.

சுக்கிரதிசை இராகுபுத்தி

சுகமீறுங்கவிதிசையில்ராகுபுத்தியதுதான்
சொல்லுமுப்பத்தாறுதிங்கள்சுக்கிரர்க்குராகு
மிகவேயந்தர்க்கதனுய்மேவியிருந்தாலும்
வியன்கேந்திரலாபதிரிகோணத்துற்றாலுந்
செகமீதிலுச்சத்தானத்திலிருந்தாலும்
செழுஞ்சுபர்கள்யோககாரகர்கூடினாலுந்
தொகையானமூன்றுபதினொன்றுபத்தாறினிலே
சுடர்பகைவனுற்றிருக்கிற்சொலும்பலன்கேள்மாதே.

(இ - ள்.) சுகங்கொடுக்கின்ற சுக்கிர திசையில் இராகு புத்தி வருஷம் 3-க்கும் பலன் கேட்பாயாக. சுக்கிரனுக்கு ராகு பிரியாத

வனாய் ஒன்றாயிருந்தாலும், அதிகமான 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திரகோணத்திலும், 11-ஆமிடத்திலும் நின்றாலும் உச்சம்பெற்றிருந்தாலும், வளம்கொடுக்கும். சுபர்கள் கூடினாலும், யோககாரகர் கூடிநின்றாலும், 3, 6, 10, 11-ஆமிடங்களில் நின்றாலும், ராகுவில் பலனைக் கேட்பாயாக எ - று. 1

சொல்லுமவன்புத்தியினிலிவன்சத்ருநாசஞ்
சுகமதிகசந்தோஷமரசர்சன்மானமுமாம்
வல்லபுந்தியாதியினிற்சுகஞ்சுரநோயுடனே
மனஸ்தாபமுண்டாகுமத்தியமந்தியத்தில்
நல்லதொருராசசன்மானங்களுமுண்டாகும்
நாடியசுக்கிலபக்ஷசசியாகவிருந்தாற்
செல்வமிகுஞ்சிவிகைவரும்நிருதிதிசையதனிற்
சென்றரசர்பேட்டிதனில்நினைத்ததெல்லாந்தருமே.

(இ - ள்.) சொல்லுகின்ற ராகு புத்தியில், சத்துருநாசமும், சுகமும், அதிக சந்தோஷமும், அரசசன்மானமும் உண்டாம். ராகு புத்தி ஆதியினில் சுகமும், சுரநோயுடனே மனஸ்தாபமுண்டாகும். மத்தியபாகத்தில், நயமான ராஜசன்மானங்களுண்டாம். சுக்கில பக்ஷமாயிருந்து சந்திரன் கூடியிருந்தால் செல்வமுண்டாம். பல்லக்குமுண்டாம். நிருதிதிசையில் பிரயாணமுண்டாகும். அதில் ராசபேட்டியும் நினைத்தகாரியங்களெல்லாம் கைகூடுமென்பாயாக எ - று.

மேலானோர்விசுவாசம்புண்ணியதீர்த்தங்கள்
மிகுத்ததவம்பாவியுடன்கூடினும்பார்த்தாலும்
மாலானசட்டாட்டவியத்திலிருந்தாலும்
வருமசுபம்பிதுர்மாதுர்சனவியாதியுடனே
நூலாய்ந்தபெரியோர்களிட்டசனவிரோதம்
நுவலிரண்டேழுக்கரவுநாதனுயிருந்தால்
பாலாருமொழிமடவாய்சாதகர்க்குப்பீடை
பற்றிடினும்பரனருளால்பலக்காதுசுகமே.

(இ - ள்.) பால்போன்ற ருசித்த சொல்லாய்! மேலோர்கள் விசுவாசமும், புண்ணியதீர்த்தங்களாடுதலும், மிகுந்த தவமும் உண்டாகும். ராகு பாவிகளுடன் கூடினாலும், பார்த்தாலும், பலமான

6, 8, 12-ஆமிடங்களில் நின்றாலும், அசுபகாரியங்களும், பிதுர், மாதுர், பந்துக்கள் நாசமும், பெரியோர்கள் இஷ்டர்கள் விரோதமும் உண்டாம். இரண்டேழுக் கதிபர்களுடன் ராகு கூடினும் 2, 7-ஆமிடங்களில், இராகு நின்றாலும் அவமிருத்து தோஷம் உண்டாம். அது விலகுவதற்கு பரமனருளை சாஸ்திர முறைப்படி பெற்றால் பீடை பலக்காமல் விலகி சுகமுண்டாமென்று கூறினார் எ - று. 3

ஆக விருத்தம் 424.

சுக்கிரதிசை குருபுத்தி

சாந்தமுறுமசுரகுருதிசையதனிலமரர்
தன்குருவின்புத்திதிங்கள்முப்பதுடனிரண்டாம்
பாந்தமுறுஞ்சுக்கிரற்குவியாழனந்தர்க்கதனுய்ப்
பதிந்திடினுமுச்சசொகேஷத்திரகேந்ரத்துறினும்
சேர்ந்தசுபராசியினிலிருந்தாலும்பாக்கியந்
திகழ்தானத்துடையோனுய்ச்சிறந்திருந்தாலுந்தான்
யேந்துமிளமுலேமாதேபொன்னிருந்தாலுந்தா
னிதின்பலனைவகைவகையாயியம்பிடக்கேட்பாயே.

(இ - ள்.) இளமுலேயேந்திய பெண்ணே! சாந்தமுள்ள அசுர குருவாகிய சுக்கிரதிசையில் அமரர் குருவாகிய வியாழன் புத்தி வருஷ 2, மாதம் 8-க்கும் பலன் கேட்பாயாக:—பந்தமான சுக்கிரனுக்கு வியாழன் ஒன்றாய்க்கூடி பிரியாமல் இருந்தாலும், உச்சம் ஆட்சியிலிருந்தாலும், 1, 4, 7, 10. 5, 9-ஆமிட கேந்திர திரிகோணங்களில் நின்றாலும், சுபர்கள் வீட்டில் நின்றாலும், பாக்கியாதிபதி தனதிபதியுடன் கூடியிருந்தாலும் வியாழன் பலனை வகைவகையாகப் பிரித்துச் சொல்வேன் கேட்பாயாக எ - று. 1

இயம்புவன்கேளதிகசுகமுன்போனசீமை
யிவர்க்குவருங்கிராமமதிற்றனியலாபமுமாம்
வசம்புனேயுமரசர்சன்மானமுந்தெற்குத்திசையில்
வரும்பிரயாணத்தரசர்பேட்டியுமுண்டாகுங்
கயம்புரவிசிவிகைமிகுங்கேந்திரகோணத்திற்
கனகனிருந்தாற்புத்ரகளத்ராதிசுகமாஞ்

செயம்பொருந்துமதிகசுகசந்தோஷமுண்டாம்
சேலெனநீண்டேபரந்தசெய்யவிழிமாதே.

(இ - ள்.) மீன் கெண்டைபோல நீண்டு செவ்வரிபரந்த கண்களையுடையவளே! கேட்பாயாக:-அதிக சுகமும், முன் தோற்றுப் போனவை புதிதாய் வந்து சேருதலும், இவர் கிராமத்தில் தானிய லாபமும், அரசரின் சன்மானமும், தெற்குத்திசைப் பிரயாணத்தில் ராஜ பேட்டியும் உண்டாகும். யானை, குதிரை, பல்லக்குமுண்டாகும். 1, 4, 7, 10, 5, 9-ஆமிடங்களில் குருவிருந்தால், புத்திரர் களத்திரர் சுகமும், ஜெயமான அதிக சுக சந்தோஷங்களும் உண்டாகும் எ - று. 2

செய்ததொருசட்டாட்டவியத்திலவனிருந்தாற்
செகராசர்சோரராலக்கினியாற்பயமாம்
பையவருஞ்சண்டையிலேமனநோயுண்டாகும்
பதிவானமனைபோகும்பார்த்திபர்கள்விரோதந்
துய்யவிரண்டேழினுக்குமிவனுதனுகில்
தொலையாதபீடையுண்டாமதுதீரவென்றால்
வையகத்திலேழைகளுக்கனதானஞ்செய்ய
வருமதிகச்சுகமெனவேவழுத்தினர்கற்றோரே.

(இ - ள்.) 6, 8, 12 - ஆமிடங்களில் குருவிருந்தால், அரசர், சோரர், அக்கினியாற் பயமாம். மெதுவாக வருகின்ற சண்டையால மனநோயுண்டாம். நிலையாயிருந்த மனை போய்விடும். அரசர்களின் விரோதமுண்டாகும். 2, 7-ஆமிடங்களுக்கு வியாழன் அதிபதியாயின் தொலையாத பயமான பீடையுண்டாகும். அது தீரவேண்டுமென்றால் பூமியில் ஏழைகளுக்கு அன்னதானஞ்செய்க. பின்னை அதிகசுகமும் பெற்று வாழ்வானென்று சோதிடங்கற்ற அறிவிற் சிறந்த பெரியோர் சொல்லினர் எ - று. 3

ஆக விருத்தம் 427.

சுக்கிரதிசை சனிபுத்தி

வழுத்தியசுக்கிரதிசையிற்சனியபகாரந்தான்
வருமாதமுப்பதுடனெட்டதனிற்பலன்கே
ளழுத்தமுடன்சுக்கிரற்குச்சனியந்தர்க்கதனு
யானுக்கால்ராசசன்மானந்தீர்த்தத்தானந்
தெளித்ததர்மதானமிகவினிதாகச்செய்வன்
செப்பெனவேபுடைத்தெழுந்துதிரண்டுவிளநீரைப்
பழித்தமுதகலசமெனவிளைஞோர்கள்மார்பிற்
பாயுமுலைக்கோடிசந்தபதுமமலர்மாதே.

(இ - ள்.) செப்பென்று சொல்லும்படி விம்மி யெழுந்து இள நீரைப்பழித்து அமிர்தகலசம்போன்று ஆடவர்களின் மார்பில் பொருதுகின்ற யானை மருப்பும் போன்ற ஸ்தனங்களையும், பதும மலர்வாசியாகிய லக்ஷிமிபோல்பவளே! சொல்லுகின்ற சுக்கிர திசையில் சனி புத்தி ௵ 3, மாசம் 2-க்கும் பலன்கேட்பாயாக:— சுக்கிரன் சனிக்கு பிரியாமல் ஒன்றாயிருந்தால், ராசசன்மானம், தீர்த்த மாடுதல், தர்மதானங்களும் இனிமையோடு செய்வன் என்பதாம் எ - று. 1

சேறினன்சேயுச்சசொக்ஷேத்திரகோணகேந்திரந்
திகழ்மூலத்திரிகோணலாபத்தானத்தி
லேறியிருந்தால்ராசசன்மானமவரா
லிசைவிருதுபெற்றிடுவனிராச்சியமும்லாபம்
பார்தனிற்களத்ரபுத்ரசவுக்கியமுமுண்டாம்
பற்றலர்கள்குலநாசமதிகீர்த்தியாகும்
வாரிவகுங்கும்பமுலைப்பாரமிகுத்தொசிந்து
வாடியபூங்கொடிபோலுமருங்குவிளந்திருவே.

(இ - ள்.) கச்சணிந்த கலசம்போன்ற கொங்கைப்பாரந் தாங்காமல், கசங்கிவாடிய பூங்கொடிபோன்ற இடையையுடைய இளமை பெற்ற இலக்குமிபோல்பவளே! ஆய்ந்து பார்க்குமிடத்து சனி உச்சம் ஆட்சி மூலத்திரிகோணத்தில் நின்றாலும், 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திரகோணத்திலேனும் 11-ஆமிடத்திலேனும் நின்றால் இராசசன்மானமும் அவர்களால் வெற்றிபெற்ற விருதுகளும் இராஜ்ஜிய பலமும் உண்டாம். பூமியில் களத்திர புத்திர சவுக்கியங்களும்

உண்டாகும். சத்துருக்களின் குலநாசமடைவதும் அதிக கீர்த்திவா ளுகுவனும் என்று கூறினர் எ - று. 2

கொடிதானசட்டாட்டவியந்தனிலேமுடவன்
குலவியிருந்தாற்புத்தியாதியிலேசவுக்யம்
படிமீதில்மத்தியிலந்தியந்தனிலுங்கிலேசம்
பதிவானமூன்றுபதினொன்றையடைந்தாலும்
நெடிதானபாக்கியம்பத்ததிபதியானாலும்
நீங்கரியவடதிசையிற்பிரயாணமதிலே
முடிராசர்பேட்டிதளகர்த்தமுமுண்டாகும்
முந்திவரும்ராச்சியலாபங்கள்மிகத்தானே.

(இ - ள்.) கொடிதாகிய 6, 8, 12-ஆமிடங்களில் சனி இருந்தால் புத்தி ஆதியில் சௌக்கியமும், மத்தியிலும், அந்தியத்திலும் கிலேசமுமுண்டாம். பதிவுவோடு 3, 10, 11-ஆமிடங்களில் சனிநின்றால், விருத்தியான பாக்கியங்களுண்டாம். 10-க்கு அதிபதியாயிருந்தால், வடதிசையில் பிரயாணமுண்டாம். அதில் அரசர்பேட்டியும் தளகர்த்தத்துவமும் உண்டாவதுடன் ராச்சியலாபங்களும் கிடைக்குமென்று சொல்லினர் எ - று. 3

ஆக விருத்தம் 430.

சுக்கிரதிசை புதன்புத்தி

தானவர்கோன்புகர்திசையிற்புதனபகாரந்தான்
சாற்றிடிலோமுப்பதுடனல்மாதமாகு
மானபுகர்தனக்கிவனந்தர்க்கதனனுலு
மதிகவுச்சசொக்ஷேத்திரகேந்திரத்துற்றாலும்
ஈனமில்லாத்திரிகோணலாபத்துற்றாலு
மிசைராசசன்மானம்புத்திரரும்லாபங்
கூனலுறுஞ்சிவிகையுடனற்காலிலாபங்
கூறுபுராணங்கேள்விசோபனமுண்டாமே.

(இ - ள்.) அசுரகுருவாகிய சுக்கிரதிசையில் புதன் புத்தி வரு 2, மாசம் 10-க்கும் பலன்கேட்பாயாக:—சுக்கிரனுக்கு புதன் கூடிப் பிரியாமல் ஒன்றாய் நிற்கினும், ஆட்சி பெற்றாலும், 1, 4, 7, 10 5, 9-ஆமிட கேந்திரகோணத்து நின்றாலும் 11-ஆமிடத்தில் நின்றாலும்,

பொருந்துகின்ற ராசசன்மானமும், புத்திரலாபமும், விளைந்த பல்லக்குடன், கன்றுகாலி லாபமும், புராணக்கேள்விகளும் சுபசோபனங்களும் உண்டாம் எ - று. 1

மேதையவன்கேந்திரலாபத்திரிகோணத்தில்
மிகுபிலவானுடன்கூடிவீற்றிருப்பானுகில்
நீதிமன்னர்பேட்டியுடனதிகசுகமாகும்
நிகழ்த்திலிவன்வாரத்திலிராசபேட்டியுமாஞ்
சாதகர்க்குநல்லநல்லபோசனமுண்டாகுஞ்
சட்டாட்டவியத்தினிற்றுற்பலமாகப்பாவர்
தீதுறவேகூடியிடிலவனபகாரத்திற்
செய்யும்பலாவபலமதைசெப்பவினிக்கேளே.

(இ - ள்.) புதன் 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திர கோணத்தில் 11-ஆமிடத்தில் நின்றாலும், சுபக்கிரகங்களுடன் சேர்ந்திருந்தாலும், மன்னர் பேட்டியும் அதிகசுகமுண்டாம். சொல்லுமிடத்து இவன் வாரமாகிய புதன்கிழமையிலும் இராசசன்மானங்களும் நல்ல போசனமும் உண்டாகும். 6, 8, 12-ஆமிடங்களில் பாவர்களோடு கூடிநின்றாலும் பார்த்தாலும், புதன்புத்தியில் செய்யும் பலன்களைக் கேட்பாயாக எ - று. 2

செப்பரியசாதகர்க்கும்பருவிலங்குண்டாகுஞ்
சிந்தைமிகக்கலங்கிவிடுமகாலபோசனமாந்
தப்பிதமில்லாபுத்திமுற்பாதிசவுக்யந்
தான்பிற்பாதியிற்கஷ்டந்தருமிரண்டேழுக்கே
இப்புதன்றனதிபதியாயிருந்தாக்காற்பீடை
யெய்துமதன்பரிகாரமேழைகளுக்கன்னம்
செப்பியவாரீய்ந்தாலெப்பாவமதகன்று
தேகதிடமதிகாரஞ்செல்வமுடன்சுகமே.

(இ - ள்.) சாதகருக்கு பெரிய விலங்குண்டாம். சிந்தை கலக்கமும், அகாலபோஜனமுமுண்டாம். இதில் முற்பாதி சௌக்கியமுண்டாம். பிற்பாதியில் கஷ்டமுண்டாகும். 2, 7-ஆமிடங்களுக்கு புதன் அதிபதியாயின் மகாபீடையுண்டாகும். அதற்குப் பரிகாரம் கேட்பாயாகில், ஏழைகளுக்கு அன்னதானஞ்செய்யில் பாவமகன்று தேகதிடத்துடன் அதிகாரமும் செல்வமுமுண்டாமென்று கூறுவாயாக எ - று.

ஆக விருத்தம் 433.

சுக்கிரதிசை கேதுபுத்தி

வருமேசுக்கிர திசையிற்கேதபகார ந்தான்
வருடமொன் றுமா தமிரண்ட தன்பலனைவழுத்திற்
சுரர்பகையாய்க்குருவுக்குக்கேதந்தர்க்கதனுய்த்
தோன் றிடி லுஞ்சுபாங்கிசத் துற்ரு லும திசுகமாம்
வரன தியேமுதலான தீர்த்தயாத்திரையாம்
வளர்புத்தியா தியிலேசகலசவுக்கியமும்
பரவுமிவன் புத்ரமித்ரராசவிரோ தமுமாம்
பகர்கடையில்வரும்பலனைப்பகருவன்பெண்ணமுதே.

(இ - ள்.) சுக்கிர திசையில் கேதுபுத்தி வரு 1, மாசம் 2-க்கும் பலன் கேட்பாயாக:—சுக்கிரனுக்கு கேது பிரியாமல் ஒன்ருயிருந்தாலும் சுபாங்கிசங்களில் கேது நின்ரு லும் அதிக சுகமுண்டாம். கங்காஸ்நானப் பிராப்திமுதலான தீர்த்தயாத்திரையும், வளர்கின்ற புத்தியாதியில் சகலசௌக்கியமும் உண்டாகும். மத்தியில் புத்திர மித்திர ராஜவிரோதங்களும் உண்டாகும். கடைப்பாகத்தில் உண்டாகும் பலன்களைச் சொல்வேன் கேட்பாயாக எ - று. 1

தேவபூசனையுடனேயுத்ரா திபயணஞ்
சேருமதிற்செகராசர்பேட்டியுமுண்டாகு
மேவுகளத்திரலாபங்கேந்திரகோணத்தில்
மிகுலாபத்தானத்தில்வீற்றிருக்கிலேனும்
மாவலுவாய்ச்சுப னுடனேகூடியிருந்தா லும்
வருஞ்சுபர்கள் பார்த்தா லுமாற்றலரைச்செயிப்பன்
பூவுலகிலரசராற்றனதான்யலாபம்
பொருந்துமெனச்சோ திடர்கள்புகன் றதுதப்பாதே.

(இ - ள்.) தேவபூசனையும் வடதிசையிற் பிரயாணமும் அதில் ராஜபேட்டியும் உண்டாம். களத்திர புத்திர லாபமுண்டாம். 1, 4, 7, 10, 5, 9-ஆமிட கேந்திரகோணங்களிலும், 11-ஆமிடத்திலும் கேது நிற்கிலும், உச்சம் பெற்று சுபனுடனே கூடியிருந்தாலும், சுபக்கிரகங்களால் பார்க்கப்பெற்ருலும், சத்துருஜெயமும் அரசரால் தனதானியங்கள் இலாபமும் உண்டாகுமென்று சோதிடர்கள் சொன்னது தப்பாதென்று உணர்த்துவாயாக எ - று. 3

தப்பிதமாஞ்சட்டாட்டவியந்தனிற்கேதவனுஞ்
சார்ந்திடினுஞ்சுபர்களாற்ருன்பார்க்கப்படினு
மிப்புவியிலரசராற்சோரராற்றீயால்
யிசைபயம்புத்திரநாசமதிகபயஞ்சிரநோய்
ஒப்பில்மனச்சஞ்சலமாங்களத்ரபுத்ரவிரோதம்
உடன்பந்துசனக்கலகமுண்டாகுமென்றே
மைப்பழகுவகுழல்மடவாய்பராசரமாமுனிவன்
வடமொழியில்மொழிந்தபடிவழுத்தினர்கற்றேரே.

(இ - ள்.) தப்பிதமான 6, 8, 12-ஆமிடங்களில் கேது நின்ருலும், பாபர்களால் பார்க்கப்பெற்ருலும், கூடிநின்ருலும், அரசர், சோரர், அக்கினியால் பயமும், புத்திரர் நாசமும் அதிக பயங்கரமான சிரநோயும், மனச்சஞ்சலங்களும், களத்திரபுத்திர விரோதங்களும் உண்டாகும். அத்துடன் பந்து ஜனங்களால் கலகமுண்டாகுமென்றும் பராசரமுனிவர் வடநூலின்படி யறிந்து தமிழ்ப் பாஷையில் சோதிடவல்ல அறிஞர்கள் அன்பாய் பகர்ந்தனராக எ- று. 3

வேறு

வடமொழிப்படியேகேதுவாக்கேழுக்கதிபனுறச்
சடமதிற்பீடையுண்டாந்தவிர்ந்திடப்பரிகாரந்தான்
றிடமுடனன்னதானஞ்செய்திடிற்சகலயோகம்
அடைவுடனடைவானென்று அறைந்தனர்பராசர்தானே

(இ - ள்.) கேது 2, 7-ஆமிடங்களில் நின்ருலும், 2, 7-க்குடையவனுடன் கூடிநின்ருலும், தேகத்தில் கஷ்டமான பீடையுண்டாம். அது தீருவதற்குப் பரிகாரங் கேட்பாயாயின், அன்னதானஞ் செய்திடில் ஆரோக்கியமான ரோகம்நீங்கி, சகலயோகங்களும் அடைவானென்று பராசர மகாமுனிவர் பகர்ந்தனராக எ - று. 4

ஆக திசை 9-க்கு புத்தி - 81

விருத்தம் 437.

பாராசாரியம் மூலமும் உரையும் முற்றிற்று.

சுபம்.

PLA & Bros.
MADRAS